# லெனின்

## அக்டோபர் புரட்சியின் ஆண்டுவிழாக்களை ஒட்டி



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# வி. இ. லெனின்

# அக்டோபர் புரட்சியின் ஆண்டுவிழாக்களை ஒட்டி

1918—1922

உரைகள்

அறிக்கைகள்

கட்டுரைகள்

CONNEMARA PUBLIC LIBRARY
- 5 MAR 1985
MADRAS

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

NEW CENTURY BOOK HOUSE
Rs. 1-50

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1980

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

Л $\frac{10102—177}{016(01)—81}$ 810—81

0101020000

## பொருளடக்கம்


சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?. 7

தொழிலாளர்கள், விவசாயிகள், கசாக்குகள், செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் ஆருவது அகில ருஷ்ய விசேஷக் காங்கிரசில் புரட்சியின் ஆண்டு விழாவை ஒட்டி ஆற்றிய உரை. நவம்பர் 6, 1918 . 11

மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்கு நினைவுச் சின்னம் திறப்புவிழாவின் போது ஆற்றிய உரை. நவம்பர் 7, 1918 . . . . . . . . . . . . 33

அக்டோபர் புரட்சியில் உயிர் இழந்தவர்களுக்கான நினைவுக்கல் திறப்புவிழாவின் போது ஆற்றிய உரை. நவம்பர் 7, 1918 . . . . 35

மத்தியக் குபேர்னியாக்களின் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் பிரதிநிதிகளின் கூட்டத்தில் ஆற்றிய உரை. நவம்பர் 8, 1918 . . . . . 37

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும் . . . . . . 51

பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கு வாழ்த்து. 67

சோவியத் ஆட்சியதிகாரமும் மாதர்களின் அந்தஸ்தும் . . . . . . . . . . 68

சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஈராண்டுகள். 74

அக்டோபர் புரட்சியின் இரண்டாம் ஆண்டு விழாவை ஒட்டி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத், அகில ஒன்றிய தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்சில் மற்றும் ஆலைக் கமிட்டிகள் ஆகியவற்றின் கூட்டு அமர்வில் ஆற்றிய உரை. நவம்பர் 7, 1919 . . . . . . . . . . . . . 78

தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத், ரு. க. க. (போ.)இன் மாஸ்கோ கமிட்டி மற்றும் மாஸ்கோ நகரத் தொழிற்சங்கங்களின் கவுன்சில் ஆகியவற்றின் வெற்றிக்கொண்டாட்ட பிளீனம் கூட்டத்தில் அக்டோபர் புரட்சியின் மூன்றும் ஆண்டு விழாவை ஒட்டி ஆற்றிய உரை. நவம்பர் 6, 1920 . 97

அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டு விழா . . . . . . . . . . . . . . 109

தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம். 123

அக்டோபர் புரட்சியின் நான்காம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நடைபெற்ற புரோஹரவ் ஜவுளி உற்பத்தி ஆலைத் தொழிலாளர்களின் கூட்டத்தில் ஆற்றிய உரை. நவம்பர் 6, 1921. சுருக்கமான செய்தித்தாள் அறிக்கை . . 135

அக்டோபர் புரட்சியின் நான்காம் ஆண்டு விழாவைக் கொண்டாடுவதற்காக நடைபெற்ற

ஹமோவ்னிச்செஸ்கி மாவட்ட உழைக்கும் ஆடவர் மகளிர் மற்றும் செஞ்சேனை வீரர், இளைஞர்களின் கூட்டத்தில் ஆற்றிய உரை. நவம்பர் 7, 1921 . . . . . . . . . . . . . 137

கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காம் சர்வ தேசியக் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர்கள், செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்திற்கு . . 143

ருஷ்யப் புரட்சியின் ஐந்து ஆண்டுகளும் உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்களும். கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காம் காங்கிரசில் ஆற்றிய உரை. நவம்பர் 13, 1922. . . . . . . . . . 144

மாஸ்கோ சோவியத்தின் பிளீனம் கூட்டத்தில் ஆற்றிய உரை. நவம்பர் 20, 1922 . . . . . 166

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . 181

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . 193

- 5 MAR 1995
MADRAS

## சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன?

சோவியத் ஆட்சியதிகாரம் என்பது என்ன? மிகப் பல நாடுகளின் மக்களும் இன்னமும் புரிந்து கொள்ள விரும்பாத, அல்லது புரிந்து கொள்ள முடியாத இந்தப் புதிய ஆட்சியதிகாரத்தின் சாராம்சம் என்ன? ஒவ்வொரு நாட்டிலும் மேலும் மேலும் அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கும் இந்த ஆட்சியதிகாரத்தின் தன்மை பின்வருவதுதான்: கடந்த காலத்தில் இந்த நாடு ஏதேனும் ஒரு வழியில் செல்வந்தர்களால் அல்லது முதலாளிகளால் ஆளப்பட்டு வந்தது; ஆனால், இப்பொழுது முதன்முதலாய் இந்நாடு முன்பெல்லாம் முதலாளித்துவம் ஒடுக்கி வந்த அதே வர்க்கங்களால், அதுவும் அவ்வர்க்கங்களது வெகுஜனங்களால் ஆளப்படுகிறது. மிக மிக ஜனநாயகமான, மிகமிக சுதந்திரமான குடியரசிலுங் கூட, மூலதனம் ஆதிக்கம் செலுத்துகிற வரை, நிலம் தனியார் சொத்தாய் இருக்கிற வரை, அரசாங்கமானது எப்பொழுதும் மிகச் சிறிய சிறுபான்மையோரின் கையிலேதான் இருக்கும், இந்தச் சிறுபான்மையோரில் பத்தில் ஒன்பது பேர் முதலாளிகள் அல்லது செல்வந்தராய் இருப்பார்.

உலக வரலாற்றிலே முதன்முதலாய் இந்த நாட்டில், ருஷ்யாவில், சுரண்டலாளர்கள் ஒதுக்கி விலக்கப்பட்டுத் தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் மட்டும் சோவியத்துக்கள் எனப்படும் வெகுஜன நிறுவனங்களாய் அமையும்படியும் இந்த சோவியத்துக்கள் அரசு அதிகாரம் அனைத்தையும் வகிக்கும்படியும் நாட்டின் அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவேதான் எல்லா நாடுகளிலும் முதலாளித்துவ வர்க்கத்தின் பிரதிநிதிகள் ருஷ்யாவைப் பற்றி பரப்பும் அவதூறுகளையும் மீறி, உலகெங்கும் இப்பொழுது "சோவியத்" என்னும் சொல் புரியக் கூடியதாய் மட்டுமின்றி மக்களுடைய அபிமானத்துக்குரியதாகவும் ஆகிவிட்டது;

தொழிலாளர்களுக்கு, உழைப்பாளி மக்கள் எல்லோருக்கும் மிகப் பிடித்தமான சொல்லாகி விட்டது. ஆதலால்தான் கம் யூனிசத்தின் ஆதரவாளர்கள் பல்வேறு நாடுகளிலும் வளவுதான் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட போதிலும், சோவியத் ஆட்சியதிகாரம் உலகெங்கிலும் அவசியமாகவும் தவிர்க்க முடியாதபடியும் தொலை நெடுங் காலமின்றி கூடிய சீக்கிரத்தில் வெற்றிவாகை சூடவே செய்யும்.

நமது நாட்டில் சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒழுங் கமைப்பில் இன்னமும் பல குறைபாடுகள் இருப்பதை நாம் நன்கு அறிவோம். சோவியத் ஆட்சியதிகாரம் மாயவித்தை புரியும் மந்திரத் தாயத்து அல்ல. எழுத்தறியாமை, கலா சாரம் இல்லாத நிலை, காட்டுமிராண்டி போரின் தீய விளைவு கள், கொள்ளைக்கார முதலாளித்துவம் விட்டுச் சென்ற கொடுமைகள் ஆகிய கடந்த காலத்துப் பிணிகளை எல்லாம் அது நொடிப் பொழுதில் தீர்த்து விடவில்லை. ஆயினும் அது சோஷலிசத்துக்குப் பாதையைச் செப்பனிடவே செய்கிறது. முன்பெல்லாம் ஒடுக்கப்பட்டோராய் இருந்தவர்கள் நிமிர்ந்து நிற்கவும், மேலும் மேலும் அதிக அளவுக்கு நாட்டின் அர சாங்கம் அனைத்தையும், பொருளாதாரத்தின் நிர்வாகம் அனைத்தையும், பொருளுற்பத்தியின் நிர்வாகம் அனைத்தை யும் தாமே மேற்கொள்ளவும் அவர்களுக்கு அது வாய்ப் பளிக்கிறது.

சோவியத் ஆட்சியதிகாரமானது சோஷலிசத்தை அடை வதற்காக உழைப்பாளி மக்களின் பெருந்திரளானோர் தாமே கண்டுபிடித்த பாதையாகும். எனவேதான், அது மெய்யான பாதையாய் இருக்கிறது; எனவேதான், அது வெல்லற்கரிய பலம் படைத்திருக்கிறது.

*1919, மார்ச் மாதத்தின்*
*இறுதியில் நிகழ்த்தப்பெற்ற*
*சொற்பொழிவு*

நூல் திரட்டு
*(ஐந்தாம் பதிப்பு),*
*தொகுதி 38,*
*பக்கங்கள் 238-39*

1918

தொழிலாளர்கள், விவசாயிகள்,
கசாக்குகள், செஞ்சேனைப் படையாளிகள்
பிரதிநிதிகளின் சோவியத்துக்களின்
ஆறுவது அகில ருஷ்ய விசேஷக் காங்கிரசில்
புரட்சியின் ஆண்டுவிழாவை ஒட்டி
ஆற்றிய உரை
நவம்பர் 6

மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்கு
நினைவுச் சின்னம் திறப்புவிழாவின் போது
ஆற்றிய உரை
நவம்பர் 7

அக்டோபர் புரட்சியில்
உயிர் இழந்தவர்களுக்கான நினைவுக்கல்
திறப்புவிழாவின் போது ஆற்றிய உரை
நவம்பர் 7

மத்தியக் குபேர்னியாக்களின்
ஏழை விவசாயிகள் கமிட்டிகள் பிரதிநிதிகளின்
கூட்டத்தில் ஆற்றிய உரை
நவம்பர் 8

# தொழிலாளர்கள், விவசாயிகள், கசாக்குகள், செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் ஆறுவது அகில ருஷ்ய விசேஷக் காங்கிரசில் புரட்சியின் ஆண்டுவிழாவை ஒட்டி ஆற்றிய உரை நவம்பர் 6, 1918[1]

(மண்டபத்திற்குள் தோழர் லெனின் வந்தவுடன் எல்லோரும் எழுந்து நின்றனர். நீடித்த ஆரவாரம், வாழ்த்தொலிகள்.) தோழர்களே! சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் உச்சபட்சமான முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றுவரும் ஒரு தருணத்தில் நாம் நமது புரட்சியின் ஆண்டுவிழாவினைக் கொண்டாடுகிறோம். இந்த உலகப் போர் பழைய அரசாங்கம் மற்றும் பழைய ஆளும் முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பிலான உடன்பாடுகள் மூலமோ அல்லது பலவந்தம் மூலமோ முடிவுறப்போவதில்லை என்பதும், இந்தப் போரானது ருஷ்யாவையும் அதனுடன் கூடவே உலகம் முழுவதையும் ஓர் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கும் மூலதனத்தின் மீதான தொழிலாளர்களின் வெற்றிக்கும் இட்டுச் செல்கிறது என்பதும், தொழிலாளி வர்க்கம் மற்றும் பொதுவாக உழைக்கும் மக்களிடையிலுள்ள ஆக ஐயுறவும் உறுதியின்மையும் கொண்ட நபர்களுக்கும் கூடத் தெளிவாகி விட்டது. மூலதனம் உலகை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தியது. ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் வன்முறைக்கும் அட்டூழியத்துக்கும் பின்னால் ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியம் ஆஸ்திரியா மற்றும் ஜெர்மனியின் ஆதரவுடன் அதே கொள்கையைப் பின்பற்றி வருகிறது.

இன்று, புரட்சியின் ஆண்டுவிழாவைக் கொண்டாடும் போது, புரட்சி இதுகாறும் கடந்து சென்றுள்ள பாதை நெடுகிலும் ஒரு கண்ணோட்டமிடுவது பொருத்தமானதாக இருக்கும். உலகில் வேறு எந்தத் தொழிலாளர் புரட்சியும் என்றுமே எதிரிட வேண்டியிராத அசாதாரணமான இடர்ப்பாடான நிலைமைகளில் நாம் நமது புரட்சியைத் துவங்க வேண்டி இருந்தது. எனவே, நாம் ஒட்டுமொத்தமாகக்

கடந்து சென்றுள்ள பாதையை மறுசீராய்வு செய்வதற்கும், இந்தக் காலப்பகுதியின் போதான நமது சாதனைகளைக் கூர்ந்து கவனித்து கடந்த ஆண்டில் நமது பிரதானமான, மெய்யான, தீர்மானகரமான, அடிப்படையான பணிக்கு நாம் எந்தளவுக்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொண்டோம் என்பதைப் பார்க்கவும் நாம் முயல வேண்டும் என்பது குறிப்பாயும் முக்கியமானது. நாம் உலகப் பாட்டாளி வர்க்க மற்றும் சோஷலிஸ்டு சேனையின் படைப் பிரிவுகளில் ஒன்றாக அலகுகளில் ஒன்றாக விளங்க வேண்டும். உலகளாவிய போராட்டத்தில் இருந்து தோன்றியதான இந்தப் புரட்சியை நாம் துவக்கி வைக்க நேரிட்டதற்குக் காரணம், ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கத்தின் எந்தவொரு தனித் திறனோ அல்லது அவ்வர்க்கம் இதர மக்களை விடவும் முன்னேறியதாக இருந்ததோ அல்ல என்பதை நாம் எப்போதும் உணர்ந்து வந்திருக்கிறோம். இதற்கு நேர்மாறாக, முதலாளித்துவத்தின் தனியியல்பான பலவீனம், பின்தங்கிய தன்மை, ராணுவ-போர்த்தந்திர சூழ்நிலைமைகளின் தனியியல்பான நெருக்குதல் ஆகியவை காரணமாகவே நாம் நிகழ்ச்சிகளின் போக்கில் இதர படைப் பிரிவுகளை விடவும் முன்னே செல்ல நேர்ந்தது, அவை நம்மை எட்டிப் பிடித்து எழுச்சியில் இறங்கும் வரையில் காத்துக் கொண்டிருக்காமல் முன்னே செல்ல நேர்ந்தது. வரப்போகும் புரட்சியில் நம்மை எதிரிடவிருக்கும் போராட்டங்களுக்கான நமது தயாரிப்புகளைக் கூர்ந்து கவனிப்பதற்காகவே நாம் இந்த மறுசீராய்வை நடத்துகிறோம்.

எனவே, தோழர்களே, கடந்த ஆண்டில் எத்தகைய பெரிய மாற்றங்களைச் செய்திருக்கிறோம் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ளும் போது நாம் பின்வருமாறு சொல்ல முடியும்: தொழிலாளி வர்க்கத்தின் முதல் நடவடிக்கையான தொழிலாளர் கண்காணிப்பு என்பதிலிருந்து, நாட்டின் செல்வாதாரங்கள் அனைத்தையும் செயலாட்சி செய்வதில் இருந்து, இப்போது நாம் தொழில்துறையில் தொழிலாளர் நிர்வாகத்தை உருவாக்கும் தலைவாயிலில் நிற்கிறோம். நிலத்துக்காக நடந்த விவசாயிகளின் பொதுவான போராட்டம், நிலப்பிரபுக்களை எதிர்த்த விவசாயிகள் போராட்டம், தேசிய முதலாளித்துவ-ஜனநாயகத் தன்மை கொண்ட போராட்டம் ஆகியவற்றில் இருந்து நாம் இப்போது நாட்டுப்

புறப் பகுதிகளில் பாட்டாளிகளும் அரைப்பாட்டாளிகளும் தம்மைத் தாமே தனியாகப் பிரித்துக் கொண்டு நிற்கும் ஒரு கட்டத்தை எட்டியிருக்கிறோம்: உழைப்போரும் சுரண்டப் படுவோருமான மக்கள் மற்றவர்களிடமிருந்து தம்மைத் தாமே பிரித்துக் கொண்டு நிற்கின்றனர்; புதிய வாழ்க்கை யினைக் கட்டத் தொடங்கி விட்டனர். மிகவும் ஒடுக்கப் பட்டவர்களான நாட்டுப்புற மக்கள் தமது கிராமப்புற குலாக் முதலாளி வர்க்கம் உட்பட முதலாளித்துவ வர்க் கத்தை எதிர்த்துக் கடைசி வரைக் கடுமையாகப் போராடு கிறார்கள்.

இதற்கும் மேலாக சோவியத் அமைப்பு என்ற முதல் நட வடிக்கைகளில் இருந்து இப்போது நாம் வந்தடைந்துள்ள கட்டத்தில், இந்த மாநாட்டின் துவக்கத்தில் தோழர் ஸ்வெர்த் லோவ் நியாயமாகவே குறிப்பிட்டது போல, சோவியத் அதி கார உரிமை தன்னைத்தானே உறுதிப்படுத்திக் கொள்ளாததும் அனைத்து உழைக்கும் மற்றும் சுரண்டப்படும் மக்களின் போராட்டத்தில் பெற்றதான நீண்ட அனுபவத்தை அடிப் படையாக்கிய சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தின் முற்றிணக்கமான பகுதியாக விளங்காததுமான எந்த ஓர் இடமும், வெகு தொலைவிலும் கூட, ருஷ்யாவில் இல்லை.

கடந்த நான்காண்டு காலப் போருக்குப் பிறகு அறவே பாதுகாப்பு இன்றி இருந்த நிலைக்குமாறாக இப்போது நம் மிடம் வலிமை கொண்ட செஞ்சேனை இருக்கிறது. இந்தப் போர் சுரண்டப்படும் மக்கள் திரளின் மத்தியில் பகைமை யை மட்டுமல்ல வெறுப்பையும் எழுப்பியது, அவர்களைப் படு மோசமான அளவுக்குப் பலவீனப்படுத்தியது, வளமும் வலி யும் இழக்கச் செய்தது. மேலும் புரட்சியை மிகவும் இடர்ப் பாடான கடுமை வாய்ந்த காலப்பகுதிக்குள் தள்ளி விட்டது. அப்போது நாம் ஜெர்மன் மற்றும் ஆஸ்திரிய ஏகாதிபத்தி யத்தின் தாக்குதல்களுக்கு எதிராகப் பாதுகாப்பற்ற நிலையில் இருந்தோம். இறுதியாக, எல்லாவற்றிலும் மிக முக்கிய மானது என்னவென்றால் நாம் சர்வதேசிய ரீதியில் தனிமைப் படுத்தப்பட்ட நிலையில் இருந்து விடுபட்டோம். இந்தத் தனிமை நிலையால் அக்டோபரின் போதும் இந்த ஆண்டின் துவக்கத்திலும் தொல்லைப்பட்டோம். இந்த நிலையில் இருந்து நமது ஒரே ஆனால் உறுதியான நேசசக்தியான சர்வதேச

உழைப்பாளி மக்கள் சுரண்டப்படும் மக்கள் கடைசியாக எழுச்சியுற்று விட்டனர். லீப்க்னெஹ்ட் மற்றும் ஆட்லெர் போன்ற மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் தலை வர்கள், ஏகாதிபத்தியப் போருக்கு எதிர்ப்பைத் திரட்டத் துணிவும் தீரமுமான முயற்சிகள் செய்ததற்காகப் பல மாதங் கள் சிறையில் வாடிய தலைவர்கள், வியென்னுவிலும் பெர்லினி லும் துரிதமாக வளர்ச்சியுற்றுவரும் தொழிலாளர் புரட்சி களின் நிர்ப்பந்தத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ள ஒரு கட்டத்தை நாம் எட்டியிருக்கிறோம். தனிமைப்பட்டு நிற்கும் நிலை போய், நமது சர்வதேச நேசசக்திகளுடன் அக்கம் பக்க மாகத் தோளோடு தோள் சேர்ந்து அணிவகுத்துச் செல்லும் நிலையில் நாம் இருக்கிறோம். இவையே சென்ற ஆண்டின் முக்கிய சாதனைகள். நாம் கடந்துவந்துள்ள பாதையைப் பற்றி, இந்த இடைமாற்றக் கட்டம் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் நமது கோஷம் தொழிலாளர் கண்காணிப்பு என்பதாக இருந்தது. கேரென்ஸ்கி அரசாங்கத்தின் வாக் குறுதிகள் யாவும் இருந்தபோதிலும், மூலதனம் தொடர்ந்து நாட்டின் உற்பத்தியைக் குலைத்து வருகிறது, சீர்குலைவை அதிகப்படுத்துகிறது என்று நாம் கூறினோம். இது முற்றிலும் அழிவில் போய் முடிந்திருக்கும் என்பதை இப்போது நாம் பார்க்க முடியும். எனவே ஒவ்வொரு சோஷலிஸ்டு, தொழி லாளர் அரசாங்கமும் எடுக்க வேண்டிய முதல் அடிப்படை நடவடிக்கை தொழிலாளர் கண்காணிப்பு ஆகும். தொழில் துறை முழுதிலும் நாம் சோஷலிசத்தை உடனடியாக ஆணை யிடவில்லை. காரணம் தொழிலாளி வர்க்கம் பொருளாதா ரத்தை எவ்வாறு நிர்வகித்து நடத்துவது என்பதை அறிந்து கொண்ட பின்பே, உழைக்கும் மக்களின் அதிகாரம் உறுதி யாக நிலைநாட்டப்படும் பொழுதே சோஷலிசம் உருப்பெற்று கெட்டிப்பட முடியும். இவை இல்லையேல் சோஷலிசம் வெறும் விருப்பக் கற்பனையே. இதனுல்தான் அது முரண் பாடானதும் முழுமை பெருததுமான நடவடிக்கை, ஆனுல் முக்கியமான நடவடிக்கை என்பதை அறிந்தேற்றுக் கொண்டு தொழிலாளர் கண்காணிப்பை ஏற்படுத்தினோம். இதன் வழி ஒரு பரந்த நாட்டில் சுரண்டலாளர்கள் இன்றியும், சுரண்ட லாளர்களை எதிர்த்தும் தொழிலாளர்கள் தாமே தொழில்

துறையைக் கட்டிவளர்க்கும் முக்கியமான பணியைச் சமாளிக்க வேண்டும். தோழர்களே! இந்த வேலையில் நேரடியாகவும் அல்லது மறைமுகமாகவும் கூடப் பங்கு பற்றிய எல்லோரும், பழைய முதலாளித்துவ ஆட்சியின் அனைத்து அடக்குமுறையிலும் கொடுமையிலும் நெடுகிலும் வாழ்ந்து வந்த எல்லோரும் மிகப் பெருமளவு அனுபவப்பட்டு அறிந்தனர். மிகச் சிறிதளவே நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். இந்த மிக மிகப் பிற்பட்டதான வறுமை மிகுந்த நாட்டில் தொழிலாளர்கள் முன்பாக எண்ணற்ற தடைகளும் முட்டுக்கட்டைகளும் போடப்பட்டிருக்கும் நிலையில் தொழில்துறையை நிர்வகித்து நடத்துவதில் பயிற்சிபெற அவர்களுக்கு நீண்ட காலம் பிடிக்கும் என்பதையும் நாம் அறிவோம். தொழிலாளர்கள் தாமே இந்த வேலையைச் செய்து சமாளித்து விட்டார்கள் என்பதையும் தொழில் துறையில் நிச்சயமாயும் குழப்பமான வகையிலும் ஒழுங்கு குலைந்தும், பழம் பாணியிலும் முழுமையுறுமலும் இருந்த தொழிலாளர் கண்காணிப்பில் இருந்து தேசிய அளவிலான தொழிலாளர் தொழில்துறை நிர்வாகத்துக்கு நாம் கடந்து வந்து விட்டோம் என்பதையும் மிகவும் முக்கியமானதாகவும் மதிப்புடையதாகவும் கருதுகிறோம்.

தொழிற்சங்கங்களின் நிலைமை மாறி விட்டது. அவற்றின் பிரதானக் கடமை இப்போது எல்லா நிர்வாக போர்டுகளுக்கும் மத்திய உறுப்புக்களுக்கும், அழிக்கப்பட்டதும் வேண்டுமென்றே சீர்குலைக்கப்பட்டதுமான தொழில்துறையை முதலாளித்துவத்திடமிருந்து எடுத்துக் கொண்டிருக்கும் எல்லாப் புதிய நிறுவனங்களுக்கும் அவற்றின் பிரதிநிதிகளை அனுப்பிவைப்பதே. சுரண்டலாளர்கள் இல்லாத சமூக வழி உடைமையிலான ஒரு பொருளாதாரத்தைக் கட்டுவதற்கு மக்களுக்கு உதவி செய்யாமல், சோஷலிச லட்சியத்தைச் செயல்குலைப்பதற்கென்றே தமது அறிவையும் கல்வியையும் —மனிதகுலத்தின் அறிவுக் களஞ்சியத்தின் பயனை—வேண்டுமென்றே பயன்படுத்தி வந்த அந்த அறிவுஜீவிகளின் உதவி இன்றித் தொழிற்சங்கங்கள் தொழிற்துறைப் பொறுப்புக்களைச் சமாளித்து வந்துள்ளன. இந்த நபர்கள், தலையிட்டுக் கெடுப்பதற்கும், நிர்வாக வேலையைச் செய்து சமாளிப்பதற்குக் கிஞ்சிற்றும் பயிற்றுவிக்கப்படாத தொழிலாளர்

களைத் தடுத்து இடர் செய்யவுமே தமது அறிவைப் பயன் படுத்த விரும்பினார்கள். பிரதானத் தடங்கல் அகற்றப்பட்டு விட்டது என்று நாம் இப்போது சொல்லலாம். இது மிகவுங் கடினமாகவே இருந்தது. ஆனால் முதலாளித்துவ வர்க்கத்தை நோக்கி ஈர்க்கப்படும் எல்லா நபர்களின் சீர்குலைவும் தடுத்து நிறுத்தப்பட்டது. மிகப் பெரிய இடையூறுகள் இருந்தபோதிலும், இந்த அடிப்படையான நடவடிக்கையை எடுப்பதில், சோஷலிசத்திற்கான அடித்தளங்களை நிறுவுவதில் தொழிலாளிகள் வெற்றி பெற்றார்கள். நாம் இதை மிகைப்படுத்திக் கூறவில்லை, உண்மையை எடுத்துச் சொல்ல நாம் அஞ்ச மாட்டோம். நமது இறுதி நோக்கத்தை வைத்துப் பார்க்கும் போது, நிறைவேற்றி முடித்திருப்பது மிக அற்பமே என்பது மெய்யே. ஆனால் அடித்தளங்களை வலுப்படுத்துவதற்குப் பெரும் அளவு, மிகப் பெரும் அளவு பணி ஆற்றப்பட்டுள்ளது. சோஷலிசத்தைப் பற்றிக் கூறும் போது, பெரும் பகுதி தொழிலாளர்கள் அரசியல் ரீதியில் உணர்வு பூர்வமான வழியில், அதாவது புத்தகங்கள் சிறுவெளியீடுகளைப் படிப்பதில் ஈடுபட்டனர் என்ற அர்த்தத்தில் இந்த அடித்தளங்களை நிறுவியிருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. அரசியல் உணர்வு என்று கூறும் போது, அவர்கள் இந்த அசாதாரணமாயும் கடுமையான பணியினைத் தமது சொந்தக் கரங்களால், தமது சொந்த முயற்சிகளால் செய்து சமாளித்திருக்கிறார்கள் என்றே பொருள் கொள்கிறோம். அவர்கள் ஆயிரக் கணக்கான பிழைகளைப் புரிந்திருக்கிறார்கள், அவை ஒவ்வொன்றிலிருந்தும் அவர்கள் தாமே தொல்லைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு பிழையும் அவர்களைத் தொழில்துறை நிர்வாகத்தை ஒழுங்கமைப்பதில் பயிற்றுவித்து உறுதிப்படுத்தியுள்ளது. இந்த நிர்வாகம் இப்போது உறுதியான அடித்தளத்தின் மீது வைக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டு விட்டது. அவர்கள் தமது வேலையை விடாது நடத்தி முடித்து விட்டார்கள். இப்போது முதல் இந்த வேலை வேறு வகையில் இருக்கும். ஏனெனில், தலைவர்களும் முன்னணி தொழிலாளர்களும் மட்டுமன்றி எல்லாத் தொழிலாளர்களும் மாபெரும் தொழிலாளர் பகுதிகள் தாமே தமது சொந்தக் கரங்களால் சோஷலிசத்தைக் கட்டிவருவதையும், அதற்கான அடித்தளங்களை ஏற்கெனவே நிறுவி விட்டார்கள் என்பதையும் அறிவார்

கள். எனவே இந்த வேலையை நடத்தி முடிப்பதில் இருந்து அவர்களை நாட்டிலுள்ள எந்த சக்தியாலும் தடுக்க முடியாது.

தொழில்துறையில் நமக்கு மாபெரும் இடர்ப்பாடுகள் இருந்திருக்கலாம். அங்கே பலருக்கு நெடியதாகத் தோற்றமளித்த ஒரு பாதையை நாம் கடக்க வேண்டி இருந்தது. ஆனால் இது உள்ளபடியே குறுகிய பாதை. மற்றும் இது தொழிலாளர் கண்காணிப்பில் இருந்து தொழிலாளரின் நிர்வாகத்துக்கு இட்டுச்சென்றது. இருப்பினும் அதிகப் பின் தங்கியிருந்த நாட்டுப்புறப் பகுதிகளில் மிகவும் அதிகமான தயாரிப்பு வேலைகள் செய்யப்பட வேண்டி இருந்தது. நாட்டுப்புற வாழ்க்கையை ஆராய்ந்து விவசாயிகளுடன் தொடர்பு பூண்ட எவரும், 1918 கோடை மற்றும் முன்பனிக்காலத்தில் மட்டுமே நகரப்புற அக்டோபர் புரட்சி மெய்யான நாட்டுப்புற அக்டோபர் புரட்சியாக மாறிற்று என்று கூறுவார். பெத்ரோகிராத் தொழிலாளர்களும் பெத்ரோகிராத் காவற் படையினர்களும் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்ட போது நாட்டுப்புற நிறுவன ஒழுங்கமைப்பு வேலையில் மாபெரும் இடர்ப்பாடுகள் தலைதூக்கும், அங்கு நமது முன்னேற்றம் மிகவும் படிப்படியானதாகவே இருக்கும் என்பதை, அரசாணை மற்றும் சட்டம் மூலம் சமூகவுடைமை விவசாயத்தைப் புகுத்த முயல்வது மாபெரும் முட்டாள் தனமாக இருக்கும், காரணம் அறிவொளி பெற்ற மிகவும் சொற்ப அளவிலான விவசாயிகள் மட்டுமே நம்மை இதில் ஆதரிக்கக் கூடும், மிகப் பெரிய பெரும்பான்மையினருக்கு இத்தகைய குறிக்கோள் எதுவும் கிடையாது என்பதை முழுமையாக உணர்ந்திருந்தார்கள். எனவே நாம் புரட்சி நிறைவேற உதவும் காரியங்களுக்கு எது அறவே இன்றியமையாததாக இருந்ததோ அதோடு கட்டுப்படுத்திக் கொண்டோம். மக்களின் வளர்ச்சித் தரத்தை எந்த இடத்திலும் மீறிச் செல்ல முயலவில்லை. மாறாக அவர்களது சொந்த அனுபவத்தில் இருந்தும் சொந்தப் போராட்டத்தில் இருந்தும் ஏற்படும் முன்னேற்ற இயக்கம் நிகழும் வரையில் காத்திருந்தோம். அக்டோபரில் நாம் விவசாயிகளின் கால காலமான எதிரியான நிலப்பிரபுத்துவ-அடிமையுடைமை நிலவுடைமையாளர் பெரிய நிலச் சொந்தக்காரர்களை ஒரே அடியில் ஒழித்துக் கட்டுவதோடு கட்டுப்படுத்திக் கொண்டோம். இந்தப் போராட்டத்தில்

எல்லா விவசாயிகளும் சேர்ந்து கொண்டார்கள். இந்தக் கட்டத்தில் விவசாயிகள் பாட்டாளிகள், அரைப்பாட்டாளிகள், ஏழை விவசாயிகள் மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தினர் என்பதாக இன்னும் இனம் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. இத்தகைய போராட்டம் இல்லாமல் சோஷலிசம் இருக்காது என்பதை சோஷலிஸ்டுகளாகிய நாம் அறிவோம். ஆனல் இதை அறிந்திருந்தால் மட்டும் போதாது என்பதையும், இதை லட்சோபலட்சம் மக்களுக்கு பிரசாரம் மூலம் அன்றி அவர்களது சொந்த அனுபவத்தின் மூலமே மனத்தில் பதிய வைக்க வேண்டும் என்பதையும் கூட நாங்கள் உணர்ந்திருந்தோம். இதன் காரணமாக, ஒட்டுமொத்தமான விவசாயிகள் புரட்சியை சமமான சாகுபடியுடைமையுரிமையின் அடிப்படையில் மட்டுமே கருதிப்பார்க்க முடியும் என்பதால், நாம் நமது 1917 அக்டோபர் 26ந் தேதிய அரசாணையில் நிலம் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் தீர்ப்புக் கட்டளையை[2] நமது துவக்க நிலையாக எடுத்துக் கொள்வதெனப் பகிரங்கமாகச் சாற்றினேம்.

அது நமது கருத்துக்களுக்கு இசைவானதல்ல; அது கம்யூனிசம் அல்ல என்று நாம் வெளிப்படையாகச் சொன்னேம். ஆனல் அவர்களுடைய கருத்துக்களுடன் ஒத்துவராத நமது வேலைத்திட்டத்துடன் மட்டுமே இசைவாக உள்ள எதையும் நாம் விவசாயிகளின் மீது திணிக்கவரவில்லை. புரட்சியின் வளர்ச்சிப் போக்கு நாமே வருவித்த முடிவுகளுக்கு அவர்களை இட்டுச்செல்லும் என்பதில் முழு நம்பிக்கையுடன், நாம் அவர்களுடன் சகோதரத் தொழிலாளர்களுடன் போலவே நெடுகிலும் அணி வகுத்துச் செல்கிறோம் என்று நாம் கூறினேம். இந்தக் கொள்கையின் பலனே விவசாயிகள் இயக்கம். நிலம் சமூகவுடைமையாக்கப்பட்டதோடு விவசாய சீர்திருத்தம் தொடங்கியது. இது நமது கருத்துக்களுக்கு இசைவானதல்ல என்று பகிரங்கமாகச் சாற்றிய போதிலும், இதற்கு நாம் வாக்களித்தோம். இதை நிறைவேற்றினேம். சமத்துவமான அடிப்படையில் நிலத்தைப் பயன்படுத்தும் உரிமை என்ற கருத்துக்கு மிகப்பெரிய பெரும்பான்மையின் ஆதரவு இருந்தது என்பதை நாமறிவோம். அவர்கள் மீது வலுவந்தமாக எதையும் திணிக்கும் விருப்பம் நமக்கு இல்லை. விவசாயிகள் தாமே இந்தக் கருத்தைக் கைவிட்டு மேலும் முன்னேறி வரும்

வரையில் நாம் காத்திருப்பதற்குத் தயாராக இருந்தோம். எனவே நாம் காத்திருந்து நமது சக்திகளைத் தயார் செய்ய முடிந்தது.

அப்போது நாம் நிறைவேற்றிய சட்டம் பொதுவான ஜனநாயகக் கோட்பாடுகளை அடிப்படையாக்கியது. நிலப் பிரபுக்கள் மீது பகைமை என்பதே அதன் சாரம். அது செல்வந்த குலாக் விவசாயிகளை ஏழை விவசாயிகளுடன் இணைக்கிறது. அது சமத்துவம் பற்றிய பொதுவான கருத்தை அடிப்படையாக்கியது. அது பழைய மன்னராட்சி அமைப்புக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்பட்ட ஒரு புரட்சிக் கருத்து என்பதில் ஐயமில்லை. இந்தச் சட்டத்தில் இருந்து நாம் விவசாயிகளின் வகைப் பாகுபாட்டைக் கண்டறிய வேண்டும். நிலத்தைச் சமூகவுடைமையாக்கும் சட்டம் சர்வப் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது; நம்மாலும், போல்ஷிவிக் கொள்கையை ஆதரிக்காதவர்களாலும் ஒருங்கே ஒருமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிலம் யாருக்குச் சொந்தம் என்பதை முடிவு செய்வதில் விவசாயக் கம்யூன்களுக்கு நாம் ஆகப்பெரிய இறுதி அதிகாரம் அளித்திருந்தோம். 1917 அக்டோபரில் அது இன்னும் தயார் நிலையில் இல்லை என்பதை நன்கு அறிந்திருந்தும் சோஷலிஸ்டுப் பாதையில் விவசாயம் அபிவிருத்தி பெறுவதற்கான பாதையைத் திறந்து வைத்தோம். நமது தயாரிப்பு வேலை இப்போது நாம் மேற்கொண்டுள்ள பிரம்மாண்டமான, சகாப்தம் விளைக்கும் நடவடிக்கைக்கு வழி திறந்தது. இத்தகைய நடவடிக்கை வேறு எந்த நாட்டாலும், ஆக ஜனநாயகமான குடியரசினால் கூட மேற்கொள்ளப்படவில்லை. இந்த நடவடிக்கை இந்தக் கோடை காலத்தில், ருஷ்யாவின் மிகுந்த தொலைதூரக் கிராமங்களிலும் கூட எல்லா விவசாயிகளாலும் மேற்கொள்ளப்பட்டது. உணவு முட்டுப்பாடுகள் தோன்றி பஞ்சம் அச்சுறுத்திய போது, பழமையின் மரபும் நாலாண்டுக் கால சாபக்கேடான போரின் பின்விளைவும் முனைப்பாக நிற்கும் போது, எதிர்ப் புரட்சியும் உள்நாட்டுப் போரும் தானியக் களஞ்சியமான நமது பிராந்தியத்தை நாம் இழக்கும்படி செய்துவிட்ட போது, இவையாவும் உச்ச கட்டத்தை எட்டிய போது, நகரங்கள் பஞ்சத்தால் ஆபத்துக்குள்ளாக்கப்பட்ட போது, நமது அரசாங்கத்தின் ஒரே ஆக நம்பகமான உறுதியான

கொத்தளமான நகரங்கள், தொழிற்துறை பிராந்தியங்களின் முன்னணித் தொழிலாளர்கள் நாட்டுப்புறத்துக்குத் திரள் திரளாகச் சென்ருர்கள். விவசாயிகளுக்கும் தொழிலாளர் களுக்கும் இடையே ஒரு ஆயுத மோதலைத் தூண்டிவிடவே தொழிலாளர்கள் அங்கே சென்ருர்கள் என்று கூறுவது அவ தூருகும். நிகழ்ச்சிகள் இந்த அவதூறை அம்பலப்படுத்தி விட்டன. மக்கள் பட்டினியால் வாடும் போது தானியத்தில் கொள்ளைலாபமடித்து பெரும் செல்வம் திரட்டி வந்த கிராமப்புற சுரண்டலாளர்களை—குலாக்குகளை—ஒடுக்குவ தற்காகவே தொழிலாளர்கள் சென்ருர்கள். அவர்கள் ஏழை விவசாயிகளுக்கு அதாவது கிராமப்புற மக்கள் தொகையில் பெரும்பான்மையினராக இருப்பவர்களுக்கு உதவி புரியவே அங்கு சென்ருர்கள். குலாக்குகள் கலகம் ருஷ்யா முழுவதும் மோதியடித்துக் கொண்டிருந்த போதிலான ஜூலை நெருக் கடி, தொழிலாளரின் இந்த லட்சியப் பணி வீணுகவில்லை என்பதையும் அவர்கள் நேச உறவுக்காகக் கரம் நீட்டினர் என்பதையும் அவர்களது தயாரிப்பு வேலை விவசாயிகளின் முயற்சிகளுடன் இரண்டறக் கலந்து விட்டது என்பதையும் தெளிவாகப் புலப்படுத்தியது. நாட்டுப்புறத்தில் இருந்த உழைக்கும், சுரண்டப்படும் மக்கள் எல்லா இடங்களிலும் வீறு கொண்டு எழுந்தும் நகரப்புறப் பாட்டாளிகளுடன் நேச அணியில் சேர்ந்து நின்றும் ஜூலை நெருக்கடிக்குத் தீர்வு கண்டார்கள். பெத்ரோகிராதில் ஏழை விவசாயிகள் கமிட்டி களின்[3] பிராந்தியக் காங்கிரசில்[4] 18 ஆயிரம் பேர் கலந்து கொண்டிருக்கிருர்கள் எனவும், அங்கு குறிப்பிடத் தக்க உற் சாகமும் வீரமும் காணப்பட்டன எனவும் இன்று தோழர் ஸினேவியெவ் தொலைபேசியில் என்னிடம் கூறினுர். ருஷ்யா முழுவதிலும் நிகழ்ச்சிகள் விரிவுறுவதை மேலும் தெளிவுறக் கண்ட கிராமப்புற ஏழை மக்கள் தாம் போராட்டத்தில் இறங்கிய போது, குலாக்குகளை எதிர்த்த போராட்டம் எத் தகையது என்பதைத் தமது சொந்த அனுபவத்தில் இருந்தே உணர்ந்தார்கள். மேலும் நகரங்களுக்குத் தொடர்ந்து உணவுப் பொருட்களை அனுப்புவதற்கும் பண்டப் பரிமாற் றத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கும்—இதைச் செய்யாவிட் டால் நாட்டுப்புற மக்கள் உயிர் வாழ முடியாது—கிராமப்புற முதலாளித்துவ வர்க்கம் மற்றும் குலாக்குகளை விட்டுப் பிரிய

வேண்டும் என்பதை உணர்ந்தார்கள். அவர்கள் தனியாக ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. நாம் இப்போது நாட்டுப்புறப் பகுதியில் சோஷலிஸ்டுப் புரட்சியின் முதலாவதும் மிகவும் பெருவிளைவுகளை உண்டாக்கவல்லது மான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். அந்த நடவடிக்கையை நாம் அக்டோபரில் எடுத்திருக்க முடியாது. நாம் மக்களை அணுகக் கூடியதான தருணத்தை சரியாகக் கணித்திருந்தோம். நாட்டுப்புறப் பகுதிகளில் சோஷலிஸ்டுப் புரட்சி துவங்கி விட்டது என்ற நிலையைக் குறிக்கும் ஒரு கட்டத்தை நாம் இப்போது எட்டியிருக்கிறோம். இந்தப் பகுதியில் ஒவ்வொரு கிராமத்திலும் ஆகத் தொலைவில் இருப்பதில் கூடத் தனது செல்வந்த அண்டைவாசி, அண்டைவாசி குலாக் தானியத்தில் கொள்ளைலாபமடிப்பதில் ஈடுபட்டிருப்பாரானால் அவர் எல்லாவற்றையும் தனது பழைய காட்டகத்துப் பாணி மனப்போக்கிலேயே பார்க்கிறார் என்பதை விவசாயி அறிவார்.

இவ்வாறாக, விவசாயப் பகுதிகள், கிராமிய ஏழை மக்கள் தமது தலைவர்களுடன், நகரத்துத் தொழிலாளர்களுடன், ஒன்றுசேர்ந்து நின்று மெய்யான சோஷலிஸ்டு நிர்மாணத்துக்கு உறுதியான நிலையான அடித்தளத்தை இப்போது தான் வழங்கியிருக்கிறார்கள். நாட்டுப்புறப் பகுதிகளில் சோஷலிஸ்டு நிர்மாணம் இப்போது மட்டுமே தொடங்கும். இப்போது மட்டுமே சோவியத்துக்களும் பண்ணைகளும் உருவாகி வருகின்றன. இவை பெருவீத சமூகவுடைமை பண்ணைகளை நோக்கி முறையாகச் செயல்பட்டு வருகின்றன. அறிவு, விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தி வருகின்றன. மிகச் சாதாரணமான ஆரம்ப கட்ட மானுட கலாசாரம் கூட பழைய பிற்போக்கு அறியமை வாழ்க்கை முறையை அடிப்படையாகக் கொண்டு இருக்க முடியாது என்பதை உணர்ந்தே இவ்வாறு செயல்பட்டு வருகின்றன. இங்கு இந்த வேலை தொழில்துறையில் இருப்பதை விட இன்னும் அதிகக் கடினமானது, நமது உள்ளூர் கமிட்டிகளும் சோவியத்துக்களும் இன்னும் அதிகத் தவறுகளைச் செய்து வருகின்றன. ஆனால் அவை தமது தவறுகளில் இருந்து படிப்பினை பெறுகின்றன. சோஷலிஸ்டு நிர்மாணம் குறித்து மனச்சாட்சி பூர்வமான தோரணை மேற்

கொள்ளும் சாமான்ய மக்கள் தவறுகள் செய்யும் போது நாம் பயப்படுவது இல்லை. காரணம் நாம் நமது சொந்த மக்களின் அனுபவத்தையும் முயற்சியையுமே சார்ந்திருக்கிறோம்.

இத்தனை குறுகிய காலத்துக்குள் நாட்டுப்புறப் பகுதியில் நம்மை சோஷலிசத்துக்கு இட்டுச் சென்றுள்ள இந்த மாபெரும் மாற்றம், இந்த முழுமையான போராட்டம் வெற்றிவாகை சூடி விட்டது என்பதைக் காட்டுகிறது. செஞ்சேனையே இதற்கு மிகவும் எடுப்பான நிரூபணமாகும். ஏகாதிபத்திய உலகப் போரின் போது நாம் இருந்த நிலையினை நீங்கள் அறிவீர்கள். அன்று ருஷ்யாவில் இருந்த நிலைமைகள் சாமான்ய மக்களுக்கு வாழ்க்கையை சகிக்க முடியாத ஒன்ருக ஆக்கியிருந்தன. அந்த சமயம் நாம் அறவே ஏலாத நிலையில் இருந்தோம். இந்த முழு உண்மையையும் உழைக்கும் மக்களிடம் வெளிப்படையாகச் சொன்னோம். ஏமாற்றுவதற்கு ஒரு மிகப்பெரும் கருவியாகப் பயன்பட்டு வந்த ஒரு கொள்கையின் பலனை இரகசிய ஏகாதிபத்திய உடன்படிக்கைகளை அம்பலப்படுத்திஞேம். இது ஆக முன்னேறிய முதலாளித்துவ ஏகாதிபத்திய ஜனநாயகக் குடியாசாக இருக்கும் அமெரிக்காவில் இன்று மக்களை முன் என்றையும் விட அதிகமாக ஏமாற்றி வருகிறது, அவர்களை இஷ்டம் போல ஆட்டிப்படைக்கிறது. போரின் ஏகாதிபத்தியத் தன்மை எல்லோருக்கும் அப்பட்டமாகத் தெரிய வந்தவுடன், முதலாளித்துவ இரகசிய அயல்துறைக் கொள்கையைத் தகர்த்துச் சிதறடித்த ஒரே நாடு ருஷ்யாவின் சோவியத் குடியரசாகும். இரகசிய உடன்படிக்கைகளை அம்பலப்படுத்தி தோழர் திரோத்ஸ்கி மூலமாக உலகத்தின் சகல நாடுகளுக்கும் இது பறை சாற்றியதாவது: இந்தப் போருக்கு ஒரு ஜனநாயகமான வழியில் பிரதேசக் கைப்பற்றல்கள் மற்றும் இழப்பீட்டுத் தண்டத் தொகைகள் இல்லாமல் முடிவு காணும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறோம்; மேலும், முதலாளித்துவ அரசாங்கங்களுக்கு எதிரான ஒரு புரட்சியால் மட்டுமே இந்தப் போருக்கு முடிவு கட்ட முடியும் என்ற உண்மையை—கசப்பான உண்மையாக இருந்தபோதிலும் மெய்ப்பாடாக இருப்பதைப்—பகிரங்கமாயும் பெருமிதத்தோடும் பிரகடனம் செய்கிறோம். ஆனல் இதில் நாம் தனியாகவே நின்றோம்.

எனவே வலுவந்தமான பிரேஸ்த் உடன்படிக்கையால்[5] நம் மீது திணிக்கப்பட்ட பயங்கரமான கடுவேதனையும் இடர்ப்பாடும் தரும் அந்த சமாதானத்தின் விளைவுகளை ஏற்க நேர்ந்தது. இந்த உடன்படிக்கை நமது அனுதாபிகள் பலரைத் துயரும் விரக்தியும் உறும்படி விரட்டியது. இதற்குக் காரணம் நாம் தனியாகவே இருந்தோம். ஆனால் நாம் நமது கடமையைச் செய்தோம், எல்லோரும் பார்க்கும்படி போரின் நோக்கங்களை அம்பலப்படுத்திக் காட்டினோம்! நமது தொழிலாளர்களும் விவசாயிகளும் சரிவர ஒழுங்கமைத்துக் கொள்வதற்கு நீண்ட காலம் பிடித்ததன் காரணத்தால் ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் தாக்குதல் நம்மைத் திணற அடிக்க முடிந்தது. அப்போது நம்மிடம் சேனை இருக்கவில்லை. இருந்ததெல்லாம் பழைய கட்டுக் குலைந்ததான ஏகாதிபத்தியவாதிகளின் சேனையே. அது படையாளிகள் ஆதரிக்காத அவர்களது அனுதாபம் இல்லாத நோக்கங்களுக்காகப் போரில் சண்டையிடும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி இருந்தது. எனவே நாம் மிகவும் வேதனையான ஒரு காலகட்டத்தைக் கடந்து செல்ல நேரிட்டது. பயங்கரமான ஏகாதிபத்தியப் போரில் இருந்து மக்களுக்கு ஓர் ஓய்வு தேவையாக இருந்த காலம் அது, ஒரு புதிய போர் துவங்குகிறது என்பதை உணர வேண்டி இருந்த காலம். நமது சோஷலிஸ்டுப் புரட்சியைத் தாங்கி ஆதரிப்பதற்காக நாம் நடத்தும் போரை நமது போர் என்று கருத நமக்கு உரிமையுண்டு. இதையே லட்சம், கோடிக்கணக்கான மக்கள் தங்களது சொந்த அனுபவத்தில் இருந்து அறிந்தேற்றுக்கொள்ளப் பயில வேண்டி இருந்தது. இதற்குப் பல மாதங்கள் பிடித்தன. இந்த உணர்வு நிறைவேற்றம் பெற நீண்டதும் கடினமுமான போராட்டம் தேவைப்பட்டது. எனினும் இந்தக் கோடையில் இது கடைசியாக நிறைவேற்றம் பெற்று விட்டதையும் ஒரு மாற்றம் வந்து விட்டதையும் எல்லோரும் கண்டார்கள். மக்களிடமிருந்து வந்துள்ள சேனை, தன்னைத் தானே தியாகம் புரிந்து வரும் சேனை, நாலாண்டு கால இரத்தவெறி படுகொலைக்குப் பிறகு மீண்டும் போருக்குச் செல்லத் தயாராக இருக்கும் சேனை, சோவியத் குடியரசுக்காகப் போராட வேண்டுமானல் நமது நாடு போருக்குச் செல்லும் மக்களின் சோர்வையும் விரக்தியையும் அகற்றி, அவர்கள் தமது சொந்த லட்சியத்

திற்காக தொழிலாளர் விவசாயிகள் சோவியத்துக்கள் மற்றும் சோஷலிஸ்டு குடியரசுக்காக மரணத்தை வரிக்கிருர்கள் என்ற தெட்டத்தெளிவான உணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதை எல்லோரும் தெளிவாக உணர்ந்தார்கள். அது சாதனையாகி விட்டது.

கோடையில் செக்கோஸ்லவாக்கியர்களை[6] எதிர்த்து நாம் அடைந்த வெற்றிகளும், இப்போது பெரிய வெற்றிகளைப் பற்றி வந்து கொண்டிருக்கும் செய்திகளும், ஒரு திரும்பு முனை ஏற்பட்டு விட்டது என்பதையும், நாலாண்டு கால பயங்கர போருக்குப் பிறகு மக்களை அரசியல் போதமுள்ள சோஷலிஸ்டுப் பாதையில் ஒன்றுதிரட்டும் அந்தக் கடினமான பணி சாதிக்கப்பட்டு விட்டது என்பதையும் காட்டுகின்றன. அந்த அரசியல் போதம் மக்கள் மத்தியில் பெருமளவு ஊடு பரவியுள்ளது. தாம் ஒரு கடினமான வேலையை முயன்று சமாளித்து வருகிறோம் என்பதைக் கோடிக்கணக்கான மக்கள் உணரத் தொடங்கி விட்டார்கள். இன்று நம்மை விட வலுவுடன் இருக்கும் உலக ஏகாதிபத்தியத்தின் சக்திகள் நமக்கு விரோதமாக ஒன்றுதிரட்டப்பட்ட போதிலும், சோவியத் ஆட்சியதிகாரம் ஒரு ஆபத்து என்பதை உணர்ந்து அதை நெரித்து அழிப்பதில் ஆர்வம் காட்டும் ஏகாதிபத்திய வாதிகளின் படையாளிகள் நம்மைச் சுற்றிவளைத்திருக்கின்ற போதிலும், அவர்கள் நம்மை விட பலமானவர்கள் என்று நாம் உண்மையை மறைக்காமல் சொன்ன போதிலும் நாம் விரக்தி அடையத் தேவையில்லை என்று இந்த அரசியல் போதம் நமக்கு உறுதியளிக்கிறது.

நாம் வளர்ந்து வருகிறோம், சோவியத் குடியரசு வளர்ந்து வருகிறது என்று நாம் கூறுகிறோம். ஏகாதிபத்தியவாதிகளின் படைகள் நம்மைச் சூழ்ந்து நெருக்குவதை விடவும் அதிக வேகத்தில் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் லட்சியம் வளர்ந்து வருகிறது. நாம் ருஷ்யாவின் சோஷலிஸ்டுப் புரட்சியினதும் நலனுக்கு மட்டுமின்றி உலக சோஷலிஸ்டுப் புரட்சியினதுமான நலன்களுக்காகப் போராடி வருகிறோம் என்ற பூரண நம்பிக்கையும் உறுதிப்பாடும் கொண்டுள்ளோம். நமது தொழிலாளர்கள் மேலும் அதிகமான அரசியல் போதம் அடைந்து வருவதால் வெற்றி குறித்த நமது நம்பிக்கைகள் வேகமாக வளர்ந்து வருகின்றன. கடந்த அக்டோபரில்

சோவியத் நிறுவனத்தின் நிலைமை என்ன? முதல் நடவடிக்கைகள் மட்டுமே எடுக்கப்பட்டிருந்தன. அதை முழுமைப்படுத்தவோ அல்லது இன்றைய நிலைமைக்கு ஏற்ப தகவமைக்கவோ நம்மால் இயலவில்லை. ஆனால் இப்போது நம்மிடம் சோவியத் அரசியல் அமைப்புச் சட்டம் இருக்கிறது. ஜூலையில் உறுதி செய்யப்பட்டதான சோவியத் அரசியல் அமைப்புச் சட்டம் கமிஷனுடைய புனைவோ, வழக்கறிஞர்களின் படைப்போ அல்ல என்பதையும், இதர அரசியல் அமைப்புச் சட்டங்களில் இருந்து காப்பி அடிக்கப்பட்டதல்ல என்பதையும் நாம் அறிவோம். நம்முடையதைப் போன்ற ஓர் அரசியல் அமைப்புச் சட்டத்தை உலகம் என்றுமே கண்டதில்லை. இது நம் நாட்டிலும் உலகம் முழுவதிலும் சுரண்டலாளர்களை எதிர்த்துத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டம் நிறுவன அமைப்புப் பணி ஆகியவற்றின் அனுபவத்தை உருவகப்படுத்துகிறது. நம்மிடம் ஏராளமான போராட்ட அனுபவம் இருக்கிறது. ( க ர வொ லி . ) ஒன்றுதிரட்டப்பட்ட தொழிலாளர்கள் சிவில் உத்தியோகஸ்தர்கள் இல்லாத, நிரந்தர சேனை இல்லாத, தனிச்சலுகைகள்(நடைமுறையில் முதலாளித்துவ வர்க்கத்துக்கான தனிச்சலுகைகள்) இல்லாமல் ஒரு சோவியத் ஆட்சியதிகாரத்தை உருவாக்கினார்கள் என்னும், ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் ஒரு புதிய அமைப்பு முறைக்கான அடித்தளங்களை உருவாக்கினார்கள் என்னும் மெய்நடப்புக்கு எடுப்பான ஒரு முறையான உறுதிப்பாட்டை வழங்கியுள்ளது இந்த அனுபவம். நாம் வேலையில் இறங்கி இருக்கிறோம். சோவியத் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அமுலாக்கத்தை நிறைவேற்றுவதற்கு அத்தியாவசியமாக இருக்கும் புதிய உதவியாளர்களை ஈர்த்து வருகிறோம். அதற்கு இப்போது நம்வசம் தயாரான புதிய தொண்டர்கள்—இளம் விவசாயிகள்—உள்ளனர். இவர்களை இந்தப் பணியில் ஈர்க்க வேண்டும், இந்த வேலையைச் செய்து முடிக்க இவர்களை உதவும்படிச் செய்ய வேண்டும்.

நான் எழுப்ப விரும்பும் கடைசி விஷயம் சர்வதேச நிலைமை பற்றியது. நாம் நமது சர்வதேசத் தோழர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நிற்கிறோம். ருஷ்யாவின் பாட்டாளி வர்க்கப் புரட்சி உலகப் புரட்சியாக அவர்களுடன் நெடுகிலும் முன்செல்லும் என்ற தமது திட நம்பிக்கையில்

அவர்கள் தோற்றுவித்துள்ள உறுதியையும் உற்சாகத்தையும் இப்போது நாமே கண்டு விட்டோம்.

புரட்சியின் சர்வதேசிய முக்கியத்துவம் பெருகப் பெருக உலகம் முழுதிலுமுள்ள ஏகாதிபத்தியவாதிகள் நமக்கு எதிராக மேலும் நெருக்கமாக மேலும் வெறி கொண்டு ஒன்று சேர்ந்து வரிந்து கட்டிக் கொண்டு நின்றார்கள். 1917 அக்டோபரில் நமது குடியரசைப் பொருட்படுத்திக் கவனம் செலுத்தத் தகுதியில்லாத ஒரு விசித்திர அமைப்பு என்றே அவர்கள் கருதினார்கள். பிப்ரவரியில் அவர்கள் அதை சோஷலிசத்தில் நடத்தும் ஒரு சோதனை என்றும் முக்கியமாக எடுத்துக் கொள்ளத் தேவையில்லை எனவும் கருதினார்கள். ஆனால் ஒரு சோஷலிஸ்டு செஞ்சேனையை உருவாக்கும் மிகவும் கடினமான பணியினைச் செய்து முடிக்கும் வரை இக்குடியரசின் சேனை வளர்ந்தது, வலுவடைந்தது. நமது லட்சியம் வலுப் பெற்று அதன் வெற்றிகள் பல மடங்கு பெருகியதோடு எல்லா நாடுகளையும் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகளின் வெறித்தனமான எதிர்ப்பும் வெறித்தனமான பகைமையும் மேலும் அதிகரித்தன. தாம் வில்ஹெல்மின் எதிரிகள் என்று முன்பு பறைசாற்றிய ஆங்கில-பிரெஞ்சு முதலாளிகள் சோஷலிஸ்டு சோவியத் குடியரசை நெரித்து அழிப்பதற்கான முயற்சியில் அதே வில்ஹெல்முடன் ஒன்றுசேரும் எல்லையைப் போய் எட்டும் ஒரு நிலைமைக்கு காரியங்கள் வந்து விட்டன. காரணம் அவர்கள் சோவியத் குடியரசு ஒரு விசித்திர அமைப்பு அல்லது சோஷலிசம் பற்றிய ஒரு சோதனை என்ற நிலைமை இனிமேல் இல்லை என்பதையும், மாறாக அது ஒரு வெங்களமாக, உலக சோஷலிஸ்டு புரட்சியின் மெய்யான ஒரு வெங்களமாக இருக்கிறது என்பதையும் உணரத் தொடங்கி விட்டார்கள். எனவே நமது புரட்சியின் வெற்றிகளுடன் கூடவே நமது விரோதிகளின் எண்ணிக்கையும் அதிகரித்தது. நிலைமையின் நெருக்கடியான தன்மையை எந்த வழியிலும் மூடிமறைக்காமல் என்ன வரவிருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். இந்த நிலைமையை நாம் தனியாக எதிரிடப் போவதில்லை. இதே போராட்டத்தில் இயங்கி வரும் வியென்னா மற்றும் பெர்லின் தொழிலாளர்களுடன் சேர்ந்து எதிரிடுவோம். அவர்கள் நமது பொது லட்சியத்

திற்கு மேலும் அதிகக் கட்டுப்பாட்டையும் வர்க்க உணர்வை யும் கொண்டுவரக் கூடும்.

தோழர்களே, நமது சோவியத் குடியரசுக்கு மேலே கரு மேகங்கள் எவ்வாறு திரண்டு வருகின்றன, எத்தகைய அபா யங்கள் நம்மை அச்சுறுத்துகின்றன என்பன குறித்து உங் களுக்கு விளக்கும் முகமாக ஜெர்மன் அரசாங்கம் அதன் கான்சல் அலுவலகம் மூலம் நமக்கு அனுப்பியுள்ள குறிப்பின் முழு வாசகத்தையும் படிக்கிறேன்:

''கி. வ. சிச்சேரின், அயல்துறை விவகார மக்கள் கமி சார். மாஸ்கோ. நவம்பர் 5, 1918.

ஜெர்மன் பேரரசின் ஆணைக் குறிப்புக்களின் மீது ஜெர் மன் பேரரசின் கான்சல் அலுவலகம் ருஷ்யாவின் கூட்டாட்சி சோவியத் குடியரசிற்குப் பின்வருவனவற்றை அறிவிப்பது தன் கடமை என்று கருதுகிறது: பிரேஸ்த் சமாதான உடன் படிக்கையின் 2ஆவது விதியை மீறி, ருஷ்யாவின் அதிகார பூர்வமான நிறுவனங்கள் தமது பிரகடனங்கள் மூலம் ஜெர் மன் அரசு நிறுவனங்களுக்கு எதிராக நடத்தியிருக்கும் அனு மதிக்க முடியாத பிரசாரத்திற்கு எதிராக, இரண்டு முறை ஜெர்மன் அரசாங்கம் ஆட்சேபம் தெரிவிக்கும் சந்தர்ப்பம் ஏற்கெனவே ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரசாரம், இந்த உடன்படிக்கையின் குறிப்பிட்ட ஒப்பந்தக் கூறுகளை மீறியது மட்டுமன்றி, சகஜமான சர்வதேச நடைமுறையில் இருந்து கடுமையாக விலகிச் செல்லும் போக்குமாகும் என்பதால் அது இந்த பிரசாரத்திற்கு எதிரான ஆட்சேபங்களுடன் நின்று விட முடியாது. சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட பிறகு சோவியத் அரசாங்கம் பெர்லினில் தனது அரசுறவு பணிமனையை நிறுவியது. அப்போது ஹெர் இயோஃபெ ருஷ்யாவின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். அப்போது ஜெர்மனியில் எந்த ஒரு கிளர்ச்சியோ பிர சாரமோ நடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டுவதன் அவ சியம் குறித்து அவரிடம் தெளிவாக நினைவுறுத்தப்பட்டது. பிரேஸ்த் உடன்படிக்கையின் 2ஆவது விதியைத் தாம் அறிந்து கொண்டிருப்பதாயும், ஓர் அயல் நாட்டின் பிரதிநிதி என்ற முறையில் ஜெர்மனியின் உள்நாட்டு விவகாரங்களில் தாம் தலையிடக் கூடாது என்பதைத் தாம் உணர்ந்திருப்பதா யும் அவர் பதில் விடுத்தார். ஹெர் இயோஃபெயும் அவரது பொறுப்பில் இருந்த அலுவல் துறைகளும் பெர்லினில் பிர தேசத்திற்கு வெளியேயான அயல்நாட்டு தூதரகங்களுக்கு சகஜமாக காட்டப்படும் கவனமும் நம்பிக்கையும் பெற்றி ருந்தன. எனினும் இந்த நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்கப்

பட்டது. ஜெர்மனியில் நிலவும் அரசியல் அமைப்பினை வீழ்த்தும் நோக்கம் கொண்டு வேலை செய்துவரும் சில நபர்களுடன் ருஷ்யன் அரசுறவு பணிமனை நெருங்கிய தொடர்பு பூண்டிருக்கிறது என்பது சில காலமாகத் தெளிவாகத் தெரிய வந்துள்ளது. இத்தகைய பேர்களைத் தனது சேவையில் அமர்த்திக் கொள்வது மூலம் அது ஜெர்மனியில் நிலவும் அமைப்பினை வீழ்த்தும் நோக்கமுள்ள ஒரு இயக்கத்தில் அக்கறை காட்டி வந்துள்ளது. 4ந் தேதியன்று நிகழ்ந்த பின்வரும் சம்பவம், ருஷ்யன் அரசுறவு பணிமனை புரட்சிக்கு அறைகூவும் சில பிரசுரங்களை இறக்குமதி செய்தது மூலம் இப்போது நிலவும் அரசியல் அமைப்பை வீழ்த்தும் நோக்கமுள்ள ஒரு இயக்கத்தில் செயலூக்கமுள்ள பங்கு கூட வகிக்கிறது என்பதையும், அதன் மூலம் அரசுறவுத் துறை தூதுப்பணியாளரை வேலைக்கமர்த்திக் கொள்ளும் சலுகையை துர் உபயோகப்படுத்துகிறது என்பதையும் வெளிப்படுத்தியது. நேற்று பெர்லினுக்கு வந்த ருஷ்ய தூதுப்பணியாளரின் அலுவலகப் பெட்டிகளில் ஒன்று போக்குவரத்தின் போது சேதமுற்றது. இந்தப் பெட்டிகளில் ஜெர்மன் மொழியில் அச்சிடப்பட்ட புரட்சிகரப் பிரசுரங்கள் இருந்தன. அவற்றின் உள்ளடக்கம் கொண்டு பார்த்ததில் ஜெர்மனியில் பரப்பும் திட்டத்தோடு அவை தயாரிக்கப்பட்டவை என்பது தெரிய வந்தது. பேரரசின் தூதர் கோமகன் மிர்பாஹ் கொலையுண்டது சம்பந்தமாகச் செய்யப்படவிருந்த கழுவாய் விஷயத்தில் சோவியத் அரசாங்கம் மேற்கொண்ட தோரணையின் காரணமாயும் ஜெர்மன் அரசாங்கம் புகார் செய்வதற்கு மேலும் ஆதாரங்கள் கிடைத்தன. இந்தக் குற்றவாளிகளை நீதிமன்றம் முன் ஆஜர்படுத்த தன்னால் இயன்றதனைத்தையும் செய்வதாக ருஷ்யன் அரசாங்கம் முழுப்பற்றுடன் சாற்றியிருந்தது. ஆனால் இந்தக் குற்றவாளிகள் மீது வழக்குத் தொடுக்கவோ தண்டனை வழங்கவோவான எந்த நடவடிக்கையையோ அல்லது அவ்வாறு செய்வதற்கான உத்தேசத்தையோ கூட ஜெர்மன் அரசாங்கத்தால் காண இயலவில்லை. ருஷ்ய அரசாங்கத்தின் பொது பாதுகாப்பு காவலர் எல்லாப் புறமும் சுற்றி வளைத்திருந்த ஒரு வீட்டில் இருந்தே இந்தக் கொலைகாரர்கள் தப்பி வெளியேறினர். இந்த விவகாரம் பூராவுக்கும் பின்னால் இருந்ததாக பகிரங்கமாக ஒப்புக் கொண்ட இந்தக் கொலையைத் தூண்டி விட்டவர்கள் இது வரையில் தண்டிக்கப்படவில்லை, கிடைத்துள்ள தகவலின்படி அவர்கள் மன்னிக்கப்பட்டதாயும் கூடத் தெரிகிறது. இந்த உடன்படிக்கையும் பொதுச் சட்டமும் இவ்வாறு மீறப்படுவதை எதிர்த்து ஜெர்மன் அரசாங்கம் ஆட்சேபம் தெரிவிக்கிறது. சமாதான உடன்படிக்கைக்கு எதிரான கிளர்ச்சியோ பிரசாரமோ இனிமேலாக நடத்தப்படக் கூடாது என்

பதாக ருஷ்யன் அரசாங்கம் உத்தரவாதம் தர வேணடும் என்று கோரும் நிர்ப்பந்தத்திற்கு அது உள்ளாகியுள்ளது. கொலையைச் செய்தவர்கள் மற்றும் அதைத் தூண்டியவர் கள் தண்டிக்கப்படுவது மூலம் தூதர் கோமகன் மிர்பாஹின் கொலைக்குக் கழுவாய் செய்ய வேண்டும் என்று அது மேலும் வற்புறுத்துகிறது. இந்தக் கோரிக்கைகள் திருப்திகரமாக நிறைவேற்றப்படும் வரை ஜெர்மன் அரசாங்கம் சோவியத் அரசாங்கத்தை ஜெர்மனியில் இருந்து அதன் அரசுறவுத் துறை மற்றும் இதர அதிகாரபூர்வப் பிரதிநிதிகளை விலக்கிக் கொள்ளும்படிக் கோர வேண்டும். பெர்லினில் இருக்கும் அரசுத்துறை மற்றும் கான்சலகப் பிரதிநிதிகளும் பெர்லின் நகரத்தில் இருக்கும் இதர ருஷ்யன் அதிகாரிகளும் புறப் பட்டுச் செல்வதற்கான விசேஷ ரயில் வண்டி நாளை மாலை தயாராக இருக்கும் எனவும், ருஷ்ய அலுவலர் அனைவரும் ருஷ்யாவின் எல்லைக்குத் தடையின்றி அனுப்பி வைப்பதற் கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் பெர்லினில் ருஷ்யாவின் முழு அதிகாரமுடைய தூதரிடம் இன்று அறிவிக் கப்பட்டது. எல்லா வகையான உரிய மரியாதை முறைகள் அனுசரிக்கப்பட்டு ஜெர்மன் பிரதிநிதிகளும் மாஸ்கோ மற் றும் பெத்ரோகிராதில் இருந்து வெளியேறுவதற்கு ஏற்பாடு செய்யும்படி சோவியத் அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்ளப் படுகிறது. ஜெர்மனியில் இருக்கும் இதர ருஷ்யப் பிரதி நிதிகளும், அதே போன்று ருஷ்யாவின் இதர பகுதிகளில் இருக்கும் ஜெர்மன் பிரதிநிதிகளும் ஒரு வாரத்துக்குள் முறையே ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் புறப்பட்டுச் செல்ல வேண்டும் எனவும் அறிவிக்கப்படும். இந்த ஜெர்மன் அதி காரிகள் விஷயத்திலும் அவர்கள் புறப்பாடு விஷயமாக உரிய மரியாதை முறைகள் அதே போன்று அனுசரிக்கப்படும் என வும், ஜெர்மன் பாதுகாப்பில் உள்ள இதர ஜெர்மன் பிரஜை கள் அல்லது நபர்கள் அவர்கள் கோரும் பட்சத்தில் தடை யின்றி புறப்பட்டுச் செல்ல வாய்ப்பு அளிக்கப்படுவார் என்றும் எதிர்நோக்கி ஜெர்மன் அரசாங்கம் இக்குறிப்பை முடிக் கிறது.''

ஜெர்மன் சோஷலிஸ்டுகள் ருஷ்ய தூதரகத்தின் விருந் தோம்பலை அனுபவித்ததையும், ஜெர்மன் ஏகாதிபத்தியத் தின் ஆதரவாளர் எவரும் ருஷ்ய தூதரகத்தின் நுழைவாயி லுக்குள் என்றுமே கடந்து சென்றதில்லை என்பதையும் ஜெர் மன் அரசாங்கம் பூரணமாக உணர்ந்திருந்தது என்பதை, தோழர்களே, நாம் முற்றிலும் நன்றாக அறிவோம். போரை எதிர்த்தவர்களும் கார்ல் லீப்க்னெஹ்ட்டிடம் அனுதாபம் கொண்டவர்களுமான அந்த சோஷலிஸ்டுகள் அதன் நண்

பர்களாக இருந்தார்கள். தூதரகம் திறக்கப்பட்ட நாள் முதல் அவர்கள் அதன் விருந்தினர்களாக இருந்து வந்தார்கள். அவர்களுடன் மட்டுமே நாம் செயல் தொடர்பு வைத்திருந்தோம். ஜெர்மன் அரசாங்கத்துக்கு இது முழுமையாகத் தெரியும். நமது தோழர்களின் நடவடிக்கைகளை இரண்டாம் நிக்கலாயின் அரசாங்கம் வழக்கமாக எப்படி விடாப்பிடியாகக் கூர்ந்து கவனித்து வந்ததோ அது போல, நமது அரசாங்கத்தின் பிரதிநிதிகளின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வந்த ஜெர்மன் அரசாங்கம், இந்த நடவடிக்கையை இப்போது எடுக்கிறதென்றால் அதற்குக் காரணம் நிலைமை எந்த வழியிலும் மாறி விட்டது என்பதல்ல. மாறாக அது முன்பு வலிமையுடன் இருப்பதாகக் கருதியது, பெர்லின் தெருக்களில் ''தீப்பிடித் தெரியும்'' தனி ஒரு வீடு ஜெர்மனி முழுவதையும் தீக்கொளுத்திவிடும் என்பதாக அது அஞ்சவில்லை என்பதேயாகும். ஜெர்மன் அரசாங்கம் குழப்பமடைந்து விட்டது. ஜெர்மனி முழுதும் தீபற்றி எரியும் அப்போது அது தனது போலீஸ் தீயணைப்பு குழாயை தனி ஒரு வீட்டின் பக்கம் திருப்புவதன் மூலம் தீயை அணைத்து விட முடியும் என்று கருதுகிறது. (ஆ ர வா ர மா ன க ர வொ லி .)

அது கேவலம் கேலிக்கிடமானது. ஜெர்மன் அரசாங்கம் அரசுத்துறை உறவுகளை முறித்துக் கொள்ளப் போகிறது என்றால், அவ்வாறு அது செய்யும், ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுடன் நேச அணி ஏற்படுவதற்காகத் தன்னால் இயன்றது அனைத்தையும் செய்யும் என்பது நமக்குத் தெரியும் என்பதை நாம் கூற முடியும். ஜெர்மன் துருப்புக்களை போலந்து, உக்ரேன், எஸ்த்லாந்து மற்றும் லிஃப்லாந்தில் விட்டு வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வில்சன் அரசாங்கத்துக்குத் தந்திக்கு மேல் தந்தி அனுப்பிவைக்கப்பட்டது என்று நாம் அறிவோம். அவை ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் விரோதிகளாக இருந்தபோதிலும் ஜெர்மன் துருப்புக்கள் தம் வேலையைச் செய்து வருகின்றன, அவை போல்ஷிவிக்குகளை அடக்கி வருகின்றன. போல்ஷிவிக்குகளை நெரித்து அழிப்பதற்கு அன்டான்டு[7] ஆதரவு ''விடுதலைச் சேனைகள்'' அரங்கத்தில் தோன்றும் போது மட்டுமே அவை வெளியேறி விட முடியும்.

இது நமக்கு நன்ருகத் தெரியும்; இங்கு எதிர்பாராதது எதையும் நாம் காத்திருக்கவில்லை. இப்போது ஜெர்மனி எரிகிற போது, ஆஸ்திரியா முழுதும் கொழுந்து விட்டு எரிகிற போது, அவை லீப்க்னெஹ்ட்டை விடுவித்து ருஷ்ய தூதரகத்துக்கு விஜயம் செய்ய அனுமதிக்க வேண்டியிருக்கிற போது—அங்கே லீப்க்னெஹ்ட்டின் தலைமையில் ருஷ்யா மற்றும் ஜெர்மனியின் சோஷலிஸ்டுகளின் கூட்டுக் கூட்டம் நடத்துகின்றனர்—ஜெர்மன் அரசாங்கம் இத்தகைய நடவடிக்கையை மேற்கொண்டது அவை முற்ருகக் குழம்பிப் போயிருக்கின்றன என்பதைக் காட்டுகிறதே தவிர போராட விரும்புவதைக் காட்டவில்லை என்பதை நாம் வெறுமே திரும்பவும் கூறுகிருேம். அவற்ருல் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை காரணம் கடும் விரோதியாக இருக்கும் ஆங்கில-அமெரிக்க ஏகாதிபத்தியம் அவற்றின் மீது பாய்ந்து வருகிறது. இந்த விரோதி பிரேஸ்த் சமாதான உடன்பாட்டை விடவும் நூறு மடங்கு கடுமையான சமாதான நிபந்தனைகளால் ஆஸ்திரியாவை நசுக்கியிருக்கிறது. இந்த விடுதலையாளர்கள் தன்னையும் நெரித்தழித்து, நசுக்கி, சித்திரவதை செய்ய விரும்புவதை ஜெர்மனி காண்கிறது. அதே சமயம் ஜெர்மன் உழைப்பாளிகள் கலகம் செய்கின்றனர். ஜெர்மன் சேனை போராடத் தகுதியற்றது பயனற்றது என்பது நிரூபணமாகி விட்டது. இதற்குக் காரணம் கட்டுப்பாடு பலவீனமாக இருப்பதல்ல. மாருக போராட மறுத்த படையாளிகள் கிழக்குப் போர் முனையில் இருந்து ஜெர்மன் மேற்குப் போர்முனைக்கு மாற்றப்பட்டு முதலாளித்துவ வர்க்கத்தினர் உலக போல்ஷிவிசம் என்று எதனை அழைக்கிருர்களோ அதைத் தம்முடன் கொண்டு செல்கின்றனர்.

இதனுல்தான் ஜெர்மன் சேனை போராடத் தகுதியற்றதாயிற்று, இந்த தஸ்தவேஜு ஜெர்மனியின் படுமோசமான குழப்பத்துக்கு ஆகச் சிறந்த சான்ருயிற்று. வெண்காவலர் துருப்புக்களுக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்கான பலத்தை அவைகள் காண முடியுமானுல் அது அரசுறவு முறிவுக்கும் ஒருவேளை போருக்கும் இட்டுச் செல்லும் என்று நாம் கூறுகிருேம். எனவே முன் எச்சரிக்கையுடன் இருக்கும்படியும், எப்போதும் தயார் நிலையில் இருக்கும்படியும், தமது சக்திகளை எல்லாம் ஒன்றுதிரட்டும்படியும் எச்சரிக்கை செய்து

பிரதிநிதிகளின் சோவியத்துக்கள் எல்லாவற்றுக்கும் தந்தி அனுப்பியிருக்கிறோம்.[8] ஏனெனில் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் பிரதான நோக்கம் போல்ஷிவிசத்தை வீழ்த்துவதே என்பதற்கு இது இன்னொரு அறிகுறியாகும். ருஷ்யாவை மட்டும் தோற்கடிப்பது என்பது இதன் அர்த்தமல்ல. ஒவ்வொரு நாட்டிலும் தமது சொந்தத் தொழிலாளர்களையும் தோற்கடிப்பது என்பதே இதன் பொருளாகும். இந்த முடிவைத் தொடர்ந்து என்ன கொடுமைகள் அட்டூழியங்கள் ஏற்பட்டாலும்கூட ஏகாதிபத்தியவாதிகள் வெற்றியடைய முடியாது. இந்தக் கழுகுகள் ருஷ்யா மீது தெற்கிலிருந்து டார்டனெல்ஸ் வழியாகவோ, அல்லது பல்கேரியா மற்றும் ருமேனியா வழியாகவோ பாய்ந்து தாக்கத் தயாராகி வருகின்றன. ருஷ்யாவுக்கு எதிராக நிறுத்திப் போராட வெள்ளைச் சேனையை உருவாக்க ஜெர்மனியில் பேரம் பேசப்படுகிறது. இந்த அபாயம் குறித்து நாம் நன்கு அறிவோம், முற்றும் பச்சையாக எடுத்துக் கூறுகிறோம்: ஓராண்டுக் காலம் நாம் பயனின்றிப் பாடுபடவில்லை; நாம் அடித்தளங்களை நிறுவி விட்டோம்; நிர்ணயமான போராட்டங்களை நடத்த முன்வந்து கொண்டிருக்கிறோம்; இந்தப் போராட்டங்கள் உண்மையிலேயே தீர்மானகரமானவையாக இருக்கும். ஆனால் நாம் தனியாக இல்லை: மேற்கு ஐரோப்பிய பாட்டாளி வர்க்கம் போராட்டத்தில் இறங்கி விட்டது. ஆஸ்திரோ-ஹங்கேரியில் அழிக்கப்பெருதது எதுவும் இல்லை. நாட்டின் அரசாங்கம் 1917 பிப்ரவரி இறுதியில் நிக்கலாய் ரமானவின் அரசாங்கம் எப்படி இருந்ததோ அதைப் போல ஏலாததாய், கட்டுமீறிக் குழம்பியதாய் முற்றிலும் அமைதி இழந்து கிடக்கிறது. நமது கோஷம்: போராட்டத்தில் சகல முயற்சிகளையும் மீண்டும் ஒரு முறை நடத்துவோம், ருஷ்யப் புரட்சிக்கு மட்டுமன்றி உலக சோஷலிஸ்டுப் புரட்சிக்கேயான இறுதியான தீர்மானகரமான போராட்டத்தை எட்டி விட்டோம்! என்பதாக இருக்க வேண்டும்.

ஏகாதிபத்தியக் கழுகுகள் இன்னும் நம்மை விட பலமானவை என்பதை நாம் அறிவோம். அவை இன்னும் நம் மீதும் நமது நாட்டின் மீதும் ஒரேயடியான சேதத்தை கொடுமைகளை அட்டூழியங்களை விளைக்க முடியும். ஆனால் உலகப் புரட்சியை அவற்றால் தோற்கடிக்க முடியாது. அவை காட்டு

மிராண்டித்தனமான பகைமை நிரம்பி நிற்கின்றன. எனவே எதுவரினும் வரட்டும், ஒவ்வொரு ருஷ்யத் தொழிலாளியும் விவசாயியும் தனது கடமையைச் செய்வான், புரட்சியின் நலன்களைத் தாங்கி ஆதரிப்பதற்கு அவசியமானுல் சாவையும் எதிர்கொள்வான் என்று நமக்குள் நாம் சொல்லிக் கொள்கிருேம். நாம் சொல்கிருேம்: எது வரினும் வரட்டும், ஏகாதிபத்தியவாதிகள் எத்தகைய துன்பதுயரங்களை நம் மீது சுமத்திஞலும் அதனுல் அவர்கள் பாதுகாக்கப்பட மாட்டார்கள். ஏகாதிபத்தியம் அழிந்தொழியும், எல்லா சிக்கல்களையும் எதிரிட்டு உலக சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றிவாகை சூடும்! (ஆரவாரமான நீடித்த கரவொலி.)

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 137-52

## மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்கு நினைவுச் சின்னம் திறப்புவிழாவின் போது ஆற்றிய உரை நவம்பர் 7, 1918

உலகத் தொழிலாளர் புரட்சியின் தலைவர்களாகிய, மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்கு நாம் ஒரு நினைவுச் சின்னத்தை நிறுவிக் கொண்டிருக்கிருேம்.

கோடிக்கணக்கான தொழிலாளர்களைக் கொடூரமாக நடத்திய ஒரு மிகச் சிறிய சுரண்டல் கூட்டத்தின் அடக்குமுறையின் கீழ், பல்லாண்டு காலமாக மனித இனம் வாடியும், வதங்கியும் இருந்தது. ஆனுல் இதற்கு முந்திய காலத்து சுரண்டல்காரர்களாகிய நிலச் சொந்தக்காரர்கள், தங்களுக்குள் ஒற்றுமையில்லாது, சிதறுண்டு மற்றும் அறிவற்றவர்களாக இருந்த பண்ணையடிமை விவசாயிகளைக் கொள்ளையிட்டு மற்றும் கொடுமையாக நடத்தினர். புதிய காலத்தின் சுரண்டல்காரர்களாகிய முதலாளிகள், இழிநிலையில் உள்ள மக்களின் முன்னணிப் படையாம் நகர்ப் புறத்தைச் சார்ந்த

ஆலை, தொழிற்துறைத் தொழிலாளர்களை நேருக்கு நேர் சந்திக்கும்படி நேரிட்டது. ஆலையின் மூலம் அவர்கள் ஒரு மைப்பாட்டுக்குள்ளாயினர். நகர வாழ்க்கையின் மூலம் அவர்கள் அறிவொளி பெற்றனர். பொதுவான வேலைநிறுத்தப் போராட்டம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகளின் மூலம் அவர்கள் எஃகுறுதி பெற்றனர்.

முதலாளித்துவத்தின் வீழ்ச்சி தவிர்க்கப்பட முடியாதது என்றும், மனிதனை மனிதன் இனிமேலும் சுரண்ட முடியாத அமைப்பாகிய கம்யூனிசத்துக்கு அது மாற்றமுறுமென்றும் விஞ்ஞான வழியிலான ஆய்வின் மூலம் அவர்கள் எண்பித்துக் காட்டினார்கள் என்பது மார்க்ஸ் மற்றும் எங்கெல்சுக்கு மகத்தான வரலாற்றுச் சிறப்பினைத் தேடித் தருவதாக உள்ளது.

உலகத் தொழிலாளர்களுக்கு அவர்தம் பங்கு, அவர்தம் பணி, அவர்தம் இலட்சியம், அதாவது, மூலதனத்துக்கு எதிராகப் புரட்சிகரப் போராட்டத்தில் எழுச்சியுறுகிறவர்களில் முதலாவதாக நின்று, இப்போராட்டத்தில் அனைத்து உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களைத் தங்களோடு இணைத்து அணிசேர்த்துக் கொள்ள வேண்டுமென்பதை அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்பது மார்க்சுக்கும், எங்கெல்சுக்கும் மகத்தான வரலாற்றுச் சிறப்பினைத் தேடித் தருவதாக உள்ளது.

மகத்தான சோஷலிஸ்டுகளாகிய இவர்களது தீர்க்கத் தரிசனம் நிறைவேறத் துவங்கியுள்ளதொரு அருமையான காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். பல்வேறு நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தின் உலகச் சோஷலிஸ்டுப் புரட்சியின் வைகறை தோன்றுவதை நாம் எல்லோரும் பார்க்கிறோம். பல தேசங்களை வருத்திய ஏகாதிபத்திய கொலைக் காண்டம் சொல்லொணாப் பயங்கரங்கள், எல்லா இடங்களிலும் ஒடுக்கப் பட்டோரது வீறு கொண்ட எழுச்சியை உருவாக்கிக் கொண்டும், விடுதலைக்கான போராட்டத்தில் அவர்களது பலத்தைப் பெருக்கிக் கொண்டுமிருக்கிறது.

இங்கே நாம் மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் நிறுவுகின்ற இந்த நினைவுச் சின்னம், கோடானு கோடித் தொழிலாளர் கள் மற்றும் விவசாயிகளுக்கு நமது போராட்டத்தில் நாம் தனிமையாக இல்லை என்பதை மீண்டும் மீண்டும் நினைவூட்டு வதாக அமையட்டும். நமக்குப் பக்க அணியாக மிகவும் முன்

னேற்றமடைந்த நாடுகளில் தொழிலாளர்கள் எழுச்சியுற்று வருகின்றனர். அவர்களுக்கும் நமக்கும் எதிரே கடும் போர்கள் இன்னும் காத்து நிற்கின்றன. பொதுவான போராட்டத்தின் மூலம் மூலதனத்தின் அடக்குமுறை நொறுக்கப்படுவதோடு, இறுதியில் சோஷலிசம் வெற்றியும் பெறும்.

நூல் திரட்டு,
தொகுதி 37,
பக்கங்கள் 169-70

## அக்டோபர் புரட்சியில் உயிர் இழந்தவர்களுக்கான நினைவுக்கல் திறப்புவிழாவின் போது ஆற்றிய உரை நவம்பர் 7, 1918

தோழர்களே! 1917 ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சியில் வீழ்ந்து பட்டவர்களை நினைவு கூரும் ஒரு நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்திட இங்கு கூடியுள்ளோம். நாடுகளை ஏகாதிபத்தியப் பிடியினின்றும் விடுதலை செய்திட, நாடுகளுக்கிடையே போர்களை ஒழித்திட, மூலதன ஆதிக்கத்தை வீழ்த்திட மற்றும் சோஷலிசத்தை அடைந்திடப் புரட்சி ஒன்றினைத் துவக்கி அதில் உழைக்கும் மக்களின் தவப்புதல்வர்கள் தங்களது உயிரினைத் தியாகம் செய்தார்கள்.

தோழர்களே! ருஷ்யாவின் பலபத்தாண்டுக் கால நவீன கால வரலாற்றில் புரட்சிகரத் தியாகிகளின் நீண்ட பட்டியல் இருந்து வந்துள்ளது. ஆயிரம் ஆயிரம் பேர்கள் ஜாராட்சியை எதிர்த்துப் போரிட்டு மடிந்தனர். அவர்களது உயிர்த்தியாகம் புதிய போராளிகளை எழுச்சியுறச் செய்தது, போராட்டத்திற்குள் இன்னும் அதிகமதிகமான மக்களை ஈர்க்க உதவியது.

கடந்த அக்டோபரின் போது வீழ்ந்துபட்ட இந்தத் தோழர்கள் வெற்றியின் மகத்தான நற்பேற்றைக் கொண்டு வந்தார்கள். மனித குலத்தின் புரட்சிகரத் தலைவர்கள் கனவு கண்ட அந்த மகத்தான சிறப்பினை இவர்கள் வென்று பெற்

ஞர்கள்: போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த இந்தத் தோழர்களின் சடலங்களைத் தாண்டி தமது வெகுஜன வீராவேசத்தினுல் வெற்றி ஈட்டிய ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான புதிய இதே போன்று அச்சமென்பதே அறியாத வீரர்கள் முன்னேறிச் சென்ருர்கள்.

இன்று, அகில உலகிலும், தொழிலாளர்கள் கோபாவேசத்தால் கொதித்துக் குமுறிக் கொண்டு இருக்கிருர்கள். பல்வேறு நாடுகளில் தொழிலாளர்களின் சோஷலிஸ்டுப் புரட்சி துவங்கிக் கொண்டிருக்கிறது. உலகம் முழுதுமுள்ள முதலாளிகள் திகிலாலும் குரோதத்தாலும் புரட்சியினை அடக்கிட அவசரமாக அணி திரளுகின்றனர். மேலும் ருஷ்யாவின் சோஷலிஸ்டு சோவியத் குடியரசு அவர்கள் விலாவினைக் குத்திடும் குறிப்பிட்ட முள்ளாக இருக்கிறது. ஒன்றுபட்ட உலக ஏகாதிபத்தியவாதிகள் நம்மைத் தாக்கிடத் தயாராக உள்ளனர். இன்னும் பல புதிய போர்களில் நம்மை இழுத்து விடவும் நம் மீது இன்னும் அதிகமான தியாகங்களைச் சுமத்திடவும் தயாராக உள்ளனர்.

தோழர்களே! இவர்களது அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்போம் என்றும், இவர்களது துணிவையும் வீரத்தையும் நாம் முன்மாதிரியாகக் கொள்வோம் என்றும், இவர்களது நினைவுச் சின்னத்தின் முன்னின்று சபதமேற்பதன் மூலம் இந்த அக்டோபர் வீரர்களின் நினைவை நாம் கௌரவப்படுத்துவோம். அவர்களது குறிக்கோள் வாசகமே நமது குறிக்கோள் வாசகம் ஆகட்டும். இதுதான் புரட்சி செய்து வரும் உலகத் தொழிலாளர்களது குறிக்கோள் வாசகம். இந்தக் குறிக்கோள் வாசகம்: ''வெற்றி அல்லது வீர மரணம்!''

ஆகவே இந்த குறிக்கோள் வாசகத்தை ஏற்ற பாட்டாளி வர்க்கச் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியின் போராளிகள் வெல்ல முடியாதவர்கள் ஆவர்.

நூல் திரட்டு,<br>
தொகுதி 37,<br>
பக்கங்கள் 171-72

# மத்தியக் குபேர்னியாக்களின் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் பிரதிநிதிகளின் கூட்டத்தில் ஆற்றிய உரை நவம்பர் 8, 1918

தோழர்களே, ஏழை விவசாயிகளை நிறுவன ஒழுங்கமைப்பு பெறச் செய்ய வேண்டியது நமது உள் நாட்டு நிர்மாணப் பணியிலும், நமது புரட்சி அனைத்திலுங்கூட மிகவும் முக்கியப் பிரச்சினையாய் நம்மை எதிர் நோக்குகிறது.

உற்பத்திச் சாதனங்களை மக்கள் அனைவருக்குமான சொத்தாக்கும் பொருட்டு ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் முதலாளிகளுடைய கைகளிலிருந்து பறித்திடுவதும், நிலங்கள் யாவற்றையும் விவசாயிகள் கைக்கு மாற்றுவதன் மூலம் விவசாயத்தைச் சோஷலிச வழிகளில் புனரமைப்பதும்தான் அக்டோபர் புரட்சியின் குறிக்கோளாய் இருந்தது.

இந்தக் குறிக்கோளின் முதற் பாதியை இரண்டாவது பாதியைக் காட்டிலும் மிகவும் சுலபமாகவே நிறைவேற்ற முடிந்தது. நகரங்களில் புரட்சியானது லட்சக் கணக்கான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கும் பெருவீதத் தொழில் துறை சம்பந்தமாய் நடவடிக்கை எடுத்துச் செயல்பட வேண்டியிருந்தது. ஆலைகளும் தொழிற்சாலைகளும் எண்ணிக்கையில் சொற்பமேயான முதலாளிகளுக்குச் சொந்தமாயிருந்தன, தொழிலாளர்கள் இவர்களைச் சிரமமின்றி சமாளித்து விட முடிந்தது. முதலாளிகளுக்கு எதிராய் நீண்ட போராட்டம் நடத்தித் தொழிலாளர்கள் இதில் ஏற்கெனவே அனுபவம் பெற்றிருந்தனர். இந்தப் போராட்டம் அவர்களுக்கு ஒன்று பட்டு நின்று வைராக்கியத்தோடும் ஒழுங்கமைந்த முறையிலும் செயல்படுவதற்குக் கற்றுத் தந்திருந்தது. தவிரவும் ஆலையும், தொழிற்சாலையும் பங்கிட்டுப் பிரிக்க வேண்டியிருக்கவில்லை; தேவையாய் இருந்ததெல்லாம் பொருளுற்பத்தியைத் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்கும் விவசாயிகளுடைய நலன்களுக்கும் சேவை புரிய வைத்து, உற்பத்திப் பண்டங்கள் முதலாளிகளுடைய கையில் அகப்பட்டு விடாதபடிச் செய்வதுதான்.

ஆனால் நிலம் சம்பந்தமாய் விவகாரம் முற்றிலும் மாறானதாய் இருக்கிறது. இங்கு சோஷலிசம் வெற்றி பெறுவதற்கு, இடைக் காலத்துக்குரிய பல நடவடிக்கைகளும்

தேவைப்படுகின்றன. ஏராளமான சிறுவீத விவசாயிப் பண்ணைகளைப் பெருவீதப் பொருளுற்பத்தி அமைப்பாய் மாற்றுவதென்பது உடனடியாய் நடைபெறும் காரியமல்ல. இதுகாறும் தனியாரின் தனிப்பட்ட முறையில் நடைபெற்று வந்துள்ள விவசாயத்தை உடனடியாய் சமூகமயமாக்கிப் பெருவீத அரசுத் தொழில் முயற்சியாய் மாற்றி, சகலருக்குமான சரிசமமான உழைப்புக் கடமையின் படி உற்பத்திப் பண்டங்கள் உழைப்பாளி மக்கள் அனைவருக்கும் சமத்துவ அடிப்படையில் நியாயமாய் வினியோகமாவதற்கான முறையாய்த் திருத்தியமைத்துவிட முடியாது. உடனடியாகவோ, குறுகிய காலத்துக்குள்ளாகவோ இதைச் செய்வது சாத்தியமல்ல என்பது தெளிவு.

நகரங்களில் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்கள் முதலாளிகளை வீழ்த்தி, சுரண்டலின் ஒடுக்குமுறையைத் தகர்த்திடுவதில் ஏற்கெனவே வெற்றி பெற்றுவிட்டனர். ஆனால் விவசாய வட்டாரங்களில் சுரண்டலுக்கு எதிராய் இப்பொழுதுதான் மெய்யான போராட்டம் ஆரம்பித்திருக்கிறது.

அக்டோபர் புரட்சிக்குப் பிற்பாடு நாம் நிலப்பிரபுவைத் தோற்கடித்து நிலத்தை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்டோம். ஆனால் விவசாய வட்டாரங்களில் போராட்டம் அதோடு முடிவுற்றுவிடவில்லை. நிலத்தைப் பெறுவதில் கிட்டியிருக்கும் வெற்றியானது, உழைப்பாளர்களது ஏனைய எல்லா வெற்றிகளையும் போலவே, நேரடியாய் உழைப்பாளர்களுடைய சுயேச்சையான செயலையும், அவர்களுடைய சொந்த நிறுவன ஒழுங்கமைப்பையும், அவர்களுடைய கட்டுப்பாட்டையும், புரட்சிகர வைராக்கியத்தையும் ஆதாரமாய்க் கொண்டிருக்கையில் மட்டுமே நிலையானதாய் இருக்க முடியும்.

உழைக்கும் விவசாயிகள் இப்படிப்பட்ட நிறுவன ஒழுங்கமைப்பு பெற்றிருக்கிறார்களா?

துரதிர்ஷ்டவசமாய்ப் பெற்றிருக்கவில்லை, போராட்டம் இவ்வளவு கடினமாய் இருப்பதற்கு இதுவேதான் மூலகாரணம்.

ஏனையோரது உழைப்பைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளாத, ஏனையோரை வருத்தி லாபமடிக்காத விவசாயிகள் சரிசமமாய் நிலம் எல்லோருக்கும் பங்கிடப்படுவதை நிச்சயமாய் எப்பொழுதும் ஆதரிப்பவர்கள்; எல்லோரும் வேலை செய்ய

வேண்டுமென்பதையும், நிலவுடைமையானது சுரண்டலுக்கு ஓர் ஆதாரமாகி விடாமல் இருக்க வேண்டுமென்பதையும், ஆகவே ஏராளமான நிலங்கள் தனிப்பட்ட சிலரிடம் ஒன்றுகுவிந்து விடக் கூடாதென்பதையும் எப்பொழுதுமே ஆதரிப்பவர்கள். ஆனால் போரைப் பயன்படுத்திக் கொண்டு செல்வம் திரட்டி யோரும் பஞ்சத்தைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு கொள்ளை விலைகளுக்குத் தானியம் விற்றோரும், மேலும் உயர்ந்த விலைகள் கிடைக்குமென்று எதிர்பார்த்துத் தானி யத்தைப் பதுக்கி வைத்தோரும், இப்பொழுது மக்களது துர்ப் பாக்கியத்தையும் ஏழை விவசாயிகளும் நகரங்களில் தொழி லாளர்களும் பசியால் அவதியுறுவதையும் பயன்படுத்திச் செல் வம் சேர்க்க எல்லா வழிகளிலும் முயலுவோருமாகிய குலாக் குகளும் புல்லுருவிகளும் இப்படியல்ல, வேறுவிதமானவர்கள்.

இவர்கள்—இந்தக் குலாக்குகளும் புல்லுருவிகளும்— முதலாளிகளையும் நிலப்பிரபுக்களையும் போல் அதே அளவுக்கு மிகக் கொடும் பகைவர்களே ஆவர். குலாக்குகளுக்குக் கடி வாளமிடவில்லை என்றால், புல்லுருவிகளை நாம் எதிர்த்துச் சமாளிக்கவில்லை என்றால், ஜாரும் முதலாளிகளும் திரும்பி வருவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

குலாக்குகளுடைய ஆதிக்கத்தை விவசாயிகள் வீழ்த்த வில்லையானால் புரட்சி தவிர்க்க முடியாதபடித் தோல்வியுற்று விடும் என்பதை ஐரோப்பாவில் இதுகாறும் நடைபெற்றிருக் கும் ஒவ்வொரு புரட்சியின் அனுபவமும் கண்கூடாய் நிரூபிக் கின்றது.

விவசாயிகளால் தமது பகைவர்களை எதிர்த்துச் சமாளிக்க முடியாமற் போனதால் ஐரோப்பியப் புரட்சி ஒவ் வொன்றும் தோல்வியில் முடிவுற்றது. நகரங்களில் தொழி லாளர்கள் தமது அரசர்களை வீழ்த்தினர் (இங்கிலாந்திலும் பிரான்சிலும் அவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே தமது அரசர்களைச் சிரச்சேதம் செய்தனர்; நாம்தான் நமது ஜார் குறித்து காலதாமதம் செய்தோம்). ஆயினும் சிறிது காலத் திற்கெல்லாம் பழைய அமைப்பே மீண்டும் நிலைநாட்டப் பட்டது. இதற்குக் காரணம் என்னவெனில் ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் லட்சக் கணக்கான தொழிலாளர்களை ஒன்றுதிரட்டி, விவசாயிகளுடைய ஆதரவு இல்லாமலுங்கூட முதலாளிகள், குலாக்குகளின் தாக்குதலை எதிர்த்து நின்று

சமாளிப்பதற்குப் போதிய வல்லமை கொண்ட சேனையாய் அவர்களை உறுதி பெறச் செய்யக் கூடிய பெருவீதத் தொழில் துறை அந்நாட்களில் நகரங்களிலுங்கூட இருக்கவில்லை.

ஏழை விவசாயிகள் நிறுவன ஒழுங்கமைப்பின்றி இருந்தனர், குலாக்குகளை எதிர்த்து அவர்கள் சரிவரப் போராட வில்லை. இதன் விளைவாய்ப் புரட்சியானது நகரங்களிலுங்கூட தோற்கடிக்கப்பட்டு விட்டது.

ஆனால் தற்போதுள்ள நிலைமை வேறு. கடந்த இருநூறு ஆண்டுகளில் பெருவீதப் பொருளுற்பத்தி பிரமாதமாய் வளர்ச்சி பெற்று, ஆயிரக் கணக்கிலும் பத்தாயிரக் கணக்கிலுமான தொழிலாளர்களைக் கொண்ட ஆலைகளாலும் தொழிற்சாலைகளாலுமாகிய வலையமைவை எல்லா நாடுகளிலும் நிறுவி விட்டது. ஆகவே தற்போது நகரங்களில் எங்கும் நிறுவன ஒழுங்கமைப்பு பெற்ற தொழிலாளர்களை, பாட்டாளி வர்க்கத்தினரைக் கொண்ட பெரிய ஊழியர் படைகள் தோன்றி விட்டன. இவை பூர்ஷுவாக்களின் மீது, முதலாளிகள் மீது இறுதி வெற்றி கொள்ளும்படியான வலு மிகுந்த சக்தியாய் இருந்து வருகின்றன.

முந்திய புரட்சிகளில் ஏழை விவசாயிகள் குலாக்குகளுக்கு எதிராய் நடத்திய கடினப் போராட்டத்தின் போது அவர்களுக்கு ஆதரவளிப்பார் யாரும் இருக்கவில்லை.

நிறுவன ஒழுங்கமைப்பு பெற்ற பாட்டாளி வர்க்கம்—விவசாயிகளைக் காட்டிலும் இவ்வர்க்கத்தினர் அதிகப் பலமும் அனுபவமும் பெற்றிருக்கின்றனர் (இதற்கு முன்பு நடந்திருக்கும் போராட்டங்களில் இவர்கள் இந்த அனுபவத்தைப் பெற்றுக் கொண்டனர்)—இப்பொழுது ருஷ்யாவில் ஆட்சியதிகாரம் செலுத்துகிறது; எல்லா உற்பத்தி சாதனங்களும், ஆலைகள், தொழிற்சாலைகள், ரயில்வேக்கள், கப்பல்கள் எல்லாவற்றினதும் உடைமையாளனாய் இருக்கிறது.

குலாக்குகளுக்கு எதிராய் ஏழை விவசாயிகள் நடத்தும் போராட்டத்தில் இப்பொழுது இவர்கள் நம்பகமான, சக்தி வாய்ந்த கூட்டாளியைப் பெற்றிருக்கிறார்கள். நகரம் தமக்கு ஆதரவாய் நிற்கிறது. பாட்டாளி வர்க்கம் தமக்குத் துணை புரியும் என்பதை, மெய்யாகவே பாட்டாளி வர்க்கம் தன்னால் இயன்ற எல்லா வழிகளிலும் ஏற்கெனவே தமக்கு உதவி வருகிறது என்பதை ஏழை விவசாயிகள் அறிவர். அண்மைக்

கால நிகழ்ச்சிகள் இதைத் தெளிவுபட காட்டியிருக்கின்றன.

தோழர்களே, நடப்பு ஆண்டில் ஜூலை மாதத்தில் புரட்சிக்கு எவ்வளவு அபாயகரமான நிலைமை ஏற்பட்டதென்று உங்களுக்கு நினைவிருக்கும். செக்கோஸ்லவாக் கலகம்[6] பரவி வந்தது. நகரங்களில் உணவுத் தட்டுப்பாடு மேன்மேலும் கடுமையாகிச் சென்றது, கிராமங்களில் குலாக்குகள் நகரங்கள் மீதும் சோவியத் ஆட்சியதிகாரத்தின் மீதும் ஏழை விவசாயிகள் மீதும் மேலும் மேலும் ஆணவமாகவும், மேலும் மேலும் மூர்க்கமாகவும் தாக்கி வருகின்றனர்.

ஏழை விவசாயிகளை நிறுவன ஒழுங்கமைப்பு பெறுமாறு நாம் அறைகூவினோம். ஏழை விவசாயிகள் கமிட்டிகளை[3] அமைக்கவும், தொழிலாளர் உணவுப் படைப்பிரிவுகளை வகுத்து ஏற்பாடு செய்யவும் முற்பட்டோம். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினர்[9] கலகம் புரிய முற்பட்டனர். ஏழை விவசாயிகள் கமிட்டிகள் வேலையற்ற வீணர்களைக் கொண்டதாகுமென்றும், உழைக்கும் விவசாயிகளிடமிருந்து தொழிலாளர்கள் தானியத்தைச் சூறையாடுகின்றனர் என்றும் அவர்கள் பறைசாற்றினர்.

அவர்கள் குலாக்குகளைப் பாதுகாப்பவர்கள் என்று நாங்கள் பதிலளித்தோம்; குலாக்குகள் சோவியத் ஆட்சியதிகாரத்தை ஆயுதங்களைக் கொண்டு மட்டுமின்றி, பட்டினியைக் கொண்டும் போராடலாம் என்பதை உணர்ந்து கொண்டு விட்டனர் என்றோம். அவர்கள் ''வேலையற்ற வீணர்கள்'' என்பதாய்ப் பேசினர். நாங்கள் கேட்டோம்: ''குறிப்பிட்ட எந்த ஆளும் 'வேலையற்ற வீணர்' ஆவானேன், சீரழிவானேன், வறுமையுறுவானேன்? ஏன் அவர் குடிகாரராக வேண்டும்? இதற்குக் காரணம் குலாக்குகள்தானே?!'' இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரைப் போலவே குலாக்குகளும் ''வேலையற்ற வீணர்கள்'' என்னும் கூச்சலைக் கிளப்பினர். ஆனால் குலாக்குகள் தானியத்தை மூட்டை கட்டிக் கொண்டு விடுகின்றனர்; அதை ஒளித்து வைத்து, கொள்ளை லாபத்துக்கு விற்று, தொழிலாளர்களுடைய பசியையும் துன்பத்தையும் கொண்டு செல்வந்தர்களாகிவிட விரும்புகின்றனர்.

குலாக்குகள் ஏழை விவசாயிகளைக் கசக்கிப் பிழிகின்றனர். ஏனையோரது உழைப்பைக் கொண்டு ஆதாயமடைந்து

கொண்டு, அதேபோது ''வேலையற்ற வீணர்கள்'' என்பதாய்க் கூச்சல் போடுகின்றனர்.

அடங்காத ஆவலோடு குலாக்குகள் செக்கோஸ்லவாக்கியர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அச்சமின்றி தமது சுரண்டலைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் பொருட்டு, கூலித் தொழிலாளர்கள் மீது தொடர்ந்து ஆதிக்கம் புரியும் பொருட்டு, தொடர்ந்து மேலும் செல்வந்தர்களாகும் பொருட்டு, முற்றும் மனமிசைந்து அவர்கள் ஒரு புதிய ஜாரை அரியாசனத்தில் அமர்த்தியிருப்பார்கள்.

இதிலிருந்து தப்ப முடிந்ததற்கு முற்றிலும் ஒரேயொரு மெய்நடப்புத்தான் காரணம்—கிராமம் நகரத்துடன் ஒன்றுபட்டது, கிராமத்தின் பாட்டாளி, அரைப் பாட்டாளிப் பகுதியினர் (அதாவது, ஏனையோரது உழைப்பைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளாதவர்கள்) நகரத்துத் தொழிலாளர்களுடன் ஒன்றுசேர்ந்து குலாக்குகளுக்கும் புல்லுருவிகளுக்கும் எதிராய் இயக்கம் ஆரம்பித்தனர் என்ற ஒரேயொரு மெய் நடப்புத்தான் காரணம்.

இந்த ஒற்றுமையைச் சாதிப்பதற்காக, குறிப்பாய் உணவு நிலைமை சம்பந்தமாய் மிகுதியாய்ப் பலவும் செய்ய வேண்டியிருந்தது. நகரங்களில் தொழிலாளி வர்க்க மக்கட் பகுதியோர் உணவின்றிப் பசியால் வதைபட்டு வந்தனர். ஆனால் குலாக்குகள் ''இன்னும் சிறிது காலம் என்னுடைய தானியத்தை இருத்தி வைத்திருந்தால், மேலும் கூடுதலாய் விலை கொடுத்தாலும் கொடுப்பார்கள்'' என்று கூறிக் கொண்டிருந்தனர்.

குலாக்குகளுக்கு அவசரமில்லைதான், அவர்களிடம் நிறைய பணம் இருந்தது. கேரென்ஸ்கி நோட்டுகளை ராத்தல் கணக்கில் சேமித்து வைத்திருப்பதாய் அவர்களே சொல்கிறார்கள்.

பஞ்ச காலத்தில் தானியத்தைப் பதுக்கி வைத்துச் சேமிக்கக் கூடியவர்கள் மிகக் கொடும் குற்றமிழைக்கிறவர்கள் ஆவர். மக்களுடைய மிகக் கொடும் பகைவர்களாய்க் கருதி அவர்களை எதிர்த்துப் போராடியாக வேண்டும்.

கிராமப்புறங்களில் இந்தப் போராட்டத்தை நாம் தொடங்கி விட்டோம்.

ஏழை விவசாயிகள் கமிட்டிகளை அமைப்பதன் மூலம்

விவசாயிகளிடையே நாம் பிளவை ஏற்படுத்துவதாய்ச் சொல்லி மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரும்[10] நம்மை பீதியுறச் செய்யலாமெனப் பார்த்தனர். விவசாயிகளிடையே பிளவை ஏற்படுத்தாமல் இருப்பதென்பதன் அர்த்தம் என்ன? அவர்களைக் குலாக்குகளின் தயவில் விடுவதென்பதே அதன் அர்த்தம். நாம் விரும்பாதது இதுவேதான்; ஆகவே நாம் விவசாயிகளிடையே பிளவை ஏற்படுத்துவதெனத் தீர்மானம் செய்தோம். நாங்கள் கூறினோம்: மெய்தான், குலாக்குகளை நாம் இழக்கவே செய்கிறோம், இந்தத் துர்பாக்கியத்தை மூடி மறைக்க முடியாது தான் (சிரிப்பு); ஆனால் லட்சோப லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளை நம்முடன் சேர்ந்து கொள்ளும்படிக் கவர்ந்திழுப்போம், இவர்கள் தொழிலாளர்களுடைய பக்கத்துக்கு வந்து விடுவார்கள். (கரவொலி.)

இதுவேதான் நடைபெற்று வருகிறது. விவசாயிகளிடையே உண்டான பிளவு யார் ஏழை விவசாயிகள், யார் பிறர் உழைப்பைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளாத நடுத்தர விவசாயிகள், புல்லுருவிகளும் குலாக்குகளுமாகியோர் யார் என்பதை இது மேலும் தெளிவாய்த் தெரியப்படுத்துவதற்கு உதவி புரிந்தது.

ஏழை விவசாயிகள் குலாக்குகளுக்கு எதிராய் நடத்தும் போராட்டத்தில் அவர்களுக்குத் தொழிலாளர்கள் உதவியுள்ளனர்; தொடர்ந்து உதவியும் வருகின்றனர். கிராமப் புறத்தில் மூண்டிருக்கும் உள்நாட்டுப் போரில் தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளின் பக்கம் நிற்கின்றனர். நிலத்தை சமூகமயமாக்கும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியினரின் சட்டத்தை அவர்கள் நிறைவேற்றிய போது செய்தது போலவே, இப்பொழுதும் தொழிலாளர்கள் ஏழை விவசாயிகளுக்கு உதவியாய் நிற்கின்றனர்.

நிலத்தை சமூகமயமாக்கும் சட்டத்தை போல்ஷிவிக்குகளாகிய நாம் எதிர்த்தோம். ஆயினும் நாம் இச்சட்டத்தில் கையெழுத்திட்டோம். ஏனென்றால் பெரும்பான்மையான விவசாயிகளது சித்தத்துக்கு மாறாய்ச் செல்ல நாங்கள் விரும்பவில்லை. பெரும்பான்மையோரின் சித்தத்துக்கு எப்பொழுதுமே நாங்கள் கட்டுப்பட்டவர்கள், பெரும்பான்மையோரின் சித்தத்தை எதிர்ப்பது புரட்சிக்குத் துரோகமிழைப்பதாகும்.

நிலத்தைச் சரிசமனமாய்ப் பிரித்துக்கொள்வது பயனற்றதாகுமென்ற கருத்தை, விவசாயிகளுக்கு ஒவ்வாததாயிருந்த இக்கருத்தை, நாங்கள் பலவந்தமாய் விவசாயிகள் மீது திணிக்க விரும்பவில்லை. உழைக்கும் விவசாயிகள் தமது அனுபவத்தின் வாயிலாய், தமது துயரத்தின் வாயிலாய், சரிசமனப் பங்கீடு அபத்தமாகும் என்பதைத் தாமே உணர்ந்து கொள்வதுதான் நல்லதெனக் கருதினேம். அப்பொழுதுதான் நாம் அவர்களிடம் கேட்க முடியும்: நிலத்தைப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வதால் உண்டாகும் அழிபாட்டிலிருந்தும், குலாக்கு ஆதிக்கத்திலிருந்தும் தப்பிக்கும் வழிதான் என்ன?

நிலத்தைப் பங்கிட்டுப் பிரித்துக் கொள்வது ஒரு தொடக்கம் என்ற அளவில் நல்லதுதான். நிலமானது நிலப்பிரபுக்களிடமிருந்து எடுக்கப்பட்டு, விவசாயிகளின் கைக்கு மாற்றப்படுகிறதென்று காட்டுவதே அதன் நோக்கம். ஆனல் இது போதாது. நிலத்தைச் சமுதாய முறையில் சாகுபடி செய்வதுதான் தீர்வு காண்பதற்குரிய ஒரே வழி.

இதை நீங்கள் அன்று உணர்ந்து கொள்ளவில்லை. ஆனல் அனுபவத்தின் சக்தியானது மறுக்க முடியாத இந்த உண்மையை நோக்கி உங்களை இட்டுச் செல்கிறது. சிறுவீதச் சாகுபடியின் குறைபாடுகளிலிருந்து மீள்வதற்குரிய வழி கம்யூன்கள்தான்; ஆர்ட்டல்கள் அல்லது விவசாயிக் கூட்டிணைவுகள் மூலம் சாகுபடி செய்வதுதான். அதுவே விவசாயம் உயர்ந்தோங்கி மேம்படுவதற்கும், சக்திகளது சிக்கன ஒழுங்குக்கும், குலாக்குகளையும் புல்லுருவிகளையும் சுரண்டலாளர்களையும் எதிர்த்துப் போராடுவதற்கும் உரிய வழி.

விவசாயிகள் நிலத்துடன் கட்டுண்டு வாழ்கிறவர்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். புதுமுறைகளைக் கையாள அவர்கள் அஞ்சுகிறவர்கள், பழைய பழக்கங்களை விடாப்பிடியாய்ப் பற்றிக் கொள்கிறவர்கள். குறிப்பிட்ட எந்தவொரு நடவடிக்கையாலும் ஏற்படும் நன்மைகளை அவர்கள் தமது சொந்த புத்தியால் உந்தப்பட்டுப் புரிந்து கொள்ளவும் மதித்துப் போற்றவும் நேரும் போதுதான் இந்த நடவடிக்கையின் நன்மைகளில் நம்பிக்கை கொள்கிறவர்கள் என்பது நமக்குத் தெரியும். ஆதலால்தான் நாம் நிலப் பங்கீட்டால் தீர்வு ஏற்படாது என்று உணர்ந்திருந்த போதிலும், நிலம் பங்கிட்டுப் பிரிக்கப்படுவதற்கு உதவி செய்தோம்.

ஆனால் இப்பொழுது ஏழை விவசாயிகள் தாமாகவே நம்முடன் கருத்து உடன்பாடு கொள்ளத் தலைப்பட்டுள்ளனர். நிலம் நூறு சிறு துண்டுகளாய்க் கூறு போடப்பட்டுத் தனித் தனியே சாகுபடி செய்யப்படுகையில் பத்து ஏர்கள் வேண்டியிருக்கிறதெனில், சமுதாயக் கூட்டுச் சாகுபடியில் இதை விடக் குறைவான ஏர்களே போதும். ஏனெனில் நிலம் இப்பொழுது அவ்வளவு சின்னஞ் சிறு துண்டுகளாய்ப் பிரிக்கப் பட்டிருக்கவில்லை. இதை அவர்கள் தமது அனுபவ வாயிலாய் கற்றுக் கொண்டு வருகிறார்கள். தனிப்பட்ட சிறு உடைமையாளர்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட அபிவிருத்திகளை விவசாயத்தில் கொண்டு வருவதற்கு கம்யூனானது ஒரு பெரிய ஆர்ட்டல் அல்லது விவசாயிக் கூட்டிணைவு மூலம் வகை செய்கிறது. இதையன்றி மற்றும் பல அனுகூலங்களும் இருக்கின்றன.

உடனடியாகவே எங்கும் நிலத்தைச் சமுதாய முறையில் சாகுபடி செய்ய முற்பட்டுவிட முடியாதுதான். குலாக்குகள் இதை எல்லா வழிகளிலும் எதிர்ப்பார்கள். அதோடு, விவசாயிகளுங்கூட சமுதாயக் கூட்டுக் கோட்பாடுகள் விவசாயத்தில் அனுசரிக்கப்படுவதைச் சில சமயங்களில் பிடிவாதமாய் எதிர்ப்பார்கள். ஆனால் உதாரணத்தின் மூலமும், தமது சொந்த அனுபவத்தின் மூலமும் கம்யூன்களது அனுகூலங்களை எவ்வளவுக்கு எவ்வளவு ஐயமற விவசாயிகள் உணர்ந்து கொள்கிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு வெற்றிகரமாய் முன்னேற்றம் கைவரப் பெறும்.

இத்துறையில் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அளவு கடந்த முக்கியத்துவம் வாய்ந்த பங்காற்றும். ஏழை விவசாயிகள் கமிட்டிகள் ருஷ்யாவெங்கும் பரவலாய்த் தோன்றியாக வேண்டும். நீண்ட காலமாய் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் வளர்ச்சி மும்முரமாய் நடைபெற்று வந்திருக்கிறது. வட பிராந்தியத்தின் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் காங்கிரஸ் அன்று பெத்ரோகிராதில் நடைபெற்றது. ஏழாயிரம் பிரதிநிதிகள் வருவார்களென எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் இருபதாயிரம் பேர் வந்து விட்டனர். காங்கிரசுக்காக ஒதுக்கப்பட்டிருந்த மண்டபம் வந்திருந்தோர் எல்லோரும் அமருவதற்குப் போதவில்லை. பருவநிலை நல்லபடியாய் இருந்ததால், மாரிக்கால மாளிகைக்கு வெளியே சதுக்கத்தில் கூட்டத்தை

நடத்த முடிந்தது. சங்கட நிலைமையிலிருந்து தப்ப முடிந்தது.

கிராமப்புறத்து உள்நாட்டு போரைப் பற்றி மக்கள் சரிவரபுரிந்து கொண்டு வருகிறார்கள், ஏழை விவசாயிகள் ஒன்றுபட்டு வருகிறார்கள், குலாக்குகளுக்கும் செல்வந்தர்களுக்கும் புல்லுருவிகளுக்கும் எதிராய் உறுதியான அணிவரிசை வகுத்துப் போராடுகிறார்கள் என்பதை இந்தக் காங்கிரஸ் புலப்படுத்திற்று.

நமது கட்சியின் மத்தியக் கமிட்டி ஏழை விவசாயிகள் கமிட்டிகளைத் திருத்தியமைப்பதற்கு ஒரு திட்டம் வகுத்திருக்கிறது. சோவியத்துக்களின் ஆறாவது காங்கிரசினுடைய அங்கீகாரத்துக்காக இத்திட்டம் சமர்ப்பிக்கப்படும். கிராம வட்டாரங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகளும் சோவியத்துக்களும் தனித்தனி அமைப்புகளாய் இருக்கக் கூடாது. அப்படி இருக்கும் வரை பூசலும் மிதமிஞ்சிய வீண் பேச்சும் இருக்கவே செய்யும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். ஏழை விவசாயிகள் கமிட்டிகளை நாம் சோவியத்துக்களுடன் இணைக்கப் போகிறோம். ஏழை விவசாயிகள் கமிட்டிகளை சோவியத்துக்களாய் மாற்றப் போகிறோம்.

குலாக்குகள் சில சமயங்களில் ஏழை விவசாயிகள் கமிட்டிகளினுள்ளும் ஊடுருவிக் கொண்டு விடுகிறார்கள் என்பது நமக்குத் தெரியும். இது தொடர்ந்து நடைபெறுமாயின் ஏழை விவசாயிகள் முன்பு கேரென்ஸ்கி, அவ்க்சேன்தியெவின் குலாக்கு சோவியத்துக்களின் பால் கொண்டிருந்த அதே மாதிரியான போக்கைத்தான் ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் பாலும் அனுசரிப்பார்கள். பெயரின் மாற்றத்தைக் கண்டு யாரும் ஏமாந்துவிட மாட்டார்கள். ஆகவே ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்குப் புதிய தேர்தல்கள் நடத்த வேண்டுமென்று பிரேரணை செய்யப்படுகிறது. ஏனையோரது உழைப்பைச் சுரண்டாதவர்கள் மட்டுமே, கொள்ளையடிப்பதற்கான ஒரு ஆதாரமாய் மக்களுடைய பசியைப் பயன்படுத்தாதவர்கள் மட்டுமே, உபரி தானியத்தைக் கொண்டு கொள்ளை லாபமடிக்காதோரும் இந்த உபரி தானியத்தைப் பதுக்காதவர்களும் மட்டுமே ஏழை விவசாயிகள் கமிட்டிகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை பெறுவார்கள். குலாக்குகளுக்கும் புல்லுருவிகளுக்கும் பாட்டாளி வர்க்க ஏழை விவசாயிகள் கமிட்டிகளில் இடமளிக்கலாகாது.

விவசாய அபிவிருத்திக்காக சோவியத் அரசாங்கம் நூறு கோடி ரூபிளை ஒரு தனி நிதியாய் ஒதுக்குவதென்று முடிவு செய்திருக்கிறது. தற்போதுள்ள எல்லாக் கம்யூன்களுக்கும் மற்றும் புதிதாய் அமைக்கப்படும் எல்லாக் கம்யூன்களுக்கும் பண உதவியும் தொழில் நுட்ப உதவியும் அளிக்கப்படும்.

பயிற்சி பெற்ற நிபுணர்கள் தேவைப்படுவார்களாயின் அவர்களை நாங்கள் அனுப்பி வைப்போம். இவர்களில் பெரும்பான்மையோர் எதிர்ப்புரட்சியாளர்களே என்ருலும், ஏழை விவசாயிகள் கமிட்டிகளால் இவர்களுக்குக் கடிவாளமிட்டு இவர்களை உபயோகித்துக் கொள்ள முடியும். சுரண்டலாளர்களுக்காக முன்பு எப்படி வேலை செய்தார்களோ, அதைவிட மோசமாய் இல்லாதபடி மக்களுக்காக இப்பொழுது அவர்கள் வேலை செய்வார்கள். பொதுவாய் நமது அறிவுத் துறையினர் சீர்குலைவின் மூலமும், வேண்டுமென்றே வேலைக்குக் குந்தகம் செய்வதன் மூலமும் தொழிலாளர்களுடைய அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட முடியாதென ஐயமற ஏற்கெனவே கண்டு கொண்டு விட்டனர்.

அன்னிய ஏகாதிபத்தியமும் நம்மைக் கிலிகொள்ளச் செய்யவில்லை. ஜெர்மனி ஏற்கெனவே உக்ரேனில் சூடுபட்டிருக்கிறது. உக்ரேனிலிருந்து ஆறு கோடி பூடு* தானியத்தை அள்ளிச் சென்றுவிடலாமென நினைத்திருந்த ஜெர்மனிக்கு தொண்ணூறு லட்சம் பூடுகளே கிடைத்திருக்கின்றன, இவற்றுடன் கூடவே ருஷ்ய போல்ஷிவிசமும் அதற்குக் கிடைத்திருக்கிறது, இதன்பால் அதற்குக் குறிப்பிடத்தக்க அபிமானம் இருப்பதாய்ச் சொல்வதற்கில்லை. (இடியென அதிரும் கரவொலி.) பிரிட்டிஷ்காரர்கள் இதே நிலைமை தமக்கும் ஏற்படாதபடிக் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு நாம், சொல்லக் கூடியது இதுதான்: ''ஜாக்கிரதை! கழுத்தை முறித்துக் கொள்ளாதீர்கள்!'' (சிரிப்பும் கரவொலியும்.)

ஆயினும் வெளி நாடுகளில் நமது சோதரர்கள் எங்கும் கிளர்ந்தெழாத வரை, தொடர்ந்து நம்மை அபாயம் எதிர் நோக்கவே செய்கிறது. ஆகவே நாம் நமது செஞ்சேனையைத் தொடர்ந்து ஒழுங்கமைத்து வன்மையும் திண்மையும் பெறச்

---

* 16.38 கிலோகிராமுக்குச் சமமான பழைய ருஷ்ய நிறுத்தல் அளவை.—ப-ர்.

செய்தாக வேண்டும். முக்கியமாய் ஏழை விவசாயிகள் இந்த விவகாரத்தில் அக்கறை கொண்டாக வேண்டும், ஏனெனில் நமது சேனையின் பாதுகாப்பிலேதான் அவர்கள் தமக்குரி பொருளாதார வேலைகளை நடத்திச் செல்ல முடியும்.

தோழர்களே, புதிய வடிவிலான விவசாயத்துக்கு மாறிச் செல்லுதல், மெல்லவே நடந்தேறுவதாய் இருக்கலாம். ஆயினும் சமுதாய முறையிலான சாகுபடிக்குரிய துவக்கங்களைத் தளராத உறுதியோடு நடைமுறைக்குக் கொண்டு வந்தாக வேண்டும்.

குலாக்குகளுக்கு எதிரான போராட்டம் முழு மூச்சுடன் நடத்தப்பட்டாக வேண்டும். அவர்களுடன் எவ்விதச் சமரசங்களும் வேண்டியதில்லை.

நாம் நடுத்தர விவசாயிகளுடன் சேர்ந்து வேலை செய்ய முடியும், அவர்களுடன் சேர்ந்து குலாக்குகளை எதிர்த்துப் போராட முடியும். நடுத்தர விவசாயிகள் நமக்கு எவ்விதத்திலும் எதிரானவர்கள் அல்ல. அவர்கள் சோஷலிஸ்டுகளாய் இல்லாமலிருக்கலாம், என்றுமே அவர்கள் சோஷலிஸ்டுகளாகாமலும் இருக்கலாம். ஆனால் நிலத்தைச் சமுதாய முறையில் சாகுபடி செய்வதன் அனுகூலங்களை அனுபவமானது அவர்களுக்குக் கற்றுத் தரும். அவர்களில் பெரும்பான்மையோர் இதை எதிர்த்து நிற்க மாட்டார்கள்.

குலாக்குகளிடம் நாம் சொல்வது இதுதான்: உங்களுக்கும் நாங்கள் எதிரானவர்கள் அல்ல; ஆனால் உங்களுடைய உபரி தானியத்தைக் கொடுத்து விடுங்கள்; கொள்ளை லாபம் அடிக்காதீர்கள்; ஏனையோரது உழைப்பைச் சுரண்டாதீர்கள். இவ்வாறன்றி நீங்கள் வேறு விதமாய்ச் செய்கிற வரை உங்கள் மீது ஈவிரக்கமில்லாப் போர் நடத்தவே செய்வோம்.

உழைப்பாளர்களிடமிருந்து நாம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் கூலிக்கு உழைப்பை அமர்த்திக் கொள்வோரை, ஏனையோரை வருத்தித் திரவியம் திரட்டுவோரை நாம் அறவே உடைமை நீக்கம் செய்வோம். (பலத்த கரவொலி.)

நூல் திரட்டு,<br>
தொகுதி 37,<br>
பக்கங்கள் 175-82

# 1919

## பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும்

## பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கு வாழ்த்து

## சோவியத் ஆட்சியதிகாரமும் மாதர்களின் அந்தஸ்தும்

## சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஈராண்டுகள்

அக்டோபர் புரட்சியின் இரண்டாம் ஆண்டுவிழாவை ஒட்டி
அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி,
தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள்
பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத்,
அகில ஒன்றிய தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்சில்
மற்றும் ஆலைக் கமிட்டிகள் ஆகியவற்றின்
கூட்டு அமர்வில் ஆற்றிய உரை
நவம்பர் 7

# பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் பொருளியலும் அரசியலும்

சோவியத் ஆட்சியின் இரண்டாம் ஆண்டுவிழாத் தறுவாயில், மேலே கண்ட தலைப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பொருள் பற்றி ஒரு சிறு பிரசுரம் எழுத உத்தேசித்திருந்தேன். ஆனால் அன்றாட வேலைகளின் நெருக்குதல் காரணமாக சில பகுதிகளுக்கான பூர்வாங்கத் தயாரிப்புகளுக்கு அப்பால் இது வரைச் செல்ல முடியவில்லை. எனவே இந்தப் பொருளின் ஆகமுக்கியமான கருத்துக்கள் என்று நான் கருதுவதன் சுருக்கமான தொகுப்பான விளக்கத்தை இங்கு அளிப்பதென்று முடிவு செய்துள்ளேன். தொகுத்தளிக்கும் ஒரு விளக்கம் பல பிரதிகூலங்களையும் குறைபாடுகளையும் கொண்டதாக இருக்கும் என்பது இயல்பே. இருந்தபோதிலும் ஒரு சிறிய சஞ்சிகைக் கட்டுரை, கருத்தில் உள்ள எளிய நோக்கம் நிறைவேற உதவலாம்; அந்த நோக்கம், பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுகள் இந்தப் பிரச்சினையையும் அதன் அடிப்படையையும் விவாதிக்கும்படிச் செய்வதேயாகும்.

## 1

முதலாளித்துவத்திற்கும் கம்யூனிசத்திற்கும் இடையே திட்டவட்டமான மாறுதல் காலகட்டம் இருக்கிறது என்பதற்குத் தத்துவார்த்த ரீதியில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. அது சமூகப் பொருளாதாரத்தின் இந்த இருவடிவங்களின் அம்சங்களையும் தன்மைகளையும் இணைக்க வேண்டும். இந்த மாறுதல் காலகட்டம், மடிந்து வரும் முதலாளித்துவத்திற்கும் இளம் பருவத்திலுள்ள கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்டக் காலகட்டமாகும். அல்லது வேறு சொற்களில் கூறினால் தோற்கடிக்கப்பட்ட ஆனால் இன்னும் அழிக்கப்படாத முதலாளித்துவத்துக்கும் பிறந்துள்ள ஆனால்

இன்னும் மிகவும் வலுக்குறைந்த கம்யூனிசத்திற்கும் இடையிலான போராட்டக் காலகட்டம் எனலாம்.

இந்த மாறுதல் காலகட்ட அம்சங்களால் வேறுபடுத்திக் காட்டப்பெறும் முழுமையான வரலாற்று சகாப்தத்தின் அவசியம், மார்க்சியவாதிகளுக்கு மட்டுமன்றி, வளர்ச்சியின் தத்துவத்தை எந்தளவுக்காவது அறிந்துள்ள எந்த ஒரு கல்வி கற்ற நபருக்கும் கண்கூடாகத் தெரிய வேண்டும். இருப்பினும், இன்றைய குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளிடமிருந்து (அவர்களது போலியான சோஷலிச முத்திரை இருப்பினும் அத்தகையோராகக் காட்சி தரும் இரண்டாம் அகிலத்தின்[11] எல்லாப் பிரதிநிதிகளும்—மாக்டானல்ட், ழான் லொங்கே, காவுத்ஸ்கி, பிரெடெரிக் ஆட்லெர் உள்ளிட்டு) சோஷலிசத்தை நோக்கிய மாறுதல் கட்டம் குறித்து நாம் கேள்விப்படும் பேச்சுக்கள் யாவும் இந்தக் கண்கூடான உண்மையை முற்றிலும் புறக்கணிப்பதாகவே காணப்படுகின்றன. குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளுக்கு வர்க்கப் போராட்டத்தின் மேல் வெறுப்பு, அதைத் தவிர்ப்பது பற்றிக் கனவு காணுதல், வேற்றுமைகளை மழுப்புதல், சமரசப் படுத்தல், கூரிய முனைகளை அகற்றுதல் ஆகியவை அவர்களது இயல்பாக இருக்கிறது. எனவே அத்தகைய ஜனநாயகவாதிகள், ஒருக்கால் முதலாளித்துவத்திலிருந்து கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் முழு வரலாற்றுக் காலகட்டத்தின் அவசியத்தை அங்கீகரிக்காமல் தவிர்ப்பார்கள், அல்லது இந்த சக்திகளில் ஒன்று நடத்தும் போராட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கு மாருக, மோதும் இந்த இரு சக்திகளையும் சமரசப் படுத்தச் சூழ்ச்சிகளைப் புனைவது தமது கடமை என்று கருதுவார்கள்.

## 2

நமது நாட்டின் மிகப் பெரிய பின்தங்கிய நிலைமை மற்றும் குட்டிமுதலாளித்துவத் தன்மை காரணமாக ருஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் முன்னேற்றமடைந்த நாடுகளிலுள்ள சர்வாதிகாரத்திலிருந்து சில தனிப்பட்ட இயல்புகளில் நிச்சயமாயும் தவிர்க்கமுடியாத வகையில் வேறுபடும். ஆனல் அடிப்படையான சக்திகளும் சமூகப்

பொருளாதாரத்தின் அடிப்படை வடிவங்களும் வேறு எந்த ஒரு முதலாளித்துவ நாட்டிலும் இருப்பது போலவே ருஷ்யா விலும் இருக்கும், எனவே தனிப்பட்ட இயல்புகள் குறைந்த முக்கியத்துவமுடையவற்றுக்கு மட்டுமே பொருந்தும்.

சமூகப் பொருளாதாரத்தின் அடிப்படை வடிவங்கள்: முதலாளித்துவம், சிறுவீத பண்ட உற்பத்தி மற்றும் கம்யூ னிசம். அடிப்படை சக்திகள்: முதலாளித்துவ வர்க்கம், குட்டி முதலாளித்துவ வர்க்கம் (குறிப்பாக விவசாயிகள்) மற்றும் பாட்டாளி வர்க்கம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் ருஷ்யா வின் பொருளாதார அமைப்பு கம்யூனிஸ்டுக் கோட்பாடு களின் மீது ஒரு பரந்த அரசின் அளவுக்கு ஒன்றிணைந்துள்ள தனது முதல் படிகளை மேற்கொண்டுள்ள உழைப்பின் போராட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது—இது சிறுவீத பண்ட உற்பத்தியை எதிர்த்தும் தொடர்ந்து நிலவும் முதலாளித்துவத்தை எதிர்த்தும், சிறுவீத பண்ட உற் பத்தியை அடிப்படையாக்கிய முதலாளித்துவத்தை எதிர்த் தும் நடைபெறும் போராட்டமாகும்.

ருஷ்யாவில் முதலாவதாக, உற்பத்தி சாதனங்களின் தனி யார் உடமை ஒழிக்கப்பட்டு விட்டது, இரண்டாவதாக, பாட் டாளி வர்க்க ஆட்சி அதிகாரம் தேசிய அளவில் அரசுக்கு உடைமையான நிலத்திலும்அரசுக்கு உடைமையான நிறுவனங் களிலும் பெருவீத உற்பத்தியை ஒழுங்கமைத்து வருகிறது, பல்வேறு தொழில் துறைகளுக்கும் பல்வேறு நிறுவனங்களுக் கும் உழைப்புச் சக்தியை வினியோகம் செய்கிறது, உழைக் கும் மக்களிடையில் அரசுக்குச் சொந்தமான நுகர் பொருட் களைப் பெரிய அளவில் வினியோகித்து வருகிறது. இவற்றை எல்லாம் பொருத்த வரை ருஷ்யாவில் உழைப்பு கம்யூனிஸ்டு முறையில் ஒன்றுசேர்க்கப்பட்டிருக்கிறது.

நாம் ருஷ்யாவில் கம்யூனிசத்தின் ''முதல் படிகள்'' பற்றிப் பேசுகிறோம் (1919 மார்ச் மாதத்தில் ஏற்கப்பட்ட எமது கட்சியின் வேலைத்திட்டத்திலும் அவ்வாறே குறிப் பிடப்பட்டுள்ளது). காரணம் இவையாவும் நமது நாட்டில் ஒரு பகுதியளவிலேயே செயல்படுத்தப்பட்டுள்ளன; அல்லது வேறுவிதமாகக் கூறினல் அவற்றின் சாதனைகள் அவற்றின் ஆரம்பக் கட்டங்களில் மட்டுமே உள்ளன. நாம் ஓரே ஒரு

புரட்சிகரத் தாக்குதலில் பொதுவாக மிக அவசரமாக வெற்றி சாதனையாகக் கூடிய அனைத்தையும் அவசரமாக வெற்றி சாதனையாக்கினோம். உதாரணமாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முதல் நாள் 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)ல் நிலத்திலிருந்த தனியுடைமை ஒழிக்கப்பட்டது—பெரிய நிலவுடைமையாளர்களுக்கு எவ்வித நஷ்ட ஈடும் அளிக்காமல் உடைமைகள் பறிமுதல் செய்யப்பட்டன. ஒரு சில மாத அளவுக்குள் கிட்டத்தட்ட எல்லாப் பெரிய முதலாளிகளின் உடைமைகள்—ஆலை, தொழிற்சாலை, கூட்டுப்பங்கு நிறுவனங்கள், வங்கிகள், ரயில்வே ஆகியவையும்—நஷ்ட ஈடின்றிப் பறிமுதல் செய்யப்பட்டன. தொழில் துறையில் பெருவீத உற்பத்திக்கான அரசாங்க அமைப்பும், ஆலைகள், தொழிற்சாலைகள், ரயில்வேக்கள் சம்பந்தமாகத் ''தொழிலாளர் கண்காணிப்பிலிருந்து'' ''தொழிலாளர் நிர்வாகத்திற்கான'' மாற்றமும்—இவை பெரும்பாலும் ஏற்கெனவே சாதனையாகி விட்டன. ஆனால் விவசாயம் சம்பந்தப்பட்ட வரை இது இப்போதுதான் துவங்கியது (''அரசாங்கப் பண்ணைகள்'' அதாவது அரசுக்குச் சொந்தமான நிலத்தில் தொழிலாளரின் அரசாங்கம் பெரிய பண்ணைகளை நிறுவுவது). இதேபோல சிறுவீத விவசாயத்திலிருந்து கம்யூனிஸ்டு விவசாயத்திற்கான மாறுதல் கட்டம் என்ற முறையில் சிறிய விவசாயிகளின் பல்வேறு வடிவிலான கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதும் இப்போதுதான் தொடங்கியது.* தனியார் வர்த்தகம் அகற்றப்பட்டு அதனிடத்தில் அரசு நிர்வாகத்திலான பண்டங்கள் வினியோகம் நடத்தப்படுவது குறித்தும் இதையே கூற வேண்டும். அதாவது நகரங்களுக்குத் தானியங்களையும் கிராமப் புறங்களுக்குத் தொழிற்துறைப் பண்டங்களையும் அரசு கொள்முதல் செய்து வழங்குவது

---

* சோவியத் ருஷ்யாவிலுள்ள ''அரசாங்கப் பண்ணைகள்'' மற்றும் ''விவசாயக் கம்யூன்கள்'' எண்ணிக்கை நமக்குத் தெரிந்த வரை முறையே 3536 மற்றும் 1961ம் ஆகும். விவசாய ஆர்ட்டல்கள் எண்ணிக்கை 3696. எல்லா அரசாங்கப் பண்ணைகள் மற்றும் கம்யூன்கள் பற்றிய சரியான கணக்குகளை நமது மத்தியப் புள்ளிவிவர வாரியம் தற்போது எடுத்து வருகிறது. இதன் முடிவுகள் 1919 நவம்பரில் வெளிவரத் தொடங்கும்.—ஆ-ர்.

இது சம்பந்தமாகக் கிடைத்துள்ள புள்ளிவிவரத் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

விவசாயிகளின் பண்ணை வேலை தொடர்ந்து சிறுவீத பண்ட உற்பத்தியையே செய்தது. இங்கு முதலாளித்துவத்திற்கு மிகவும் விரிவான மிகவும் உறுதியான ஆழ வேரூன்றிய அடிப்படை இருக்கிறது. இந்த அடிப்படையில் முதலாளித்துவம் நீடித்து நிலவுகிறது, கம்யூனிசத்தை எதிர்த்த ஒரு கடுமையான போராட்டத்தில் புதிதாகத் தோன்றுகிறது. இந்தப் போராட்டத்தின் வடிவங்கள்: அரசின் தானியம் (இதர பொருட்கள்) கொள்முதலும் பொதுவாக அரசின் பண்டங்கள் வினியோகத்தையும் எதிர்த்த தனிப்பட்ட வர்த்தகச் சூதாட்டமும் லாபவேட்டையும் ஆகும்.

## 3

இந்த ஸ்தூலமற்ற தத்துவார்த்தப் புத்துரைகளை விளக்கிக் காட்ட நாம் உண்மையான புள்ளிவிபரங்களை மேற்கோள் காட்டுவோம்.

உணவுத்துறை மக்கள் கமிசாரகத்தின் புள்ளிவிபரங்களின்படி ருஷ்யாவில் 1917 ஆகஸ்ட் 1ந் தேதிக்கும், 1918 ஆகஸ்ட் 1ந் தேதிக்கும் இடையே அரசு கொள்முதல் செய்த தானியம் சுமார் 3,00,00,000 பூடுகளாகும். இந்த ஆண்டில் இது சுமார் 11,00,00,000 பூடுகளாக இருக்கும். அடுத்த கொள்முதல் இயக்கத்தின் முதல் மூன்று மாதங்களில் (1919-20) கொள்முதல் மொத்தம் சுமார் 4,50,00,000 பூடுகளாக இருக்கலாம்—1918ல் (ஆகஸ்ட்—அக்டோபரில் இதே காலகட்டத்தில் இது 3,70,00,000 பூடுகளாக இருந்தது.

இந்தப் புள்ளிவிபரங்கள் முதலாளித்துவத்தை எதிர்த்த கம்யூனிசத்தின் வெற்றி என்ற கருத்துக் கோணத்திலிருந்து நிலைமைகள் மெதுவாக ஆனால் உறுதியாக மேம்பட்டு வருவதைத் தெளிவாகக் காட்டுகின்றன. உலகில் முன்னறியாத இடர்ப்பாடுகள், உலகின் வலிமை மிக்க நாடுகளின் எல்லா சக்திகளையும் ஒன்றுதிரட்டி ருஷ்யாவின் மற்றும் அயல் நாடுகளின் முதலாளிகள் உருவாக்கியுள்ள உள்நாட்டுப் போரி

ஞல் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் இந்த முன்னேற்றம் சாதனையாகியுள்ளது.

எனவே, அனைத்து நாடுகளின் முதலாளிகள் அவர்களது பகிரங்க அல்லது முகமூடிக் கையாட்கள் (இரண்டாம் அகிலத்தின் ''சோஷலிஸ்டுகள்'') ஆகியோர் எத்தனை பொய்களையும் அவதூறுகளையும் பரப்பிய போதிலும் ஓர் உண்மை மறுக்க முடியாதபடி நிலவுகிறது—பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் நமது நாட்டில் முதலாளித்துவத்தை எதிர்த்து கம்யூனிசத்தின் வெற்றி உத்தரவாதம் செய்யப்பட்டு விட்டது. உலகம் முழுவதிலும் முதலாளி வர்க்கம் போல்ஷிவிசத்தை எதிர்த்து வெஞ்சினமும் புகையும் பகையும் தோற்றுவித்து, போல்ஷிவிக்குகளை எதிர்த்து ராணுவப்படையெடுப்புகள் சதித்திட்டங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்து வருகிறது, காரணம் ராணுவ வன்மையினுல் நாம் நசுக்கப்படாத வரையில் சமூகப் பொருளாதாரத்தை மறுநிர்மாணம் செய்வதில் நமது வெற்றி தவிர்க்கமுடியாததாகி விடும் என்பதை அது நன்கு முழுமையாக உணர்ந்திருக்கிறது. மேலும் இந்த வழியில் நம்மை நசுக்க அது புரியும் முயற்சிகள் வெற்றியடைவதில்லை.

நம்பற்கரிய இடர்ப்பாடுகளின் கீழ் நாம் பணியாற்ற வேண்டி இருந்தபோதிலும் நமக்குக் கிட்டிய குறைந்த காலத்தில் நாம் ஏற்கெனவே முதலாளித்துவத்தை எந்தளவுக்கு தோற்கடித்திருக்கிறோம் என்பதைப் பின்வரும் சுருக்கமாகத் தொகுத்தளித்துள்ள. விவரங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். மத்திய புள்ளிவிவர வாரியம் பத்திரிகைகளுக்காக சோவியத் ருஷ்யா முழுவதற்கும் அன்றி இருபத்தாறு குபேர்னியாக்களுக்கு (மாவட்டம்) மட்டும் தானிய உற்பத்தி மற்றும் நுகர்வு பற்றிய புள்ளிவிவரங்களை இப்போதுதான் தயாரித்துள்ளது.

இவ்வாறாக நகரங்களுக்கு வழங்கப்பட்ட தானியத்தில் தோராயமாகப் பாதி அளவு உணவுத்துறை மக்கள் கமிசாரகத்தாலும் மற்ற பாதி லாபவேட்டைக்காரர்களாலும் வழங்கப்பட்டது. நகரத் தொழிலாளர் பயன்படுத்திய உணவு சம்பந்தமாக 1918ல் நடத்தப்பட்ட ஒரு கவனமான ஆய்வில் இதே சராசரி வெளிப்பட்டுள்ளது. அரசாங்கம் வழங்கும்

விளைவுகள் பின்வருமாறு:

| சோவியத் ருஷ்யாவின் 26 குபேர்னியாக்களில் | மக்கள் தொகை (பத்து லட்சம்) | தானிய உற்பத்தி (விதை, தீவனம் தவிர) (பத்து லட்சம் பூடுகள்) | தானிய வழங்கல் (மிலியன் பூடுகள்) | | மக்களுக்கு கிட்டிய மொத்த தானியம் (பத்து லட்சம் பூடுகள்) | நபர் விகித தானியப் பயனீடு (பூடுகள்) |
|---|---|---|---|---|---|---|
| | | | உணவுத்துறை மக்கள் கமிசாரகம் | லாப வேட்டைக் காரர்கள் | | |
| உற்பத்தி செய்யும் குபேர்னியாக்கள் | நகரங்கள் 4.4 | — | 20.9 | 20.6 | 41.5 | 9.5 |
| | கிராமங்கள் 28.6 | 625.4 | — | — | 481.8 | 16.9 |
| பயனீடு செய்யும் குபேர்னியாக்கள் | நகரங்கள் 5.9 | — | 20.0 | 20.0 | 40.0 | 6.8 |
| | கிராமங்கள் 13.8 | 114.0 | 12.1 | 27.8 | 151.4 | 11.0 |
| மொத்தம் (26 குபேர்னியாக்கள்) | 52.7 | 739.4 | 53.0 | 68.4 | 714.7 | 13.6 |

ரொட்டிக்கு ஒரு தொழிலாளி கொடுக்கும் விலை அதே ரொட்டிக்கு அவன் லாபவேட்டைக்காரருக்குத் தருவது போன்று ஒன்பதில் ஒரு பங்கேயாகும் என்பதை மனதில் வைக்க வேண்டும். லாபவேட்டைக்காரரின் ரொட்டி விலை அரசு விலையைப் போலப் பத்து மடங்கு அதிகம். இது தொழிலாளர் வரவு செலவு பற்றிய விரிவான ஆய்வில் வெளியாகியுள்ளது.

## 4

மேற்கோள் காட்டப்பட்ட புள்ளிவிவரங்களைக் கவனமாக ஆராய்ந்தால், அவை ருஷ்யாவின் இன்றையப் பொருளாதாரத்தின் அடிப்படை அம்சங்களின் சரியான சித்திரத்தை அளிப்பதைக் காணலாம்.

உழைப்பாளி மக்கள், அவர்களது காலகாலமான ஒடுக்குமுறையாளர்கள் மற்றும் சுரண்டுவோரான நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர். உண்மையான சுதந்திரம், உண்மையான சமத்துவத்தின் திசையிலான இந்த முன்னேற்றம், அதன் விரிவு பரிமாணம் மற்றும் வேகத்தில் உலகில் ஈடிணையற்ற இந்த முன்னேற்றம் (குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் உள்ளிட்ட) முதலாளி வர்க்கத்தின் ஆதரவாளர்களால் புறக்கணிக்கப்படுகிறது. அவர்கள் சுதந்திரம் மற்றும் சமத்துவம் பற்றிப் பேசும் பொழுது நாடாளுமன்ற முதலாளித்துவ ஜனநாயகத்தையே குறிப்பிடுகிறார்கள், இதை அவர்கள் பொதுவாக ''ஜனநாயகம்'' அல்லது ''தூய ஜனநாயகம்'' என்று பொய்யாகப் பிரகடனம் செய்கிறார்கள் (காவுத்ஸ்கி).

ஆனால் உழைக்கும் மக்கள் உண்மையான சமத்துவம், உண்மையான சுதந்திரம் பற்றி மட்டுமே அக்கறை கொண்டிருக்கிறார்கள் (நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளிடமிருந்து சுதந்திரம்); இதனால்தான் அவர்கள் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு இத்தகைய உறுதியான ஆதரவு தருகிறார்கள்.

இந்த விவசாய நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் முதலில் நன்மையடைந்தது ஒட்டுமொத்தமாக விவசாயிகளே, அவர்களே ஆக அதிக நன்மையடைந்தார்கள்,

உடனடியாக நன்மையடைந்தார்கள். நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் கீழ் ருஷ்யாவிலிருந்த விவசாயிகள் பட்டினி இருந்தார்கள். நமது வரலாற்றின் நீண்ட பல நூற்றுண்டுகள் முழுவதிலும் விவசாயிக்குத் தனக்காகப் பாடுபடுவதற்கான வாய்ப்பு என்றுமே கிடைத்ததில்லை: முதலாளிகளுக்கும் நகரங்களுக்கும் அயல் நாடுகளுக்கான ஏற்றுமதிக்கும் கோடிக் கணக்கான பூடுகள் தானியத்தைக் கொடுத்துவிட்டு அவன் பட்டினி கிடந்தான். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் விவசாயி முதல் தடவையாக தனக்காக உழைக்கிறுன், நகரவாசியை விட நல்ல முறையில் உணவருந்துகிறுன். முதல் தடவையாக விவசாயி உண்மையான சுதந்திரத்தை—தனது ரொட்டியை தான் உண்ணும் சுதந்திரத்தை, பட்டினி கிடக்காதிருக்கும் சுதந்திரத்தைக்—கண்டு விட்டான். நில வினியோகத்தில் அதிகபட்சமான சமத்துவம் நிலைநாட்டப் பட்டது என்பதை நாம் அறிவோம்; மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களிலும் விவசாயிகள் ''உணவளிக்க வேண்டிய வயிறுகளின்'' எண்ணிக்கைக்கு ஏற்ப நிலத்தைப் பங்கு போட்டுக் கொண்டுள்ளனர்.

சோஷலிசம் என்ருல் வர்க்கங்கள் ஒழிக்கப்படும் என்று பொருளாகும்.

வர்க்கங்களை ஒழிப்பதற்கு, முதலாவதாக, நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளை வீழ்த்த வேண்டும். நமது கடமையின் இந்தப் பகுதி நிறைவேற்றப்பட்டு விட்டது, ஆனுல் இது ஒரு பகுதி மட்டுமே, மேலும் இது ஆகக் கடினமான பகுதி அன்று. வர்க்கங்களை ஒழிப்பதற்கு, இரண்டாவதாக, ஆலைத் தொழிலாளிக்கும் விவசாயிக்கும் இடையிலான வித்தியாசத்தை ஒழிக்க வேண்டுவதும், அவர்கள் எல்லோரையும் உழைப்போர்களாக்க வேண்டுவதும் அவசியம். இதைத் திடுமெனச் செய்து விட முடியாது. இந்தக் கடமை ஒப்புவமையற்ற அளவுக்கு அதிகக் கடினமானது, அவசியமாயும் அதிக காலம் எடுப்பதுமாகும். ஒரு வர்க்கத்தை வீழ்த்துவது மூலம் தீர்வு கண்டுவிடக் கூடிய ஒரு பிரச்சினையல்ல இது. சமூகப் பொருளாதாரம் முழுவதையும் ஒழுங்கமைத்து மறு நிர்மாணம் செய்வது மூலமும், தனிநபரின், பிரிந்த நிலையிலான சிறுவீத பண்ட உற்பத்தி முறையிலிருந்து பெருவீத சமூக உற்பத்திக்கு மாறிச் செல்வது மூலமும் மட்டுமே இதற்குத்

தீர்வு காண முடியும். இந்த மாறுதல் கட்டம் அவசியமாயும் மிகவும் நீடித்ததாக இருக்கும். அவசரமான, துடுக்கான நிர்வாக மற்றும் சட்டமியற்றும் நடவடிக்கைகளால் இது தவக்கமடையலாம், சிக்கலாகலாம். விவசாயி தனது விவசாயத் தொழில் சாதனங்கள் முழுவதையும் பெருமளவுக்கு மேம்படுத்திக் கொள்ளவும் அவற்றை அடிப்படையாகச் சீர்திருத்திக் கொள்ளவும் சாத்தியமாக்கும் வகையில் அத்தகைய உதவிகளை வழங்குவது மூலம் மட்டுமே இதனை விரைவுபடுத்த முடியும்.

இந்தப் பிரச்சினையின் இரண்டாவது, மிகவும் கடினமானதுமான பகுதிக்குத் தீர்வு காணப் பாட்டாளி வர்க்கமானது, முதலாளித்துவ வர்க்கத்தைத் தோற்கடித்த பிறகு விவசாயிகளின் பாலான தனது கொள்கையினைப் பின்வரும் அடிப்படையான வழிகளில் நெறிதிறம்பாது கட்டாயம் நடைமுறைப் படுத்த வேண்டும். பாட்டாளி வர்க்கமானது உழைக்கும் விவசாயியை உடைமை விவசாயியிடமிருந்தும், விவசாயத் தொழிலாளியை விவசாய சிறு வணிகரிடமிருந்தும், பாடுபடும் விவசாயியை லாபவேட்டையாடும் விவசாயியிடமிருந்தும் பிரித்துத் தனிவரையறை செய்ய வேண்டும்.

இந்தத் தனிவரையறையில்தான் சோஷலிசத்தின் முழு சாரமும் காணக் கிடக்கிறது.

சொல்லில் சோஷலிஸ்டுகளாகவும் செயலில் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளாயும் இருக்கும் சோஷலிஸ்டுகள் (மார்த்தவ்கள், செர்னோவ்கள், காவுத்ஸ்கிகள் மற்றவர்கள்) சோஷலிசத்தின் இந்த சாரத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால் அதில் வியப்பேதுமில்லை.

இங்கு நாம் குறிப்பிடும் தனிவரையறை மிகவும் இடர்ப்பாடான ஒன்று, காரணம் எதார்த்த வாழ்வில் ''விவசாயியின்'' அம்சங்கள் அனைத்தும் அவை எவ்வளவுதான் பல்வேறு வகைப்பட்டதாயும், எவ்வளவுதான் முரண்பாடானதாகவும் இருந்தபோதிலும் ஒரு முழுமையில் கலந்திணைந்துள்ளன. இருந்தபோதிலும் தனிவரையறை சாத்தியமே; அது சாத்தியம் என்பது மட்டுமல்ல விவசாயியின் பண்ணை வேலை மற்றும் விவசாயியின் வாழ்க்கை நிலைமைகளிலிருந்து இது தவிர்க்க முடியாது தொடர்வதாகும். உழைக்கும் விவசாயி காலகாலமாக நிலப்பிரபுக்கள், முதலாளிகள், சிறு வணிகர்

கள், லாபவேட்டைக்காரர்கள் ஆகியோராலும் ஆக ஜன நாயகமான முதலாளித்துவக் குடியரசுகள் உள்ளிட்ட அவர் களது அரசாலும் ஒடுக்கப்பட்டுள்ளான். இந்தக் காலங்கள் முழுவதிலும் உழைக்கும் விவசாயி இந்த ஒடுக்குமுறை யாளர்களேயும் சுரண்டுவோரையும் பகைக்கவும் வெறுக்க வும் தன்னைத்தானே பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறான், வாழ்க்கை நிலைமைகளால் தோற்றுவிக்கப்பட்ட இந்தப் ''பயிற்சி'' முதலாளியை எதிர்த்தும், லாபவேட்டைக்காரன் மற்றும் சிறு வணிகரை எதிர்த்தும் தொழிலாளியுடன் ஒரு கூட்டணியை நாடும்படி அவனைக் கட்டாயப்படுத்துகிறது. எனினும் அதேசமயம் பொருளாதார நிலைமைகள், பண்ட உற்பத்தி நிலைமைகள் விவசாயியை (எப்பொழுதுமல்ல ஆனால் பெருவாரியான சந்தர்ப்பங்களில்) தவிர்க்க முடியாத வகையில் ஒரு சிறு வணிகர் மற்றும் லாபவேட்டைக்காரராக மாற்றி விடுகிறது.

மேலே மேற்கோள் காட்டப்பட்ட புள்ளிவிவரங்கள் உழைக்கும் விவசாயிக்கும் விவசாய லாபவேட்டையாளருக் கும் இடையே எடுப்பான வித்தியாசம் இருப்பதை வெளிப் படுத்துகிறது. 1918-19 ஆண்டுகளின் போது நகரங்களில் பசியால் வாடிய தொழிலாளர்களுக்கு நிர்ணயமான அர சாங்க விலைக்கு 4,00,00,000 பூடுகள் தானியத்தை வழங் கிய அந்த விவசாயி, இந்தத் தானியத்தை அரசாங்க நிறு வனங்களுக்கு (அவற்றின் குறைபாடுகள் அனைத்தையும் பாராட்டாமல்) வழங்கிய—இந்தக் குறைபாடுகளைத் தொழி லாளர் அரசாங்கம் முழுமையாக உணர்ந்திருந்தது, ஆயினும் அவை சோஷலிசத்தை நோக்கி மாறிச் செல்லும் முதல் காலகட்டத்தில் தவிர்க்க முடியாதவை—அந்த விவசாயி ஓர் உழைக்கும் விவசாயி, சோஷலிஸ்டுத்-தொழிலாளியின் தோழர், அவருக்குச் சமமானவர், அவரது மிகவும் விசுவாச முள்ள கூட்டாளி, முதலாளித்துவ அடிமைத்தனையை எதிர்த்த போராட்டத்தில் அவரது உடன்பிறப்பாளர் ஆவார். அப்படியிருக்க, அரசாங்க விலையைப் போலப் பத்து மடங்கு அதிக விலைக்கு இரகசியமாக 4,00,00,000 பூடுகள் தானியத்தை விற்பனை செய்த அந்த விவசாயி, நகரத் தொழி லாளர்களின் தேவையையும் பசிக் கொடுமையையும் சாதக மாக்கி, அரசாங்கத்தை ஏமாற்றி, எங்கு பார்த்தாலும்

ஏமாற்று, மோசடி, திருட்டு ஆகியவற்றை அதிகரித்தும் உருவாக்கியும் வரும் அந்த விவசாயி ஒரு லாபவேட்டையாளர்; முதலாளியின் கூட்டாளி, தொழிலாளியின் வர்க்க விரோதி, ஒரு சுரண்டலாளர் ஆவார். நாடு முழுவதற்கும் சொந்தமான நிலத்தில் இருந்து ஏதாவது ஒருவகையில் விவசாயியினது மட்டுமன்றி தொழிலாளரின் உழைப்பும் உருவகம் பெற்றுள்ள கருவிகளின் உதவியுடன் சேகரிக்கப்பட்ட உபரி தானியத்தை வைத்திருப்பவர் யாராக இருப்பினும், தானியத்தை உபரியாக வைத்திருந்து லாபக்கொள்ளையடிப்பவர் யாராக இருப்பினும் அவர் பட்டினியால் வாடும் தொழிலாளியைச் சுரண்டுபவராவார்.

நீங்கள் சுதந்திரத்தை, சமத்துவத்தை மற்றும் ஜனநாயகத்தைக் குலைப்பவர்கள், என்று நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் தொழிலாளிக்கும் விவசாயிக்குமுள்ள அசமத்துவத்தையும், அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டதையும்[12], உபரி தானியம் பலாத்காரமாகப் பறிமுதல் செய்யப்பட்டதையும் சுட்டிக் காட்டி அவர்கள் நம்மை நோக்கி எல்லாத் திசைகளிலிருந்தும் கூச்சல் போடுகிறுர்கள். பல நூற்றுண்டுகளாக உழைக்கும் விவசாயி இன்னலுற்று வந்த உண்மையான அசமத்துவம், உண்மையான சுதந்திரமின்மையை அகற்ற இந்தளவுக்குப் பணி செய்துள்ள ஓர் அரசு உலகில் என்றுமே இருந்தது கிடையாது என்று நாம் பதில் கூறுகிறோம். விவசாயி-லாபவேட்டைக்காரனுடன் சமத்துவத்தை நாம் என்றுமே அங்கீகரிக்க மாட்டோம், சுரண்டுவோருக்கும் சுரண்டப்படுவோருக்கும் இடையேயும் உண்டு கொழுத்தவருக்கும் பட்டினி கிடப்போருக்கும் இடையிலேயும் ''சமத்துவத்தை'' அங்கீகரிக்க மாட்டோம், முந்திய பகுதியினர் பிந்திய பகுதியினரைக் கொள்ளையடிப்பதற்கான ''சுதந்திரத்தையும்'' அங்கீகரிக்க மாட்டோம். இந்த வேற்றுமையை அங்கீகரிக்க மறுக்கும் அந்தப் படித்த நபர்களை, அவர்கள் தம்மைத் தாமே ஜனநாயகவாதிகள், சோஷலிஸ்டுகள், சர்வதேசியவாதிகள், காவுத்ஸ்கிகள், செர்னேவ்கள் அல்லது மார்த்தவ்கள் என்று அழைத்துக் கொண்டாலும், வெண்படையினர்களாகவே கருதுவோம்.

# 5

சோஷலிசம் என்றால் வர்க்கங்கள் ஒழிக்கப்படும் என்று பொருளாகும். வர்க்கங்களை ஒழிப்பதற்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தன்னால் இயன்றதனைத்தையும் செய்துள்ளது. ஆனால் வர்க்கங்களை ஒரே அடியில் ஒழித்துவிட முடியாது.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் வர்க்கங்கள் இன்னும் இருக்கின்றன, இருக்கப் போகின்றன. வர்க்கங்கள் மறைந்துவிடும் பொழுது சர்வாதிகாரம் தேவையற்றதாகி விடுகிறது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இல்லாமல் வர்க்கங்கள் மறைந்துவிட மாட்டா.

வர்க்கங்கள் தொடர்ந்து இருந்திருக்கின்றன. ஆனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகார சகாப்தத்தில் ஒவ்வொரு வர்க்கமும் மாறுதல் அடைந்துள்ளது. வர்க்கங்களிடையிலான உறவுகளும் மாற்றமடைந்திருக்கின்றன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் வர்க்கப் போராட்டம் மறைந்து விடுவதில்லை, அது முற்றிலும் வெவ்வேறு வடிவங்களை எடுத்துக் கொள்கிறது.

முதலாளித்துவத்தின் கீழ் பாட்டாளி வர்க்கம் ஓர் ஒடுக்கப்பட்ட வர்க்கமாகும், உற்பத்தி சாதனங்கள் இல்லாத ஒரு வர்க்கம், முதலாளி வர்க்கத்தை நேரடியாகவும் முழுமையாகவும் எதிர்த்து நின்ற ஒரே வர்க்கம், எனவே, அது இறுதி வரையில் புரட்சிகரமாக இருக்கும் ஆற்றலுடைய ஒரே ஒரு வர்க்கமாகும். முதலாளி வர்க்கத்தை வீழ்த்தி அரசியல் அதிகாரத்தை வென்ற பின் பாட்டாளி வர்க்கம் ஆளும் வர்க்கமாகி விட்டது: அது ஆட்சி அதிகாரம் செலுத்துகிறது; ஏற்கெனவே சமுதாயமயமாக்கப்பட்ட உற்பத்தி சாதனங்கள் மீது கட்டுப்பாட்டைச் செயல்படுத்துகிறது; ஊசலாடுகிற இடைத்தட்டு சக்திகள் மற்றும் வர்க்கங்களுக்கு வழி காட்டுகிறது; சுரண்டலாளர்களின் அதிகரித்துவரும் பிடிவாதமான எதிர்ப்பை நசுக்குகிறது. இவையாவும் வர்க்கப் போராட்டத்தின் பிரத்தியேக கடமைகள். இந்தக் கடமைகளைப் பாட்டாளி வர்க்கம் முற்காலங்களில் தானே முன்வைக்கவில்லை, முன்வைத்திருக்க முடியாது.

சுரண்டலாளர்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் வர்க்கம் மறைந்து விடவில்லை, பாட்டாளி வர்க்க சர்வாதி

காரத்தின் கீழ் திடுமென மறைந்துவிட முடியாது. சுரண்டலாளர்கள் தகர்க்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் அழிக்கப்படவில்லை. அவர்களுக்கு சர்வதேச மூலதனம் என்ற வடிவில் இன்னும் ஒரு சர்வதேச அடித்தளம் இருக்கிறது, அவர்கள் அதன் ஒரு கிளையே. அவர்கள் இன்னும் ஓரளவு உற்பத்தி சாதனங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களிடம் இன்னும் பணம் இருக்கிறது, அவர்களுக்கு இன்னும் மிகவும் விரிவான சமுதாயத் தொடர்புகள் உள்ளன. அவர்கள் தோற்கடிக்கப்பட்டதால் அவர்களது எதிர்ப்பின் சக்தி நூறு மற்றும் ஆயிரம் மடங்கு அதிகரித்திருக்கிறது. அரசாங்க, ராணுவ மற்றும் பொருளாதார நிர்வாகக் ''கலை'' அவர்களுக்கு மேன்மையை, மிகப் பெரிய மேன்மையைத் தருகிறது. அதன் காரணமாக மக்கள் தொகையிலான அவர்களது எண்ணிக்கையின் சராசரியினை விட ஒப்புவமையற்ற முறையில் அவர்களது முக்கியத்துவம் அதிகரித்திருக்கிறது. வீழ்த்தப்பட்ட சுரண்டலாளர்கள் வெற்றிவாகை சூடிய சுரண்டப்பட்ட மக்களின் முன்னணிப்படையினை—அதாவது, பாட்டாளி வர்க்கத்தை—எதிர்த்து நடத்தும் வர்க்கப் போராட்டம் ஒப்புவமையற்ற முறையில் அதிகக் கடுமையாகி விட்டது. இந்தக் கருத்தோட்டத்தை (இரண்டாம் அகிலத்தின்[11] எல்லா வீரர்களும் விரும்புவது போல) அகற்றி அந்த இடத்தில் சீர்திருத்தவாதப் பிரமைகளைப் புகுத்தினால் ஒழிய புரட்சி வேறுவிதமாக இருக்க முடியாது.

இறுதியாக, விவசாயிகள் பொதுவாக குட்டிமுதலாளிகளைப் போலவே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழும் கூட ஒரு பாதி வழி இடைத் தட்டு நிலையிலேயே இருக்கிறார்கள்: ஒரு புறம் அவர்கள் ஓரளவு பெரிய (பின்தங்கிய ருஷ்யாவில் பரந்தளவு) வெகுஜன உழைக்கும் மக்களாக, நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளியிடமிருந்து தம்மைத் தாமே விடுதலை செய்து கொள்ள வேண்டும் என்ற அனைத்து உழைக்கும் மக்களின் பொது நலனால் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறார்கள்; மறு புறம் அவர்கள் பிரிந்து கிடக்கும் சிறு உரிமையாளர்கள், சொத்துடைமையாளர்கள் மற்றும் வர்த்தகர்களாக இருக்கிறார்கள். இத்தகைய பொருளாதார நிலை பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் இடையே இவர்கள் ஊசலாடுவதைத் தவிர்க்க முடியாதபடிச் செய்

கிறது. இந்த இரண்டு வர்க்கங்களுக்கிடையிலான போராட்டம் கடுமையான வடிவத்தை மேற்கொண்டு விட்டதாலும், அனைத்து சமூக உறவுகளும் நம்ப முடியாதளவு கடுமையாகத் தகர்ந்திருப்பதாலும், விவசாயிகளும் குட்டிமுதலாளிகளும் பொதுவாக பழைய, மாமூலான மாறுதலற்றவற்றில் பெருமளவு பற்றுக்கொண்டிருப்பதாலும், அவர்கள் ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கம் தவிர்க்க முடியாத வகையில் அலையாடுவதை நாம் காண நேர்ந்துள்ளது, அவர்கள் ஊசலாடுகிற, மாறுபடக் கூடிய, உறுதியற்றவர்களாக இருப்பதைக் காண நேர்ந்துள்ளது.

இந்த வர்க்கம்—அல்லது இந்த சமூக சக்திகள்—சம்பந்தமாகப் பாட்டாளி வர்க்கம் அதன் மீது தனது செல்வாக்கை நிலைநாட்டவும் அதற்கு வழி காட்டவும் முயல வேண்டும். ஊசலாடுகிற உறுதியற்ற சக்திகளுக்குத் தலைமை வழங்குவது—இதுவே பாட்டாளி வர்க்கத்தின் கடமை.

அனைத்து அடிப்படை சக்திகள் அல்லது வர்க்கங்களையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தால் மாற்றம் செய்யப்பட்ட அவற்றின் இடையுறவுகளையும் ஒப்புநோக்குவோமானல் சோஷலிசத்தை நோக்கிய மாறுதல் கட்டம் பொதுவாக ''ஜனநாயகத்தின் வழியில்'' சாத்தியம் என்று இரண்டாம் அகிலத்தின் பிரதிநிதிகள் அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ள பொதுவான குட்டிமுதலாளித்துவக் கருத்து எவ்வளவு வர்ணிக்க முடியாத அளவுக்கு முட்டாள்தனமானது, தத்துவார்த்த ரீதியில் மடத்தனமானது என்பதை நாம் அறிவோம். இந்தத் தவறுக்கு அடிப்படை ஆதாரம் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து பரம்பரையாகப் பெற்ற ''ஜனநாயகம்'' முற்றமுழுமையான ஏதோ ஒன்று, அது வர்க்கங்களுக்கு அப்பாற்பட்டது என்ற தப்பெண்ணமேயாகும். உண்மையில் ஜனநாயகம்தானே பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் கீழ் முற்றிலும் ஒரு புதிய கட்டத்திற்குள் கடந்து செல்கிறது, வர்க்கப் போராட்டம் எல்லா வடிவங்கள் மீதும் ஆதிக்கம் செலுத்தி உயர் மட்டத்திற்கு எழுகிறது.

சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஜனநாயகம் பற்றிய பொதுவான பேச்சுக்கள் உண்மையில் பண்ட உற்பத்தி உறவுகளால் உருவாக்கப்பட்ட கருத்தோட்டங்களைக் கண்ணை மூடிக்கொண்டு உருவிடுவதாகும். அத்தகைய பொதுப்

போக்குகளைக் கொண்டு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஸ்தூலமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயல்வது முதலாளி வர்க்கத்தின் தத்துவங்களையும் கோட்பாடுகளையும் முழுமையாக ஏற்றுக்கொள்வதற்குச் சமமாகும். பாட்டாளி வர்க்கத்தின் கருத்து முனையிலிருந்து இந்தப் பிரச்சினையைப் பின்வரும் வழியில் மட்டுமே முன்வைக்கலாம்: எந்த வர்க்கத்திடமிருந்து எந்த ஒடுக்குமுறையிலிருந்து சுதந்திரம்? எந்த வர்க்கத்திற்கு எந்த வர்க்கத்துடன் சமத்துவம்? ஜனநாயகம் தனியார் சொத்துடைமை அடிப்படையிலா அல்லது தனியார் உடைமையை ஒழிப்பதற்கான போராட்டத்தின் அடிப்படையிலா? என்று இவ்வாறு கேட்கலாம்.

நெடுங்கால முன்பாக எங்கெல்ஸ் தனது டூரிங்குக்கு மறுப்பு என்ற நூலில் சமத்துவம் என்ற கருத்தோட்டம் பண்ட உற்பத்தி உறவுகளிலிருந்து உருவாக்கப்பட்டது, அதன் பொருள் வர்க்கங்களை ஒழிப்பதே என்று புரிந்து கொள்ளப்படா விட்டால் சமத்துவம் ஒரு தப்பெண்ணமாகி விடுகிறது என்று விளக்கம் தந்தார்.[13] சமத்துவம் பற்றிய முதலாளித்துவ-ஜனநாயகக் கருத்தமைப்புக்கும் சோஷலிசக் கருத்தமைப்புக்கும் இடையிலான வேறுபாடு பற்றிய இந்த சாதாரண உண்மை பெரும்பாலும் மறக்கப்பட்டு விடுகிறது. இது மறக்கப்படாதிருக்குமானல், முதலாளி வர்க்கத்தை வீழ்த்துவது மூலம் பாட்டாளி வர்க்கம் வர்க்கங்களை ஒழிப்பதற்கான திசையில் மிகவும் நிர்ணயமான நடவடிக்கையை எடுக்கிறது என்பதும், இந்த நிகழ்ச்சிப் போக்கைப் பூர்த்தி செய்யப் பாட்டாளி வர்க்கம் தனது வர்க்கப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்பதும், வீழ்த்தப்பட்ட முதலாளி வர்க்கத்தின் மீதும் ஊசலாடும் குட்டி முதலாளிகள் மீதும் ஆட்சி அதிகார இயந்திரத்தைப் பயன்படுத்தியும் பல்வேறு முறைகளைக் கையாண்டு போராடியும், செல்வாக்குச் செலுத்தியும் நிர்ப்பந்தம் கொண்டு வந்தும் செயல்பட வேண்டும் என்பதும் தெட்டத்தெளிவாகும்.

(தொடரும்.[14])

அக்டோபர் 30, 1919

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 271-82

## பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கு வாழ்த்து

சோவியத் குடியரசின் இரண்டாம் ஆண்டு விழாவின் போது முதலாவது வாழ்த்தினைப் பெறுவதற்கு பெத்ரோகிராத் தொழிலாளர்கள் தகுதி பெற்றவர்களாகிறார்கள். பெத்ரோகிராத் தொழிலாளர்கள் புரட்சிகரத் தொழிலாளர்கள் மற்றும் இராணுவ வீரர்கள் ஆகியோரின் முன்னணிப் படையாகவும், ருஷ்ய நாட்டு உழைக்கும் மக்களது முன்னணிப் படையாகவும், உலக முழுவதன் முன்னணிப் படையாகவும் விளங்கி, முதலாளி வர்க்கத்தின் ஆட்சியைத் தூக்கி எறிவதில் முதலிடம் பெற்றவர்கள் என்பதோடு முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியம் ஆகியவற்றிற்கு எதிராகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிப் பதாகையை உயர்த்திப் பிடித்தவர்களும் ஆவர்.

இந்த இரண்டாண்டுகளில் சோவியத் குடியரசின் தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளும் பசி, குளிர், குழப்பம் மற்றும் பொருளாதாரச் சீரழிவின் சித்திரவதைகள் அனைத்தையும் தாங்கி, இடர்ப்பாடுகளை சமாளித்து இந்தப் பதாகையை வெற்றிகரமாக உயர்த்திப் பிடித்துப் பறக்க விட்டனர். சோஷலிச வளர்ச்சியின் இரண்டாண்டு அனுபவம் நமக்கு விரிவான அனுபவத்தை அளித்துள்ளது; முதலாளி வர்க்கத்தின் கொடூரமான கோபத்திற்கும் எதிர்ப்பிற்கும் மற்றும் உலக ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தாக்குதலுக்கும் உள்ளான போதிலுங்கூட சோவியத் ஆட்சியதிகாரத்தைத் திடப்படுத்த முடிந்துள்ளது.

உலகத் தொழிலாளர்களது அனுதாபம் நம் பால் உள்ளது. பாட்டாளி வர்க்கப் புரட்சி எல்லா நாடுகளிலும் இடர்ப்பாடுகளின் ஊடேயும் விடாப்பிடியாகவும், மெதுவாகவும் முதிர்ச்சி பெற்று வருகிறது. மற்றும் முதலாளி வர்க்கத்தின் மிருகத்தனமான வன்முறை, இப்போராட்டத்தைக் கூராக்க மட்டுமே செய்கிறது, பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியை விரைவாக்க மட்டுமே செய்கிறது.

மிக அண்மையில் இங்கிலாந்தின் பிற்போக்குவாதிகளாகிய ஏகாதிபத்தியவாதிகள் பெத்ரோகிராதைக் கைப்பற்ற அவர்களுக்கு உண்டான கடைசி முயற்சியையும் மேற்கொண்டார்கள். அனைத்து உலகின் முதலாளி வர்க்கமும், சிறப்

பாக ருஷ்ய முதலாளி வர்க்கமும் வெற்றியை முன்பே ருசிகண்டு விட்டனர். ஆனால் வெற்றிக்குப் பதிலாக பெத்ரோகிராத் அருகில் தோல்விதான் அவர்களைத் தழுவியது.

யுதேனிச்சின் படைகள் தோற்கடிக்கப்பட்டு அவை பின் வாங்கிக் கொண்டிருக்கின்றன.

தோழர்களே, தொழிலாளர்களே, செஞ்சேனையின் வீரர்களே! உங்கள் முயற்சிகள் அனைத்தையும் ஒருமிக்கத் திரட்டுங்கள்! என்னவானாலும் சரி பின்வாங்கிச் செல்லும் படையினரை நெருங்கிப் பின்பற்றிச் சென்று, அவர்களை நசுக்கி விடுங்கள். ஒருமணி நேரம் கூட ஓய்வெடுக்க அவர்களை விடாதீர்கள். ஒரு நிமிடம் கூட ஓய்வெடுக்க அனுமதியாதீர்கள். இந்த சந்தர்ப்பத்தில் எதிரியை முழுவதுமாக முறியடித்திட முன்னெப்போதையும் விட உறுதியான அடிகொடுத்திட வேண்டும். கொடுத்திடவும் முடியும்.

ஜாராட்சியின் ஜெனரல்கள், வெண்காவலர் மற்றும் முதலாளிகளைத் தோற்கடித்து வரும் செஞ்சேனை நீடூழி வாழட்டும்! சர்வதேச சோவியத் குடியரசு நீடூழி வாழ்க!

நி. லெனின்

நவம்பர் 5, 1919

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 283-84

## சோவியத் ஆட்சியதிகாரமும் மாதர்களின் அந்தஸ்தும்

சோவியத் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு விழா இந்தக் காலக் கட்டத்தில் என்ன சாதிக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பிடுவதற்கும், நிறைவேறி முடிந்த புரட்சியின் முக்கியத்துவம் மற்றும் நோக்கங்களைப் பற்றிப் பரிசீலனை செய்வதற்கும் உரிய ஒரு சந்தர்ப்பமாகும்.

ஜனநாயகத்தை மீறிக் குலைவு செய்துள்ளதாக நம் மீது

முதலாளிகளும், அவர்களின் ஆதரவாளர்களும் குற்றஞ்சாட்டுகிருர்கள். அதற்கு மாருக, சோவியத் புரட்சி, எல்லாத் துறைகளிலும் ஜனநாயகம் ஆழமாயும் அகலமாயும் வளர்ச்சியடைவதற்கு முன்னெப்பொழுதுமில்லாத ஊக்குவிப்பைக் கொடுத்திருக்கிறது என்று நாம் அறுதியிட்டுக் கூறுகிறேம். ஜனநாயகமென்ருல், உழைப்பாளி மக்களுக்கும், முதலாளித்துவத்திஞல் ஒடுக்கப்பட்ட வெகுஜனங்களுக்கும் உரிய ஜனநாயகம் என்பதை அதாவது, மக்களின் மிகப் பெரும்பான்மையோருக்கு உரிய ஜனநாயகம், அதாவது சோஷலிஸ்டு ஜனநாயகம் (உழைப்பாளி மக்களுக்கு); முதலாளித்துவ ஜனநாயகத்தினின்றும் (சுரண்டல்காரர்களுக்கும், முதலாளிகளுக்கும், பணக்காரர்களுக்கும்) முற்றிலும் மாறுபட்டது என்பதை மனதில் வைத்தே கூறுகிறேம்.

யார் கூறுவது சரி?

இந்தக் கேள்வியைப் பரிசீலனை செய்யவும், அது பற்றி ஆழமான ஞானத்தைப் பெறவும், இந்த இரண்டு ஆண்டுகளின் அனுபவத்தை மதிப்பீடு செய்து, அது மேலும் அபிவிருத்தி அடைவதற்கு இன்னும் சிறந்த தயாரிப்புகள் செய்ய வேண்டுவது அவசியம்.

மாதர்களின் நிலை—முதலாளித்துவ ஜனநாயகத்திற்கும், சோஷலிஸ்டு ஜனநாயகத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தை மிகவும் எடுப்பான பாணியில் தெளிவாக்குகிறது. முன்வைக்கப்பட்டுள்ள பிரச்சினைக்கு ஒரு மிகவும் பயனுள்ள பதிலை கொடுக்கிறது.

முதலாளித்துவக் குடியரசில் (அதாவது, நிலம், ஆலைகள், தொழிற்சாலைகள், பங்குகள் முதலியவற்றில் தனியார் உடைமை உள்ள இடத்தில்), அது மிகவும் ஜனநாயகமான குடியரசாக இருந்தபோதிலும் சரி, மாதர்களுக்கு அதில் என்றுமே ஆடவர்களுடன் முழுநிறை சமமான உரிமைகள் இருந்ததில்லை. உலகத்தில் எந்த இடத்திலுமே, மிகவும் முன்னேற்றமடைந்த நாடுகள் ஏதேனும் ஒன்றில் கூட, மாதர்களுக்கு ஆண்களுடன் சம உரிமைகள் கிடையாது. மாபெரும் பிரெஞ்சு (முதலாளித்துவ-ஜனநாயகப்) புரட்சி நடந்து 125 ஆண்டுகளாகி விட்டபோதிலும் இன்னும் இந்த நிலைமை இருந்து வருகிறது.

முதலாளித்துவ ஜனநாயகம் சொல் அளவில் சமத்துவத்

தையும், சுதந்திரத்தையும் வாக்களிக்கிறது. ஆனால் நடை முறையில், எந்த ஒரு முதலாளித்துவக் குடியரசும் கூட, மிகவும் முன்னேற்றமடைந்த முதலாளித்துவக் குடியரசு கூட— மாதர்களுக்கும்—மனித இனத்தின் சரி பாதிக்கு—ஆடவருக்கும் சட்டத்தின்படி பூரண சமத்துவம் வழங்கவில்லை. அல்லது ஆண்களை சார்ந்திருப்பதினின்றும் அல்லது ஆண்களின் ஒடுக்கு முறையினின்றும் மாதர்களை விடுவிக்கவில்லை.

முதலாளித்துவ ஜனநாயகம் என்பது சுதந்திரம், சமத்துவத்தைப் பற்றிய ஆர்ப்பாட்டமான சொற்றொடர்கள், கம்பீரமான வார்த்தைகள், தாராளமான வாக்குறுதிகள். பகட்டோசையுடைய கோஷங்களின் ஜனநாயகமாகும். ஆனால் நடைமுறையில், இவையெல்லாம், மாதர்களுக்கு சுதந்திரம் இல்லாமையையும், அசமத்துவம் இருப்பதையும், உழைப்பாளி மக்களுக்கும், சுரண்டப்பட்ட மக்களுக்கும் சுதந்திரமின்மையும், சமத்துவமின்மையும் நிலவுவதையும் திரையிட்டு மறைக்கிறது.

சோவியத் அல்லது சோஷலிஸ்டு ஜனநாயகம் இந்த ஆடம்பரமான, ஆனால் போலி சொற்களைத் துடைத்தகற்றி, ''ஜனநாயகவாதிகள்'', நிலப்பிரபுக்கள், முதலாளிகள் மற்றும் பட்டினி கிடக்கும் தொழிலாளர்களுக்குக் கொள்ளைலாப விலைகளில் உபரி தானியத்தை விற்பனை செய்வதின் மூலம் செல்வம் குவிக்கும், நிரம்பி வழியும் தானியக் களஞ்சியங்கள் கொண்ட, பணக்கார விவசாயிகள் ஆகியோரின் போலித்தனத்தின் மீது ஈவிரக்கமற்ற போர் தொடுக்கிறது.

இந்த வஞ்சனையான பொய்மை ஒழிக! ஒடுக்கப்பட்டவர்களுக்கும் ஒடுக்குகிறவர்களுக்குமிடையில், சுரண்டப்பட்டவர்களுக்கும், சுரண்டுகிறவர்களுக்குமிடையில் எவ்வித ''சமத்துவமும்'' இல்லை, இருக்கவும் முடியாது. சட்ட பூர்வமான சலுகைகள் ஆண்களுக்கு ஆதரவாக இருப்பதின் காரணமாக மாதர்கள் பாதிக்கப்பட்டுள்ள வரையில் உண்மையான ''சுதந்திரம்'' இல்லை, இருக்காது, இருக்க முடியாது. மூலதனத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்து தொழிலாளி சுதந்திரம் பெறும் வரையில், முதலாளி, நிலப்பிரபு, வியாபாரி ஆகியோரின் ஆதிக்கத்தின் கீழிருந்து உழைக்கும் விவசாயி சுதந்திரம் பெறும் வரையில் உண்மையான ''சுதந்திரம்'' இல்லை, இருக்காது, இருக்கவும் முடியாது.

பொய்யர்களும் பாசாங்குக்காரர்களும் முட்டாள்களும் குருடர்களும் முதலாளிகளும் அவர்களின் ஆதரவாளர்களும் பொதுவான சுதந்திரம் பற்றியும், பொதுவான சமத்துவம் பற்றியும், பொதுவான ஜனநாயகம் பற்றியும் பேசி மக்களை ஏமாற்ற முயலட்டும்.

தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் நாம் கூறுவோம்: இந்தப் பொய்யர்களின் முகமூடியைக் கிழியுங்கள், இந்தக் குருடர்களின் கண்களை திறவுங்கள். அவர்களைக் கேளுங்கள்:

எந்தப் பாலினத்துக்கு எந்தப் பாலினத்துடன் சமத்துவம் உள்ளது?

எந்தத் தேசிய இனத்திற்கு எந்தத் தேசிய இனத்துடன் சமத்துவம் உள்ளது?

எந்த வர்க்கத்திற்கு எந்த வர்க்கத்துடன் சமத்துவம் உள்ளது?

எந்த ஆதிக்கத்தின் கீழிருந்து, அல்லது எந்த வர்க்கத்தின் ஆதிக்கத்தின் கீழிருந்து சுதந்திரம்? எந்த வர்க்கத்திற்கு சுதந்திரம்?

இந்தப் பிரச்சினைகளை முன்வைக்காமல், அவைகளுக்கு முதலிடம் கொடுக்காமல், இந்தப் பிரச்சினைகளைப் பற்றி வாய் மூடி மௌனியாயிருப்பதையும், மூடி மறைப்பதையும், முனை மழுங்கச் செய்வதையும் எதிர்த்துப் போராடாமல், அரசியல், ஜனநாயகம் மற்றும் சுதந்திரம் பற்றிப் பேசுகின்றவர், சமத்துவத்தைப் பற்றியும், சோஷலிசத்தைப் பற்றியும் பேசுகின்றவர் உழைப்பாளி மக்களின் மோசமான விரோதியாவார்; ஆட்டுத் தோல் போர்த்த ஓநாயாவார்; தொழிலாளர், விவசாயிகளின் கடும் வைரியாவார்; நிலப் பிரபுக்கள், ஜார்கள், முதலாளிகளின் கைக்கூலியாவார்.

சோவியத் ஆட்சியின் இரண்டாண்டு காலத்தில், ஐரோப்பாவின் மிகவும் பின்தங்கிய நாடுகளிலொன்றில் பெண் விடுதலைக்காகவும், ''வல்லியலாருடன்'' அவளுடைய சமத்துவத்திற்காகவும், உலகத்தின் எல்லா முன்னேற்றமடைந்த, நாகரிகமான, ''ஜனநாயகக்'' குடியரசுகள் அனைத்திலுமாகக் கடந்த 130 ஆண்டுகளில் செய்யப்பட்டதை விடவும் அதிகமாகச் செய்யப்பட்டுள்ளது.

கல்வி, கலாசாரம், நாகரிகம், சுதந்திரம் ஆகிய இந்த படாடோபமான வார்த்தைகளைத் தொடர்ந்து உலகத்தின் முதலாளித்துவ பூர்ஷ்வா குடியரசுகள் அனைத்திலும் திருமணம் சம்பந்தமாகவும், விவாகரத்து சம்பந்தமாகவும் மாதர்களுக்கு சமத்துவமின்மை, திருமணமின்றிப் பிறந்த குழந்தையும் திருமணத்தின் பயனாகப் பிறந்த குழந்தையும் சமத்துவமில்லாதவர்களாக்கப்படுதல், ஆண்களுக்கு சலுகை பெண்களுக்கு அவமரியாதையும் இழிவும் ஏற்படுத்தல் என்ற வகையில் நம்ப முடியாத அளவுக்கு வஞ்சகமான, அருவருக்கத்தக்க முறையில் சூது நிறைந்த, மிருகத்தனமான கொடூரமான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மூலதனத்தின் ஆதிக்கம், ''புனிதமான தனிச் சொத்தின்'' ஒடுக்குமுறை, அற்பவாத முட்டாள்தனத்தின் கொடுங்கோன்மை, சிறு சொத்துடைமையாளரின் பேராசை ஆகிய இவைதான் முதலாளிகளின் ஆக ஜனநாயகமான குடியரசுகளை இந்த வஞ்சகமான, நீசத்தனமான சட்டங்களை ரத்து செய்வதினின்றும் தடுத்துள்ளன.

சோவியத் குடியரசு—தொழிலாளர், விவசாயிகளின் குடியரசு—ஒரே அடியில் இந்த சட்டங்களைத் துடைத்தெறிந்தது. முதலாளித்துவப் பொய்களும் முதலாளித்துவப் பாசாங்குத்தனமும் என்ற கட்டிடத்தில் ஒரு கல்லைக் கூட விட்டு வைக்கவில்லை.

இந்தப் பொய்மை ஒழிக! ஒடுக்கப்படும் ஒரு பால் இனம், ஒடுக்கும் வர்க்கங்கள், மூலதனம், பங்குகளில் தனியுடைமை, நிரம்பி வழியும் களஞ்சியங்களை உடைய நபர்கள் தங்களுடைய உபரி தானியத்தைப் பயன்படுத்தி பசியால் வாடும் மக்களை அடிமைப்படுத்தல் இத்தியாதி இருக்கக் கூடிய அதே சமயத்தில் எல்லோருக்கும் சுதந்திரம், சமத்துவம் என்று பேசும் பொய்யர்கள் ஒழிக! எல்லோருக்கும் சுதந்திரம் என்பதல்லாது, எல்லோருக்கும் சமத்துவம் என்பதல்லாது: ஒடுக்குகிறவர்களையும், சுரண்டலாளர்களையும் எதிர்த்துப் போராட்டம் நடக்கட்டும், ஒடுக்குவதற்கும் சுரண்டுவதற்கும் உள்ள வாய்ப்பை ஒழித்துக் கட்டுவோம், அதுதான் நம்முடைய கோஷம்!

ஒடுக்கப்பட்ட பால் இனத்திற்கு சுதந்திரமும் சமத்துவமும்!

தொழிலாளர்களுக்கும், உழைக்கும் விவசாயிகளுக்கும் சுதந்திரமும் சமத்துவமும்!

ஒடுக்குகின்றவர்களுக்கெதிரான போராட்டம், முதலாளி களுக்கு எதிரான போராட்டம், கொள்ளை லாபக்கார குலாக்குகளுக்கு எதிரான போராட்டம்!

அதுதான் நம்முடைய போராட்ட கோஷம், அதுதான் நம்முடைய பாட்டாளி மெய்ப்பாடு. மூலதனத்திற்கெதிரான போராட்டத்தின் இந்த உண்மை பொதுவான சுதந்திரம், பொதுவான சமத்துவம் எல்லோருக்கும் சுதந்திரம், எல்லோருக்கும் சமத்துவம் என்ற தேன் தடவிய பாசாங்குத் தனமான, படாடோபமான சொற்றொடர்களைக் கொண்டுள்ள உலக முதலாளித்துவத்தின் முகத்தில் நாம் வீசியெறியக் கூடிய உண்மை.

இந்தப் போலித்தனத்தை நாம் அப்பட்டமாக அம்பலப் படுத்தி விட்ட காரணத்தால், ஒடுக்குகிறவர்களுக்கு எதிராகவும் முதலாளிகளுக்கு எதிராகவும் குலாக்குகளுக்கு எதிராகவும் ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களுக்குப் புரட்சிகரமான உத்வேகத்துடன் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் உத்தரவாதம் செய்வதால், குறிப்பாயும் இந்தக் காரணத்தினுல் தான் சோவியத் ஆட்சி உலக முழுவதிலும் உள்ள தொழிலாளர்களுக்கு மிகவும் பெருமதிப்புள்ளதாக விளங்குகிறது.

குறிப்பாக இதனுல்தான், சோவியத் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா நடைபெறும் இந்த சந்தர்ப்பத்தில் உலகத்தின் எல்லா நாடுகளிலுமுள்ள உழைக்கும் வெகு ஜனங்களின் அனுதாபங்கள், ஒடுக்கப்பட்ட, சுரண்டப் பட்ட மக்களின் அனுதாபங்கள் நமக்கு ஆதரவாக உள்ளன.

குறிப்பாக இதனுல்தான், சோவியத் ஆட்சியின் இரண்டாவது ஆண்டு நிறைவுவிழா நடைபெறும் சந்தர்ப்பத்தில் பஞ்சமும் குளிரும் இருந்தபோதிலும், ருஷ்ய சோவியத் குடியரசின் மீது ஏகாதிபத்தியம் படையெடுத்துள்ளதின் விளைவாக எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுள்ள போதிலும், நம்முடைய லட்சியத்தின் நியாயத் தன்மையில் நாம் பூரணமான திட நம்பிக்கை கொண்டுள்ளோம்; உலக ரீதியில்

சோவியத் ஆட்சியின் வெற்றி தவிர்க்க முடியாதது என்பதை உறுதியாக நம்புகிறோம்.

பிராவ்தா,* இதழ் 249,
நவம்பர் 6, 1919

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 285-88

## சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஈராண்டுகள்

பெத்நோத்தா[15] எனும் செய்தித்தாள் பெரும்பாலும் விவசாயிகளால் வாசிக்கப்படுகிறது. சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்ட இரண்டாம் ஆண்டு நிறைவின் நாளாகிய இன்று நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் அடக்குமுறையினின்றும் விடுதலை செய்யப்பட்டுள்ள பல இலட்சம் உழைக்கும் உழவர்களுக்கு எனது வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொண்டு அந்த விடுதலையைப் பற்றிச் சில சொற்கள் சொல்லப் போகிறேன்.

மூலதனத்தின் ஆட்சியைத் தூக்கி எறிந்து, அதனிடத்தில் நிறுவப்பட்ட உழைக்கும் மக்கள் ஆட்சியாகிய சோவியத் ஆட்சியதிகாரம் ருஷ்யாவில் இதற்கு முன் கண்டிராததும், நம்பற்கரியதுமான இடர்பாடுகளை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

ருஷ்ய நாட்டின் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் அனைத்து உலகின் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு சோவியத் ஆட்சியதிகாரத்தை ஒழித்திட வெறிபிடித்த முயற்சிகளை இன்னும் செய்து வருகின்றனர். அது ஏற்படுத்திவிட்ட முன்மாதிரியைக் கண்டு அவர்கள் அஞ்சுகிறார்கள். உலகெங்கணும் உள்ள தொழிலாளர்களது அனுதாபத்தையும் ஆதரவையும் அது பெற்றுவிடப் போகிறதே என்று அவர்கள் அஞ்சுகிறார்கள்.

நாட்டுக்குள்ளே சதித்திட்டங்கள், செக்கோஸ்லவாக் படைகளுக்கு[6] இலஞ்சம் கொடுத்தது, சைபீரியா, அர்ஹான்கெல்ஸ்க், காக்கசஸ், தென் ருஷ்யா மற்றும் பெத்ரோகிராதுக்கு அருகில் வெளி நாட்டுப் படைகள் இறங்கியது, கல்ச்

* பிராவ்தா ("உண்மை")—ருஷ்ய பத்திரிகை.—ப-ர்.

சாக், தெனீக்கின், யுதேனிச் மற்றும் இதர ஜாராட்சி ஜெனரல்களுக்கு நூற்றுக்கணக்கான இலட்சக்கணக்கான ரூபிள்களைச் செலவிடுவது—போர் ஒப்பந்தங்கள் வாயிலாக இலட்சங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான இலட்சங்களைக் குவித்துள்ள அனைத்து நாடுகளின் முதலாளிகள் எல்லா வகையான வழி முறைகளையும் பயன்படுத்தி, சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்த்திடும் முயற்சியில் முழு மூச்சுடன் இறங்கியுள்ளனர்.

ஆனல் இவை அனைத்தும் வீண் முயற்சிகளே. ஈடு இணையற்ற மற்றும் நம்ப முடியாத இந்த இடர்பாடுகளை எல்லாம் சமாளித்து சோவியத் ஆட்சியதிகாரம் உறுதியாக நிற்கிறது. போர், முற்றுகை, பஞ்சம், தட்டுப்பாடுகள், போக்குவரத்து அமைப்பில் விரிசல், பொதுவான பொருளாதாரச் சீர்குலைவு ஆகிய இடர்பாடுகளால் ஏற்படும் மூர்க்கமான தொல்லைகளைத் தாங்கிக் கொண்டு உறுதியுடன் சோவியத் ஆட்சியதிகாரம் நிற்கிறது.

**ருஷ்யாவின் சோவியத் ஆட்சியதிகாரம் ஏற்கெனவே அனைத்து உலகின் தொழிலாளர்களது ஆதரவைப் பெற்று விட்டது.** போல்ஷிவிசத்தைப் பற்றியும், சோவியத் ஆட்சியதிகாரத்தைப் பற்றியும் பேசாத மக்கள் எந்த ஒரு நாட்டிலும் இல்லை.

முதலாளிகள் அதைப் பற்றி வெறுப்புடனும், வெறிபிடித்த குரோதத்துடனும், அவதூறு பண்ணும் வகையிலும், எல்லையில்லாத வகையில் குறைப்படுத்தும் முறையிலும் பேசுகிருர்கள். ஆனல் இந்தக் குரோதம் அவர்களைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. ஆகவே அனைத்து உலகின் தொழிலாளர்கள் பழைய தலைவர்களைக் கைவிட்டு வருகிருர்கள் மற்றும் சோவியத் ஆட்சியதிகாரத்துக்கு ஆதரவாக முன் வந்து கொண்டிருக்கிருர்கள்.

ருஷ்யாவின் மீது எதிரித்தாக்குதல் ஏற்படுத்திவிட்ட வேதனை நிறைந்த நசுக்கிடும் பாரம் இருந்தபோதிலும் சோவியத் ஆட்சியதிகாரமானது உலகமெங்கணும் வெற்றி பெற்று விட்டது—அதாவது உழைக்கும் மக்களின் அனுதாபம் உலகமெங்கணும் ஏற்கெனவே நமது பக்கம் சாய்ந்துள்ளது என்ற முறையில் வெற்றி பெற்றுள்ளது.

**உலகமெங்கும் சோவியத் ஆட்சியதிகாரத்தின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. அது காலத்தைப் பொறுத்த ஒன்ருகும்.**

பஞ்சத்தால் ஏற்பட்ட நம்பற்கரிய கடுமையான இடையூறுகள், துயரங்கள் மற்றும் போரினாலும் பொருளாதாரச் சீர்குலைவாலும் உருவாக்கப்பட்ட இடர்பாடுகள் இருந்தும் சோவியத் ஆட்சியதிகாரம் இவ்வளவு திண்மையுடனும் உறுதியுடனும் இருப்பதன் காரணம் என்ன?

ஏனெனில் அது உழைக்கும் மக்களது, இலட்சோப இலட்சம் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது சொந்த ஆட்சியதிகாரம் என்பதால்.

தொழிலாளர் அரசு அதிகாரத்தை வைத்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் இலட்சக்கணக்கான உழைக்கும் விவசாயிகளுக்கு உதவுகிறார்கள்.

சோவியத் ஆட்சி நிலப்பிரபுக்களையும், முதலாளிகளையும் தூக்கி எறிந்து விட்டது. மற்றும் அவர்கள் தங்களது ஆட்சியை மறுபடியும் கொண்டுவரச் செய்யும் முயற்சிகளை எதிர்த்து மக்களை உறுதியாகப் பாதுகாத்து வருகிறது.

உழைக்கும் விவசாயிகளுக்கும் பெரும்பான்மையாகவுள்ள ஏழை மற்றும் மத்தியதர விவசாயிகளுக்கும் தன்னால் இயன்ற அளவு அனைத்து உதவிகளையும் சோவியத் ஆட்சி வழங்குகிறது.

சோவியத் ஆட்சியதிகாரமானது குலாக், பணக்காரர், மூலதனச்சொந்தக்காரர், இலாபவேட்டைக்காரர் மற்றும் உழைக்காமல் பணக்காரனாக விரும்பும் எவர் மீதும், மற்றும் மக்களின் பசி மற்றும் கொடுமைகள் மீது கொழுக்க விரும்பும் எவர் மீதும் கடிவாளம் இட்டு வைத்துள்ளது.

சோவியத் ஆட்சியதிகாரம் இலாபவேட்டைக்காரர்கள், மூலதனச்சொந்தக்காரர்கள், முதலாளிகள் மற்றும் நிலச்சொந்தக்காரர்களுக்கு எதிராக உழைக்கும் மக்களுக்குச் சாதகமாக இருக்கிறது.

உலகமெங்கணும் சோவியத் ஆட்சியதிகாரத்தின் வலிமை, உறுதி மற்றும் தோல்வியுறாத்தன்மை ஆகியவற்றின் ஆதாரமாக இதுதான் விளங்குகிறது.

உலகமெங்கும் உள்ள நூற்றுக்கணக்கான, இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், விவசாயிகளும் ஒடுக்குமுறைக்கும், அவமதிப்புக்கும் உள்ளாகித் தவிக்கின்றனர். இவர்கள் நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளால் சூறையாடப்பட்டு வருகின்றனர். பழைய அரசு என்னும் இயந்திரம், அது முடி

யாட்சியாயினும் சரி, அல்லது ''ஜனநாயகக்'' (போலி-ஜன நாயகக்) குடியரசாயினும் சரி சுரண்டல்காரர்களுக்குத் துணை நின்று தொழிலாளர்களை ஒடுக்குகிறது.

எல்லா நாடுகளிலும் உள்ள நூற்றுக்கணக்கான இலட்சக் கணக்கான தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இது தெரியும். இதை அவர்கள் கண்கூடாகக் கண்டார்கள். தங் களது அன்றாட வாழ்வில் இதை அனுபவித்தார்கள், அனுப வித்து வருகிறார்கள்.

ஏகாதிபத்தியப் போர் நான்காண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. பல லட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டனர், மற் றும் ஊனமுற்றனர். எதற்காக? முதலாளிகளது கொள்ளைப் பொருள்களைப் பங்கிட்டுக் கொள்வதற்காக, சந்தைகளை யும், லாபங்களையும், காலனிகளையும், மற்றும் வங்கிகளின் ஆட்சியையும் பங்கிட்டுக் கொள்வதற்காக.

ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்கள் ஜெர்மானிய ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களைத் தோற் கடித்தனர். கடந்து போகும் ஒவ்வொரு நாளும் அவர்கள் தாங் கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைக் காட்டிக் கொண்டு வருகின்றனர் — வழிப்பறிக்காரர்கள், கொள்ளையர்கள், உழைக்கும் மக்களை ஒடுக்குகிறவர்கள், மக்களது துன் பத்தில் தங்களைக் கொழுக்க வைத்துக் கொள்கிறவர்கள், வலிகுன்றிய நாடுகளை சித்திரவதைச் செய்கின்றவர்கள்.

அதனால்தான் உலகத்து நாடுகளின் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மத்தியில் சோவியத் ஆட்சியதிகாரத் துக்கான ஆதரவு வளர்ந்து கொண்டே வருகிறது.

மூலதனத்திற்கு எதிரான கடுமையானதும், விடாப்பிடி யானதுமான போராட்டம் ருஷ்யாவில் வெற்றிகரமாகத் துவங்கியது. அது இப்போது எல்லா நாடுகளிலும் பரவி வருகிறது.

**உலக சோவியத் குடியரசின் வெற்றியில் இப்போராட்டம் நிறைவெய்தும்.**

பெத்நோத்தா,[15] *இதழ் 478,*
*நவம்பர் 7, 1919*

நூல் திரட்டு,
*தொகுதி 39,*
*பக்கங்கள் 289-91*

## அக்டோபர் புரட்சியின் இரண்டாம் ஆண்டுவிழாவை ஒட்டி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத், அகில ஒன்றிய தொழிற்சங்கங்களின் மத்திய கவுன்சில் மற்றும் ஆலைக் கமிட்டிகள் ஆகியவற்றின் கூட்டு அமர்வில் ஆற்றிய உரை

## நவம்பர் 7, 1919

தோழர்களே! இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, ஏகாதிபத்தியப் போரானது இன்னும் நடந்து கொண்டிருந்த போது, ருஷ்யாவில் உள்ள முதலாளி வர்க்கத்தின் ஆதரவாளர்கள் அனைவருக்கும், மக்கள் திரளுக்கும், இதர நாடுகளில் உள்ள தொழிலாளர்களில் பெரும்பான்மையோருக்கும் என்று கூடத் துணிவாகக் கூறுவேன், ருஷ்யப் பாட்டாளி வர்க்க எழுச்சியும், அரசியல் ஆட்சியதிகாரத்தை அவர்கள் கைப்பற்றிக் கொண்டதும், ஒரு துணிவு மிக்க ஆனால் நம்பிக்கை அற்றதொரு நடவடிக்கையாகப்பட்டது. அந்தச் சமயத்தில் உலக ஏகாதிபத்தியம் பிரம்மாண்டமானதும், தோற்கடிக்கப்பட முடியாததாகவும் தோன்றியது. பிற்பட்ட நாடு ஒன்றின் தொழிலாளர்கள் அதற்கு எதிராகப் புரட்சி செய்வது என்பது புத்தியீனமான செயலாகப்பட்டது. இருந்தபோதிலும், இப்போது, கடந்து போன ஈராண்டுகளை நாம் கண்ணோட்டம் விட்டுப் பார்க்கிற போது நமது எதிரிகள் கூட நாம் சரியாகத்தான் செய்தோம் என்பதை அதிகமதிகமாக ஒத்துக் கொண்டு வருவதைக் காண முடிகிறது. தோற்கடிக்கப்பட முடியாத பேரரக்கனாகத் தோன்றிய ஏகாதிபத்தியம் உலகம் அனைத்தின் முன்னே மண் கால்களுடனான பேரரக்கனே என்பது நிரூபணமாகி விட்டது. மற்றும் நாம் போரிட்டுக் கடந்து வந்துள்ள இரண்டு ஆண்டுகள் தெள்ளத் தெளிவோடு ருஷ்ய நாட்டுப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியை மட்டுமல்ல சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியைச் சுட்டிக் காட்டுகின்றன.

தோழர்களே, சோவியத் ஆட்சியதிகாரம் நிறுவப்பட்ட முதலாண்டின் போது ஜெர்மானிய ஏகாதிபத்தியத்தின் வலிமையை நாம் உணரும்படியாக இருந்தது. நம் மீது திணிக்

கப்பட்ட கொள்ளைக்காரத்தனமான பலவந்த சமாதான ஒப்பந்தத்தினுல் நாம் துன்புற வேண்டியிருந்தது. புரட்சிக்கான நமது அறைகூவலுக்கு ஆதரவோ அல்லது அனுதாபமோ இன்றி நாம் தனித்து அந்த அறைகூவலை விடுக்க வேண்டியிருந்தது. நமது ஆட்சியின் முதலாண்டு ஏகாதிபத்தியத்தை எதிர்த்த நமது போராட்டத்தின் முதலாண்டாக இருந்தது. இந்த இராட்சத சர்வதேச ஏகாதிபத்தியத்தின் பல்வேறு பாகங்களில் நடக்கும் போராட்டமானது அதன் மரணத் துடிப்பே என்பதையும் ஜெர்மானிய ஏகாதிபத்தியமும் ஆங்கில-பிரெஞ்சு முதலாளி வர்க்கத்தின் ஏகாதிபத்தியமும் இந்தப் போராட்டத்தில் அக்கறையுடையவைகளாக இருந்தன என்பதையும் நாம் விரைவில் உணர்ந்து கொண்டு விட்டோம். அந்த ஆண்டின் போது இந்தப் போராட்டமானது நமது படைகளைப் பலப்படுத்தவே செய்தது என்றும், நமது படைகளைப் புதுப்பித்து பெருக்கவும் மட்டுமே செய்தது என்றும், மற்றும் அவைகளை ஏகாதிபத்தியம் முழுவதையும் எதிர்த்து நெறியாண்மை செய்ய முடிந்தது என்பதையும் நாம் நிலை நாட்டினேம். இப்படிப்பட்டதொரு சூழ்நிலையை முதலாண்டின் போது நாம் உருவாக்கியதால்இரண்டாமாண்டு முழுமையிலும் நாம் நமது எதிரிகளை நேருக்கு நேர் எதிர்த்து நின்ருேம். கடந்த ஆண்டில் கூட நம்மைக் கடுமையாகச் சாடிய தோல்வி மனப்பான்மைவாதிகள் இங்கிருந்தார்கள். இங்கிலாந்து, பிரான்ஸ், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் மிகப் பெரிய நாடுகள் என்றும், பிரம்மாண்டமான சக்திகள் என்றும், அவை நமது நாட்டை நசுக்கி விடும் என்றும் கடந்த ஆண்டில் கூட அவர்கள் கூறினுர்கள். இந்த ஆண்டு இப்போது கடந்து விட்டது. முதலாவது ஆண்டினை சர்வதேச ஏகாதிபத்தியத்தின் வலிமை ஆண்டு என்று அழைக்கலாம். இரண்டாமாண்டு ஆங்கில-அமெரிக்க ஏகாதிபத்திய தாக்குதல் ஆண்டு என்று அழைக்கப்படலாம். மற்றும் இந்தத் தாக்குதலை முறியடித்த வெற்றிக் காலம் என்றும், கல்சாக் மற்றும் யுதேனிச் ஆகியார் மீது வெற்றி பெற்ற காலம் என்றும், தெனீக்கின் மீது வெற்றி அடைய ஆரம்பித்த காலம் என்றும் அழைக்கப்படலாம்.

நமக்கு எதிராக அனுப்பப்பட்ட இராணுவப் படைகள் அனைத்தும் திட்டவட்டமானதொரு மூலஸ்தானத்தில்

இருந்து அனுப்பப்பட்டவை என்று நாம் இப்போது தெளிவாக அறிந்துள்ளோம். ஏகாதிபத்தியவாதிகள் அவைகளுக்கு இராணுவ தளவாடங்கள் அளித்து தேவையான ஆயுதங்களையும் தந்து உதவினார்கள் என்று நாம் அறிவோம். நமது விரோதிகளுக்கு இவர்கள் தங்களது உலக இராணுவக் கப்பற் படையின் பகுதியை ஒப்படைத்துள்ளார்கள் என்பதையும் நாம் அறிவோம். மற்றும் தற்போது, தங்களால் இயன்ற மட்டும் ருஷ்யாவின் தெற்குப் புறத்திலும், அர்ஹான்கெல்ஸ்கிலும் இராணுவப் படைகளைத் திரட்டவும் அவைகளுக்கு உதவி செய்யவும் இறங்கியுள்ளார்கள். ஆனால் மிகவும் பெரியதாயும் தோற்கடிக்க முடியாதது போலவும் தோன்றும் இந்தச் சர்வதேச ஏகாதிபத்தியத்தின் படைகள் நம்பற்குரியன அல்ல என்று நாம் தெள்ளத் தெளிவாக அறிந்துள்ளோம். மற்றும் அவைகளைக் கண்டு நாம் அஞ்சுவதில்லை. அவைகள் உள்ளிடம் உளுத்துப் போனவைகள். அவை நம்மை மேலும் மேலும் வலிவுடையவர்களாக்குகின்றன. மற்றும் இந்தக் கூடுதல் வலிமை வெளிநாட்டுப் போர்முனையில் நாம் வெற்றியடைய வழி வகுத்திடும். அதுவுமல்லாமல் அந்த வெற்றியைப் பூரணப்படுத்தவும் வழிவகுத்திடும். இந்த அம்சம் பற்றி நான் பேசாது விடுகிறேன். ஏனெனில் இதைப் பற்றி தோழர் திரோத்ஸ்கி பேசுவார்.

நமது இரண்டாண்டுகால வீரம் செறிந்த ஆக்கப்பணிகளில் இருந்து பொதுப்படையான படிப்பினைகளைப் பெற இப்போது நாம் முயற்சி செய்ய வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது.

சோவியத் குடியரசை வளர்ச்சியுறச் செய்த இரண்டு ஆண்டுகளில் இருந்து பெறப்படக் கூடிய மிக முக்கியமான முடிவு என்று நான் அபிப்பிராயப்படுவது எதுவென்றால், என்னுடைய கருத்துப்படி நமக்கு மிக முக்கியமானது எதுவென்றால், அது, உழைக்கும் மக்களின் ஆட்சியதிகாரத்தை ஒழுங்கமைப்பதில் நமக்குக் கிட்டிய படிப்பினையே. இந்த விஷயத்தில் சில கமிசாரகங்களின் பணி சம்பந்தப்பட்ட பல்வேறு ஸ்தூலமான மெய்நடப்புகளோடு நாம் நின்று விடக் கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது. இவைகளை உங்களில் பெரும்பாலோர் தமது சொந்த அனுபவவாயிலாக அறிந்தும் இருக்கிறீர்கள். நாம் கடந்து வந்த பாதையைத்

திருப்பிப் பார்க்கும் போது, இந்த ஆக்கப்பணியிலிருந்து ஒரு பொதுப்படையான படிப்பினையை நாம் பெற வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. இந்தப் படிப்பினையைக் கற்றுணர்ந்து அதை உழைக்கும் மக்கள் மத்தியிலே கொண்டு செல்ல வேண்டும். அரசின் பொது நிர்வாகத்தில் தொழிலாளர்களது பங்கேற்பு மட்டுமே இப்படிப்பட்ட நம்புதற்கரிய இடர்ப்பாடுகளின் ஊடே நாம் உறுதியாக நிற்க உதவியது என்பதுதான் இந்தப் படிப்பினை. மற்றும் இதே பாதையைப் பின்பற்றுவதன் மூலமே பூரண வெற்றியை நாம் எய்திட முடியும். விவசாயி மக்களிடம் லட்சோப லட்சம் விவசாயிகளிடம் நாம் சரியான உறவுநிலையைப் பேணி வர வேண்டும் என்பது இதிலிருந்து பெறப்படும் மற்றதொரு படிப்பினையாகும். ஏனெனில் இந்த உறவுநிலை மட்டுமே எல்லா இடர்ப்பாடுகளுக்கும் இடையிலும் நாம் வெற்றிகரமாக முன்னேறுவதைச் சாத்தியமாக்கிற்று. மற்றும் அது ஒன்றுதான் நாம் வெற்றி மேல் வெற்றி அடைவதற்கான பாதையினைக் காட்டுகிறது.

பழைய நாட்களை நீங்கள் நினைத்துப் பார்ப்பீர்களானால், அதாவது சோவியத் ஆட்சியதிகாரத்தின் முதல் படிகளைப் பற்றி நினைத்துப் பார்ப்பீர்களானால், இராணுவப் பிரிவு உள்ளிட்ட ஆட்சிநிர்வாகத்தின் எல்லாப் பிரிவுகளையும் வளப்படுத்தும் முழுப்பணியினை நினைத்துப் பார்த்தால், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அக்டோபரில் தொழிலாளிவர்க்க ஆட்சியினை நிறுவியது ஒரு துவக்கம் மட்டுமே என்பதை நீங்கள் காணலாம். உள்ளபடியே அச்சமயத்தில் அரசு அதிகாரத்தின் பொறியமைவு நமது கைக்கு வந்து சேர்ந்திருக்கவில்லை. மற்றும் அதற்குப் பின் கடந்து சென்ற இரண்டு ஆண்டு காலத்தைப் பார்ப்பீர்களானால் இராணுவம், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகிய ஒவ்வொரு துறையிலும், அரசு அதிகாரத்தின் உண்மையான பொறியமைவை நிறுவிடுவதற்காகவும், தொழிற்துறை தொழிலாளர் மற்றும் பொதுவான உழைக்கும் மக்களின் தலைவர்களாக நமக்கு முன்பு இருந்தவர்களை ஒதுக்கித் தள்ளுவதற்காகவும் நாம் உரிய அதிகார இடங்களை ஒவ்வொன்றாகவும் அங்குலம் அங்குலமாக வென்று பெற வேண்டியிருந்தது என்பதை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள்.

இந்தக் கால கட்டத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டியது நமக்கு குறிப்பாயும் முக்கியமானதாகும். ஏனெனில் உலகமெங்கும் இதே வழியில்தான் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களும் இதர உழைக்கும் மக்களும் தங்களது உண்மையான தலைவர்களோடு சேர்ந்து தங்களது முதல் அடிகளை எடுத்து வைக்கவில்லை. இப்போது பாட்டாளி வர்க்கம் அரசு ஆட்சிப் பொறுப்பினையும், அரசியல் ஆட்சியதிகாரத்தையும் தன்னிடமே எடுத்துக் கொண்டுள்ளது. இவ்வர்க்கத்தின் தலைமைப் பொறுப்பில் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகத்தின் பழைய தப்பெண்ணங்களை உடைத்து எறிந்தவர்களை எங்கும் காண்கிறோம். இந்தப் பழைய தப்பெண்ணங்களின் ஊடகமாக நமது நாட்டில் இருப்பவர்கள் மென்ஷிவிக்குகளும், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்[10] ஆவர். மற்றும் ஐரோப்பா முழுவதிலும் இத்தகைய ஊடகமாக முதலாளித்துவ அரசாங்கங்களது பிரதிநிதிகள் இருக்கின்றனர். முன்னரெல்லாம் இது விதி விலக்காக இருந்தது, இப்போது இதுவே பொது விதியாக விளங்குகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, அக்டோபரில் ருஷ்யாவில் இருந்த முதலாளித்துவ அரசாங்கம்—மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பிரதிநிதிகளுடனை அதன் கூட்டணி அல்லது கலப்பணி—உடைத்தெறியப்பட்டது. ஆனால் நாம் நமது பணியினைத் தொடர்ந்து நிறைவேற்றிடும் போது, உண்மையான பிரதிநிதிகள், புரட்சிகரமான தொழிலாளர்கள், பாட்டாளி வர்க்க முன்னணிப் படையினர் அரசு அதிகாரத்தை ஒழுங்கமைப்பதை உண்மையில் மேற்கொள்ளும் வகையில் நாம் ஒவ்வொரு நிர்வாகப் பிரிவையும் புனரமைப்பு செய்ய வேண்டி இருந்தது. அது இரண்டாண்டுகளுக்கு முன்பு அக்டோபரில் நடந்தது. அப்போது இந்தப் பணி மட்டுமீறிய அவசர வேகத்தில் செய்யப்பட்டது. இருந்தபோதிலும், இந்தப் பணி இன்னும் முடிவடைந்து விடவில்லை என்பதனை நாம் தெரிந்து கொண்டு சொல்லவும் வேண்டும். அரசாங்கத்தை இதற்கு முன்பு நடத்தியவர்கள் நம்மை எவ்வாறு எதிர்த்தார்கள் என்பதையும், எவ்வாறு அதிகாரிகள் முதலில் ஆட்சிப் பொறுப்பினைத் தட்டிக் கழிக்க முயன்றார்கள் என்பதையும், ஆனால் பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரம் இந்தப் படுமோசமான மறைமுக

நாச வேலையைச் சில வாரங்களுக்குள் எவ்வாறு தடுத்து நிறுத்தியது என்பதையும் நாம் அறிவோம். இப்படிப்பட்ட ஙுறுப்புகளால் அதன் மீது எவ்வித உளப்பதிவையும் உண்டாக்க முடியாது என்பதை பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரம் காட்டியது. மற்றும் இந்தப் படுமோசமான மறைமுக நாச வேலைக்கு நாம் முற்றுப் புள்ளி வைத்துவிட்ட போது இதே விரோதி வேறு வழி முறைகளைப் பயன்படுத்த முயன்றூர்.

முதலாளி வர்க்கத்தின் ஆதரவாளர்கள் தொழிலாளர்கள் அமைப்புக்களின் தலைமையிலுங்கூட காணப்படும் சம்பவம் அடிக்கடி நிகழ்ந்தது. தொழிலாளர் வலிமையை முழுமையாகப் பயன்படுத்துவது என்ற காரியத்தில் நாம் இறங்க நேரிட்டது. உதாரணமாக, ரயில்வே நிர்வாகத்துக்கும் ரயில்வே பாட்டாளி வர்க்கத்துக்கும் தலைமை வகித்து நடத்திச் சென்றவர்கள் பாட்டாளி வர்க்கப் பாதையில் அல்லாமல் முதலாளித்துவப் பாதையில் இட்டுச் சென்ற போது நமக்கு நேர்ந்த அனுபவத்தை எடுத்துக் கொள்வோம்.[16] முதலாளிகளை எந்த எந்த துறைகளில் இருந்து நீக்கிட முடியுமோ அந்தத் துறைகள் அனைத்திலும் இருந்து அவர்களை நீக்கினேம் என்பதை நாம் அறிவோம், ஆனல் என்ன விளைவுடன் இதைச் செய்தோம்! ஒவ்வொரு துறையிலும் நாம் அங்குலம் அங்குலமாக முன்னேறினேம். நமது தொழிலாளர்களில் மிகச் சிறப்பானவர்களுக்குப் பதவி உயர்வு அளித்தோம். இவர்கள் ஆட்சி இயலை அமைத்திடும் சிரமமான பயிற்சியைப் பெற்றவர்கள். ஒரு கோணத்தில் நின்று பார்த்தால் இவையெல்லாம் ஒருவேளை கடினமான பணிகளாகத் தெரியாது. ஆனல் உள்ளபடியே, இந்தக் காரியத்தை உற்றுக் கவனிப்பீர்களானல் போராட்டத்தின் எல்லாக் கட்டங்களையும் தாண்டிச் சென்று தங்களது உரிமைகளை நிலைநாட்டிட தொழிலாளர்கள் என்ன இடர் அனுபவித்தார்கள் என்பதையும் தொழில்களைத் தொழிலாளர்கள் கண்காணிப்பதிலிருந்து தொழில்களைத் தொழிலாளர்கள் நிருவகிப்பதற்கான வகையில் அவர்கள் காரியங்களை எவ்வாறு இயக்கி வைத்தார்கள் என்பதையும் நீங்கள் காண முடியும். ரயில்வேக்களில் எவ்வாறு அபகீர்த்தியுள்ள ரயில்வேத் தொழிலாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியில் தொடங்கி சிறப்பானதொரு அமைப்

பினைத் துவக்கி வைத்தார்கள் என்பதும் தெரியும். தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் எவ்வாறு நமது அமைப்புகள் அனைத்திலும் பொதுவாக இடம் பெற்று வருகிறார்கள் என்பதையும் தங்களது செயல்களால் அவைகளை எவ்வாறு வலிவூட்டி வருகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உதாரணமாக, கூட்டுறவுகளை எடுத்துக் கொள்ளுங்கள், இதில் மிகப்பெரும் எண்ணிக்கையிலான தொழிலாளர் பிரதிநிதிகளைப் பார்க்கிறோம். முன்னர் இவை கிட்டத்தட்ட முழுதும் தொழிலாளி மக்கள் அல்லாதவர்களைக் கொண்டனவாக இருந்தன என்று நாம் அறிவோம். மேலும் பழைய கூட்டுறவுகளில் நாம் சந்தித்தவர்கள் பழைய முதலாளித்துவ சமுதாயத்தின் கருத்துக்கள் மற்றும் நலன்களில் ஊறிப்போனவர்கள் பணிபுரிந்தார்கள். இந்த விஷயத்தில் அதிகாரத்தைத் தங்களது கையில் எடுத்துக் கொள்வதற்கு முன்பு நீண்டதொரு போராட்டத்தைத் தொழிலாளர்கள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்தக் கூட்டுறவுகளைத் தங்களது நலன்களுக்குட்பட்டதாக்கவும், இன்னும் பலன் தரக் கூடிய பணிகளை மேற்கொண்டு தொடர்வதற்கும் முன்பாக அவர்கள் நீண்ட போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருந்தது.

ஆனால் நமது வேலையில் மிக முக்கியமானது பழைய அரசாங்கப் பொறியமைவை மறுசீரமைத்ததுதான். இது மிகவும் சிரமமான வேலைதான் என்றாலும், கடந்த இரண்டு ஆண்டுகளின் போது தொழிலாளி வர்க்கத்தின் முயற்சிகளது பலன்களை நாம் பார்த்து விட்டோம் என்பதோடு, இத்துறையில் போராட்ட வேள்வித்தீயில் கடந்து சென்ற தொழிலாளர் வர்க்கப் பிரதிநிதிகள் நம்வசம் ஆயிரமாயிரம் பேருண்டு என்பதையும், முதலாளித்துவ ஆட்சியின் பிரதிநிதிகளைப் படிப்படியாக வெளியேற்றியவர்கள் இவர்கள் என்பதையும் நாம் சொல்ல முடியும். அரசாங்கப் பொறியமைவில் மட்டுமல்லாமல் ஏனைய துறைகளிலும் தொழிலாளர்களை நாம் பார்க்கிறோம். இன்றைக்கு உணவு வழங்கு சேவைகளில் அவர்களைப் பார்க்கிறோம். இந்தத் துறையானது கிட்டத்தட்ட பழைய முதலாளித்துவ அரசின் பழைய முதலாளித்துவ அரசாங்கத்தின் பிரதிநிதிகளால் மட்டுமே கண்காணிக்கப்பட்டு வந்தது. உணவு வழங்கு உறுப்பமைவு ஒன்றைத் தொழிலாளர்கள் உருவாக்கியுள்ளார்கள். மேலும் ஓராண்

டிற்கு முன்பு இந்தப் பணி நம்மால் சமாளிக்க முடியாததாக இருந்தபோதிலும், ஓராண்டிற்கு முன்னர் இதில் உள்ளவர்களின் எண்ணிக்கையில் தொழிலாளர் எண்ணிக்கை 30 சதவிகிதமாக மட்டுமே இருந்தபோதிலும், இப்போது உணவு வழங்கும் அமைப்புகளில் 80 சதவிகித அளவிற்குத் தொழிலாளர்கள் அங்கம் வகிக்கின்றனர். இந்த நேரடியானதும், எடுப்பானதுமான புள்ளிவிவரங்கள் நமது நாடு எடுத்த நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. நம்மைப் பொறுத்த வரையில் மிக முக்கியமான விஷயம் எதுவென்றால் அரசியல் புரட்சிக்குப் பிறகு பாட்டாளி வர்க்க ஆட்சியதிகாரத்தை அமைத்திடுவதில் நாம் மகத்தான பலன்களை அடைந்துள்ளோம் என்பதுதான்.

மேலும் தொழிலாளர்கள் பாட்டாளி வர்க்கத் தலைவர்களை உருவாக்கும் முக்கியமான பணியைச் செய்தனர், தொடர்ந்து செய்து வருகின்றனர். நம்மிடையே இருந்து நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான வீரம் செறிந்த தொழிலாளர்கள் உதித்தெழுந்த வண்ணம் உள்ளனர். இவர்கள் வெண்காவலர் படை ஜெனரல்களுக்கு எதிரான போரில் குதித்துக் கொண்டு வருகிறார்கள். நமது விரோதியிடமிருந்து படிப்படியாக ஆட்சியதிகாரத்தை வென்று வருகிறோம். இந்தத் துறையில் முன்னர் எல்லாம் தொழிலாளர்கள் அவ்வளவாக திறம் படைத்திருக்கவில்லை. ஆனால் இப்போது நமது எதிரிகளிடமிருந்து துறை துறையாக மெள்ள வென்று வருகிறோம். பாட்டாளி வர்க்கத்தைத் தடுத்து நிறுத்திடக் கூடிய இடர்ப்பாடுகளே இல்லை. பாட்டாளி வர்க்கம் ஒவ்வொரு துறையிலும் படிப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக எல்லா இடர்ப்பாடுகளையும் சமாளித்து வெற்றி பெற்று வருகிறது. ஆட்சித்துறையின் ஒவ்வொரு பிரிவிலும் பாட்டாளி மக்கள் திரளின் பிரதிநிதிகளை இது கவர்ந்து இழுத்து வருகிறது. ஒவ்வொரு சிறிய அலகிலும், கீழிருந்து மேல் வரையில் பாட்டாளி வர்க்கப் பிரதிநிதிகள் ஆட்சி இயலில் பெற்ற பயிற்சியின் வாயிலாக நுழைந்து, பின்னர் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மக்களை அரசாங்க ஆட்சித்துறையின் அனைத்து விவகாரங்களையும் தாங்களே சுதந்திரமாக நடத்திடும் திறன் படைத்தவர்களாக்குகின்றனர். தங்களது சுய முயற்சியால் அரசினைக் கட்டிடவும் திறன் படைத்தவர்களாக்குகின்றனர்.

தோழர்களே! அண்மையில் நமது பணியில் மிகப் பிரமாதமான வெற்றியின் எடுத்துக்காட்டு ஒன்றினை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம். வர்க்க உணர்வு படைத்த தொழிலாளர்கள் மத்தியில் சுபோத்னிக்குகள்[17] எவ்வளவு விஸ்தாரமாகப் பரவியுள்ளன என்று நாம் அறிவோம். கம்யூனிசத்தின் பிரதிநிதிகள் மிகப்பெரும் பசிக் கொடுமையை அனுபவித்து கடுங்குளிரைத் தாங்கியவர்கள். பின்னணியில் இவர்கள் சேவை செஞ்சேனை முன்னணியில் செய்ததற்கு எவ்வகையிலும் குறைந்ததல்ல என்று நாம் அறிவோம். பெத்ரோகிராதை நோக்கி விரோதி முன்னேறிக் கொண்டிருந்த நெருக்கடியான நேரத்தில், தெனீக்கின் ஓரியோலைக் கைப்பற்றிவிட்ட நேரத்தில், முதலாளி வர்க்கம் மகிழ்ச்சியால் எக்களித்துக் கொண்டிருந்த நேரத்தில், முதலாளிகள் தங்களது மிகப் பிரியமான, கடைசி ஆயுதமாகிய பீதியைப் பரப்பி விடும் அந்த நேரத்தில், நாம் கட்சி வாரத்தை அனுஷ்டிக்கும்படிக் கேட்டுக் கொண்டோம் என்று நாம் அறிவோம். அந்தச் சமயத்தில் தொழிலாளர்களாகிய கம்யூனிஸ்டுகள் ஆலைத் தொழிலாளரிடமும் இதர உழைக்கும் மக்களிடமும் சென்றார்கள். ஏகாதிபத்தியப் போரின் சுமையை மிக அதிகமாகத் தாங்கிக் கொண்டவர்கள் இவர்களே. இதனால் இவர்கள் பட்டினி கிடந்தார்கள். குளிரில் விறைத்துக் கிடந்தார்கள். முதலாளி வர்க்கம் பீதியை விதைப்பதற்குப் பெரும்பாலும் இவர்களைத்தான் நம்பியிருந்தார்கள். இவர்கள்தான் சுமையின் பெரும் பகுதியைத் தங்கள் முதுகில் சுமந்தவர்கள். கட்சி வாரத்தின் போது இவர்களிடம்தான் நாம் போய்ப் பேசினோம்: ''தொழிலாளி வர்க்கத்து ஆட்சிப் பளுவைக் கண்டு நீங்கள் பயந்து போய் இருக்கிறீர்கள். மற்றும் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் முதலாளிகளின் அச்சுறுத்தலால் பயந்து போய் இருக்கிறீர்கள். நீங்கள் எங்களது பணியினையும் எங்களது சிரமங்களையும் பார்க்கிறீர்கள். நாங்கள் உங்களை அழைக்கிறோம். எங்களது கட்சியின் கதவுகளை உங்களுக்கு மட்டும் விரிவாகத் திறந்து வைக்கிறோம். உழைக்கும் வகுப்பாரின் பிரதிநிதிகளுக்கு மட்டும் திறந்து வைக்கிறோம். இந்தச் சிரமமான சந்தர்ப்பத்தில் உங்களைத்தான் நாங்கள் நம்பியிருக்கிறோம். உங்களை எங்களது அணிக்குள் அழைக்கிறோம். அங்கே எங்களுடன் சேர்ந்து அரசினைக் கட்டி

டும் முழுப் பாரத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகிறோம்.'' அது மிகவும் கடுமையானதொரு காலம் என்பதை நீங்கள் அறிவீர்கள். பொருளாயத ரீதியில் அது கடினமான காலம். வெளி நாட்டு அரசியலிலும் போரிலும் விரோதி வெற்றிகள் பெற்றதால் அது கடினமான காலம். இந்தக் கட்சி வாரம் முடிவடையும் போது ஈடு இணையற்ற, எதிர்பார்த்திராத மற்றும் நம்பற்கரிய வெற்றியினை சாதனையாக்கியது என்பதை நீங்கள் அறிவீர்கள். மாஸ்கோவில் மட்டும் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட புதிய கட்சி உறுப்பினர்களை நாம் சேர்த்தோம். கட்சி வாரத்தின் பலாபலன் இதுதான். ஒட்டு மொத்தமாக மாற்றமுறச் செய்தது இது. தொழிலாளி வர்க்கத்தை இது புத்தாக்கம் செய்தது. பணியின் அனுபவத்தால், முதலாளித்துவ ஆட்சியதிகாரத்தின் கருவிகளாகிய சுரண்டல்காரர்களுக்கும் முதலாளித்துவ அரசாங்கத்துக்கும் அடங்கிச் செயலற்றுக் கிடந்தவர்களை வருங்காலக் கம்யூனிச சமுதாயத்தின் சிற்பிகளாக ஆக்கியது. நிலச் சொந்தக்காரர்கள் மற்றும் முதலாளிகளின் சமுதாயத்தின் பழைய ஒடுக்குமுறையை முழுவதாகப் பார்த்தவர்களும் அறிந்தவர்களுமான நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிலாளர், விவசாயி இளைஞர்கள் இன்னும் இதில் சேர்ந்திடக் காத்திருக்கிறார்கள். நமது ஆக்கபூர்வ பணியின் இணையற்ற சிரமங்களை இவர்கள் பார்த்தவர்கள். 1917லும் 1918லும் முன்வந்த கட்சி அலுவலர்களின் முதல் அணியினர் எவ்வகையான வீரர்கள் என்பதையும் இவர்கள் பார்த்தவர்கள். இந்த ஆண்டுகளில் மிகவும் விரிவான அளவில் இவர்கள் முன்வந்தார்கள். நமது சிரமங்கள் எவ்வளவுக்கு அதிகமாக இருந்ததோ அவ்வளவுக்கு அதிகமாக அவர்களது தியாகம் இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் நாம் அடைந்துள்ள உறுதியான முறியடிக்க முடியாத ஒருமைப்பாட்டை உருவாக்கியுள்ளோம் என்பது இந்த சேம நிலையில் இருக்கும் முழுமையான உறுதிப்பாட்டில் நம்பிக்கை ஊட்டுகிறது. மற்றும் நீண்ட நெடு நாட்களுக்கு இன்னும் மிக விரிவான அளவில் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதொரு மூலாதாரம் நமக்கு இப்போது கிடைத்துள்ளதால், உழைக்கும் மக்கள் பிரதிநிதிகள் அரசு அமைப்பினை நிர்மாணிக்கும் பணியினை மேற்கொள்ள வேண்டும் என்பதில் நம்பிக்கை ஊட்டுகிறது. இந்த விஷயத்தில்

தொழிலாளி வர்க்க ஆட்சிமுறையை எல்லாத் துறைகளிலும் பிரயோகிக்கும் அனுபவம் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் நமக்குக் கிடைத்துள்ளது. மற்றும் நாம் தொடங்கியதை தொடர்ந்திடுவது ஒன்றுதான் மிஞ்சியிருக்கிறது என்று நாம் இப்போது தைரியமாகவும், மிகையின்றியும் கூறிடலாம். இந்த இரண்டு ஆண்டுகளில் நடந்தது போலவே விவகாரங்கள் நடந்தேறிடும். ஆனால் இன்னும் விரைவானதொரு வேகத்தில் அவை நடந்தேறும்.

இன்னொரு துறையில் அதாவது தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி வர்க்கத்துக்கும் இடையிலான உறவுநிலை குறித்து மிக அதிகமான சிரமங்கள் நமக்கு இருந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்பு 1917ல் சோவியத்துக்களின் கரங்களுக்கு ஆட்சியதிகாரம் மாறிய போது இந்த உறவானது இன்னும் அதிகத் தெளிவற்றதாக இருந்தது. விவசாயி வர்க்கம் அனைத்தும் நிலப்பிரபுக்களுக்கு எதிராக ஏற்கெனவே எழும்பி தொழிலாளி வர்க்கத்துக்கு ஆதரவு அளித்தது. ஏனெனில் விவசாயிகளின் விருப்பங்களைத் தொழிலாளர்கள் நிறைவேற்றி வருகிறதை விவசாயிகள் கண்கூடாகக் கண்டனர். மேலும் அவர்கள் உண்மையான தொழிலாளி வர்க்கத்தின் வீரர்கள் என்பதையும், நிலப்பிரபுக்களோடு கூட்டு சேர்ந்து விவசாயி வர்க்கத்தைக் காட்டிக் கொடுத்தவர்கள் இவர்கள் இல்லையென்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டனர். ஆனால் விவசாயி மக்களுக்கிடையே அப்போது ஒரு போராட்டம் வெடிக்கவில்லை என்பதை நாம் நன்றாகவே அறிந்து வைத்திருந்தோம். முதலாவது ஆண்டின் போது நகர்ப்புற பாட்டாளி வர்க்கத்துக்குக் கிராமியப் பகுதியில் உறுதியானதொரு நிலை இருக்கவில்லை. ஒரு சிறிது காலத்துக்கு வெண் காவலர் படையின் ஆட்சி வலுவடைந்திருந்த எல்லைப் பிரதேசங்களில் இது மிகவும் தெளிவாகவே தெரிந்தது. கடந்த கோடைகாலத்தில் 1918ல் இதை நாம் பார்த்தோம். உரால் பிரதேசத்தில் அப்போது அவர்கள் சுலபமாக வெற்றிகளை அடைந்து வந்தார்கள். இன்னும் கிராமப்புறத்தில் பாட்டாளி வர்க்க ஆட்சியானது நிறுவப்பட்டிருக்கவில்லை என்பதையும் அதை வெளியிலிருந்து கிராமப்புறத்தின் உள்ளே புகுத்துவது போதுமானதாக இருக்கவில்லை என்பதையும் நாம் கண்டோம். அப்பொழுது தேவைப்பட்டது எதுவென்

ருல் விவசாயிகள் தாங்களே தமது சொந்த அனுபவத்தின் பேரிலும், தங்களது சொந்த அமைப்புப் பணியின் மூலமும், இதே முடிவுகளுக்கு வர வேண்டும் என்பதுதான். மற்றும் இந்தப் பணியானது அளவிடற்கரிய சிரமமுடையதும், மெது வாக இயங்கக் கூடியதும், கடினமானதுமாக இருந்தாலும், அது ஒப்பிட முடியாத அளவுக்குப் பலன்களைப் பொறுத்த மட்டில் நன்மை பயக்கக் கூடியதாக இருந்தது. சோவியத் ஆட்சியின் இரண்டாம் ஆண்டில் இதுதான் நமது பிரதான வெற்றியாகும்.

கல்ச்சாக்கின் மீது நாம் பெற்ற வெற்றியின் இராணுவ முக்கியத்துவம் பற்றி நான் பேசுவதற்கில்லை. ஆனால் விவசாயிகள் போல்ஷிவிக்குகளது ஆட்சியை முதலாளி வர்க்க சர்வாதிகாரிகளது ஆட்சியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் அனுபவத்திற்குள்ளாகாதிருந்தால் இந்த வெற்றியை நாம் அடைந்திருக்க முடியாது என்பதை நான் கூறுகிறேன். இருப்பினும் சர்வாதிகாரிகள் ஒரு கூட்டணியுடன் அரசியல் நிர்ணய சபைக்[12] கூட்டத்துடன் துவங்கினார்கள். இந்த அரசாங்கத்தில் அதே சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும், மென்ஷிவிக்குகளும் பங்கேற்றனர். நமது பணியின் ஒவ்வொரு அடியிலும் நேற்றைய மனிதர்களாகிய இவர்களைச் சந்திக்கிறோம். இவர்கள்தான் கூட்டுறவு சங்கங்கள், தொழிற்சங்கங்கள், ஆசிரியர் அமைப்புக்கள் மற்றும் இது போன்ற வெகுஜன அமைப்புக்களைக் கட்டியவர்கள். இப்போது இவை அனைத்தையும் நாம் புனரமைப்பு செய்ய வேண்டியுள்ளது. இவர்களோடு அணி சேர்ந்துதான் கல்ச்சாக் துவங்கினார். கேரென்ஸ்கி சோதனையினால் திருப்தியுறாது இவர்களோடு அணி சேர்ந்தார். அவர்கள் இரண்டாவது சோதனை ஒன்றை நிறைவேற்றுகிறார்கள். மையத்திலிருந்து மிகவும் தொலைவில் இருந்த எல்லைப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களைப் போல்ஷிவிக்குகளுக்கு எதிராக எழும்படிச் செய்வதற்கு இச்சோதனை வேண்டி இருந்தது. சைபீரியாவில் இருந்த விவசாயிகளுக்கு ருஷ்யாவின் ஏனைய பகுதிகளில் இருந்த விவசாயிகள் புரட்சியினால் அடைந்தவற்றை அளிக்க முடியவில்லை. சைபீரியாவில் விவசாயிகள் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பெறவில்லை. ஏனெனில் அவைகள் அங்கே இருக்கவில்லை. அதனால்தான் அவர்கள் வெண்காவலர் படையிடத்து

நம்பிக்கை கொள்வது இலகுவாக இருந்தது. அன்டான்டு நாடுகளின்[7] முழு இராணுவப் பலமும் போரில் ஒரு சிறிதும் சேதமடையாத ஏகாதிபத்திய இராணுவமும் அதாவது ஜப்பானிய இராணுவமும் போராட்டத்திற்குள் ஈடுபடுத்தப்பட்டன. கல்ச்சாக்கிற்கு உதவி செய்யும் வகையில் கோடிக்கணக்கான ரூபிள்கள் செலவிடப்பட்டன என்பதையும் அவரை ஆதரிப்பதற்காக அனைத்து வழி முறைகளும் கையாளப்பட்டன என்பதையும் நாம் அறிவோம். அவரது பக்கம் இல்லாதது ஏதாவதுண்டா? அவரிடம் எல்லாம் இருந்தது. உலக வல்லரசுகள் வைத்திருந்தவை அனைத்தும் அவர்வசம் இருந்தன. இது மட்டுமல்லாமல் விவசாயி மக்களும் தொழிற்துறைப் பாட்டாளிகளே அநேகமாக இல்லாத மாபெரும் பிரதேசமும் அவருக்கு இருந்தன. இவை அனைத்தின் அழிவும் எதனால் ஏற்பட்டது? ஏனெனில் தொழிலாளர்கள், படைவீரர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோரின் அனுபவம், போல்ஷிவிக்குகளின் முன்னறிவிப்பு சரியே என்பதை மறுபடியும் தெளிவாகக் காட்டியது. சமுதாய சக்திகளின் பரஸ்பர உறவுகளைப் பற்றிய அவர்களது மதிப்பீடு சரியாகவே இருந்தது. தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்கு இடையிலான உடன்பாடு சிரமத்தின் பேரில்தான் ஏற்பட முடியுமென்றாலும் அது எவ்வகையில் பார்த்தாலும் முதலாளிகளுக்கு எதிரான ஈடிணையற்ற தோற்கடிக்கப்பட முடியாத ஒற்றுமையாகவே இருந்தது.

தோழர்களே, விஞ்ஞானம் என்ற சொல்லை இங்கு உபயோகிக்கக் கூடுமானால் இது விஞ்ஞானமே. இந்த அனுபவம் தான் மிகவும் கடினமானது. இந்த அனுபவம் ஒவ்வொன்றையும் கருத்தில் எடுத்துக் கொள்கிறது. ஒவ்வொன்றையும் உறுதிப்படுத்துகிறது—அதுதான் கம்யூனிச அனுபவம். விவசாயிகள் உணர்வு பூர்வமான ஒரு முடிவுக்கு வந்தால் மட்டுமே நாம் கம்யூனிசத்தை நிறுவிட முடியும். இதை நாம் சாதித்திட விவசாயிகளோடு நாம் அணி சேர்ந்தாக வேண்டும். கல்ச்சாக் அனுபவத்தின் மூலம் இது பற்றி நாம் நிச்சயமாகத் தெரிந்து கொண்டோம். கல்ச்சாக் கலகம் இரத்தக் கொலைக்காண்டத்தின் அனுபவம் ஆகும், ஆனால் அது நமது குற்றமல்ல.

இப்போது நம்மைத் தாக்கி வரும் இரண்டாவது கொடு

மை பற்றி நீங்கள் எல்லாம் நன்றாகவே அறிவீர்கள். வேறு எந்த ஒரு நாட்டையும் விட நமது நாட்டைப் பசியும் குளிரும் மிகக் கொடுமையாகப் பாதித்துள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்கான பழியைக் கம்யூனிசத்தின் தலை மீது சாட்டுகிறார்கள் என்று அறிவீர்கள். ஆனால் கம்யூனிசத்திற்கும் இதற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதையும் நீங்கள் நன்றாக அறிவீர்கள். எல்லா நாடுகளிலும் பசியும் குளிரும் பரவலாகிக் கொண்டும் பெருகிக் கொண்டும் வருவதை நாம் பார்க்கிறோம். வெகு விரைவில் ருஷ்யாவில் உள்ள இந்த நிலைமை கம்யூனிசத்தால் ஏற்பட்டதல்ல என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்வார்கள். உலகம் தழுவிய நாலாண்டுகாலப் போர்தான் இதற்குக் காரணம் என்று உணர்ந்து கொள்வார்கள். நாம் இப்போது படும் அவதியினைக் கொண்டு வந்தது இப்போர்தான். இதுதான் பசியையும் குளிரையும் கொண்டு வந்தது. ஆனால் விரைவில் இந்தச் சூழலிலிருந்து விடுபட்டு விடுவோம் என்று நாம் நம்புகிறோம். தொழிலாளர்கள் உழைக்க வேண்டும் என்பது மட்டுமே உள்ள பிரச்சினையாகும். அவர்கள் தங்களுக்கென்று உழைத்திட வேண்டுமேயல்லாமல் நான்காண்டு காலமாக அவர்களது கழுத்தை அறுத்து வந்தவர்களுக்காக அல்ல. பசிக்கும், குளிருக்கும் எதிரான போராட்டத்தைப் பொறுத்த மட்டில் அது எல்லா இடங்களிலும் நடந்தேறி வருகிறது. வல்லமை மிக்க நாடுகள் கூட இப்போது இந்தக் கொடுமைக்கு உட்பட்டுள்ளன.

பல இலட்சம் விவசாயிகளிடமிருந்து தானியத்தைச் சேகரிக்க அரசுக் கொள்முதல் முறையைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆனால் முதலாளிகள் செய்த வழியில் நாம் இதைச் செய்யவில்லை. அவர்கள் லாப வேட்டைக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு செயல்பட்டார்கள். இந்தப் பிரச்சினையில் நாம் தொழிலாளர்களுடன் சேர்ந்து கொண்டு இலாபவேட்டைக்காரருக்கு எதிராகச் செயல்பட்டோம். இணங்க வைத்து ஆதரவு பெறும் முறையை நாம் பயன்படுத்தினோம். நாம் விவசாயிகளிடம் போய் நாங்கள் செய்வதெல்லாம் உங்களையும் தொழிலாளர்களையும் ஆதரிப்பதற்காகவே என்று கூறினோம். உபரி தானியம் வைத்திருந்து அதை நம்மிடம் நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கொடுத்த விவ

சாயி நமது தோழர். இதற்கு மாறாக இவ்வாறு செய்யாதவர் நமது விரோதி, ஒரு குற்றவாளி, சரண்டல்காரர் மற்றும் ஓர் இலாபவேட்டைக்காரர். எனவே அவரோடு நமக்கு சொந்த பந்தம் எதுவும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட தொரு பிரசாரத்துடன் விவசாயி மக்களை நாம் சந்தித்தோம். இந்தப் பிரசாரம் அதிகமதிகமாக விவசாயிகளை நம் பால் கவர்ந்து இழுத்தது. இத்துறையில் நாம் திட்டமான வெற்றி களை அடைந்துள்ளோம். கடந்த ஆண்டில் ஆகஸ்டு மாதத் திற்கும் அக்டோபர் மாதத்திற்கும் இடையில் நாம் 37 மில் லியன் பூடு நிறையுள்ள தானியத்தைக் கொள்முதல் செய் தோம். ஆனால் இந்த ஆண்டில் 45 மில்லியன் பூடு நிறையுள்ள தானியத்தைக் கொள்முதல் செய்தோம். இதையுங்கூட அசாதாரணமானதும் கவனம் மிக்கதுமான பரிசோதனை ஏது மின்றிச் செய்தோம். இதில் ஒரு முன்னேற்றம் இருப்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். இது மெதுவானதாக இருந்தா லும் நிச்சயமான ஒன்று. தெனீக்கின் செழிப்பான நமது பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொண்டுள்ளதால் ஏற்படும் பற்றாக்குறையைக் கணக்கில் எடுத்துக் கொண்ட போதி லும், நமது கொள்முதல் திட்டத்தை நிறைவேற்றிடும் அடை யாளங்கள் காணப்படுகின்றன. அரசாங்க விலைகளில் பங்கீடு செய்யும் திட்டம் நிறைவேற்றப்படும் அடையாளங்கள் தென் படுகின்றன. இந்த விஷயத்திலும் கூட நமது நிர்வாக பொறி யமைவு ஒருவகையில் உருவாகி விட்டது எனலாம். மேலும் நாம் இப்போது சோஷலிசப் பாதையை மேற்கொண்டுள் ளோம்.

இப்போது எரிபொருள் தட்டுப்பாடு எனும் நெருக் கடியைச் சமாளிக்க வேண்டியுள்ளது. தானியப் பிரச்சினை இப் போது அவ்வளவு கடுமையாக இல்லை. இப்போது நம்மிடத் தில் தானியமுண்டு, ஆனால் எரிபொருள் நம்மிடம் இல்லை என்பது நம் நிலை. தெனீக்கின் நமது நிலக்கரிச் சுரங்கங்களைக் கைப்பற்றிக் கொண்டு விட்டான். இந்த நிலக்கரிச் சுரங்கங் களை இழந்து விட்டது முன் எப்போதும் கண்டிராத இடர்ப் பாடுகளைக் கொண்டு வந்து விட்டது. ஆகவே இந்த விஷயத் தில் நாம் தானியத்தின் விஷயத்தில் என்ன செய்தோமோ அதையே இங்கும் செய்து கொண்டிருக்கிறோம். முன்பு செய் ததைப் போலவே இப்போதும் நாம் தொழிலாளர்களுக்கு

வேண்டுகோள் விடுத்துள்ளோம். நமது உணவு வழங்கு முறையை நாம் சீரமைத்தது போலவே, நமது எரிபொருள் வழங்கு முறையையும் நாள்தோறும் சீரமைத்து வருகிறோம். இவ்வாறு சீரமைக்கப்பட்ட பின்பு நமது உணவு வழங்கு முறை உறுதி பெற்று சிறந்த பலனைக் கொடுத்ததைப் போலவே இங்கும் ஏற்பாடு செய்து வருகிறோம். நாம் நமது தொழிலாளர்களிடம் இந்த அபாயமோ அல்லது வேறுவகை அபாயமோ நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டுகிறோம். அது எத்திசையிலிருந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது என்றும் அதற்கு எந்தப் பிரதேசத்திலிருந்து புதிய படைகளை நாம் அனுப்ப வேண்டும் என்றும் அவைகளை எங்கே அனுப்ப வேண்டும் என்றும் தொழிலாளர்களுக்கு அறிவிக்கிறோம். கடந்த ஆண்டு தானியப் பிரச்சினையில் நாம் வெற்றி கண்டது போலவே இப்போது எரிபொருள் தட்டுப்பாட்டுச் சிக்கலிலும் வெற்றி பெற்றிடுவோம் என்பது திண்ணம்.

நமது பணி பற்றிய சுருக்க சாராம்சத்தை மாத்திரம் இப்போது எடுத்துக்கூறி அமைய என்னை அனுமதியுங்கள். முடிவாக, நமது சர்வதேச நிலைமை எவ்வாறு சீரடைந்து வருகிறது என்பதைப் பற்றிச் சில வார்த்தைகள் மட்டுமே பேசும் உரிமையை எடுத்துக் கொள்கிறேன். நாம் பின்பற்றி வந்த பாதையை நாங்கள் ஆய்வு செய்து பார்த்து விட்டோம். அதன் முடிவுகள் காட்டுகின்றன: நமது பாதை சரியானது பொருத்தமானது என்று. நாம் ஆட்சியதிகாரத்தை 1917ல் ஏற்றுக் கொண்ட போது நாம் தன்னந்தனியாக இருந்தோம். 1917ல் எல்லா நாடுகளிலும் போல்ஷிவிசம் வேரூன்ற முடியாது என்று சொல்லப்பட்டது. அதே நாடுகளில் இன்றைக்கு வலிமை மிக்க கம்யூனிஸ்டு இயக்கங்கள் தோன்றியுள்ளன. நாம் ஆட்சியதிகாரத்தை வென்ற இரண்டாவது வருடத்தில், மூன்றும் அகிலத்தை[18] நிறுவிய ஆறுமாதங்களுக்குப் பிறகு, அதாவது கம்யூனிஸ்டு அகிலத்தை நிறுவிய பிறகு, அனைத்து நாடுகளிலும் இந்த அகிலமே தொழிலாளர்கள் இயக்கத்தின் பிரதான சக்தியாக உண்மையில் மாறியுள்ளது. இந்த விஷயத்தில் நாம் நடத்திய சோதனை மிகச் சிறந்ததும், இணையற்றதும், மிக விரைவானதுமான பலன்களை அளித்துள்ளது. ஐரோப்பாவில் விடுதலை இயக்கம் நமது நாட்டில்

நடந்தேறியதைப் போல நடக்கவில்லை என்பது உண்மையே. ஆனால் நமது இரண்டு ஆண்டுகாலப் போராட்டத்தை நினைவு கூருவீர்களானால், உக்ரேனில் கூட, ஓரளவுக்கு மகாருஷ்யப் பகுதிகளில் தனிப்பட்ட மக்களினங்கள் வாழும் பகுதிகளான, கசாக் சைபீரியாப் பிரதேசம், உதாரணமாக உரால் பிரதேசம் ஆகிய இடங்களில் எல்லாம் பீட்டர்ஸ்பார்கிலும், மாஸ்கோவிலும்—ருஷ்யாவின் மையப் பகுதியிலும்—நடந்ததைப் போல விடுதலைக்கான இயக்கம் அதே விரைவுடனும் அதே வழியிலும் நடைபெறவில்லை. ஐரோப்பாவில் அந்த இயக்கம் மிகவும் மெள்ள முன்னேறி வருவதைப் பார்த்து நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது தெளிவு. ஏனெனில் இங்கே தேசியவெறி மற்றும் ஏகாதிபத்தியத்தின் பெரிய நிர்ப்பந்தத்தைச் சமாளிக்க வேண்டும். இருந்தபோதிலும் இந்த இயக்கமானது திசை திரும்பிடாமல் போல்ஷிவிக்குகள் காட்டிய அதே பாதையில் முன்னேறி வருகிறது. எங்கணும் இந்த இயக்கத்தின் முன்னேற்றத்தை நாம் காண முடிகிறது. மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பிரதிநிதிகள் எல்லா இடங்களிலும் மூன்றும் அகிலத்தின் பிரதிநிதிகளுக்கு வழி விட்டு வருகிறார்கள். இந்தத் தலைவர்கள் வீழ்ச்சியுற்று எல்லா இடங்களிலும் கம்யூனிஸ்டு இயக்கம் எழுச்சி பெற்றுள்ளது. அதனால் இரண்டாண்டு கால சோவியத் ஆட்சிக்குப் பிறகு, சான்றாக விளங்கும் மெய்நடப்புக்களின் பேரில் நாம் இப்போது சொல்லலாம், அப்படிச் சொல்ல நமக்கு பூரண உரிமையுண்டு. நாம் சொல்ல விழைவது என்னவென்றால், ருஷ்ய அரசின் அளவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலும் கூட நமக்கு இப்போது அரசியல் விழிப்புணர்ச்சியுடையவர்கள் அனைவரின் ஆதரவு உண்டு. மக்கள் திரளில் புரட்சிகரமாயுள்ளவர்கள் அனைவரும் நம் பக்கம் உள்ளார்கள். புரட்சிகர உலகு நம்பால் உள்ளது. நாம் பட்ட துன்பங்களையெல்லாம் அனுபவித்து வெற்றி கண்டுவிட்ட பிறகு இப்போது இடர்ப்பாடுகள் எவ்விதத்திலும் எங்களை இனி அச்சுறுத்திட முடியாது என்று நாம் சொல்லக் கூடும். இந்த எல்லா இடர்ப்பாடுகளையும் நாங்கள் சமாளித்திடுவோம். பிறகு அவைகளை எதிர்த்து வெற்றி கொள்வோம் என்பதைச் சொல்லக் கூடும். (பலத்த கரவொலி.)

நூல் திரட்டு,
தொகுதி 39,
பக்கங்கள் 292-303

1920

தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத், ரு.க.க.(போ.)இன் மாஸ்கோ கமிட்டி மற்றும் மாஸ்கோ நகரத் தொழிற்சங்கங்களின் கவுன்சில் ஆகியவற்றின் வெற்றிக்கொண்டாட்ட பிளீனம் கூட்டத்தில் அக்டோபர் புரட்சியின் மூன்றும் ஆண்டுவிழாவை ஒட்டி ஆற்றிய உரை

நவம்பர் 6

# தொழிலாளர்கள், விவசாயிக்ள் மற்றும் செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிக்ளின் மாஸ்கோ சோவியத், ருகக (போ.)இன் மாஸ்கோ க்மிட்டி மற்றும் மாஸ்கோ நகரத் தொழிற்சங்கங்க்ளின் கவுன்சில் ஆகியவற்றின் வெற்றிக்கொண்டாட்ட பிளீனம் கூட்டத்தில் அக்டோபர் புரட்சியின் மூன்றும் ஆண்டுவிழாவை ஒட்டி ஆற்றிய உரை

## நவம்பர் 6, 1920

*(நீண்ட கரவொலி.)* தோழர்களே, நமது பாட்டாளி வர்க்கப் போராட்டகால நாட்களையும், நமது புரட்சிகர சாதனைகளையும் நினைவு கூர்வதற்காக இன்று நாம் இங்கு கூடியுள்ளோம். இன்றைக்கு நமது வெற்றியை விழா வாகக் கொண்டாடலாம். வாழ்க்கையின் ஈடு இணையற்ற இடர்ப்பாடுகளும் மற்றும் நமது எதிரிகளின் ஈடிணையற்ற முயற்சிகளும் இருந்தபோதிலும், நாம் வெற்றி பெற்று விட்டோம். நாம் மூன்றுண்டுகளாகவே வெற்றி அடைந்து வரு கிறோம். இது மகத்தான வெற்றி. இப்படிப்பட்ட வெற்றி சாத்தியம் என்று முன்பு நம்மில் எவரும் நம்பியிருக்க மாட் டார்கள். மூன்றுண்டுகளுக்கு முன்பு நாம் ஸ்மோல்னி மாளி கையில்[19] இருந்த போது, பெத்ரோகிராத் தொழிலாளர் களது எழுச்சி நாம் எதிர்பார்த்ததை விட ஒருமுகப்பட்ட தாக இருந்தது என்பதைக் கண்டோம். ஆனல் அந்த இர வில், இப்போது நிலவும் இப்படிப்பட்டதொரு வெற்றி மூன்று ஆண்டுகளுக்கப்புறம் சாத்தியம் என்று எவராவது சொல்லி யிருந்தால் ஒருவரும் ஏன், வெற்றியில் அளவு கடந்த நம்பிக் கையுள்ளவர் கூட, அதை நம்பியிருக்க மாட்டார். நமது இலட்சியம் உலகமெங்கிலும் ஏற்றுக் கொள்ளப்படும் போது தான் நமது வெற்றி நிலையுறுதியுள்ளதாக இருக்கும் என்பதை நாம் அப்போது அறிந்திருந்தோம். ஆகவே நாம் நமது இலட் சியத்திற்காக உழைத்திட ஆரம்பித்த போது நாம் உலகப் புரட்சியின் மீது முழுக் கவனத்தையும் வைத்திருந்தோம். அது வரை நாம் வாழ்ந்து வந்த வாழ்க்கை முறைகள் அனைத்தை யும் ஏகாதிபத்தியப் போர் மாற்றிப் போட்டது. மற்றும்

நாம் எதிர்பார்த்ததை விட அதிக காலம் நீடித்திருந்த இந்தப் போராட்டமானது எவ்விதமான வடிவங்களை எடுத் திடும் என்பதை அறிந்து கொள்ள நமக்கு வழியேதும் இருக்க வில்லை. இப்போது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு நாம் முன்பு இருந்ததைக் காட்டிலும் அளவிடற்கரிய அதிக வலுவுடைய வர்களாக இருக்கிறோம் என்பது உண்மை. ஆனால் உலக முத லாளி வர்க்கமும் இன்னும் மிகுந்த வலுவுடையதாகவே உள் ளது. அது நம்மை விட அதிக வலுவுடையதாக இருந்தபோதி லும், நாம் வெற்றி பெற்று விட்டோம் என்று நாம் சொல்லக் கூடும். இந்த முதலாளி வர்க்கத்தை சிதைவுறச் செய்ய நமது சக்திகளனைத்தையும் நாம் நெறியாண்மை செய்துள்ளோம். இந்த விஷயத்தில் நமது பணிக்கு வெற்றி கிட்டாது போக வில்லை. நாம் உலகப் புரட்சியின் மீது நமது முழு நம்பிக்கை யையும் வைத்திருந்ததுதான் இதற்குக் காரணமாகும். அவ் வாறு செய்தது முழுக்க முழுக்க சரியானதுதான் என்பதற்கு ஐயப்பாடேதுமில்லை. அழிவை நோக்கி உலகம் முழுவதும் போய்க் கொண்டிருந்ததை நாம் அறிவோம். ஏகாதிபத்தியப் போருக்குப் பின் பழைய வழியில் காரியங்கள் நடக்க முடி யாது என்பதை நாம் அறிந்திருந்தோம். ஏனெனில் ஏகாதிபத் தியப் போரானது பழைய பொருளாதார மற்றும் சட்ட உறவுகள் அனைத்தையும் அது வரை பழைய அமைப்பு எதை அடித்தளமாக்கி இருந்ததோ அந்த வாழ்க்கை நிலைமைகள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக அழித்து விட்டது. நமது பிரச்சாரம் செய்ததை விட ஆயிரம் மடங்கு ஏகாதிபத்தியப் போர் ஓர் அரசியல் தகர்வுக்கு வழி கோலுவதற்குச் செயல் பட்டுள்ள நேரத்தில் தனி ஒரு நாட்டிலாவது பாட்டாளி வர்க்கம் போராட்டத்தில் இறங்கி அது வெற்றியில் முடி வடைந்து இருக்குமானால், அது உலக முதலாளி வர்க்கத்தின் சக்திகளை அரித்தழிப்பதற்குப் போதுமானதாக இருக்கும்.

இப்போது சர்வதேச நிலைமையை ஒரு கண்ணோட்டம் விட்டுப் பார்த்தோமானால் — சர்வதேசக் கண்ணோட்டத் திலிருந்துதான் நாம் விவகாரங்களைக் கணிக்கிறோம் என்று எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளோம்—சோவியத் ருஷ்யா வுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போர்களது வரலாற்றைப் பரிசீலனை செய்து பார்ப்போமானால், நமது எல்லையிலுள்ள அனேகமாக எல்லா சிறிய முதலாளித்துவ நாடுகளுடனும்,

போல்ஷிவிக்குகள் அடக்குமுறை செய்யப்பட்டு தூக்கிலிடப் பட்டு வரும் நாடுகளுடனும், நாம் சமாதானமாகவே இருந்து வருகிறோம் என்பதைப் பார்க்கலாம். அன்டான்டு நாடுக ளுக்கு[7] இந்நாடுகள் முற்றிலும் அடிமைகளாயும், வேலைக் காரர்களாயும் இருக்கின்றன. மற்றும் இவை சோவியத் ருஷ் யாவை அழித்து ஒழித்திட விரும்புகின்றன. இருப்பினும் அவைகளுடன் நாம் சமாதான உடன்படிக்கை செய்து கொண் டுள்ளோம்—இது அன்டான்டு நாடுகளின் விருப்பத்திற்கு மாறானது. இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் அமெரிக்கா போன்ற மூன்று வல்லமை மிக்க வல்லரசு நாடுகள் நமக்கு எதிராக ஒன்றுபட முடியவில்லை. அவைகளது கூட்டு இராணு வங்களைக் கொண்டு துவக்கிய போரில் அவைகள் தோற் கடிக்கப்பட்டன. இது எவ்வாறு நேர்ந்தது? காரணம் இந்நாடு களில் பொருளாதாரங்களும், வாழ்க்கையும் அரித்தழிக்கப் பட்டன. ஏனெனில் இவை அழியும் தறுவாயில் உள்ளவை. பழைய வழியில் அவற்றால் தொடர்ந்து வாழ்ந்து கொண் டிருக்க முடியாது. ஏனெனில் அவை எந்த ஒரு வர்க்கத்தின் சித்தப்படி வாழ்கின்றனவோ—அந்த முதலாளி வர்க்கம் சீரழிந்து போய்விட்டது. இந்த வர்க்கம் ஒரு கோடிப் பேர் களை ஏகாதிபத்தியப் போருக்குள் இழுத்துவிட்டு அவர்களை அழிவுக்குட்படுத்தியது. என்ன நோக்கத்திற்காக? ஒரு சில முதலாளிகளுக்கு இடையில் உலகைப் பங்கிட்டுக் கொள் வதற்காகத்தான். இருப்பினும் அவ்வாறு செய்வதன் மூலம் அது தனது பலத்தின் அழிவுக்கு வந்து விட்டது. மற்றும் தனது வாழ்வின் அடிப்படைகளையும் அரித்தழித்துக் கொண்டு விட்டது. இராணுவ முறையில் அது எவ்வளவுதான் வலிமை யுடையதாகத் தோன்றினாலும், உள்ளார்ந்த நிலையில் அது சக்தியற்றது. இப்போது இது போல்ஷிவிக் உணர்விலான ஒரு பிரகடனமல்ல. ஆனால் பேரழிவால் நிரூபித்துக் காட்டப் பட்ட மெய்நடப்பாகும். இந்த வர்க்கம் எவ்வளவுதான் செல்வம் படைத்ததாகவும் வலிமையுடையதாகவும் இருந்த போதிலும் அதன் கதி அதோ கதிதான். அதே சமயத்தில் வெற்றியை நோக்கி நடைபோடும் வர்க்கம் நம்முடையது. நமது விரோதிகளைக் காட்டிலும் நாம் பலவீனமாக இருந்த போதிலும், நாம் மூன்று ஆண்டுகளாக வெற்றி அடைந்து வருகிறோம். சற்றும் வீண் பெருமை இன்றி நாம் வெற்றி

யடைந்து விட்டோம் என்று சொல்ல நமக்கு உரிமையுண்டு.

இதைக் கூறும் போது இந்த விவகாரத்தின் மற்ெருரு அம்சத்தை மறந்திடக் கூடாது. அரைவாசி அளவுக்கே நாம் வெற்றி பெற்றிருக்கிரும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. நம்மை விட வலிமையுடைய, மேலும் வெளியேறி ஓடி விட்ட நமது சுரண்டலாளர்களான நிலப் பிரபுக்கள் மற்றும் முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ள அரசுகளுக்கு எதிராக நாம் தாக்குப்பிடிக்க முடிந்தது என்பதால் நாம் வெற்றி பெற்றுள்ளோம். நம்முடைய லட்சியம் சர்வதேச லட்சியம் என்பதை நாம் எப்போதும் அறிந்து வைத்துள்ளோம் என்பதோடு இதை மறந்திடவும் மாட்டோம். மிகவும் செல்வ வளம் படைத்த, மிக உச்சகட்ட நாகரிகம் படைத்த நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளிலும் புரட்சி நடைபெறும் வரை நமது வெற்றி அரைவாசி வெற்றி அல்லது ஒருவேளை அதற்கும் குறைவான வெற்றியேதான். விராங்கெலுக்கு எதிரான சண்டையில் இப்போதைக்கு நாம் வெற்றி பெற்று வருகிரும். நமது எதிர்பார்ப்புக்களை உண்மையாக்கும் செய்திகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிரும்.[20] கிரிமியாவை அடுத்த சில தினங்களுக்குள் கைப்பற்றுவதில் நாம் வெற்றி பெறவில்லையாளுல் பல நாட்களுக்குப் பிறகு அதைச் சாதித்திடுவோம் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உண்டு. ஆனுல் உலக முதலாளி வர்க்கம் நமக்கு எதிராக எடுத்துக் கொள்ளும் முயற்சிகளில் இது தான் கடைசியானது என்று நாம் உறுதி கூறிட முடியாது. அதற்கு மாருக, இந்த முயற்சியானது வசந்த காலத்தின் போது திரும்பவும் மேற்கொள்ளப்படும் என்பதாக நம் கைவசமுள்ள சில மெய்விவரங்கள் காட்டுகின்றன. வெற்றிக்குரிய வாய்ப்புகள் அவர்களுக்கு மிகவும் சொற்பமே என்பதை நாம் அறிவோம். மற்ற எந்த நாட்டின் இராணுவத்தை விடவும் நமது இராணுவம் அதிக வலிமையுடையது என்பதை நாம் அறிவோம். இருந்தபோதிலும் நம்மைச் சூழ்ந்துள்ள அபாயம் இன்னும் நீங்கிடவில்லை. அது இன்னும் இருக்கிறது. ஒன்று அல்லது பல முன்னேற்றமடைந்த நாடுகளில் புரட்சி வெற்றி பெறும் வரை அது தொடர்ந்து நீடிக்கும்.

காரியங்கள் அத்திசையை நோக்கி முன்னேறி வருகின்றன என்று நாம் அறிவோம். மாஸ்கோவில் இக்கோடை

காலத்தின் போது மூன்றும் அகிலத்தின் இரண்டாவது காங்கிரசை நடத்தினோம் என்பதை நாம் அறிவோம். இது சிறப்பான பங்குப் பணி ஆற்றியது[21]. இதற்கு முன்மாதிரியே கிடையாது. தோழர் ஸினோவியெவ் தனது அறிக்கையைச் சமர்ப்பித்த போது உங்களில் சிலர் அங்கு இருந்திருப்பீர்கள். அதில் ஹால்லேயில் நடந்த ஜெர்மானிய சுயேச்சை வாதிகளது மாநாடு[22] பற்றிய சகல விவரங்களையும் அவர் சொன்னார். புரட்சிக்குரிய வாய்ப்புகள் மிகப் பெரிய அளவில் நிலவும் நாடாகிய ஜெர்மனியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி அவரது தத்ரூப வருணனையை உங்களில் பலர் கேட்டிருக்கக் கூடும். ஆனால் இப்போது அப்படிப்பட்ட மாற்றங்கள் எல்லா நாடுகளிலும் நடந்து வருகின்றன. கம்யூனிசம் எல்லா முன்னணி நாடுகளிலும் வளர்ச்சியும், வலிமையும் பெற்று கட்சிகளை உருவாக்கியுள்ளது. இந்தக் காலகட்டத்தில் ஒரு சில சிறிய நாடுகளில் சர்வதேசப் புரட்சிக் குறிக்கோள் பல தோல்விகளுக்கு உள்ளாகியிருக்கிறது. இங்கெல்லாம் இயக்கத்தை நசுக்குவதற்கு மாபெரும் கொள்ளையர்களிடமிருந்து உதவி வந்திருக்கிறது. உதாரணமாக, பின்லாந்து நாட்டுப் புரட்சியை[23] நசுக்க ஜெர்மனி உதவியிருக்கிறது. அல்லது முதலாளித்துவ ராட்சசர்களான இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஆஸ்திரியா ஆகிய நாடுகள் ஹங்கேரியில் எழுந்த புரட்சியை[24] நசுக்க உதவியுள்ளன. இருப்பினும், இவ்வாறு செய்வதன் மூலம் இவைகள் இவைகளது சொந்த நாடுகளில் புரட்சியின் சக்திகளை ஆயிரம் மடங்கு பெருக்கிக் கொண்டுள்ளன. போராட்டத்தினால் அவை ஏன் பலவீனப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்றால் அதற்குப் பிரதான காரணம் அவற்றின் பின்னணிகள் உறுதியாக இல்லாததுதான். ஏனெனில் எல்லா நாடுகளிலும் தொழிலாளர்களும், விவசாயிகளும் நமக்கு எதிராகச் சண்டையிட விரும்பவில்லை. மற்றும் வீரம் செறிந்த கப்பற்படையினர் நமது நாட்டில்—கிரோன்ஷ்டாதில்—மட்டுமல்லாமல், ஏனைய நாடுகளிலும் கூட முன்னணியில் இருக்கிறார்கள். பிரான்ஸ் நாடெங்கிலும் கருங்கடலில் பணியாற்றிய கப்பற்படைவீரர்களின் பெயர்கள் ருஷ்யப் புரட்சியின் நினைவுகளோடு சம்பந்தப்பட்டுள்ளன. பிரான்சில் இன்று கடுங்காவல் சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறவர்கள் கருங்கடலில் கலகம் செய்தவர்கள் என்று பிரெஞ்சுத்

தொழிலாளர்கள் அறிவார்கள். இவர்கள் ருஷ்யத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளைக் கொலை செய்ய மறுத்திட்டவர்கள்.[25] அதனால்தான் அன்டான்டு கூட்டு வலுக் குறைந்து இருக்கிறது. அதனால்தான் சர்வதேச அரங்கில் நமது நிலை உறுதியானது என்று நம்பிக்கையுடன் நாம் கூறுகிறோம்.

இருந்தபோதிலும், நமது வெற்றி இன்னும் பூர்த்தியாகவில்லை, தோழர்களே, பாதிக்கும் குறைவாகவே நாம் வெற்றி பெற்றுள்ளோம். பிரம்மாண்டமான வெற்றியை ருஷ்யத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளது தியாகத்தாலும் உத்வேகத்தாலும் பெற்றுள்ளோம் என்பது உண்மையே. ஜாரிசத்திற்கு எதிரான போராட்டத்தில், தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்களை ஆதரிக்காத ஒரு காலகட்டத்தில் ஈடுபட்டு, தங்கள் இன்னுயிர் ஈந்திட்ட இப்படிப்பட்ட தனிப்பட்ட வீரர்களை மட்டும் அன்றி மற்ற வீரர்களையும் ருஷ்யா உருவாக்கிடும் என்று நாம் எடுத்துக் காட்ட முடிந்துள்ளது. அதுவும் நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான வீரர்களை ருஷ்யா மக்கள் திரளின் மத்தியில் இருந்து உருவாக்கும் என்பது உண்மையாயிற்று. இது நடந்தேறும் என்றும் அப்போது முதலாளித்துவம் நிச்சயம் தோல்வியுறும் என்றும் நாம் கூறினோம். நமது வெற்றியின் பிரதான காரணம், அதாவது அதன் பிரதான ஆதாரம் நமது செஞ்சேனை வீரர்களும் தொழிலாளர்களும் விவசாயிகளும் காட்டிய வீரம், தியாகம், மற்றும் ஈடு இணையற்ற விடா உறுதிதான். செஞ்சேனை வீரர்கள் போர் முனைகளில் தங்களது இன்னுயிர்களை ஈந்தனர். தொழிலாளர்களும், விவசாயிகளும் பெரிதும் துன்புற்றார்கள். குறிப்பாக ஆலைத் தொழிலாளர்கள் பெரிதும் துன்புற்றார்கள். முதலாளித்துவ அடிமைத்தனத்தின் ஆரம்ப ஆண்டுகளில் பட்ட அவதிகளை விட அதிகமாக இத்தொழிலாளர்கள் கடந்த மூன்றாண்டுகளில் துன்புற்றார்கள். குளிரையும், பசியையும், துன்பத்தையும் அவர்கள் சகித்தார்கள் — இவையனைத்தையும் ஆட்சியதிகாரத்தைத் தொடர்ந்து தம்வசம் வைத்திருப்பதற்காகவே ஏற்றனர். இந்த விடா உறுதி மற்றும் இந்த வீரத்தின் மூலம் அவர்கள் போரிடும் படைகள் மத்தியில் நிலவியதான வலிமை படைத்த ஒரே பின்னணிப்படை என்று நிரூபித்துள்ள ஒரு பின்னணிப் படையினை உருவாக்கியுள்ளனர். அதனால்தான் நாம் வலு

வோடும், உறுதியாகவும் இருக்கிறோம். அதே சமயத்தில் அன்டான்டு கூட்டு திட்டமாக நமது கண் முன்பாகவே சிதைவுற்று வருகிறது.

இருந்தபோதிலும், இந்த ஊக்கம், உற்சாகம் மற்றும் வீரத்துடன் மட்டும் புரட்சிக் குறிக்கோள் முழுமை பெற்றிட முடியாது, பூரண வெற்றிக்கு முன்னேற முடியாது. நம் மீது மோதி நமது மென்னியை நெரித்திட முயன்ற விரோதியைத் தூக்கி ஏறிய இந்தப் பண்புகள் போதுமானவையாக இருந்தன; இரத்தம் சிந்தும் போர் ஒன்றில் வெற்றி அடைவதற்கு அவை போதுமானவையாக இருந்தன. ஆனல் இறுதி இலட்சியத்தை அடைவதற்கு இவை போதாது. இவை போதாது இருப்பதற்குக் காரணம் நாம் இப்போது நமது பணியின் இரண்டாவது பகுதியை எதிரிடுகிறோம். இது மிக முக்கியமானதும், மிகச் சிரமமானதுமான பணியாகும். நமது இன்றைய வெற்றி விழாவும், நாம் வெற்றி பெறுவோம் என்ற நமது நம்பிக்கையும் இந்தப் பணியின் இரண்டாம் பகுதியிலும் அதே போன்ற உறுதியான வெற்றியினைப் பெறுவதற்கான தன்மையினை நமக்கு ஊட்ட வேண்டும். வெறும் ஊக்கமும், தொழிலாளர் மற்றும் விவசாயிகள் நமது பணியின் இரண்டாம் பகுதியை நிறைவேற்ற மரணத்தை எதிர் கொள்ளவும் தயாராக இருப்பது ஆகியவை மட்டும் போதாது. ஏனெனில் இந்த இரண்டாம் பாதிப் பணி மிகவும் கடினமான ஆக்க பூர்வமானதும், படைப்பு ரீதியானதுமான பணியாகும். முதலாளித்துவத்திடமிருந்து நாம் பரம்பரை சொத்தாக பெற்றது அழிந்து பட்ட கலாசாரம் மட்டுமல்ல, நொறுங்கிப் போன ஆலைகள் மட்டுமல்ல, விரக்தி கொண்ட அறிவுஜீவிகளை மட்டுமல்ல, பிளவுற்றுக்கிடக்கும் பின்தங்கிய தனிப்பட்ட உரிமையாளர் திரளையும் நாம் பரம்பரைச் சொத்தாக அடைந்தோம், அனுபவமின்மை, ஒருமைப்பாட்டுப் பணியில் அறிவோ பழக்கமோ இல்லாமையும் அத்தோடு பழமையை மூடிப் புதைக்க வேண்டும் என்ற அறிவு இல்லாத தன்மையையும் நாம் பரம்பரைச் சொத்தாகப் பெற்றோம்.

இன்றைக்கு நாம் தீர்வு காண வேண்டிய பிரச்சினைகள் இப்படிப்பட்டவை தாம். இன்றைய மனப்பாங்கினை நமது பணியில் இன்னும் நீண்ட காலத்துக்கு பயன்படுத்த வேண்டும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதன் வழி

நமது பொருளாதார வாழ்க்கை சிதறுண்டு போகாமல் தடுத் திட இயலும். பழைய வழிகளுக்கு இனிமேல் நாம் திரும்பிட முடியாது. சுரண்டலாளர்களின் ஆட்சியை வீழ்த்தி விட்ட தன் மூலம் நாம் ஏற்கெனவே பணியின் பெரும் பகுதியைச் சாதித்து விட்டோம். உழைக்கும் ஆடவர் மகளிர் அனைவரை யும் இப்போது ஒற்றுமைப்படுத்திட வேண்டும். அவர்கள் சேர்ந்து பணி புரியச் செய்திட வேண்டும். புதிய பிரதேசங் களுக்குள் நுழையும் நாடுபிடி வீரர்களைப் போல நாம் இன்று இங்கு இருக்கிறோம். மிகக் கடினமான சூழ்நிலையில் நாம் செய லாற்றி வந்த போதிலும், போர் முனையில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். ஓராண்டிற்கு முன்பு இருந்ததை விட இன்று நமது பணி நன்றாக முன்னேறி வருகிறது என்பதைப் பார்க் கிறோம். அனைவருக்கும் போதுமான அளவு உணவை நம்மால் அளிக்க முடியாது என்பது நமக்குத் தெரியும். மற்றும் பசியும், குளிரும் வீடுகளின், குடிசைகளின், குச்சுக்களின் கதவுகளைத் தட்டாது என்று நாம் நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால் நாம் வெற்றி பெற்று விட்டோம் என்று மட்டும் அறிவோம். கடுமையான ஏகாதிபத்திய மற் றும் உள்நாட்டுப் போர்களுக்குப் பிறகு நமது உற்பத்தி சக்தி இப்போது கூட மிகப் பேரளவானது என்று அறிவோம். தொழிலாளர்களையும், விவசாயிகளையும் பட்டினி கிடந்து குளிரில் விறைத்திடுமாறு விட மாட்டோம் என்பது நமக்குத் தெரியும். இருப்பினும், அதைச் செய்திட நம்மிடமுள்ள அனைத்தையும் கணக்கிட்டு அவைகளை முறையாகப் பங்கீடு செய்தாக வேண்டும். அதை எவ்வாறு செய்வதென்று நமக்கு இன்னும் தெரியவில்லை. ஏனெனில் முதலாளித்துவம் ஒவ் வொரு குட்டி உரிமையாளருக்கும் தனது நலனை மட்டுமே கவனித்துக் கொள்ளவும், எப்படிப் பணக்காரன் ஆவது என்று நினைக்கவும், சாத்தியமான அளவு விரைவாக ஒரு பணமூட்டையாவதற்கும் உரிய வழி என்ன என்பதைக் கற்றுக்கொடுத்தது. ஏதாவதொரு திட்டவட்டமான கருத்திற் காகப் பொதுவான போராட்டத்தை எவ்வாறு நடத்துவது என்பதை எவருக்கும் கற்றுத் தரவில்லை. இப்போது நாம் வேறொரு கொள்கையினால் வழி நடத்தப்பட வேண்டும். நமது பணியின் இன்னொரு பகுதி, மேலும் சிரமமான பகுதி நம் எதிரே உள்ளது. இப்போது நம்முள் நிரம்பி வழியும்

ஊக்கம் இன்னொரு ஆண்டுக்கு, ஒருவேளை ஐந்து ஆண்டுகளுக்கும் கூட நீடிக்கக் கூடும். இருந்தபோதிலும் நாம் நடத்த வேண்டிய போராட்டம் சாதாரண அன்றாடப் பணிகள் சம்பந்தப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். நம்மைச் சுற்றிலும் சிறிய பொருளாதாரப் பணிகள் உள்ளன. மேலும், நமது பொருளாதார வாழ்வை இயங்கிடச் செய்யும் சிறு அலகுகள் பழங்காலத்தில் சேவை செய்த அவையே என்று நீங்கள் அறிவீர்கள்—சிறு அதிகாரிகள், சிறு அதிகார வர்க்கத்தினர். இவர்கள் பழைய பாணியில் தன்னலமான வழிகளில் காரியங்களைச் செய்து பழகியவர்கள். இப்படிப் பட்டவைகளுக்கு எதிரான போராட்டம்தான் இன்றைய கட்டத்தின் பணியாகும். இந்தக் கொண்டாட்டங்கள் நடக்கும் போது, இந்த வெற்றிவிழா மனப்பாங்கு நம்முள் நிலவும் இச்சமயத்தில், சோவியத் ஆட்சி நிறுவப்பட்டதன் மூன்றாவது ஆண்டு நிறைவாகிய இன்று உழைப்பு ஊக்கம் நிரம்பியவர்களாக நாம் மாறிட வேண்டும். உழைக்கும் விருப்பாற்றலை, விடா முயற்சியை நாம் பெற்றிட வேண்டும். தொழிலாளர் மற்றும் விவசாயிகள் விரைவாக மீட்சி பெறுவதும் தேசியப் பொருளாதாரத்தின் மீட்சியும் இதன் மீது தான் இப்போது சார்ந்துள்ளன. இந்தப் பணியினை சாதிப்பதில் ஏற்படும் நமது வெற்றி, பழைய காலத்திய இரத்தம் சிந்திய சண்டைகள் அனைத்திலும் பெற்றிட்ட வெற்றியைக் காட்டிலும் அதிகப் பயன் விளைவும் நிலைபேறும் உடையதாக இது விளங்கும். (நீண்ட கரவொலி.)

நூல் திரட்டு,<br>
தொகுதி 42,<br>
பக்கங்கள் 1-6

**1921**

## அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டுவிழா

தற்போதும்
சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும்
தங்க்த்தின் முக்கியத்துவம்

அக்டோபர் புரட்சியின்
நான்க்காம் ஆண்டுவிழாவைக் கொண்டாடுவதற்க்காக
நடைபெற்ற புரோஹரவ் ஜவுளி உற்பத்தி ஆலைத்
தொழிலாளர்க்ளின் கூட்டத்தில்
ஆற்றிய உரை
நவம்பர் 6

அக்டோபர் புரட்சியின் நான்க்காம் ஆண்டுவிழாவைக்
கொண்டாடுவதற்காக நடைபெற்ற
ஹமோவ்னிச்செஸ்கி மாவட்ட
உழைக்கும் ஆடவர் மகளிர் மற்றும் செஞ்சேனை வீரர்,
இளைஞர்களின் கூட்டத்தில்
ஆற்றிய உரை
நவம்பர் 7

# அக்டோபர் புரட்சியின் நான்காவது ஆண்டுவிழா

அக்டோபர் 25 (நவம்பர் 7) இன் நான்காவது ஆண்டு விழா நெருங்கி வருகிறது.

அம்மாபெரும் நாள் நம்மிடமிருந்து எவ்வளவுக்கு எவ்வளவு தொலைவில் செல்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அதிகமாய் நாம் ருஷ்யாவில் நடைபெற்ற பாட்டாளி வர்க்கப் புரட்சியின் முக்கியத்துவத்தைத் தெளிவாகக் கண்ணுறுகிறோம்; அவ்வளவுக்கு அவ்வளவு ஆழமாய் நமது ஒட்டுமொத்தப் பணியின் நடைமுறை அனுபவம் குறித்துச் சிந்தித்துப் பார்க்கிறோம்.

மிகவும் சுருக்கமாய், நிச்சயமாய் சிறிதும் நிறைவு பெருத துல்லியமற்ற உருவரையில், இந்த முக்கியத்துவத்தையும் அனுபவத்தையும் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

ருஷ்யாவில் நடைபெற்ற புரட்சியின் நேரடியான-உடனடிக் குறிக்கோள் முதலாளித்துவ-ஜனநாயகக் குறிக்கோள்தான்; அதாவது மத்திய கால முறைமையின் மீத மிச்சங்களை அழித்து அவற்றை அறவே துடைத்தெறிவதும், இந்தக் காட்டுமிராண்டித்தனத்தை, இந்த அவக்கேட்டை ருஷ்யாவிடமிருந்து களைத்தெறிவதும், நமது நாட்டில் அனைத்துக் கலாசாரத்துக்கும் முன்னேற்றத்துக்கும் அளவு கடந்த தடையாய் அமைந்த இதனை அகற்றிடுவதும்தான்.

நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்துக்கு முன்பு நடைபெற்ற மாபெரும் பிரெஞ்சுப் புரட்சியைக் காட்டிலும் அதிக வைராக்கியத்தோடும், மிக விரைவாகவும் துணிவாகவும் வெற்றிகரமாகவும், மற்றும் மக்கள் திரள் மீது ஏற்பட்ட பலனைக் கொண்டு பார்க்கையில் பன்மடங்கு விரிவாகவும் ஆழமாகவும் இந்தக் களையெடுப்பினை நடத்தினேமென நாம் நியாயமாகவே பெருமை கொள்ளலாம்.

சோஷலிஸ்டு (அதாவது பாட்டாளி வர்க்கப்) புரட்சியிடம் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குள்ள உறவு குறித்து அராஜகவாதிகளும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் (அதாவது, மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்—இவர்களே அந்தச் சர்வதேச சமூக வகையினரது ருஷ்யப் பிரதிநிதிகள்) நம்ப முடியாத அளவுக்கு அபத்தம் பேசி வந்துள்ளனர், இனியும் தொடர்ந்து பேசி வருகின்றனர். இந்த விவகாரத்தில் மார்க்சிய ஆய்வு குறித்து நாங்கள் அளித்த விளக்கமும், முந்திய புரட்சிகளது அனுபவம் குறித்து நாம் செய்த மதிப்பீடும் பிழையற்றவை என்பதைக் கடந்த நான்கு ஆண்டுகள் முழு அளவுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கின்றன. முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை இதன் முன் வேறு யாருமே செய்திராதபடி நாம் நிறைவு பெறச் செய்துள்ளோம். சோஷலிஸ்டுப் புரட்சியை நோக்கி நாம் உணர்வு பூர்வமாகவும் உறுதியாகவும் இம்மியும் பிறழாமலும் முன்னேறிச் செல்கிறோம். இப்புரட்சி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியிலிருந்து எந்தச் சீன மதிலாலும் பிரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது நமக்குத் தெரியும்; நாம் எவ்வளவு தூரம் முன்னேறுவோம், இந்த அளவிடற்கரிய உன்னதமான பணியில் எப்பகுதியை நாம் சித்தி பெறச் செய்வோம், நமது வெற்றிகளைத் திண்மை பெறச் செய்வதில் எந்த அளவுக்கு வெற்றியடைவோம் என்பது (இறுதியாகப் பார்க்குமிடத்து) போராட்டத்தால் மட்டுமே நிர்ணயிக்கப் படும் என்பதும் நமக்குத் தெரியும். காலம் இதனைத் தெளிவு படுத்தும். ஆயினும், சமுதாயத்தைச் சோஷலிச முறையில் மாற்றியமைத்திடுவதில் ஏற்கெனவே பிரம்மாண்ட அளவில்—அழிவுற்று, பலமிழந்து ஓய்ந்து போயுள்ள இந்தப் பிற்பட்ட நாட்டுக்கு இது பிரம்மாண்ட அளவுதான்—சாதிக்கப் பெற்றுள்ளதை இப்போதே காண்கிறோம்.

ஆனால் நமது புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயக உள்ளடக்கம் குறித்துச் சொல்லி முடிப்போம். மார்க்சியவாதிகள் இதன் பொருளைப் புரிந்து கொண்டாக வேண்டும். இதை விளக்கும் பொருட்டு, பளிச்செனத் தெரியும் சில உதாரணங்களை எடுத்துக் கொள்வோம்.

புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயக உள்ளடக்கம் என்பது, நாட்டின் சமூக உறவுகளிலிருந்து (அமைப்பு, நிறுவன

ஏற்பாடுகளிலிருந்து) மத்திய கால வாழ்வினை, பண்ணையடிமை முறையை, நிலப்பிரபுத்துவத்தைக் களைந்து அகற்றுவதைக் குறிப்பதாகும்.

ருஷ்யாவில் 1917 வரை பண்ணையடிமை முறையின் பிரதான வெளிப்பாடுகளாகவும் மீதமிச்சங்களாகவும் இருந்தவை எவை? முடியரசும், சமூகப் படிநிலை அமைப்புகளும், நிலவுடைமை முறையும், நிலச் சாகுபடி உரிமை முறையும், பெண்களின் நிலையும், மதமும், தேசிய ஒடுக்குமுறையும் ஆகியவையே. இந்த ''அவுகியஸ் லாயங்களில்''[26] எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்—அதிகம் முன்னேறிய அரசுகள் யாவும் அவற்றின் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிகளை நூற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் இருநூற்று ஐம்பது ஆண்டுகளுக்கும் அதற்கும் அதிகமான காலத்துக்கும் முன்பு சித்தி பெறச் செய்து கொண்ட போது (இங்கிலாந்தில் 1649), இந்த லாயங்களை அவை பெருமளவுக்குச் சுத்தம் செய்யாமலே விட்டு வைத்திருந்தன என்பதை இடைக்குறிப்பாய் இங்கு குறிப்பிட வேண்டும்—இந்த அவுகியஸ் லாயங்களில் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள், இவற்றை நாம் துப்புரவாய்ச் சுத்தம் செய்திருப்பதைக் காண்பீர்கள். இத்துறையில் முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் மிதவாதிகளும் (காடேட்டுகள்)[27], குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகளும் (மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும்)[10] அவர்கள் அதிகாரத்திலிருந்த எட்டு மாதக் காலத்தில் சாதித்ததைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமாய் நாம் பத்தே வாரங்களில்—அக்டோபர் 25 (நவம்பர் 7)க்கும் அரசியல் நிர்ணயச் சபை கலைக்கப்பட்ட 1918 ஜனவரி 5க்கும்[12] இடையிலான காலத்தில்—சாதித்தோம்.

இந்தத் தொடை நடுங்கிகளும் வாய்வீச்சுக்காரர்களும் தற்பெருமையாளரான நார்ட்ஸீஸ்களும் குட்டி ஹாம்லெட்டுகளும் தமது அட்டைக் கத்திகளை வீசி ஆர்ப்பாட்டம் செய்தனர்—ஆனால் முடியரசைக் கூட அழித்திடவில்லை! யாரும் என்றும் செய்திராத முறையில் நாம் முடியரசு அசுத்தம் அனைத்தையும் அகற்றிச் சுத்தம் செய்தோம். சமூகப் படிநிலை அமைப்புகள் என்னும் அந்தப் பழங்கால அமைப்பில் ஒரு கல்லையும் விட்டு வைக்காமல் நாம் அதனை ஒழித்திட்

டோம் (மிகவும் முன்னேறிய இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளுங்கூட அந்த அமைப்பின் மீதமிச்சங்களை இது நாள் வரை அறவே அகற்றியாகவில்லை!). சமூகப் படிநிலை அமைப்புகளது ஆணி வேர்களாகிய நிலவுடைமை முறையிலான பிரபுத்துவ மீதமிச்சங்களையும் பண்ணையடிமை முறை மீதமிச்சங்களையும் நாம் அடியோடு கெல்லியெறிந்து விட்டோம். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியால் செய்யப்பட்ட நிலச் சீர்திருத்தத்தின் ''இறுதியான'' விளைவு எப்படிப்பட்டதாய் இருக்குமென ''விவாதம் நடத்தலாம்'' (இம்மாதிரியான விவாதங்களில் மூழ்கியுள்ள எழுதுகோலர்களும் காடேட்டுகளும் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் நாட்டுக்கு வெளியே ஏராளமாய் இருக்கிறார்கள்). இம்மாதிரியான விவாதங்களில் தற்போது நேரத்தை விரயமாக்க நாம் விரும்பவில்லை, ஏனெனில் இந்த விவாதத்துக்கும் இதனையொட்டிய ஏராளமான ஏனைய விவாதங்களுக்கும் போராட்டத்தின் வாயிலாய் நாம் முடிவு கட்டி வருகிறோம். ஆனால் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் பண்ணையடிமை முறை மரபுகளின் காவலர்களாகிய நிலப்பிரபுக்களுடன் தொடர்ந்து எட்டு மாதங்களாய்ச் ''சமரசம் செய்து'' வந்திருக்க, நாம் ஒரு சில வாரங்களுக்குள் அந்த நிலப்பிரபுக்களையும் அவர்களது மரபுகள் யாவற்றையும் ருஷ்ய மண்ணிலிருந்து அறவே துடைத்தெறிந்தோம் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

மதத்தையோ, பெண்களது உரிமையின்மையையோ, அல்லது ருஷ்யர்களல்லாத தேசிய இனத்தோர் ஒடுக்கப்படுதலையும் அவர்களுக்குச் சமத்துவ உரிமைகள் இல்லாமையையுமோ எடுத்துக் கொள்ளுங்கள். இவை யாவும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குரிய பிரச்சினைகள். கீழ்த் தரமான குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகள் தொடர்ந்து எட்டு மாதங்களாய் இவை குறித்து வாய்ப்பேச்சு பேசினார்கள். உலகின் மிகவும் முன்னேறிய நாடுகளில் ஒன்றிலேனும் இந்தப் பிரச்சினைகளுக்கு முதலாளித்துவ ஜனநாயக வழியில் முடிவான தீர்வு காணப்படவில்லை. நமது நாட்டில் அக்டோபர் புரட்சியின் சட்டங்களால் முடிவாக இவை தீர்க்கப்பட்டிருக்கின்றன. மதத்துக்கு எதிராய் நாங்கள் மெய்யான போராட்டம் நடத்தினோம், தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

ருஷ்யர்களல்லாத எல்லாத் தேசிய இனத்தோருக்கும் அவர் களது சொந்தக் குடியரசுகள் அல்லது தன்னாட்சிப் பிராந்தி யங்களை வழங்கியுள்ளோம். பெண்களை உரிமையற்றோராய் அல்லது முழுவுரிமை இல்லாதோராய் இருத்தி வைத்தல்— இந்த இழிவார்ந்த படுமோசமான அவக்கேடு—பண்ணை யடிமை முறையின், மத்திய காலத்தின் இந்த அருவருக்கத் தக்க மீதமிச்சம்—இலாப வெறி கொண்ட முதலாளித்துவ வர்க்கத்தாராலும் மந்த புத்தியினரும் தொடை நடுக்கம் கொண்டோருமான குட்டிமுதலாளித்துவப் பகுதியோரா லும் உலகில் விதிவிலக்கின்றி ஏனைய ஒவ்வொரு நாட்டிலும் புதுப்பிக்கப்பட்டு வரும் இது—இங்கு ருஷ்யாவில் நம்மிடம் இல்லாதொழிந்து விட்டது.

இவை யாவும் சேர்ந்ததுதான் முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சியின் உள்ளடக்கம். நூற்று ஐம்பது, இரு நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு அந்தப் புரட்சியின் (அல் லது ஒரு பொது வகையின் ஒவ்வொரு தேசியத் திரிபுருவை யும் கருதுவோமாயின், அந்தப் புரட்சிகளின்) முற்போக்கான தலைவர்கள் வாக்குறுதி அளித்தார்கள்: மத்திய காலத் தனி யுரிமைகளிலிருந்தும், ஆண்களுடன் பெண்களுக்குச் சமத்து வம் இல்லாமையிலிருந்தும், அரசில் அந்த அல்லது இந்த மதத்துக்கான (அல்லது ''மதக் கருத்துக்கான'', பொதுவில் ''மதச் சார்புடைமைக்கான'') தனியுரிமையிலிருந்தும்,தேசிய இனச் சமவுரிமை இன்மையிலிருந்தும் மக்களை விடுவிப்போம் என்றார்கள். வாக்குறுதி அளித்தார்கள்—ஆனால் நிறைவேற்ற வில்லை. அளித்த வாக்குறுதிகளை அவர்கள் நிறைவேற்ற வில்லை. நிறைவேற்ற முடியவில்லை, ஏனெனில் ''புனித உரி மையான தனிச் சொத்துரிமையிடம்'' அவர்களுக்கு இருந்த ''மரியாதை உணர்வால்'' அவர்கள் தடுக்கப்பட்டனர். நமது பாட்டாளி வர்க்கப் புரட்சி இந்தக் கேடுகெட்ட ''மரி யாதை உணர்வால்''—முக்காலும்கேடுகெட்ட இந்த மத்திய கால முறைமையிடத்தும் ''புனித உரிமையான தனிச் சொத் துரிமையிடத்துமான'' இந்த உணர்வால்—பீடிக்கப்பட்டிருக்க வில்லை.

ஆனால் ருஷ்யாவின் மக்களுக்கு முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சியின் சாதனைகளை உறுதியாய் நிலைபெறச் செய் யும் பொருட்டு நாம் மேலும் முன்செல்ல வேண்டியிருந்தது,

அவ்வாறே முன்செல்லவும் செய்தோம். முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சிக்குரிய பிரச்சினைகளுக்கு நாம் போகிற போக்கில், நமது பிரதானமான, மெய்யான, பாட்டாளி வர்க்கப் புரட்சிகர, சோஷலிசச் செயற்பாடுகளின் ''உடன் விளை வாய்த்'' தீர்வு கண்டோம். சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் உடன் விளைவுகளாகும் என்றே நாம் எப்போதுமே கூறி வந்திருக்கிறோம். முதலாளித்துவ-ஜன நாயகச் சீர்திருத்தங்கள் பாட்டாளி வர்க்க, அதாவது சோஷ லிஸ்டுப் புரட்சியின் உடன் விளைவுகளாகும் என்று கூறினோம், செயல்கள் மூலம் அதை நிரூபித்தும் காட்டினோம். இடைக் குறிப்பாய் இங்கு இதனைக் குறிப்பிட வேண்டும்: காவுத்ஸ்கி களும் ஹில்ஃபர்டிங்குகளும் மார்த்தவ்களும் செர்னேவ்களும் ஹில்குவித்துகளும் லொங்கேகளும் மாக்டானல்டுகளும் டுராட்டிகளும் மற்றும் ''இரண்டரையாவது'' அகில மார்க் சியத்தின்[28] ஏனைய எல்லாச் சூரர்களும் முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்கும் பாட்டாளி வர்க்க-சோஷலிஸ்டுப் புரட்சிக்கும் இடையிலுள்ள இந்த உறவினைப் புரிந்து கொள் ளும் திராணியற்றோராய் இருந்தனர். முதலாவது இரண்டாவ தாக வளர்ச்சியுறுகிறது. இரண்டாவது, போகிற போக்கில், முதலாவதுக்குரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்கிறது. இரண்டாவது முதலாவதன் செயலைத் திண்மை பெறச் செய் கிறது. முதலாவதைக் கடந்து வளர்வதில் இரண்டாவது எவ்வளவு தூரம் வெற்றியடைகிறது என்பதை நிர்ணயிப்பது போராட்டம்தான், போராட்டம் மட்டுமேதான்.

ஒரு புரட்சி எப்படி மற்றொன்றாக வளர்ச்சியுறுகிறது என் பதற்கு மிகவும் கண்கூடான நிரூபணங்கள் அல்லது வெளிப் பாடுகளில் ஒன்றே சோவியத் அமைப்பு. தொழிலாளர்களுக் கும் விவசாயிகளுக்கும் சோவியத் அமைப்பானது அதிகபட்ச அளவிலான ஜனநாயகத்தைக் கிடைக்கச் செய்கிறது; அதே போது முதலாளித்துவ ஜனநாயகத்திடமிருந்தான முறிவை யும், ஜனநாயகத்தின் ஒரு புதிய, சகாப்த முக்கியத்துவம் வாய்ந்த வகையின், அதாவது பாட்டாளி வர்க்க ஜனநாயகத் தின், அல்லது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் உதயத்தையும் அது குறிக்கின்றது.

நமது சோவியத் அமைப்பினைக் கட்டியமைத்திடும் பணி யில் நமது பின்னடைவுகள் குறித்தும் தவறுகள் குறித்தும்

அந்திமக் காலத்திய முதலாளித்துவ வர்க்கத்தாரையும் அவர்களுக்கு வால் பிடித்துச் செல்லும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளையும் சேர்ந்த கயவர்களும் இழிஞர்களும் நம் மீது சாபங்களையும் வசவுகளையும் ஏளனத்தையும் பொழி யட்டும். நிறைய தவறுகள் புரிந்துள்ளோம், புரிந்து வரு கிறோம் என்பதையும், மிகப் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள் ளன என்பதையும் நாம் கணமும் மறந்துவிடவில்லை. முன்பின் கண்டிராத வகையிலான ஓர் அரசு அமைப்பினைக் கட்டி யமைத்திடுவதைப் போன்ற ஒரு புதிய பணியில், உலக வர லாற்றிலே முற்றிலும் புதுமையான இதில் பின்னடைவுகளை யும் தவறுகளையும் தவிர்க்கவும் முடியுமோ! நமது பின்னடைவு களையும் தவறுகளையும் சரிசெய்வதற்கும், சோவியத் கோட் பாடுகளை நடைமுறையில் நாம் செயல்படுத்துவதை—குற் றங்குறையற்ற நிலையிலிருந்து இன்னமும் நெடுந் தொலைவில், மிக நெடுந் தொலைவில் இருந்து வரும் இதனை—மேம்படுத்து வதற்கும் இடையறாது பாடுபடுவோம். சோவியத் அரசு ஒன்றைக் கட்டியமைக்க முற்படும் நற்பேறு, இவ்விதம் உலக வரலாற்றில் ஒரு புது யுகத்தை—முதலாளித்துவ நாடு ஒவ் வொன்றிலும் ஒடுக்கப்பட்ட வர்க்கமாய் இருப்பதும், ஆனால் புது வாழ்வினை நோக்கி, முதலாளித்துவ வர்க்கத்தின் மீதான வெற்றியை நோக்கி, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை நோக்கி, மூலதனத்தின் ஒடுக்குமுறையிலிருந்தும் ஏகாதி பத்திய போர்களிலிருந்தும் மனித குலத்தை விடுதலை பெறச் செய்வதை நோக்கி எங்கும் முன்னேற்ற நடைபோடும் வர்க் கமாய் இருப்பதுமாகிய ஒரு புதிய வர்க்கத்தின் ஆட்சிக்கான புது யுகத்தை—துவக்கி வைக்கும் நற்பேறு நமக்குக் கிட்டி யுள்ளது குறித்துப் பெருமைகொள்ள நமக்கு உரிமை உண்டு, நாம் பெருமை கொள்ளவும் செய்கிறோம்.

ஏகாதிபத்திய போர்களைப் பற்றிய பிரச்சினை, இன்று அனைத்து உலகின் மீதும் ஆதிக்கம் புரியும் நிதி மூலதனத்தின் சர்வதேசக் கொள்கையைப் பற்றிய பிரச்சினை—புதிய ஏகாதி பத்திய போர்களைத் தவிர்க்க முடியாதவாறு தோற்றுவிக்கச் செய்வதாகிய ஒரு கொள்கையைப் பற்றிய பிரச்சினை, தேசிய ஒடுக்குமுறையையும் பலவீனமான, பின்தங்கிய, சிறிய தேசிய இனங்களை விரல்விட்டு எண்ணிவிடக் கூடிய ஒருசில ''முன்னேறிய'' அரசுகள் கொள்ளையடித்தலையும்

சூறையாடுதலையும் மென்னியை நெரித்தலையும் தவிர்க்கவொண்ணாத முறையில் அளவுகடந்து கடுமையாக்குவதாகிய ஒரு கொள்கையைப் பற்றிய பிரச்சினை—1914 முதலாய் உலகின் எல்லா நாடுகளிலும் இப்பிரச்சினைதான் கொள்கை அனைத்துக்குமான மூலக் கல்லாக இருந்துள்ளது. கோடானு கோடியான மக்களுக்கு இது ஜீவமரணப் பிரச்சினையாகும். (1914-18ஆம் ஆண்டுகளின் போரிலும் அதனுடன் சேர்க்கப்பட்டு இனியும் தொடர்ந்து நடைபெறும் ''சிறு'' போர்களிலும் கொல்லப்பட்ட 1,00,00,000 பேருக்கு மாறாக) நம் கண்ணெதிரே முதலாளித்துவ வர்க்கம் தயாரித்து வருவதும் நம் கண்ணெதிரே முதலாளித்துவத்திலிருந்து மூண்டெழுவதுமாகிய அடுத்த ஏகாதிபத்திய போரில் 2,00,00,000 மக்கள் கொல்லப்படப் போகிறார்களா என்கிற பிரச்சினையாகும் இது. (1914-18ல் முடமாக்கப்பட்ட 3,00,00,000 பேருக்கு மாறாக) வரப் போகும் எதிர்காலப் போரில்—(முதலாளித்துவம் தொடர்ந்து இருந்துவருமாயின்) இந்த போர் தவிர்க்க முடியாததே—6,00,00,000 பேர் முடமாக்கப்படப் போகிறார்களா என்கிற பிரச்சினையாகும் இது. இந்தப் பிரச்சினையிலும் நமது அக்டோபர் புரட்சி, உலக வரலாற்றிலே ஒரு புது யுகத்தின் துவக்கத்தைக் குறித்தது. ''ஏகாதிபத்தியப் போரை உள்நாட்டுப் போராய் மாற்றிடுக'' என்ற நமது கோஷத்தை முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகளும் இவ்வர்க்கத்தின் ஆமாம் சாமிகளும்—சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் உலகெங்குமுள்ள குட்டிமுதலாளித்துவ (''சோஷலிஸ்டுகள்'' என்பதாய்க் கூறிக் கொள்ளும்) ஜனநாயகவாதிகளும்—ஏளனம் புரிந்தனர். ஆனால் அந்தக் கோஷம்தான் உண்மை என்பது மெய்ப்பிக்கப்பட்டது—கசப்பாகவும் நயமற்றதாகவும் அப்பட்டமாகவும் முரடாகவும் இருப்பினும்—இவையாவும் சரியே—மிகவும் நுண்ணயம் வாய்ந்த பகட்டான தேசிய வெறித்தன்மை கொண்ட எண்ணிலடங்கா அமைதிவாதப் பொய்களைப் போலல்லாமல் அது மட்டும்தான் உண்மை. அந்தப் பொய்கள் தகர்க்கப்பட்டு வருகின்றன. பிரேஸ்த் சமாதானம் அம்பலமாகி விட்டது. பிரேஸ்த் சமாதானத்தை விடவும் மோசமான வெர்சேய் சமாதானத்தின் உட்பொருளும் விளைவுகளும் நாள்தோறும் மேலும் அதிக உக்கிரத்

துடன் அம்பலமாகி வருகின்றன. நேற்றைய போருக்குக் காரணங்கள் மற்றும் நெருங்கி வரும் நாளைய போர் குறித்து சிந்திக்கின்ற கோடானு கோடியானோரின் கண் முன்னால் முற்றும் தெளிவாகவும் அம்மணமாகவும் தவிர்க்கவொண்ணாதவாறும் காட்சியளிக்கும் கொடிய உண்மை என்னவெனில்: ஏகாதிபத்திய போரிடமிருந்தும் தவிர்க்க முடியாதபடி அதனைத் தோற்றுவிக்கும் ஏகாதிபத்திய "மீரி"டமிருந்தும் தப்ப இயலாதென்று (பழைய எழுத்திலக்கணம் வழக்கில் இருக்குமாயின் இங்கே நான் "மீர்"* என்னும் சொல்லை அதன் இரண்டு அர்த்தங்களையும் குறிக்கும்படி இரண்டு தரம் எழுதியிருப்பேன்), போல்ஷிவிக் போராட்டமும் போல்ஷிவிக் புரட்சியும் இல்லையேல் இந்த நரகத்திலிருந்து தப்ப இயலாதென்பதுதான்.

முதலாளித்துவ வர்க்கத்தாரும் அமைதிவாதிகளும், ஜெனரல்களும் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரும், முதலாளிகளும் அற்பவாதிகளும், பக்தி ஆர்வங் கொண்ட கிறித்தவர்களும் இரண்டாவது[11], இரண்டரையாவது[28] அகிலங்களின் சூரர்களும் இந்தப் புரட்சியின் மீது தமது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துக் கொள்ளட்டும். அடிமையுடைமையாளர்களுக்கு இடையிலான போரை எதிர்த்து, நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலுமான ஆண்டுகளில் முதன் முதலாய் அடிமைகள், "அடிமையுடைமையாளர்கள் தமது கொள்ளையைப் பாகப் பிரிவினை செய்து கொள்வதற்காக நடத்தும் இந்த போரை எல்லாத் தேசங்களையும் சேர்ந்த அடிமையுடைமையாளர்களை எதிர்த்து எல்லாத் தேசங்களையும் சேர்ந்த அடிமைகளும் நடத்தும் போராய் மாற்றுக" என்னும் கோஷத்தைப் பகிரங்கமாகவே பறைசாற்றிப் பதிலளித்தனர் என்ற உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உண்மையை, எவ்வளவுதான் வசையையும் அவதூறுகளையும் பொய்களையும் பொழிந்த போதிலும் அவர்களால் மறைத்துவிட முடியாது.

நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலுமான ஆண்டு

---

* ருஷ்யச் சொல்லான மீர் என்பதற்கு உலகம், சமாதானம் என்று இரண்டு அர்த்தங்கள் உண்டு. பழைய எழுத்திலக்கணத்தின்படி, இச்சொல் அதன் பொருளுக்கு ஏற்ப இரு வேறு எழுத்தமைப்புகளில் எழுதப்பட்டது.—ப-ர்.

களில் முதன்முதலாய் இந்தக் கோஷம் தெளிவின்றி, செயலற்றுக் காத்திருக்கும் நிலையிலிருந்து தெளிவான, திட்டவட்டமான அரசியல் வேலைத்திட்டமாய், கோடானு கோடியாய் ஒடுக்கப்பட்ட மக்கள் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடத்திய பயனுள்ள போராட்டமாய் வளர்ந்துள்ளது; பாட்டாளி வர்க்கத்தின் முதலாவது வெற்றியாய் வளர்ந்துள்ளது; போரை ஒழித்திடுவதற்கும், வெவ்வேறு தேசங்களின் ஒன்றுபட்ட முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக, மூலதனத்தின் அடிமைகளாகிய கூலித் தொழிலாளர்கள், விவசாயிகள், உழைப்பாளி மக்களுக்குப் பிரதிகூலமாக சமாதானத்துக்கும் போருக்கும் ஏற்பாடு செய்யும் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக, எல்லா தேசங்களின் தொழிலாளர்களையும் ஒன்றுபடச் செய்வதற்குமான போராட்டத்தில் கிடைத்த முதலாவது வெற்றியாய் வளர்ந்துள்ளது.

இது முதலாவது வெற்றியே ஆகும், இன்னமும் இறுதி வெற்றியாகி விடவில்லை. நம்புதற்கரிய துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் உள்ளானோம், முன்பின் கண்டிராத துயரத்துக்கு ஆளானோம், வரிசையாகப் பல கடுந் தவறுகளும் பின்னடைவுகளும் ஏற்பட்டன—இப்படி எல்லாம் விலை கொடுத்துத்தான் நமது அக்டோபர் புரட்சி இந்த வெற்றியைச் சாதித்தது. பின்தங்கிய ஒரு நாட்டின் மக்கள் பின்னடைவுகள் இன்றி, தவறுகள் புரியாமல், உலகின் மிகுந்த சக்தி வாய்ந்த, மிகவும் முன்னேறிய நாடுகளது ஏகாதிபத்திய போர்களை முறியடிப்பது சாத்தியமல்லவே! நமது தவறுகளை ஒத்துக் கொள்ள நாம் அஞ்சவில்லை. இவற்றைச் சரிசெய்யக் கற்றுக் கொள்ளும் பொருட்டு, இவற்றை நாம் விருப்பு வெறுப்பின்றி பரிசீலனை செய்வோம். ஆனால் அடிமையுடைமையாளர்களுக்கு இடையிலான போருக்கு, எல்லா அடிமையுடைமையாளர்களையும் எதிர்த்து அடிமைகள் நடத்தும் புரட்சியைக் கொண்டு ''பதிலளிக்கப்படும்'' என்ற வாக்குறுதி நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலுமான ஆண்டுகளில் முதன் முதலாய் முழு நிறைவாய் நிறைவேற்றப்பட்டுள்ளது—எல்லா இன்னல்களையும் மீறி நிறைவேற்றப்பட்டு வருகிறது—மறுக்க முடியாத உண்மையாகும்.

நாம் இந்தப் பணியை ஆரம்பித்து வைத்துள்ளோம். எந்த தேதியில், எந்த நேரத்தில், எந்தத் தேசத்தின் பாட்

டாளிகள் இந்த நிகழ்ச்சிப் போக்கை நிறைவு பெறச் செய்வார்கள் என்பது முக்கியமன்று. முதலாவது முயற்சி நடைபெற்று விட்டது, சாலை திறக்கப்பட்டுப் பாதை சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது என்பதுதான் முக்கியம்.

எல்லா நாடுகளையும் சேர்ந்த திருவாளர் முதலாளிமார்களே, "தாய்நாட்டைப் பாதுகாப்பதாய்"—ஜப்பானியத் தாய்நாட்டை அமெரிக்காவிடமிருந்தும், அமெரிக்கத் தாய்நாட்டை ஜப்பானிடமிருந்தும், பிரெஞ்சுத் தாய்நாட்டை பிரிட்டனிடமிருந்தும், இப்படியே ஒன்றை இன்னொன்றிடமிருந்தும் பாதுகாப்பதாய்—தொடர்ந்து பாசாங்கு செய்யுங்கள்! இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்களது சூரன்மார்களே, அனைத்து உலகையும் சேர்ந்த அமைதிவாதக் குட்டிமுதலாளித்துவவாதிகளும் அற்பவாதிகளுமானோரே, (1912ஆம் ஆண்டு பாஸெல் அறிக்கையை[29] மாதிரியாகக் கொண்டு) புதிய "பாஸெல் அறிக்கைகளை" வெளியிட்டு, ஏகாதிபத்திய போர்களை எதிர்த்துப் போராடும் வழிகள் பற்றிய பிரச்சினையைத் தொடர்ந்து "தட்டிக் கழித்துச்" செல்லுங்கள்! **முதலாவது போல்ஷிவிக் புரட்சி** ஏகாதிபத்திய போரின் பிடியிலிருந்தும் ஏகாதிபத்திய உலகின் பிடியிலிருந்தும் புவியின் **முதலாவது பத்து கோடி மக்களை** விடுவித்து விட்டது. அடுத்து வரப்போகும் புரட்சிகள் இம்மாதிரியான போரிடமிருந்தும் இம்மாதிரியான உலகத்திடமிருந்தும் மனித குலம் முழுமையையுமே விடுவித்துவிடும்.

கடைசியாய் நம் முன் இருப்பது—யாவற்றிலும் மிக முக்கியமான, யாவற்றிலும் மிகக் கடினமான, யாவற்றிலும் மிகக் குறைவாய் நாம் முயற்சி செலுத்தியிருக்கும் பணியாகும்: பொருளாதாரக் கட்டுமானத்துக்கான—தகர்க்கப்பட்டுள்ள பிரபுத்துவக் கட்டமைவுக்கும் பகுதியளவு தகர்க்கப்பட்டுள்ள முதலாளித்துவக் கட்டமைவுக்கும் பதிலாய் எழுப்பப்பட வேண்டிய புதிய, சோஷலிஸ்டுக் கட்டமைவுக்குரிய பொருளாதார அடித்தளங்களை அமைத்திடுவதற்கான—பணியாகும். இந்த மிக முக்கிய, மிகக் கடின பணியில் தான் மிக அதிகமாய் நமக்குப் பின்னடைவுகள் ஏற்பட்டிருக்கின்றன, மிக அதிகமாய் நாம் தவறுகள் புரிந்திருக்கிறோம். அனைத்து உலகுக்கும் புத்தம் புதியதான இத்தகைய ஒரு பணியைப் பின்னடைவுகள் இல்லாமல், தவறுகள் இல்லாமல்

ஆரம்பித்து வைப்பது சாத்தியமல்லவே! ஆனுல் இதனை ஆரம் பித்து வைத்து விட்டோம். இதனைத் தொடர்ந்து நடத்திச் செல்வோம். நமது தவறுகளில் பலவற்றை நமது ''புதிய பொருளாதாரக் கொள்கையின்''[30] மூலம் இத்தருணம் சரி செய்து வருகிறேம். சிறுதர விவசாயிகளது நாடு ஒன்றில், இம்மாதிரியான தவறுகளைப் புரியாமல் சோஷலிசக் கட்டமைவைத் தொடர்ந்து கட்டியெழுப்பிச் செல்வது எப்படியென்று நாம் கற்றுத் தெரிந்து கொள்கிறேம்.

இன்னல்களுக்கு அளவே இல்லை. ஆனல் நாம் அளவு கடந்த இன்னல்களை எதிர்த்து நின்று சமாளிக்கப் பழகிக் கொண்டவர்கள். நமது பகைவர்கள் காரணமின்றி நம்மை ''கல் போல் கெட்டியானவர்கள்'' என்றும், ''உருக்குறுதிக் கொள்கையினர்'' என்றும் குறிப்பிடவில்லை. ஆனல் நாம் இத்துடன் இன்னென்றையும் ஓரளவு கற்று வைத்திருக் கிறேம்: புரட்சிக்கு அத்தியாவசியமான இன்னெரு கலையான, நெளிவு சுளிவை, அதாவது எதார்த்தப் புற நிலைமைகளில் ஏற்படும் மாறுதல்களின் காரணமாய் அவசியமாகும் போது விரைவாகவும் திடுதிப்பென்றும் போர்த்தந்திரத்தை மாற்றிக் கொள்வதற்கும், நமது குறிக்கோளை அடைய நமது பழைய பாதையானது குறிப்பிட்ட ஒரு தருணத்தில் உசித மற்றதாகவோ, சாத்தியமற்றதாகவோ மாறிவிடுமாயின் அதற்குப் பதில் வேருெரு பாதையைத் தேர்ந்து கொள் வதற்குமான திறனை நாம் கற்று வைத்திருக்கிறேம்.

ஆர்வப் பெருக்கின் அலை உச்சி மீது தூக்கிச் செல்லப் பட்டு, முதலில் மக்களது பொதுவான அரசியல் ஆர்வமும் பிறகு அவர்களது இராணுவ ஆர்வமும் கிளர்த்தி விடப் பட்டுச் சாதிக்கப் பெற்ற அரசியல், இராணுவப் பணிகளைப் போல், அதே அளவுக்குப் பெரியவையான பொருளாதாரப் பணிகளையும் நேரடியாக அதே ஆர்வத்தை ஆதாரமாகக் கொண்டு சாதித்துவிடலாமென நாம் எதிர்பார்த்தோம். அர சின் பொருளுற்பத்தியையும் அரசின் பண்ட வினியோகத்தை யும் பாட்டாளி வர்க்க அரசின் ஆணைக்கேற்ப கம்யூனிச வழி யில், சிறுதர விவசாயிகளது நாடு ஒன்றில் ஒழுங்கமைத்து விட முடியுமென நாம் எதிர்பார்த்தோம்—அல்லது, இன் னும் சருராகச் சொல்வதெனில், போதிய அளவு சிந்தனை செலுத்தாமலே நாம் அனுமானித்துக் கொண்டோம். இது

தவறுகும் என்பதை அனுபவம் நிரூபித்துக் காட்டியுள்ளது. பல இடைக்கால கட்டங்கள்—அரசு முதலாளித்துவமும் சோஷலிசமும்—அவசியமாகும், கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்காகத் தயாரிப்பு செய்யும் பொருட்டு—நீண்ட பல ஆண்டுகளுக்குப் பாடுபட்டுத் தயாரிப்பு செய்யும் பொருட்டு—இவை அவசியமாகும் என்பதாகத் தெரிகிறது. நேரடியாக ஆர்வத்தையே ஆதாரமாகக் கொண்டுவிடலாகாது, மாபெரும் புரட்சியால் தோற்றுவிக்கப்பட்ட ஆர்வத்தைத் துணை கொண்டும், தனியாள் நலனையும் தனியாளுக்குத் தூண்டுதல் அளித்தலையும் பொருளாதாரக் கணக்கு வைப்பையும் அடிப்படையாகக் கொண்டும் சிறுதர விவசாயிகளது நாடான இந்நாட்டில் நாம் அரசு முதலாளித்துவத்தின் வழியே சோஷலிசத்தைச் சென்றடைய உறுதியான பாலத்தை முதற்கண் அமைத்திட வேண்டும். இல்லையேல் என்றுமே நம்மால் கம்யூனிசத்தைச் சென்றடைய முடியாது, கோடானு கோடியான மக்களை எந்நாளும் நாம் கம்யூனிசத்துக்கு அழைத்துச் செல்ல முடியாது. அனுபவம் நமக்குக் கற்பிப்பது இதுதான். புரட்சியினது வளர்ச்சியின் எதார்த்தப் புறநிலைப் போக்கு நமக்குக் கற்பிப்பது இதுதான்.

திடுமெனக் கொள்கை வழியை மாற்றிக் கொள்வதற்கு (திடுமென மாற்றிக் கொள்வது அவசியமாகியதும்) இந்த மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் ஓரளவுக்குக் கற்றுக் கொண்டுள்ள நாம், முனைப்போடும் விழிப்போடும் விடா முயற்சியோடும் (முனைப்பும் விழிப்பும் விடாமுயற்சியும் இன்னமும் போதிய அளவு இல்லையெனினும்) கொள்கை வழியில் புதிய மாற்றம் செய்வதற்கு, அதாவது "புதிய பொருளாதாரக் கொள்கைக்குச்" செல்வதற்குக் கற்றுக் கொள்ள முற்பட்டிருக்கிறோம். பாட்டாளி வர்க்க அரசு எச்சரிக்கையும் ஊக்கமும் மதிநுட்பமும் வாய்ந்த "வணிகராக" வேண்டும், இம்மியும் ஒழுங்கு முறை தவறுத மொத்த வியாபாரியாக வேண்டும்—இல்லையேல் சிறுதர விவசாயிகளது நாடாகிய இந்நாட்டைப் பொருளாதார வழியில் எந்நாளும் அதனால் காலூன்றி நிற்கச் செய்ய முடியாது. தற்போதுள்ள நிலைமைகளில், முதலாளித்துவ மேலைய நாடுகளின் (தற்போதைக்கு முதலாளித்துவ நாடுகளாய் இருக்கும் இவற்றின்) அண்டையிலுள்ள நாம் கம்யூனிசத்தை நோக்கி முன்னேறுவதற்கு

வேறு வழி ஏதும் இல்லை. விண்ணுக்கும் மண்ணுக்குமுள்ள தொலைவில் கம்யூனிசத்திலிருந்து விலகியமைந்தவராகத் தோன்றும் ஒரு பொருளாதார வகையினரே இந்த மொத்த வியாபாரி. ஆனால் நடைமுறை வாழ்வில், சிறுதர விவசாயிகளது பொருளாதாரத்தை அரசு முதலாளித்துவத்தின் வழியே கம்யூனிசத்துக்கு இட்டுச் செல்லும் முரண்பாடுகளில் ஒன்றாகும் இது. தனியாளுக்குக் கிடைக்கும் தூண்டுதல் பொருளுற்பத்தியைப் பெருகச் செய்வதாகும். எப்பாடுபட்டேனும் யாவற்றுக்கும் முதலாய் நாம் பொருளுற்பத்தியைப் பெருகச் செய்தாக வேண்டும். மொத்த வியாபாரமானது பொருளாதார வழியில் கோடிக் கணக்கான சிறுதர விவசாயிகளை ஒன்றுபடச் செய்கிறது: அது அவர்களுக்குத் தனியாள் தூண்டுதல் கிடைக்கச் செய்கிறது, அவர்களை ஒன்றிணைத்து அடுத்த படிக்கு—அதாவது பொருளுற்பத்திச் செயல்முறையிலேயே இணைவுக்கும் கூட்டுக்குமான பல்வேறு வடிவங்களுக்கு—இட்டுச் செல்கிறது. நமது பொருளாதாரக் கொள்கையில் தேவையான மாற்றங்களை ஏற்கெனவே நாம் செய்ய ஆரம்பித்திருக்கிறோம். இதில் ஏற்கெனவே நாம் சில வெற்றிகளையும் பெற்றுள்ளோம். சிறியவையே, அரைகுறையானவையே என்பது மெய்தான் எனினும், எப்படியும் இவை வெற்றிகளே ஆகும். இந்தப் புதிய ''கல்வித்'' துறையில் நாம் நமது புகுமுக வகுப்பினை ஏற்கெனவே முடித்து வருகிறோம். இடைவிடாமலும் விடாமுயற்சியோடும் படித்தும், நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையையும் நடைமுறை அனுபவத்தின் வாயிலாகப் பரீட்சித்துப் பார்த்தும், நாம் ஏற்கெனவே தொடங்கியுள்ளதை திரும்பத் திரும்ப மாற்றம் செய்து கொள்ள அஞ்சாமலும், நமது தவறுகளைச் சரிசெய்து கொண்டும், மிகவும் கவனமாய் அவற்றின் குறிப்பொருளைப் பகுத்தாய்ந்தும், நாம் மேல் வகுப்புகளுக்குச் செல்வோம். உலகப் பொருளாதாரம், உலக அரசியல் இவற்றின் தற்போதைய நிலையானது இந்தப் ''பயிற்சித் திட்டத்தை'' நாம் விரும்பக் கூடியதைக் காட்டிலும் நீண்டதாகவும் கடினமானதாகவும் செய்திருப்பினும், ''இத்திட்டம்'' அனைத்தையும் நாம் பயின்று முடிப்போம். நாம் மாறிச் செல்வதற்குரிய இடைநிலைக் காலத்தின் இன்னல்கள் எவ்வளவுதான் கடுமையாக இருப்பினும் சரி, விபத்தையும் பஞ்

சத்தையும் அழிவையும் மீறி, நாம் சோர்வின்றி உறுதியுடன் இருப்போம், எதையும் தியாகம் செய்து எல்லா வழியிலும் நமது இலட்சியத்தை வெற்றிகரமாய் நிறைவேறச் செய்வோம்.

*அக்டோபர் 14, 1921*

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 144-52

## தற்போதும் சோஷலிசத்தின் முழுநிறை வெற்றிக்குப் பிற்பாடும் தங்கத்தின் முக்கியத்துவம்

மாபெரும் ஒரு புரட்சியின் ஆண்டுவிழாவைக் கொண்டாட, அதன் தீர்வு பெறாத பிரச்சினைகளில் கவனத்தை ஒருமுகப்படுத்துவதுதான் மிகச் சிறந்த வழி. அந்தப் புரட்சி இன்னமும் தீர்வு அளிக்காத அடிப்படை பிரச்சினைகளை நாம் எதிர்நோக்கும் ஒரு நேரத்தில், இந்தப் பிரச்சினைகளின் தீர்வுக்காக நாம் புதிய ஒன்றை (அந்தப் புரட்சி இதுகாறும் சாதித்திருப்பதன் கண்ணோட்டத்தில்) கற்றுப் பாண்டித்தியம் பெற வேண்டியுள்ள ஒரு நேரத்தில், இப்புரட்சியை இந்த வழியில் கொண்டாடுவது மிக்கப் பொருத்தமாய் இருப்பதோடு அவசியமும் ஆகும்.

பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ''சீர்திருத்தவாத வழியிலான'', படிப்படியான, எச்சரிக்கையான, சுற்றிவளைந்து செல்லும் அணுகுமுறையின் தேவை தற்போது நமது புரட்சிக்குப் புதிய அம்சம். இந்தப் ''புதுமையானது'' தத்துவம், நடைமுறை ஆகிய இரண்டிலும் பல கேள்விகளையும் குழப்பங்களையும் ஐயுறவுகளையும் எழச் செய்கிறது.

ஒரு தத்துவார்த்தப் பிரச்சினை: ஒட்டுமொத்தமாய்ப் புரட்சி வெற்றிகரமாய் முன்னேறிக் கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் ஒரே துறையில் மிகமிகப் புரட்சிகரமான வரிசையான பல செயல்களிலிருந்து மிகமிகச் ''சீர்திருத்தவாத வழியிலான'' செயல்களுக்கு மாறிச் செல்வதை நாம் எப்படி

விளக்குவது? ''நிலைகளை விட்டுக் கொடுப்பது'', ''தோல்வியை ஒத்துக் கொள்வது'' அல்லது இதையொத்த ஒன்றினை உணர்த்துவதாய் இது இருக்கலாமா? ஆம், நிச்சயமாயும் அப்படித்தான் என்று கூறுகின்றனர் நமது பகைவர்கள்—அரைப்பிரபுத்துவ வகைப்பட்ட பிற்போக்காளர்களிலிருந்து மென்ஷிவிக்குகள் அல்லது இரண்டரையாவது அகிலத்தின்[28] ஏனைய வீரர்கள் வரையில். சாக்கு கிடைக்கும் தோறும், எந்தச் சாக்கும் இல்லாத போதுங்கூட இது போல எதாவது கூச்சல் எழுப்பவில்லையானால் அவர்கள் பகைவர்களாய் இருக்க மாட்டார்களே. பிரபுத்துவப் பிற்போக்காளர்களிலிருந்து மென்ஷிவிக்குகள்[10] வரையிலான எல்லாக் கட்சிகளிடையிலும் இந்தப் பிரச்சினை குறித்து நிலவும் இதமான கருத்து ஒருமைப்பாடானது, இந்த எல்லாக் கட்சிகளும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு விரோதமான ''ஒரு பிற்போக்குத் திரளே'' (எங்கெல்ஸ் 1875, 1884ல் பெபெலுக்கு எழுதிய கடிதங்களில் முன்னறிந்து கூறியது போலவென இடைக்குறிப்பாய்ச் சொல்லலாம்) என்பதற்கு மற்றொரு சான்றே அன்றி வேறல்ல.[31]

ஆனால் நண்பர்களிடத்தும் ஓரளவு ''குழப்பம்''—எனலாமா—இருந்து வருகிறது.

பெருவீத இயந்திரத் தொழில் துறையைப் புனரமைத்து, அதன் பண்டங்கள் சிறு விவசாயியின் பயிர்த்தொழிலின் விளை பொருட்களுடன் நேரடியாய்ப் பரிவர்த்தனையாவதற்கு ஏற்பாடு செய்தல், இவ்வழியில் பின்னது சமுதாய உடைமையாவதற்கு உதவுதல். பெருவீதத் தொழில்துறையைப் புனரமைப்பதற்காக விவசாயிகளிடமிருந்து கட்டாயக் கொள்முதல் மூலம் ஓரளவு உணவுப் பொருட்களும் மூலப் பொருட்களும் கடனாய் வாங்கிக் கொள்ளுதல்—இதுவே மூன்று ஆண்டுகளுக்கு மேலாய் 1921 வசந்தம் வரையில் நாம் அனுசரித்த திட்டம் (அல்லது முறை, செயல் வழி). பிரச்சினையை இது புரட்சிகர வழியில் அணுகுவதாகும்—பழைய சமூக-பொருளாதார அமைப்பினை ஒரேயடியாய் அறவே நொறுக்கி அதற்குப் பதில் ஒரு புதிய அமைப்பை எழுப்பும் வழி இது.

1921 வசந்தம் முதலாய் இந்த அணுகுதலுக்கு, திட்டத்துக்கு, முறைக்கு அல்லது செயல் வழிக்குப் பதிலாய் முற்றிலும் மாறான ஒரு முறையை, சீர்திருத்தவாத வகைப்பட்ட

முறையை அனுசரித்து வந்திருக்கிறோம் (இன்னும் நாம் ''அனுசரித்துவிடவில்லை'', ''அனுசரித்துக் கொண்டிருக் கிறோம்'', இன்னும் இதனைப் பூரணமாய் உணரவில்லை): பழைய சமூக-பொருளாதார அமைப்பை—வர்த்தகம், சிறு உற்பத்தி, சிறு சொத்துடைமை, முதலாளித்துவம் இவற்றை—நொறுக்குவதற்குப் பதிலாய் வர்த்தகத்தை, சிறு உற்பத்தியை, முதலாளித்துவத்தைப் புத்துயிர் பெறச் செய்து அதே போது விழிப்புடனும் படிப்படியாகவும் இவற் றின் மீது மேல்நிலை பெறுதல் அல்லது அவை புத்துயிர் பெறும் அளவுக்கு மட்டும் அவற்றை அரசின் ஒழுங்கியக்கத் துக்கு உட்படுத்த வகை செய்தல் என்னும் ஒரு முறையை அனுசரித்து வந்திருக்கிறோம்.

பிரச்சினையை முற்றிலும் புதியதொரு வழியில் அணுகு வதாகும் இது.

முந்தைய, புரட்சிகர முறையிலான அணுகுதலுடன் ஒப் பிடுகையில் இது சீர்திருத்தவாத முறையிலான அணுகுதலா கும் (புரட்சி என்பது பழைய அமைப்பினை அதன் அடிநிலை களோடு நொறுங்கச் செய்யும் மாற்றமாகுமே அன்றி, கூடு மானவரை நொறுங்காதபடிப் பார்த்து எச்சரிக்கையாய், மெதுவாய், படிப்படியாய் அதைத் திருத்தியமைப்பதல்ல).

இங்கு எழும் கேள்வி இதுவே: புரட்சிகர முறைகளைக் கையாண்டு பார்த்து, அவை தோற்றுவிட்டதைக் கண்டு சீர் திருத்தவாத முறைகளை நீங்கள் அனுசரிப்பீர்களாயின், புரட்சி செய்தது பொதுவிலேயே தவறெனப் பிரகடனம் செய்கிறீர்கள் என்பதைத்தானே அது நிரூபிக்கிறது? நீங்கள் புரட்சியை ஆரம்பித்திருக்கக் கூடாது, சீர்திருத்தங்களைத் தொடங்கி அவற்றுக்குள்ளேயே உங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்க வேண்டும் என்பதை இது நிரூபிக்கவில்லையா?

இதுவே மென்ஷிவிக்குகளும் அவர்களையொத்த ஏனை யோரும் வந்தடையும் முடிவு. ஆனால் இந்த முடிவு குதர்க்க வாதம் அல்லது தடிப்பேறிவிட்ட அரசியல்வாதிகள் புரியும் பித்தலாட்டமாகும், அல்லது அரசியல் கற்றுக் குட்டிகளின் சிறுபிள்ளைத்தனமாகும். புரட்சிகர முறைகள் ஏற்றவையாய், அவை வெற்றிகரமாய்க் கையாளத்தக்கனவாய் இருக்கும் வரம்புகளையும் நிலைமைகளையும் கவனியாது ஓதுக்கிவிடும் புரட்சிவாதத்தை மிகைப்படுத்துவதால் உண்டாகும் அபா

யம்தான் மெய்யான புரட்சியாளருக்கு உண்டாகக் கூடிய மிகப் பெரிய—ஒரேயொரு என்று கூடச் சொல்லலாம்—அபாயமாகும். உண்மையான புரட்சியாளர்கள் ''புரட்சி யைக்'' கொட்டை எழுத்திட்டு எழுதத் தொடங்கியதும், ''புரட்சியை'' ஏறத்தாழ தெய்விகமான ஒன்றின் நிலைக்கு உயர்த்த முற்பட்டதும், நிதானம் தவற ஆரம்பித்ததும், எந்தத் தருணத்தில், எந்தச் சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் புரட்சிகர வழியில் செயல்பட வேண்டுமென் பதையும் எந்தத் தருணத்தில், எந்தச் சூழ்நிலைமைகளில், எந்தச் செயல் துறைகளில் சீர்திருத்தவாதச் செயலில் இறங்க வேண்டுமென்பதையும் மிகமிக அமைதியாகவும் கொஞ்சமும் விருப்புவெறுப்பின்றியும் சிந்தித்துச் சீர்தூக்கி நிர்ணயிப்பதற்கான ஆற்றலை இழக்கத் தொடங்கியதும் பெரும்பாலும் அதோகதிக்கு ஆளாகியுள்ளனர். நிதானக் கண்ணோட்டத்தைத் துறந்து, ''மாபெரும், வெற்றிகர, உலகப்'' புரட்சி எல்லா நிலைமைகளிலுமே எல்லாச் செயல் துறைகளிலுமே எல்லாப் பிரச்சினைகளுக்கும் புரட்சிகர வழி யிலேதான் தீர்வு காண முடியும் தீர்வு காணவும் வேண்டு மென்று நினைக்க முற்படும் போதுதான் மெய்யான புரட்சி யாளர்கள் அழிந்துபடுவார் (வெளியிலிருந்து தோற்கடிக்கப் பட்டுவிடுவார் என்பதல்ல, அவர்களுடைய பணி உள்ளிருந்தே தகர்வுக்கு உள்ளாகி விடும்). அவர்கள் இதைச் செய்வார் களாயின் அவர்கள் அழிந்துபடுவது உறுதி.

இத்தகைய கருத்துக்களை மண்டையில் ஏற்றிக் கொள் பவர் எவரும் அழிந்துபடுவார், ஏனெனில் அடிப்படையான ஒரு பிரச்சினை குறித்து அவர் அசட்டுக் கருத்துக்கள் கொண்ட வர். கொடூரமான ஒரு போரில் (புரட்சியானது மிகமிகக் கொடூர வகைப்பட்ட போரே ஆகும்) அசட்டுத் தனத்துக்குத் தண்டனை தோல்விதான்.

''மாபெரும், வெற்றிகர, உலகப்'' புரட்சி புரட்சிகர மான முறைகளை மட்டும்தான் கையாள முடியும் கையாள வேண்டும் என்று கொள்வதற்கு ஆதாரம் உண்டா? எந்த ஆதாரமும் கிடையாது. இவ்வாறு கொள்வது முற்றிலும் போலியான முடிவே ஆகும். நாம் மார்க்சியத்திலிருந்து பிற ழாது செல்வோமாயின் முற்றிலும் தத்துவார்த்த அடிப்படை களைக் கொண்டு இதனை நிரூபித்துக் காட்டலாம். நமது புரட்சி

யின் அனுபவமும் இது போலியான முடிவே ஆகுமென் பதைத் தெளிவுபடுத்துகிறது. தத்துவார்த்தக் கண்ணேட்டத்திலிருந்து முட்டாள் தனமான காரியங்கள் ஏனைய காலத்தில் செய்யப்படுவது போலவே புரட்சிக் காலத்திலும் செய்யப் படுகின்றன என்று எங்கெல்ஸ் கூறினர்[32]. அவர் கூறியது முழுக்கவும் சரியானதே. முட்டாள் தனமான காரியங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாய்ச் செய்ய முயல வேண்டும், செய்யப்பட்டவற்றை எவ்வளவு சீக்கிரமாய் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாய்ச் சரிசெய்து கொண்டு விட வேண்டும். எந்த ஒரு நேரத்திலும் எந்தப் பிரச்சினைகளுக்குப் புரட்சிகர முறைகளில் தீர்வு காண முடியும், எவற்றுக்கு முடியாது என்பதை நாம் கூடுமான அளவுக்கு நிதானமாய் மதிப்பிட்டாக வேண்டும். நமது நடைமுறை அனுபவத்தின் கண்ணேட்டத்திலிருந்து பிரேஸ்த் சமாதானம்[5] எவ்விதத்திலும் புரட்சிகரமல்லாத செயலுக்குரிய ஓர் உதாரணம். அது சீர்திருத்தவாதச் செயலாகும், இன்னுங்கூட மோசமானதாகும். ஏனெனில் அது பின்வாங்குதலாகும், ஆனல் சீர்திருத்தவாதச் செயலானது பொதுவாய் மெள்ள மெள்ள, எச்சரிக்கையோடு, படிப்படியாய் முன்னேறுகிறதே அன்றி பின்னேக்கிச் செல்வதில்லை. பிரேஸ்த் சமாதானம் செய்து கொண்டதில் நம்முடைய போர்த்தந்திரம் பிழையற்றதாகும் என்பது முழுநிறைவாகவும் எல்லோருக்கும் விளங்கும்படியும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும்படியும் நிரூபிக்கப்பட்டு விட்டதால், இது குறித்து மேலும் கூறத் தேவையில்லை.

நமது புரட்சியின் முதலாளித்துவ-ஜனநாயகப் பணி மட்டும்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்துப் பெருமிதம் கொள்ள நமக்கு முழு உரிமை உண்டு. புரட்சியின் பாட்டாளி வர்க்க அல்லது சோஷலிஸ்டுப் பணியை மூன்று பிரதானக் கூறுகளில் சுருக்கமாய்த் தொகுத்துக் கூறலாம்: 1) ஏகாதிபத்திய உலகப் போரிலிருந்து புரட்சிகரமாய் வெளியேறுதல்; முதலாளித்துவக் கொள்ளைவெறியர்களின் இரு உலகக் கோஷ்டிகளும் ஏற்பாடு செய்திருக்கும் கொலைத் தாண்டவத்தை அம்பலப்படுத்துவதும் நிறுத்துவதும்—நம் தரப்பைப் பொறுத்தவரை இப்பணி பூரணமாய்ச் செய்யப்பட்டு விட்டது; முன்னேறிய நாடுகள் பலவற்றிலும் புரட்சி ஏற்பட்டிருந்தால் மட்டுமே இப்பணி அதன் எல்லாக்

கூறுகளிலும் செய்து முடிக்கப்பட்டிருக்கலாம். 2) பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்குரிய ஒரு வடிவமாய் சோவியத் அமைப்பினை நிறுவுதல். சகாப்தகர முக்கியத்துவம் வாய்ந்த மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. முதலாளித்துவ-ஜனநாயக நாடாளுமன்ற முறையின் சகாப்தம் முடிவடைந்து விட்டது. உலக வரலாற்றிலே ஒரு புதிய அத்தியாயம்—பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரச் சகாப்தம்—ஆரம்பமாகியுள்ளது. சோவியத் அமைப்பும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் எல்லா வடிவங்களும் பல நாடுகளின் முயற்சிகளால் தான் முத்தாய்ப்பு வைக்கப்பட்டு நிறைவு செய்யப்படும். இத்துறையில் இன்னும் நாம் செய்யாதிருப்பவை மிக மிகப் பலவும் உள்ளன. இதைப் பார்க்கத் தவறுவது மன்னிக்க முடியாததாகும். மீண்டும் மீண்டும் நாம் இப்பணியைச் செம்மை செய்துச் செல்ல வேண்டியிருக்கும், திரும்பிச் செய்ய வேண்டியிருக்கும், தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கும். நமது உற்பத்தி சக்திகளையும் நமது கலாசாரத்தையும் வளர்த்திடுவதில் முன்னேக்கியும் மேல்நோக்கியும் நாம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையுடனும் கூடவே நமது சோவியத் அமைப்பை மேம்படுத்துவதற்கும் மாற்றுவதற்குமான பணிகளும் நடைபெற்ருக வேண்டும்—பொருளாதாரம், கலாசாரம் இவற்றின் விஷயத்தில் இன்னமும் நாம் கீழ் மட்டத்தில்தான் இருக்கிரேம். மிகுதியான பலவும் மாற்றப்பட்டாக வேண்டும், இது குறித்து ''கூச்சப்படுவது'' அபத்தமும் (இன்னுங்கூட மோசமானதும்) ஆகும். 3) சோஷலிச அமைப்புக்கான பொருளாதார அடித்தளத்தைப் படைத்து உருவாக்கல். இந்தத் துறையில் மிகவும் முக்கியமானதன், மிகவும் அடிப்படையானதன் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்பட்டாகவில்லை. இவற்றைச் செய்வதே நமக்குரிய பிழையற்ற பணி—கோட்பாட்டின் கண்ணேட்டத்திலும், நடைமுறைக் கண்ணேட்டத்திலும், இன்றைய ருஷ்யாவின் சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசினது கண்ணேட்டத்திலும், சர்வதேசக் கண்ணேட்டத்திலும் இது ஆகப் பிழையற்றதாகும்.

இந்தப் பணியின் பிரதான கூறுகள் இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லையாதலால், நமது கவனம் அனைத்தையும்

இவற்றில் ஒன்றுகுவித்தாக வேண்டும். இங்குள்ள இடர், மாறிச் செல்வதற்குரிய வடிவம் சம்பந்தப்பட்டதாகும்.

1918 ஏப்ரலில் **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** என்பதில் நான் எழுதினேன்:

''பொதுவில் ஒரு புரட்சியாளராக, சோஷலிச ஆதரவாளராக அல்லது கம்யூனிஸ்டாக இருந்துவிட்டால் போதாது. அந்தந்த தருணத்திலும் சங்கிலி அனைத்தையும் பிடித்துக் கொள்ளும் பொருட்டு சங்கிலியில் குறிப்பிட்ட எந்தக் கரணையை உங்கள் சக்தி முழுவதையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டுமென்பதைக் கண்டு கொள்ளவும் அடுத்த கரணைக்கு மாறிச் செல்வதற்காக உறுதியுடன் தயார் செய்யவும் நீங்கள் ஆற்றலுடையோராய் இருத்தல் வேண்டும். கரணைகளின் வரிசைக் கிரமம், அவற்றின் வடிவம், அவை சேர்ந்து இணைந்திருக்கும் விதம், வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில் ஒன்றுக்கொன்று அவற்றுக்குள்ள வேறுபாடு இவையெல்லாம் கொல்லுப்பட்டறையாளர் செய்யும் சாதாரண சங்கிலியில் இருப்பது போல அவ்வளவு எளிதாகவும் பொருளற்றதாகவும் இருக்கவில்லை.''

நாம் பரிசீலிக்கும் செயல் அரங்கில் தற்போது இந்தக் கரணை, தக்கபடியான அரசு ஒழுங்கு முறையின் (நெறி முறையின்) கீழ் உள்நாட்டு **வர்த்தகத்தைப்** புத்துயிர் பெற்றெழச் செய்வதே ஆகும். வரலாற்று நிகழ்ச்சிகளது சங்கிலியில், 1921-22ல் நமது சோஷலிசக் கட்டுமானத்தின் இடைக்கால வடிவங்களில், வர்த்தகம்தான் பாட்டாளி வர்க்க அதிகாரமான நாம், ஆளும் கம்யூனிஸ்டுக் கட்சியான நாம், **''நமது சக்தி முழுவதையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டிய''** ''கரணையாகும்''. இப்பொழுது நாம் போதிய அளவு உறுதியுடன் இந்தக் கரணையைப் ''பற்றிக் கொள்வோம்'' ஆயின், மிக அருகாமையிலான வருங்காலத்தில் சங்கிலி **அனைத்தின்** மீதும் நிச்சயமாய் நாம் கட்டுப்பாடு செலுத்துவோம். பற்றிக் கொள்ளாவிடில், சங்கிலி அனைத்தின் மீதும் நாம் கட்டுப்பாடு செலுத்தப் போவதில்லை, சோஷலிச சமூக-பொருளாதார உறவுகளுக்கான அடித்தளத்தைப் படைப்பிக்கப் போவதுமில்லை.

கம்யூனிசமும் வர்த்தகமுமா?! விநோதமாய்த்தான் தோன்றுகிறது. இரண்டும் தொடர்பில்லாதனவாய், ஒவ்வா

தனவாய், துருவங்களைப் போல விலகி நிற்பனவாய்த் தோன்றுகின்றன. ஆனால் பொருளியலின் கண்ணோட்டத்தி லிருந்து நாம் ஆராய்வோமாயின், கம்யூனிசமானது சிறு-விவசாயியின் தந்தைவழி மரபிலான பயிர்த்தொழிலிலிருந்து விலகி இருப்பதைக் காட்டிலும் அதிகமாய் இவை இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று விலகியிருக்கவில்லை என்பதைக் காண்போம்.

உலக அளவில் நாம் வெற்றி ஈட்டியதும் தங்கத்தை உலகின் மிகப் பெரிய நகரங்கள் சிலவற்றின் தெருக்களில் பொதுக் கக்கூசுகள் கட்டுவதற்காக உபயோகிப்போம் என்று நினைக்கிறேன். ''சுதந்திரத்துக்கான மகத்தான'' போர் என்பதாய் 1914-18ல் நடைபெற்ற போரில், எந்த சமாதானம் மோசமானது—பிரேஸ்த் சமாதானமா[5], வெர்சேய் சமாதானமா[33]—என்கிற பெரும் பிரச்சினையைத் தீர்மானிப்பதற்காக நடைபெற்ற அந்தப் போரில், தங்கத்துக்காக வேண்டி எப்படி ஒரு கோடிப் பேர் கொல்லப்பட்டனர், மூன்று கோடிப் பேர் முடமாக்கப்பட்டனர் என்பதை மறந்து விடாத தலைமுறைகளுக்கும், எப்படி இதே போலத் தங்கத்துக்காக வேண்டி உதாரணமாய் 1925லோ, 1928லோ உதாரணமாய் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமோ இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமோ இதையொத்த இரு நாடுகளுக்குமோ நடக்கக் கூடிய போரில் இரண்டு கோடிப் பேரைக் கொல்லவும் ஆறு கோடிப் பேரை முடமாக்கவும் நிச்சயமாய்த் திட்டமிடுகிறார்கள் என்பதைக் காண்போருக்கும் இது அனுகூலமாய்த் தங்கத்தை உபயோகிப்பதற்கான ''நேர்மை மிக்க'' முறையாகவும் கல்வி போதமளிக்கும் முறையாகவும் இருக்கும்.

ஆனால் தங்கத்தை இந்தக் காரியத்துக்காக உபயோகிப்பது எவ்வளவு ''நேர்மை மிக்கதாயும்'' பயனுள்ளதாயும் அல்லது மனிதாபிமானம் கொண்டதாயும் இருப்பினும், இந்த நிலையை வந்தடையும் பொருட்டு நாம் இன்னும் பத்து, இருபது ஆண்டுகளுக்கு 1917-21ஆம் ஆண்டுகளின் கட்டத்தில் செய்தது போலவே அதே கடுமையுடனும் அதே அளவு வெற்றியுடனும் மேலும் மிக விரிவான துறையிலே பாடுபட்டாக வேண்டுமெனக் கூறுகிறோம். இதற்கிடையில் ருஷ்யாவின் சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசில் நாம் தங்கத்தை மீத்துச் சேமிக்கவும், மிக உயர்ந்த விலைக்கு விற்க

வும், அதைக் கொண்டு மிகக் குறைந்த விலைக்குப் பண்டங்கள் வாங்கவும் வேண்டும். ஓநாய்களிடையே வாழும் போது ஓநாயைப் போல ஊளையிடத்தான் வேண்டும், எல்லா ஓநாய்களையும் ஒழித்துக் கட்டுவதைப் பொறுத்த மட்டில்—அறிவு வழிப்பட்ட மனித சமுதாயத்தில் இவற்றை ஒழித்துக் கட்டத்தான் வேண்டும்—''பெருமைப் பேச்சுக்கு நேரம் படையணிக்குப் பிற்பாடே அன்றி முன்னதாய் அல்ல'' என்கிற அறிவார்ந்த ருஷ்ய முதுமொழியின் பிரகாரம் நடந்து கொள்வோம்.

கோடிக் கணக்கான சிறு விவசாயிகளுக்கும் பெருவீதத் தொழில் துறைக்கும் இடையில் வர்த்தகம்தான் சாத்தியமான ஒரேயொரு பொருளாதார இணைப்பு—இந்த விவசாயிகளுடன் கூடவே சிறந்த சாதனங்களையும் மின்விசைக் கம்பி வழிகளது வலைப்பின்னல் அமைப்பையும் கொண்ட பெருவீத இயந்திரத் தொழில் துறை இல்லையேல், சிறு விவசாயிகளுக்குச் சிறந்த பண்டங்களை முன்னிலும் கூடுதலான அளவுகளிலும் மேலும் சீக்கிரமாகவும் மலிவாகவும் வழங்கும் திறன் பெறுவதற்குப் போதுமான தொழில்நுட்ப சாதனங்களும் ஒழுங்கமைப்பு ''மேற்கட்டுமானங்களும்'' பிற கூறுகளும் கொண்ட தொழில் துறை இல்லையேல்... வர்த்தகம் தான் சாத்தியமான ஒரேயொரு பொருளாதார இணைப்பு. உலக அளவில் இந்த ''இல்லையேல்'' என்னும் நிபந்தனை ஏற்கெனவே சாதிக்கப் பெற்றுவிட்டது. இந்த நிபந்தனை ஏற்கெனவே இருப்பதாகி விட்டது. ஆனால் முன்பெல்லாம் மிகவும் பிற்பட்ட முதலாளித்துவ நாடுகளில் ஒன்றாய் இருந்த நாடு தொழில்துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே அனேகமாய்ப் புத்தம்புதிய இணைப்புகளைத் தனித்து நின்று நேரடியாய் ஒரே அடியில் தோற்றுவிக்கவும் பயன்படுத்தவும் ஒழுங்கமைக்கவும் முயற்சி செய்து, ''நேரடித் தாக்குதல்'' மூலம் இந்தப் பணியை நிறைவேற்றத் தவறி விட்டது; இப்பொழுது அது மெதுவான, படிப்படியான, எச்சரிக்கையுடனான ''முற்றுகை'' நடவடிக்கைகள் பலவற்றின் மூலம் இப்பணியை நிறைவேற்ற முயற்சி செய்தாக வேண்டும்.

பாட்டாளி வர்க்க அரசாட்சி வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்து அதனை நெறிப்படுத்திக் குறிப்பிட்ட வழிகளிலே செலுத்தி, குறிப்பிட்ட வரம்புகளுக்குள் அதைச் செயல்பட

வைக்க முடியும். ஒரு சிறு, மிகச் சிறிய ஓர் உதாரணம் தருகிறேன். தொன்பாஸ் நிலக்கரிப் பிரதேசத்தில் பொருளாதாரம் சிறிதளவு, இன்னமும் மிகச் சிறிதளவே ஆன, ஆனால் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி புத்துயிர் பெற்றிருக்கிறது. இதற்கு, பெரிய அரசாங்கச் சுரங்கங்களில் உழைப்பின் உற்பத்தித் திறனில் ஏற்பட்ட உயர்வு ஓரளவும், விவசாயிகளின் சிறிய சுரங்கங்கள் குத்தகைக்கு விடப்பட்டது ஓரளவும் காரணமாகும். இதன் விளைவாய்ப் பாட்டாளி வர்க்க அரசாங்கத்துக்கு கூடுதலாய்ச் சிறிதளவு (முன்னேறிய நாடுகளில் கிடைப்பதுடன் ஒப்பிட்டால் அற்ப சொற்ப அளவே என்றாலும் வறுமை வாய்ப்பட்ட நமது நிலைமையைக் கருதும் போது குறிப்பிடத்தக்க அளவிலான) நிலக்கரி கிடைத்து வருகிறது. இதன் அடக்க விலை 100% என்பதாய் வைத்துக் கொள்வோம். இந்த நிலக்கரியை அது பல்வேறு அரசாங்க இலாகாக்களுக்கு 120% என்கிற விலைக்கும், தனி நபர்களுக்கு 140% என்கிற விலைக்கும் விற்று வருவதாய்க் கொள்வோம். (நான் தரும் புள்ளிகள் முற்றிலும் கற்பிதமானவை என்பதை இடைக்குறிப்பாய் இங்கு கூற வேண்டும், ஏனெனில் முதலாவதாக, கறாரான புள்ளிகள் எனக்குத் தெரியாது; இரண்டாவதாக, தெரிந்தாலுங்கூட இப்பொழுது அவற்றை நான் பகிரங்கப்படுத்த மாட்டேன்.) மிகவும் மிதமான அளவுகளில் தான் என்றாலும் தொடங்கி விட்டோம் என்பதாய் இதிலிருந்து தெரிகிறது: தொழில் துறைக்கும் விவசாயத்துக்கும் இடையே பரிவர்த்தனையைக் கட்டுப்பாடு செய்ய, மொத்த வர்த்தகத்தைக் கட்டுப்பாடு செய்ய, இருக்கக் கூடிய சிறிய, பிற்பட்ட தொழில் துறையை அல்லது பலவீனமுற்றுவிட்ட பாழ்பட்ட நிலையிலுள்ள பெருவீதத் தொழில் துறையை நிர்வகிக்கும் பணியைச் சமாளிக்கத் தொடங்கி விட்டோம் என்பதாய்த் தெரிகிறது; தற்போதைய பொருளாதார அடிப்படையில் வர்த்தகத்துக்குப் புத்துயிரூட்டவும், சாதாரண நடுத்தர விவசாயியை (அதாவது வகை மாதிரியாய்க் கொள்ளத்தக்க விவசாயியை, பெருந்திரளுக்கு உதாரணமான, பெருந்திரளானோரின் மனப்பாங்குக்கு மெய்யான பிரதிநிதியான விவசாயியை) பொருளாதாரம் புத்துயிர் பெறுவதன் அனுகூலத்தை உணரும்படிச் செய்யவும், மேலும் முறையாகவும் விடாப்பிடியாகவும் மேலும் விரிவாகவும் வெற்றிகரமாகவும் பெருவீதத் தொழில் துறையைப் புனரமைப்பதற்காக

இதைப் பயன்படுத்திக் கொள்ளவும் தொடங்கிவிட்டோம் என்பதாய்த் தெரிகிறது.

வர்த்தகத்தின்பால் பரம அலட்சியப் போக்கு கொண்ட ''உணர்ச்சி வயப்பட்ட சோஷலிச'' அதிகாரத்துக்கோ பழைய ருஷ்ய, அரைப்பிரபுக்குலத்து, அரைவிவசாயி, தந்தை வழிச் சமூகத்து மனப்பான்மைக்கோ நாம் சரணடையப் போவதில்லை. இடைக்காலப் பொருளாதார வடிவங்கள் யாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், இது அவசியமென்பதால் பயன்படுத்தக் கற்றுக் கொண்டாக வேண்டும். விவசாயிகளுக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான இணைப்பை வலிமையாக்கும் பொருட்டு, நாச மாகிவிட்ட அவதிக்குள்ளான நமது நாட்டின் பொருளா தாரத்தை உடனடியாக உயிர் பெற்றெழச் செய்யும் பொருட்டு, தொழில் துறையை மேம்படுத்தும் பொருட்டு, மின்மயமாக்கம் செய்வது போன்ற வருங்காலத்துக்குரிய மிக வும் விரிவான ஆழ்நிலை செயற்பாட்டுக்குரிய நடவடிக்கை களுக்குப் பாதையைச் செப்பனிடும் பொருட்டு இவை யாவற்றையும் நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும், பயன் படுத்திக் கொள்ள வேண்டும்.

புரட்சியின்பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினை மார்க் சியம் ஒன்றுல் மட்டுமே துல்லியமாகவும் பிழையின்றியும் வரையறுக்க முடிந்துள்ளது. அதே போதில் மார்க்ஸ் இந்த உறவை ஒரு கோணத்தில் மட்டுமிருந்துதான்—ஒரே நாட் டில்தான் என்றுலும் பாட்டாளி வர்க்கத்தின், ஓரளவுக்கு நிரந்தரமான நீடித்து நிலவும் முதலாவது வெற்றிக்கு முற் பட்டதான நிலைமைகளில் மட்டும்தான்—கண்ணுற முடிந் தது. இந்த நிலைமைகளில், பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரமான வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவே சீர் திருத்தங்கள் என்பதுதான் சரியான உறவுக்குரிய அடிப்படை யாய் இருந்தது. முதலாளித்துவ உலகு முழுவதிலும் இந்த உறவுதான் பாட்டாளி வர்க்கத்தினுடைய புரட்சிகரப் போர்த்தந்திரத்தின் அடிப்படையாகும், இரண்டாவது அகி லத்தின்[11] ஊழல் மலிந்த தலைவர்களும் இரண்டரையாவது அகிலத்தின்[28] போலிப் புலமையும் பொய் மினுக்கும் கொண்ட தீரர்களும் திரித்துப் புரட்டியும் மூடிமறைத்தும் வரும் அரிச்சுவடிப்பாடமாகும். பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்குப் பிற்பாடு — ஒரேயொரு நாட்டில்தான் இந்த வெற்றி

என்ற போதிலும்—புரட்சியின் பால் சீர்திருத்தங்களுக்குள்ள உறவினில் புதியதொன்று இடம் பெறுகிறது. கோட்பாட்டினில் அது முன்பு போலவே தான் இருக்கிறது. ஆனால் வடிவத்தில் ஒரு மாற்றம் ஏற்படுகிறது—மார்க்சினாலுங்கூட முன்னறிந்து கொள்ள முடியாத மாற்றம். ஆயினும் மார்க்சியத்தினுடைய தத்துவஞானத்தின், அரசியலின் அடிப்படையிலே தான் இதைப் புரிந்து கொள்ள முடியும். பிரேஸ்த் பின்வாங்குதலை நம்மால் வெற்றிகரமாய் நடத்த முடிந்தது ஏன்? ஏனென்றால், பின்வாங்குவதற்கு இடமிருக்கும்படி அந்த அளவுக்கு நாம் முன்னேறிச் சென்றிருந்தோம். அப்படித் தலைதெறிக்கும் வேகத்தில், ஒருசில வாரங்களுக்குள், 1917 அக்டோபர் 25லிருந்து பிரேஸ்த் சமாதானத்துக்குள், நாம் சோவியத் அரசைக் கட்டியெழுப்பினோம், ஏகாதிபத்திய போரிலிருந்து புரட்சிகர முறையில் வெளியேறினோம், முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியை நிறைவுறச் செய்தோம்; ஆகவே பின்னோக்கி அமைந்த அந்தப் பெரிய நடையும்கூட (பிரேஸ்த் சமாதானம்) நாம் இந்த ''இடை ஒய்வைப்'' பயன்படுத்திக் கொள்ளவும் கல்ச்சாக்கையும் தெனீக்கினையும் யுதேனிச்சையும் பில்சூட்ஸ்கியையும் விராங்கெலையும் எதிர்த்து வெற்றிகரமாய் முன்னேறிச் செல்லவும் நமக்குப் போதுமான இடம் விட்டுவைத்தது.

பாட்டாளி வர்க்கத்தின் வெற்றிக்கு முன்பு சீர்திருத்தங்கள் புரட்சிகர வர்க்கப் போராட்டத்தின் இடைவிளைவாய் இருக்கின்றன. வெற்றிக்குப் பிற்பாடு (சர்வதேச அளவில் இன்னமும் ''இடைவிளைவாகவே'' இருப்பினும்) வெற்றி ஈட்டப் பெற்ற நாட்டுக்கு, மூச்சு விடுவதற்கான அவசியமும் நியாயமுமான சிறிது நேர இடைவெளியாக அமைகிறது; மிகவும் கடுமையாய்ப் பிரயாசையில் ஈடுபட்டிருந்ததைத் தொடர்ந்து இப்பொழுது ஏதேனும் சில மாற்றமைவுகளைப் புரட்சிகர வழியில் சாதிக்கப் போதுமான பலம் இல்லை என்பது தெளிவாகிறது. வெற்றியானது பலவந்தப் பின்வாங்குதலிலுங்கூட உறுதியுடன் நிற்க, பொருளாயத வழியிலும் ஆன்மிக வழியிலும் உறுதியுடன் நிற்க ''உள்ளார்ந்த பலத்தைப்'' படைக்கிறது. பொருளாயத வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, படுதோல்வி அளித்துவிடாதபடி பகைவனைத் தடுப்பதற்குப் போதுமான அளவுக்குப் பலத்தில் மேல் நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுதல் என்று அர்த்தம். ஆன்

*மிக வழியில் உறுதியுடன் நிற்பதென்பதற்கு, நாம் மனந் தளர்ந்துவிடவும் ஒழுங்கு குலைந்துவிடவும் இடந் தராதிருத்தல், நிலைமையைப் பற்றிய நிதானம் தவறுதிருத்தல், உத்வேகத்தையும் மன உறுதியையும் பாதுகாத்து, நெடுந் தொலைவு—ஆனுல் அளவு மீருமலும், தக்க தருணத்தில் பின் வாங்குதலை நிறுத்தித் தாக்குதலுக்குத் திரும்பும்படியும்— பின்வாங்க முடியும்படியாய் இருத்தல் என்று அர்த்தம்.*

*நாம் அரசு முதலாளித்துவத்துக்குப் பின்வாங்கினேம். ஆனுல் அளவு மீறி நெடுந்தொலைவு பின்வாங்கவில்லை. இப்பொழுது வர்த்தகத்தில் அரசாங்க ஒழுங்கியக்கத்துக்கு நாம் பின்வாங்கிச் செல்கிறேம். ஆனுல் அளவு மீறிப் பின்வாங்கி விடப் போவதில்லை. இந்தப் பின்வாங்குதல் முடிவுறும் நிலைக்கு வருகிறது என்பதற்குக் கண்கூடான அறிகுறிகள் தெரிகின்றன. அதிக தொலைவிலில்லாத வருங்காலத்தில் நாம் இந்தப் பின்வாங்குதலை நிறுத்திவிட முடியும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. அவசியமாயுள்ள இந்தப் பின்வாங்குதலை நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உணர்வு பூர்வமாகவும் ஒருமனதாகவும் தப்பெண்ணங்களிலிருந்து விடுபட்டும் செய்கிறேமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இதை நாம் சீக்கிரமாகவே நிறுத்த முடியும்; அவ்வளவுக்கு அவ்வளவு இதனை அடுத்து நமது வெற்றிகர முன்னேற்றம் நிலையானதாகவும் வேகமுடையதாகவும் விரிவானதாகவும் இருக்கும்.*

*நவம்பர் 5, 1921*

நூல் திரட்டு,
*தொகுதி 44,*
*பக்கங்கள் 221-29*

## அக்டோபர் புரட்சியின் நான்காம் ஆண்டுவிழாவைக் கொண்டாடுவதற்காக நடைபெற்ற புரோஹரவ் ஜவுளி உற்பத்தி ஆலைத் தொழிலாளர்களின் கூட்டத்தில் ஆற்றிய உரை
## நவம்பர் 6, 1921

சுருக்கமான செய்தித்தாள் அறிக்கை

*(கூட்டத்திலுள்ளவர் அனைவரும் எழுந்து நிற்கின்றனர். நீண்ட கரவொலி.)*

கடந்த நான்காண்டு காலத்தைக் கண்ணோட்டமிடுவோமாஞல் ருஷ்யாவில் தவிர வேறெந்த நாட்டிலும் பாட்டாளி வர்க்கம் முதலாளி வர்க்கத்தின் மீது பூரண வெற்றியை அடைந்ததேயில்லை என்பதைப் பார்க்கிருேம். ஆளுல் நாம் வெற்றி பெற்றிருந்தால் அதற்குக் காரணம் தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்களது நிலத்திற்காகவும் தங்களது ஆட்சிக்காகவும் தாங்கள் போராடி வருவதை அறிந்து இருந்தார்கள். தெனீக்கின், விராங்கெல் மற்றும் கல்ச்சாக்கிற்கு எதிரான போர் வரலாற்றிலேயே முதல் தடவையாக உழைக்கும் மக்கள் தங்களை ஒடுக்கியவர்களை எதிர்த்து நடத்திய வெற்றிகரமான போராட்டமாகும். நமது வெற்றியின் இரண்டாவது காரணம், அன்டான்டு நாடுகள்[7] ருஷ்யாவின் மீது போதுமான எண்ணிக்கையில் விசுவாசமுள்ள போர்ப்படைகளை ஏவிட முடியவில்லை. ஏனெனில் பிரான்சின் படைவீரர்களும் இங்கிலாந்தின் கப்பற்படை வீரர்களும் தங்களது சகோதரர்களை எதிர்த்துப் போய் ஒடுக்கிட விரும்பவில்லை.

நான்காண்டுகளில் ஓர் இணையற்ற அதிசயத்தை நிகழ்த்திட நம்மால் முடிந்தது. பசியால் வாடும், பலவீனமான மற்றும் அரைவாசி அழிந்து பட்டு நின்ற நாடு தனது விரோதிகளை — வலிய முதலாளித்துவ நாடுகளை — தோற்கடித்து விட்டது.

உலகில் நமக்கென்று வலியதோர் இடத்தை நாம் பெற்றுவிட்டோம். இதற்கு ஈடு இணை கிடையாது. மற்றும் இது முற்றிலும் எதிர்பாராதது. நமது தேசியப் பொருளாதாரத்தை இயங்கிடச் செய்திடும் பிரம்மாண்டமான பணி மட்டுமே இன்னும் எஞ்சியிருக்கிறது. நாம் இதுகாறும் சாதித்துள்ளவை அனைத்தும் உலகிலேயே மிக அற்புதமான சக்தியின் மீது— அதாவது தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் மீது— நாம் சார்ந்துள்ளோம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நமது அடுத்த ஆண்டு விழாவை உழைப்புத் துறை முன்னணியில் பெறும் வெற்றியோடு கொண்டாடிடுவோம் என்ற நம்பிக்கையினை இது ஊட்டுகிறது.

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கம் 234

# அக்டோபர் புரட்சியின் நான்காம் ஆண்டுவிழாவைக் கொண்டாடுவதற்காக நடைபெற்ற ஹமோவ்னிச்செஸ்கி மாவட்ட உழைக்கும் ஆடவர் மகளிர் மற்றும் செஞ்சேனை வீரர், இளைஞர்களின் கூட்டத்தில் ஆற்றிய உரை

## நவம்பர் 7, 1921

(''சர்வதேசிய கீதத்தை'' வாத்தியக் குழு இசைக்கிறது. பொதுவான கர வொலி.) தோழர்களே, மாஸ்கோவில் இருந்து நேரடியாக ஏதாவதொரு போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களின் நினைவுகளைப் போல அவ்வளவு படிப்பினையுடைய, சுவையான நினைவுகளை நான் உங்களோடு பகிர்ந்து கொள்ள முடியாதவனாயிருக்கிறேன். அச்சமயத்தில் நான் மாஸ்கோவில் இருக்கவில்லை. எனவே ஒரு சுருக்கமான வாழ்த்துரையுடன் முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு முன்பு பேசிய தோழர்களில் ஒருவர் தொழிற் சங்கங்களிலும், சோவியத் ஸ்தாபனங்களிலும் தொழிலாளர்கள் கடினமாக உழைத்திட வேண்டும் என்றும் அந்தப் பணியில் தங்களது சக்தியனைத்தையும் செலவிட வேண்டும் என்றும் அறைகூவல் விடுத்து தமது சொற்பொழிவை நிறைவு செய்தார். அந்த அறைகூவலை நான் ஆதரிக்க விரும்புகிறேன்.

தோழர்களே, இந்த நாலாண்டு காலகட்டத்தில் ஈடு இணையற்ற போராட்டத்தை நாம் அனுபவப்பட்டுள்ளோம். வெளிநாட்டுத் தொழிலாளி உலகப் புரட்சியை இன்னும் நெருங்கி விடவில்லை என்றும், நாம் கடுமையான உள்நாட்டுப் போரினை மூன்று ஆண்டுகள் நடத்திட வேண்டி நேரிடும் என்றும் நான்காண்டுகளுக்கு முன்பு நம்மிடம் யாராவது சொல்லியிருந்தால், நாம் இப்போரைச் சமாளித்து இருக்கக் கூடும் என்று அந்தச் சமயத்தில் ஒருவரும் நம்ப மாட்டார்கள். இருப்பினும், நாம் எல்லாப் பக்கங்களிலும் தாக்கப்பட்ட போதிலும் நாம் அந்தத் தாக்குதலை எதிர்த்து நின்றோம். இவ்வாறு செயல்படுவதில் நாம் வெற்றி பெற்றோம் என்றால், அதற்குக் காரணம் ஏதோ ஓர் அற்புதம் நடந்தது என்பதல்ல (ஏனெனில் புத்தியுள்ள மனிதர் அற்புதங்களில் நம்

பிக்கை கொள்வதில்லை); மாருக நமக்கு எதிராக அனுப்பப்பட்ட துருப்புகள் நம்ப முடியாதவையாக இருந்ததே. அர்ஹான்கெல்ஸ்கிலிருந்து ஆங்கில துருப்புகள் போகாது இருந்திருந்தால், ஒதேஸ்ஸாவிலிருந்து பிரெஞ்சு மாலுமிகள் போகாது இருந்திருந்தால், வெளிநாட்டுத் தொழிலாளி படையாளியின் சீர் உடையில் நமக்கு எதிராக அனுப்பப்பட்ட போது சோவியத் ஆட்சியின் பால் அனுதாபியாக அவர் மாருதிருந்தால், இன்றைக்குக் கூட நமக்கு எதிரான தாக்குதல் சாத்தியமாகி இருக்கும். ஆனுல் நாம் அதைக் கண்டு பயப்படவில்லை. ஏனெனில் ஒவ்வொரு நாட்டிலும் நமக்குப் பல நண்பர்கள் உண்டு என்று நாம் அறிவோம். ஓர் இணைக்குழுவாக உழையுங்கள் என்று உங்களுக்கு அறிவுரை கூறிய தோழர் முற்றிலும் சரியாகச் சொன்னுர். அவரை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். ஏனெனில் நமக்கு மிகச் சங்கடமான நேரத்தில் பஞ்சம் நம்மைத் தாக்கியது என்பதையும், உலகம் முழுவதிலும் உள்ள முதலாளிகள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நம்மை மீண்டும் அடிமைத்தனத்துக்குள் விரட்டிட முயற்சிக்கின்றனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆனுல் தொழிலாளர் திரள் நாம் இந்த முதலாளிகளை எதிர்த்துப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதைச் சாத்தியமாக்கி வருகின்றது.

உதாரணமாக, விவசாயிகளுக்கு அளிக்கப்படும் விதைத் தானிய உதவியை எடுத்துக் கொள்ளுங்கள். கட்டாயத் தானியக் கொள்முதலுக்குப் பதிலாக நிர்ணயமான உணவுப் பொருள் வரி[34] செலுத்திடும் முறையைக் கொண்டு வந்துள்ளோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்போது அந்த வரியும், விதைத்தானியக் கடனும் எவ்வளவு நன்ருக வசூலாகி வருகிறது என்பதை இப்போது பார்க்கலாம்.

பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள விவசாயிகளுக்கு வசந்த கால சாகுபடி நிலங்களில் விதைப்புச் செய்கையில் எவ்வாறு உதவுவது என்று அண்மையில் ஒரு நாள் விவாதித்தோம். அரசாங்க உடைமையில் உள்ள விதையின் அளவு 1921 ஆண்டு விதைத்த அளவுக்குக் கூட விதைப்பதற்குப் போதுமானதாக இராது என்பதை நாங்கள் உணர்ந்தோம். அதை நிறைவேற்றிட அரசுக்கு 30 மில்லியன் பூடு தானியங்கள் தேவைப்படும். நிர்ணயமான உணவுப்

பொருள் வரியின் மூலம் நாம் 15 மில்லியன் பூடு தானியம் மட்டும் பெற முடியும். எஞ்சிய 15 மில்லியன் பூடு தானியத்தை வெளிநாட்டில்தான் வாங்கிட வேண்டும். சமீபகாலத்தில் ஆங்கில முதலாளி வர்க்கம் சோவியத் ருஷ்யாவுடன் கொண்டுள்ள வியாபார ஒப்பந்தத்தைக் கைவிட்டுவிட வேண்டுமென்று பிரச்சாரம் செய்து வருகிறது. ஆனால் ஆங்கில தொழிலாளர்கள் அதை எதிர்க்கிறார்கள். இப்போது இதர நாடுகளுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்று நாம் அறிவோம். 15 மில்லியன் பூடு தானியங்களைக் கொள்முதல் செய்வது மிகக் கடினமானதுதான் என்றாலும் நாம் அதைப் பெற்றிடுவோம்.

வெளிநாடுகள் அனைத்திலும் தொழில்துறை நெருக்கடிகள் மற்றும் வேலையில்லாத்திண்டாட்டத்தைப் பெருமளவில் நாம் காண்கிறோம். வெட்கக்கேடான வெர்சேய் உடன்படிக்கையால்[33] நசுக்கப்பட்டுள்ள ஜெர்மனி சர்வதேச அரங்கிலிருந்து நீண்டதொரு காலத்திற்கு வெளியேற்றப்பட்டு விட்டது. வெர்சேய் சமாதான உடன்படிக்கையின் கீழ் ஜெர்மனி வியாபாரம் செய்யக் கூடாதபடி நொறுக்கப்பட்டு விட்டது. முன் என்றும் கண்டிராத வெர்சேய் உடன்படிக்கையை நேச நாடுகள் நிறைவேற்றின. ஆனால் அதை நிறைவேற்றியும் அவை தம்மைத் தாமே அழித்து கொண்டுள்ளன.

ஒவ்வொரு நாளும் செல்லுந் தோறும் நமது பொருளாதார நிலைமை மேம்பாடு அடைந்து வருகிறது.

நான் உங்களைக் கேட்பது என்னவென்றால், எனக்கு முன்பு பேசிய தோழரின் அறைகூவலுக்குச் செவி கொடுத்து நமது நாட்டில் இன்னும் கடினமாக உழையுங்கள். இதற்கான அவசியத்தை முழுவதாக நீங்கள் உணர்ந்தாக வேண்டும். விவசாயிகளது பொருளாதாரத்தை மேம்படுத்த நாம் உழைக்கிறோம். அதற்கு முன்னைவிட அதிக அளவு முயற்சி தேவை. நாம் இதைச் சாதித்திடுவோம் என்பதில் நமக்கு நம்பிக்கையுண்டு. (கரவொலி. வாத்தியக் குழு ''சர்வதேசிய கீதத்தை'' இசைக்கிறது.)

நூல் திரட்டு,
தொகுதி 44,
பக்கங்கள் 235-37

1922

# கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காம் சர்வதேசியக் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர்கள், செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்திற்கு

## ருஷ்யப் புரட்சியின் ஐந்து ஆண்டுகளும் உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்களும்

மாஸ்கோ சோவியத்தின்
பிளீனம் கூட்டத்தில்
ஆற்றிய உரை
நவம்பர் 20

# கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காம் சர்வதேசியக் காங்கிரஸ் மற்றும் தொழிலாளர்கள், செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளது பெத்ரோகிராத் சோவியத்திற்கு

மாநாட்டின் முதல் அமர்வில் நான் கலந்து கொள்ள முடியாமைக்கும் எனது வாழ்த்துக்களை எழுத்தில் வடிப்பதோடு அமைய வேண்டியுள்ளதே என்று பெரிதும் வருந்துகிறேன்.

கம்யூனிஸ்டுக் கட்சிகள் பிரம்மாண்டமான இடையூறுகளை எதிர்நோக்க வேண்டி நேரிட்ட போதும், கம்யூனிஸ்டு அகிலம் வளர்ந்து வலிவடைந்து வருகிறது. தொழிலாளர்களில் பெரும்பான்மையோரை நம் பக்கம் இழுப்பது இன்றும் நமது குறிக்கோளாக இருக்கிறது. என்ன ஆனாலும் நாம் இதை அடைந்தே தீருவோம்.

இரண்டாவது[11] மற்றும் இரண்டரையாவது[28] அகிலங்கள் இணைக்கப்பட்டது பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்திற்குப் பெரிதும் நன்மை பயக்கும்—பொய்மை குறைவதும் ஏமாற்று குறைவதும் தொழிலாளி வர்க்கத்தின் நன்மைக்கே எப்போதும் அமையும்.

கம்யூனிஸ்டு அகிலத்தின் நான்காம் மாநாட்டுக்கு விருந்தோம்பும் பெத்ரோகிராத் தொழிலாளர்களுக்கும்,புதிதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள சோவியத்திற்கும் எனது நல்லாசிகளையும் தோழமை மிக்க வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெத்ரோகிராத் தொழிலாளர்கள் பொருளாதார முனையிலும் முன்னணியில் நின்றிட வேண்டும். பெத்ரோகிராதின் பொருளாதார மறுமலர்ச்சியின் துவக்கம் பற்றிக் கேள்வியுற்று மகிழ்ச்சி அடைகிறோம். பெத்ரோகிராதுக்கு வரும்படி நீங்கள் விடுத்த அழைப்பினை விரைவில் ஏற்று அண்மையில் அங்கு வர முடியும் என நம்புகிறேன்.

ருஷ்யாவில் சோவியத் ஆட்சியதிகாரம் தனது ஐந்தாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. அது முன் எப்போதையும் விட உறுதியாக இருக்கிறது. உள்நாட்டுப் போர்

ஒழிந்தது. பொருளாதாரத் துறையில் முதல் வெற்றிகள் கிடைத்து விட்டன. முதலாளித்துவத்தைத் தூக்கி எறியும் தங்களது கடினமான போராட்டத்தில் உலகமெங்கணு உள்ள தொழிலாளர்களுக்கு உதவிடுவதை மகத்தான பெருமைக்குரிய காரியமாக சோவியத் ருஷ்யா கருதுகிறது. வெற்றி நமதே.

*கம்யூனிஸ்டு அகிலம் நீடூழி வாழ்க!*

*மாஸ்கோ, நவம்பர் 4, 1922*

**வி. உலியானவ்**
**(லெனின்)**

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கம் 277

## ருஷ்யப் புரட்சியின் ஐந்து ஆண்டுகளும் உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்களும்

**கம்யூனிஸ்டு அகிலத்தின்**
**நான்காம் காங்கிரசில் ஆற்றிய உரை**
**நவம்பர் 13, 1922**

(தோழர் லெனினை வரவேற்று ஆரவாரமான நீடித்த கரவொலி, பொது ஆரவாரம். எல்லோரும் எழுந்து நின்று ''சர்வதேசியக் கீதத்தைச்'' சேர்ந்து. பாடுகின்றனர்.) தோழர்களே! பேச்சாளர் பட்டியலில் பிரதான பேச்சாளராக என் பெயர் குறிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் எனது நீடித்த உடல்நலமின்மைக்குப் பின்னர் என்னல் ஒரு நீண்ட அறிக்கையைச் சமர்ப்பிக்க முடியாது என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். கேந்திரமான விஷயங்கள் மீது ஒரு சில அறிமுகக் குறிப்புகளை மட்டுமே என்னல் தர முடியும். எனது உரைபொருள் மிகவும் வரம்புக்குட்பட்டது. ''ருஷ்யப் புரட்சியின் ஐந்து ஆண்டுகளும் உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புக்களும்'' எனும் இந்த உரைபொருள் பொதுவாக மிகவும் விரிவானது மிகவும் பெரிது, ஒரு பேச்

சாளர் ஓர் உரை மூலம் பேசித்தீர்த்து விடக்கூடிய ஒன்றல்ல. இதனுல்தான் இந்த உரைபொருளில் ஒரு சிறிய பகுதியை மட்டுமே நான் எடுத்துக் கொள்கிறேன், அதாவது, ''புதிய பொருளாதாரக் கொள்கை பற்றிய'' விஷயம். இப்போது எது மிகவும் முக்கியமான விஷயமாக இருக்கிறது என்பதை நீங்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் என்பதன் பொருட்டே நான் இந்த விஷயத்தின் இந்தச் சிறிய பகுதியை மட்டுமே வேண்டுமென்றே எடுத்துக் கொண்டிருக்கிறேன். எது எப்படியாயினும் இது எனக்கு மிகவும் முக்கியமானது, காரணம் இப்போது நான் இதன் மீது தொடர்ந்து வேலை செய்து வருகிறேன்.

எனவே, புதிய பொருளாதாரக் கொள்கையை[30] எப்படித் துவக்கி வைத்தோம் என்பது குறித்தும் இந்தக் கொள்கையின் உதவியுடன் என்ன பலன்களை அடைய முடிந்தது என்பது குறித்தும் நான் உங்களிடம் கூறுவேன். இந்த விஷயத்தோடு நான் வரையறுத்துக் கொள்வேனுகில் நான் ஒரு வேளை உங்களுக்கு இது பற்றிய ஒரு பொதுவான அளவீட்டையும் பொதுவான கருத்தையும் தருவதில் வெற்றியடையலாம்.

புதிய பொருளாதாரக் கொள்கையினை எவ்வாறு வந்தடைந்தோம் என்பதை முதலில் விளக்க நான் 1918ல் எழுதிய ஒரு கட்டுரையில் இருந்து மேற்கோள் காட்ட வேண்டும்[35]. 1918 துவக்கத்தில் ஒரு சுருக்கமான விவாதக் கட்டுரையில் அரசு முதலாளித்துவத்தின் பால் நாம் ஏற்க வேண்டிய உறவுநிலை குறித்த விஷயத்தை நான் குறிப்பிட்டிருந்தேன். நான் அப்போது எழுதியதாவது:

''இன்றைய நிலைமைகளுடன் ஒப்பு நோக்கும் போது (அதாவது அந்த சமயம் இருந்த நிலை) நமது சோவியத் குடியரசில் அரசு முதலாளித்துவம் ஒரு முன்னேற்றப் படியேயாகும். சுமார் ஆறுமாத காலத்தில் அரசு முதலாளித்துவம் நமது குடியரசில் நிலைநாட்டப்பட்டுவிடும் பட்சத்தில், அது ஒரு மாபெரும் வெற்றியாகும், மற்றும் ஓர் ஆண்டுக்குள் சோஷலிசம் நிரந்தரமாக உறுதிப்பட்டு நமது நாட்டில் வெல்லற்கரியதாகிவிடும் என்பதற்கான திட்டமான உத்தரவாதமும் ஆகும்.''

நாம் இப்போது இருப்பதை விடவும் அதிக முட்டாள்

களாக இருந்த போது, அதே போது இத்தகைய விவகாரங்களை எடுத்துக் கவனிக்க இயலாது என்ற அளவுக்கு அத்தனை முட்டாள்களாக இருக்காத ஒரு சமயத்தில் இது கூறப்பட்டது என்பது நிச்சயம்.

இவ்வாறாக 1918ல், சோவியத் குடியரசில் அன்று நிலவி வந்த பொருளாதார நிலைமையைப் பொருத்தவரையில் அரசு முதலாளித்துவம் ஒரு முன்னேற்ற படியே என்று நான் கருதினேன். இது மிகவும் விசித்திரமாயும் ஒருவேளை அபத்தமாயும் கூடக் காணப்படுகிறது, காரணம் அந்த சமயம் ஏற்கெனவே நமது குடியரசு ஒரு சோஷலிஸ்டு குடியரசாக இருந்தது. மேலும் நாம் நாள்தோறும் அவசரமாக—ஒருவேளை அளவு மிஞ்சிய அவசரமாக—சோஷலிஸ்டு நடவடிக்கைகள் என்பதைத் தவிர வேறு எதுவாகவும் வர்ணிக்க முடியாததான பல புதிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தோம். இருந்தபோதிலும் சோவியத் குடியரசில் நிலவிய பொருளாதார நிலைமையை வைத்துப் பார்க்கும் போது அரசு முதலாளித்துவம் ஒரு முன்னேற்றப் படியே என்ற கருத்தை நான் கொண்டிருந்தேன், மற்றும் ருஷ்யாவின் பொருளாதார அமைப்பின் கூறுகளை அப்படியே வரிசைப் படுத்திக் காட்டுவது மூலம் நான் எனது கருத்தை விளக்கினேன். எனது கருத்துப்படி இந்தக் கூறுகள் பின்வருவனவாகும்: ''1) தந்தை வழி முறை அதாவது விவசாயத்தில் நிலவும் மிகவும் பழையகால வடிவம்; 2) சிறு பண்ட உற்பத்தி (இதில் தானிய வர்த்தகம் நடத்தும் பெரும்பான்மை விவசாயிகள் உட்படுவர்); 3) தனியார் முதலாளித்துவம்; 4) அரசு முதலாளித்துவம்; 5) சோஷலிசம்''. இந்தப் பொருளாதாரக் கூறுகள் யாவும் ருஷ்யாவில் அந்தக் காலத்தில் இருந்தன. இந்தக் கூறுகள் ஒன்றுக்கொன்று கொண்டுள்ள உறவையும், சோஷலிஸ்டல்லாத கூறுன ஒன்று—அதாவது அரசு முதலாளித்துவம்—சோஷலிசத்தை விட உயர்வாக மதிக்கப்படலாமா கூடாதா என்பதையும் பற்றி விளக்கும் பணியினை எனக்கு நானே மேற்கொண்டேன். திரும்பவும் சொல்கிறேன்: தன்னை ஒரு சோஷலிஸ்டுக் குடியரசு என்று பிரகடனம் செய்து கொண்டிருக்கும் ஒரு குடியரசில் ஒரு சோஷலிஸ்டல்லாத கூறு சோஷலிசத்தைக் காட்டிலும் அதிக மதிப்புடையதாகவும் மேம்பட்டதாகவும் கருதப்படுவது

எல்லோருக்குமே மிகவும் விசித்திரமாகத் தோன்றுகிற தல்லவா? ருஷ்யாவின் பொருளாதார அமைப்பை ஒரு படித்தான ஏதோ ஒன்ருக உயர் வளர்ச்சியடைந்த ஒன்ருக நாம் திட்டவட்டமாயும் கருதவில்லை என்பதை நீங்கள் நினைவு கூரும் பட்சத்தில் இந்த மெய் விவரத்தினைப் புரிந்து அறிந்து கொள்ள முடியும். ருஷ்யாவில் தந்தை வழி முறை யிலானவிவசாயம்—அதாவது மிகவும் பழைய வடிவிலான விவசாயம்—சோஷலிஸ்டு வடிவத்துடன் அக்கம் பக்கமாக நிலவியது என்பதை நாம் முழுமையாக உணர்ந்திருந் தோம். இத்தகைய புறச் சூழல்களில் அரசு முதலாளித்துவம் என்ன பங்கு வகிக்க முடியும்?

இந்தக் கூறுகளில் எது ஆதிக்கம் வகித்தது? என்று என்னை நானே மேலும் கேட்டுக் கொண்டேன். குட்டிமுதலாளித் துவத் தன்மையதான சுற்றுச்சார்பில் குட்டிமுதலாளித்துவக் கூறு ஆதிக்கம் வகிக்கிறது என்பது தெளிவு. அப்போது குட்டி முதலாளித்துவக் கூறு ஆதிக்கம் வகித்தது என்பதை உணர்ந் தேன்; வேறு கருத்து சாத்தியமல்ல. அப்போது என்னிடம் நானே கேட்டுக் கொண்ட கேள்வி—இது இன்றைய விஷயத் தோடு எவ்வித சம்பந்தமும் இல்லாத ஒரு பிரத்தியேக விவாதமாகும்—அரசு முதலாளித்துவத்தின் பாலான நமது தோரணை என்ன? நான் பதிலளித்தேன்: அரசு முதலாளித்து வம் சோஷலிஸ்டு வடிவில் இல்லாமல் இருப்பினும் சரி, நமக்கு மற்றும் ருஷ்யாவுக்கு இப்போது இருப்பதை விடவும் அதிக சாதகமான ஒரு வடிவமாகும். இது எதைக் காட்டுகிறது? சமுதாயப் புரட்சியை நாம் ஏற்கெனவே நடத்தி முடித்தி ருந்த போதிலும் நாம் சோஷலிஸ்டு பொருளாதாரத்தின் மூலக்கூறுகளையோ கோட்பாடுகளையோ அளவுக்கு மீறி மதிப் பிடவில்லை என்பதையே இது காட்டுகிறது. இதற்கு மாருக, அந்த சமயத்தில் முதலில் அரசு முதலாளித்துவத்தை வந்தடைவது, அதற்குப் பிறகு மட்டுமே சோஷலிசத்தை வந்தடைவது நல்லது என்பதை ஏற்கெனவே ஓரளவுக்கு உணர்ந்திருந்தோம்.

இதை விசேஷமாயும் வலியுறுத்த வேண்டும். ஏனெனில் முதலாவதாக இன்றைய பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை விளக்க முடியும், இரண்டாவதாக கம்யூனிஸ்டு அகிலத்திற்கு[18] மிக முக்கியமான நடைமுறை முடிவுகளை

எடுக்க முடியும். இதுவே நாம் மேற்கொள்ளக் கூடியதான ஒரே பிரிநிலை என்று நான் கருதுகிறேன். அப்போது நம்மிடம் பின்வாங்குவதற்கான தயார்நிலைத் திட்டம் இருந்தது என்று குறிப்பிட நான் விரும்பவில்லை. அது அவ்வாறு இருக்கவில்லை. ஒரு விவாதக் கட்டுரையில் முன்வைக்கப்பட்டதான அந்தச் சுருக்கமான வரிகள் எவ்வகையிலும் பின்வாங்குவதற்கான ஒரு திட்டம் ஆகாது. உதாரணமாக, அவை அந்த மிகவும் முக்கியமான விஷயம் பற்றிய, அரசு முதலாளித்துவத்துக்கு அடிப்படை முக்கியத்துவம் உடையதான வாணிக சுதந்திரம் பற்றி எதையும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவற்றில் திட்டவட்டமாக இல்லாவிடினும் கூட பின்வாங்குவது பற்றிய ஒரு பொதுவான கருத்து இடம் பெற்றிருந்தது. சென்ற காலத்திலும், இன்று வரையும் கூடப் பின்தங்கியதான ஒரு பொருளாதார அமைப்புடன் கூடியதான ஒரு நாட்டின் கருத்துக் கோணத்தில் மட்டுமன்றி, கம்யூனிஸ்டு அகிலம் மற்றும் முன்னேறிய மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கருத்துக் கோணத்தில் இருந்தும் கூட நாம் அதைக் கவனிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். உதாரணமாக, இப்போது நாம் ஒரு வேலைத்திட்டத்தை வரைவதில் ஈடுபட்டிருக்கிறோம். எல்லா வேலைத்திட்டங்கள் மீதும் அப்படியே, ஒரு பொது விவாதம் நடத்தலாம், முதல் சுற்று வாசிப்பு நடத்தி, அவற்றை அச்சிடலாம், ஆனல் இந்த ஆண்டில் இப்போது இறுதி முடிவு எடுக்காமல் இருப்பது நல்லது என்று தனிப்பட்ட முறையில் நான் கருதுகிறேன். ஏன்? முதலாவதாக, போதுமான அளவுக்கு விவரமாக அவை அனைத்தையும் நாம் எண்ணிப் பார்க்கவில்லை என்பதும், அதோடு பின்வாங்கும் சாத்தியப்பாடு மற்றும் அதற்கான தயாரிப்புகள் குறித்து கிஞ்சிற்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை என்பதும் இதற்குக் காரணம் என்பது நிச்சயம். எனினும், முதலாளித்துவத்தினை வீழ்த்தல், சோஷலிசத்தைக் கட்டுதல், போன்றதான உலகின் இத்தகைய அடிப்படையான மாற்றங்களை அவற்றிலான ஏராளமான இடர்ப்பாடுகளோடு கருதிப் பார்க்கும் போது இந்தப் பிரச்சினை மீது கவனம் செலுத்த வேண்டுவது அறவே அவசியம் என்பது தெரியவரும். நாம் நேரடி எதிர்த்தாக்குதலுக்கு முன்னேறி வெற்றி பெறும் போது எவ்வாறு செயல்படுவது என்பதைத் தெரிந்து கொண்டால் மட்டும் போதாது.

புரட்சிகர காலங்களில் இது அவ்வளவு கடினமல்ல; அவ்வளவு அதிக முக்கியமானதும் அல்ல; குறைந்த பட்சம் இது ஆகத் தீர்மானகரமான விஷயம் அல்ல. ஒரு புரட்சியில் எதிராளி குழப்பம் அடையும் சமயங்கள் எப்போதும் நேர்வதுண்டு, அத்தகைய சமயத்தில் நாம் அவனைத் தாக்குவோமானல் நாம் எளிதில் வெற்றி பெறலாம். அதில் ஒன்றும் இல்லை, காரணம், நமது எதிரி, அவனுக்குப் போதியளவு துன்பத்தைத் தாங்கும் ஆற்றல் இருக்குமானல், தனது சக்திகளை முன்கூட்டியே ஒன்றுதிரட்டிவிட முடியும். அவனைத் தாக்கும்படி நம்மை எளிதில் தூண்டிவிட்டுப் பிறகு நம்மைப் பல ஆண்டுகளுக்குப் பின்தள்ள முடியும். இந்தக் காரணத்தால் பின்வாங்கும் சாத்தியப்பாடுக்கு நம்மை நாமே தயார் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்து மிகவும் முக்கியமானது, இதுவும் தத்துவார்த்த நோக்கு நிலையில் மட்டும் இருந்ததல்ல என்று நான் நினைக்கிறேன். அண்மை எதிர்காலத்தில் முதலாளித்துவத்துக்கு எதிராக நேரடித் தாக்குக்குத் தயாராகி வரும் எல்லாக் கட்சிகளும் சாத்தியமான ஒரு பின்வாங்குதலுக்குத் தயார்படுத்திக் கொள்ளும் பிரச்சினை பற்றி நடைமுறை நோக்கு நிலையில் இருந்தும் கூட இப்போது சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது புரட்சி அனுபவம் நமக்கு வழங்கும் இதர படிப்பினைகள் அனைத்துடனும் கூடவே, இந்தப் படிப்பினையையும் பெறுவதால் நமக்கு எவ்வித பாதகமும் ஏற்பட்டுவிடாது என்று நான் கருதுகிறேன். இதற்கு நேர் மாறாக பல சம்பவங்களில் இது சாதகமானதாக இருக்கலாம்.

1918லேயே நாம் அரசு முதலாளித்துவத்தைச் சாத்தியமான பின்வாங்கல் எல்லைக்கோடாகக் கருதினேம் என்று இப்போது நான் வலியுறுத்தியுள்ளதால், நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுகள் பற்றி நான் விளக்குவேன். நான் திரும்பவும் சொல்கிறேன்: அந்த சமயத்தில் அது மிகவும் தெளிவற்ற கருத்தாகவே இருந்தது, ஆனல் 1921ல், உள்நாட்டுப் போரின் மிகவும் முக்கியமான கட்டத்தை நாம் கடந்து விட்டதற்குப் பின்னர்—வெற்றிகரமான முறையில் கடந்த பின்—நாம் சோவியத் ருஷ்யாவில் ஒரு பேராபத்தான—ஆகப் பேராபத்தானது என்று நினைக்கிறேன்—உள்நாட்டு அரசியல் நெருக்கடியின் தாக்கத்தை உணர்ந்தோம். இந்த உள்நாட்டு நெருக்கடி விவசாயிகளிடையிலான கணிச

மான பகுதிகளின் இடையில் மட்டுமன்றி தொழிலாளர்களின் இடையிலும் கூட அதிருப்தியை வெளிக் கொணர்ந்தது. நமக்கு எதிராக பெருந்திரளான விவசாயிகளிடையே உணர்வு பூர்வமாக அல்ல ஆனால் தம்மை அறியாமலே சோவியத் ருஷ்யாவின் வரலாற்றிலேயே முதலாவதாக, கடைசியானதாகவும் என்று நான் நம்புகிறேன், வெறுப்பலைகள் ஓங்கி இருந்தன. இந்தத் தனி இயல்பான, நம்மைப் பொருத்த வரை மிகவும் விரசமான நிலைமை ஏற்படக் காரணம் என்ன? இதற்கான காரணம், நாம் நமது பொருளாதாரத் தாக்குதலில் மிகவும் அளவுமீறிச் சென்று விட்டோம் என்பதும், நாம் நமக்கே தேவைப்படும் போதுமான செல்வாதாரங்களை வைத்திருக்கவில்லை என்பதும், நாமே முற்றிலும் சோஷலிஸ்டு வடிவங்களுக்கு, முற்றிலும் சோஷலிஸ்டு வினியோகத்துக்கு நேரடியாக மாறிச் செல்வது நம்மிடம் இருந்த வலிமைக்கு அப்பாற்பட்டது என்பதை நாம் உணர்வு பூர்வமாக முறைப்படுத்தி முன்வைக்க முடியவில்லை—ஆனால் பின்னால் விரைவில் சில வாரங்களுக்கு பிறகு ஒப்புக் கொண்டோம் என்பதும், எளிய பணிகள் அளவுக்கு வரையறுத்துக் கொண்டு நாம் பின்வாங்குதலைச் செய்ய இயலாவிட்டால் நாம் நாசத்தை எதிரிடுவோம் என்பதை மக்கள் உய்த்தறிந்து கொண்டதும் ஆகும். இந்த நெருக்கடி 1921 பிப்ரவரியில் தொடங்கியது என்று நான் நினைக்கிறேன். அந்த ஆண்டு வசந்தத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொள்வதென்று நாம் ஒருமுகமாக முடிவு செய்தோம்—இந்த விஷயத்தில் நமக்கு மத்தியில் பெருமளவிலான வேறுபாடு எதையும் நான் காணவில்லை. இப்போது பதினெட்டு மாதங்கள் கடந்த பின்னர், 1922ஆம் ஆண்டு இறுதியில், நாம் ஒரு சில ஒப்புநோக்குகளைச் செய்ய முடிந்திருக்கிறது. என்ன நடந்தது? இந்தப் பதினெட்டு மாதங்களுக்கும் அதிகமான காலப் பகுதியில் நாம் எப்படி இருந்திருக்கிறோம்? இதன் பலன் என்ன? இந்தப் பின்வாங்கல் நமக்கு ஏதேனும் பலன் அளித்திருக்கிறதா? அது மெய்யாகவே நம்மைப் பாதுகாத்து இருக்கிறதா அல்லது விளைவு இன்னும் நிர்ணயமற்றதாக இருக்கிறதா? இதுதான் எனக்கு நானே கேட்டுக் கொண்ட பிரதானமான கேள்வி. இந்தப் பிரதானமான கேள்வி எல்லாக் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கும்

கூட முதல் தரமான முக்கியத்துவமுடையது என்று நான் கருதுகிறேன். ஏனெனில் இதற்கான பதில் ''இல்லை'' என்று இருக்குமானால் நம் அனைவரின் கதியும் அதோகதிதான். நாம் எல்லோரும் தெளிவான மனச்சான்றுடன் இந்தக் கேள்விக்கு ''ஆம்'' என்று ஒப்புதலான பதிலை வழங்கலாம் என்றும் அதாவது கடந்த பதினெட்டு மாதங்கள் நாம் சோதனையில் தேறி விட்டோம் என்பதற்கு நேரடியான முற்ற முழுமை யான நிரூபணத்தை வழங்குகின்றன என்றும் நான் கருது கிறேன்.

இதை நிரூபிக்க நான் இப்போது முயல்வேன். இதைச் செய்வதற்கு நான் நமது பொருளாதாரத்தின் எல்லா முக்கிய பகுதிகளையும் சுருக்கமாக விவரிக்க வேண்டும்.

முதன் முதலாக நமது நிதி அமைப்பு முறையையும் நமது புகழார்ந்த ருஷ்யன் ரூபிளையும் எடுத்துக் கவனிப்போம். அவற்றின் அளவு குவாட்ரில்லியனை விஞ்சி விட்டது என்ற காரணத்துக்காக மட்டுமே ருஷ்யன் ரூபிள்கள் புகழார்ந் தவை என்று கூறலாம் எனக் கருதுகிறேன். (சிரிப்பு.) அது பாராட்டத்தக்க செய்தி. அது மிகப்பேரளவான இலக்கம். இந்த இலக்கம் எதைக் குறிக்கிறது என்பதை இங்குள்ள எல்லோரும் தெரிந்திருக்க முடியாது என்பது திண்ணம். (பொதுவான சிரிப்பு.) பொருளாதார விஞ் ஞானத்தின் நோக்கு நிலையில் இருந்தும் கூட இந்த இலக்கம் அவ்வளவு முக்கியமானதல்ல என்று நாம் கருதுகிறோம். காரணம் பூஜ்ஜியங்கள் எப்போதும் அடிக்கப்பட்டு விடும். (சிரிப்பு.) இந்தக் கலையில்—இது பொருளாதார நோக்கு நிலையில் இருந்து முக்கியமானதல்ல—நாம் ஏற்கெனவே ஒன் றிரண்டு விஷயங்களை சாதித்திருக்கிறோம். வரப்போகும் நிகழ்வுகளில் நாம் இக்கலையில் இன்னும் அதிகமாகச் சாதிப் போம் என்பது நிச்சயம். ஆனால் உண்மையிலேயே முக்கிய மானது என்னவென்றால் ரூபிளைத் திடப்படுத்துவது என்ற பிரச்சினையாகும். நாம் இந்தப் பிரச்சினையுடன் இப்போது செயலாற்றிக்கொண்டிருக்கிறோம், நமது சிறந்த நபர்கள் அதன் மீது வேலை செய்து வருகிறார்கள். அதற்குத் தீர்மான கரமான முக்கியத்துவம் அளிக்கிறோம். ரூபிளை நீண்ட காலத் துக்கும் அதற்குப் பிறகு எல்லாக் காலத்துக்கும் திடப்படுத்து வதில் நாம் வெற்றியடைவோமானால் நாம் வெற்றி

யடைந்து விட்டோம் என்பது நிரூபணமாகும். அந்த நிலையில் இந்த மிகப் பேரளவான இலக்கங்கள் ட்ரில்லியன்கள் குவாட்ரில்லியன்கள் சிறிதும் பொருட்படுத்தப்பட மாட்டா. அப்புறம் நாம் நமது பொருளாதாரத்தை உறுதியான அடித்தளத்தின் மீது வைக்க முடியும், உறுதியான அடித்தளத்தின் மீது அதை மேலும் வளர்க்க முடியும். இந்த விஷயத்தில் நான் ஓரளவுக்கு முக்கியமும் தீர்மானகரமுமான புள்ளிவிவரங்களைச் சுட்ட முடியும் என்று நினைக்கிறேன். 1921ல் காகித ரூபிளின் பரிவர்த்தனை விகிதம் மூன்று மாதங்களுக்கும் குறைவான காலத்திற்கே திடமாக இருந்தது. இன்னும் முடிவடையாத இந்த 1922ஆம் ஆண்டில் இந்த விகிதம் ஐந்து மாதங்களுக்கும் அதிகமாகத் திடமாக இருந்தது. இந்த நிரூபணமே போதுமானது என்று கருதுகிறேன். இந்தப் பிரச்சினைக்குத் திட்டவட்டமாயும் பூர்த்தியாயும் தீர்வு காண்போம் என்பதற்கு விஞ்ஞான வழி நிரூபணத்தை நீங்கள் கோரும் பட்சத்தில் இது போதுமானதல்ல. ஆனால் எனது கருத்துப்படிப் பொதுவாக இதை முழுமையாகவும் முடிவாகவும் நிரூபணம் செய்வது சாத்தியம் அல்ல. நான் சுட்டிக் காட்டியுள்ள புள்ளி விவரப்படி புதிய பொருளாதாரக் கொள்கையை நாம் துவக்கி வைத்த சென்ற ஆண்டுக்கும் இன்றைக்கும் இடையே நாம் முன்னேறிச் செல்வதற்கு ஏற்கெனவே கற்றுக் கொண்டு இருக்கிறோம். இதைச் செய்ய நாம் கற்றுக் கொண்டு விட்டதால், நாம் மிகவும் முட்டாள்தனமான எதையும் செய்யாமல் தவிர்க்கும் பட்சத்தில், இந்தப் பாதையில் மேலும் வெற்றிகளை சாதனையாக்கப் படித்துக் கொள்வோம் என்பது உறுதி. எனினும் மிகவும் முக்கியமான விஷயம் வாணிகமாகும், அதாவது, பண்டங்களின் புழக்கமாகும், இது நமக்கு அத்தியாவசியமானது. இந்தப் பிரச்சினையை நாம், போர்நிலையில் இருந்தபோதிலும் (விளாதிவஸ்தோக் இரண்டு வாரங்களுக்கு முன்புதான் திரும்பப் பிடிக்கப்பட்டது என்பதை அறிவீர்கள்), இப்போது மட்டுமே நாம் மெய்யாகவே முறைப்படுத்தப்பட்ட வழியில் நமது பொருளாதாரச் செயல்பாடுகளை முன்கொண்டு செல்ல முடிந்திருக்கிறது என்ற போதிலும், இரண்டாண்டுகளாக நாம் இந்தப் பிரச்சினைக்கு வெற்றிகரமாகத் தீர்வு கண்டிருக்கிறோம். மூன்றே மாதங்கள் மட்டும் அன்றி ஐந்து மாதங்கள் நாம் நமது காகித ரூபி

ளின் விகிதத்தைத் திடமாக வைத்திருப்பதில் வெற்றிபெற்ற தன் காரணமாக நாம் மகிழ்ச்சியடைவதற்கான அடிப்படை இருப்பதாகக் கூற முடியும் என்றுதான் கருதுகிறேன். ஏனெனில் நாம் தனியாக நிற்கிறேம். நாம் எவ்விதக் கடன்களையும் பெற்றதில்லை, இப்போதும் பெறவில்லை. வலிமை மிகு எந்த ஒரு முதலாளித்துவ நாடும்—அவை தமது முதலாளித்துவப் பொருளாதாரத்தை மிகவும் ''மிடுக்கான முறையில்'' ஒழுங்கமைத்துக் கொண்டிருப்பதால், அவை எந்த வழியில் செல்கின்றன என்பது இன்று வரை அவற்றுக்குத் தெரியாது—நமக்கு எந்தவித உதவியும் வழங்கியதில்லை. வெர்சேய் உடன்படிக்கை[33] மூலம் அவை ஒரு நிதி அமைப்பு முறையை உருவாக்கியுள்ளன, ஆனுல் அவற்றுக்கே அதன் தலைகால் புரியவில்லை. இந்த மாபெரும் முதலாளித்துவ நாடுகள் காரியங்களை இந்த வழியில் நிர்வகித்து வருமானுல், பின்தங்கிய, படிப்பில்லாதவர்களாக இருக்கும் நாம் மிகவும் முக்கியமான விஷயத்தை—ரூபிளைத் திடப்படுத்துவதற்குரிய நிபந்தனைகளை—புரிந்து கொண்டு விட்டோம் என்ற மெய்விவரம் குறித்து நாம் மகிழ்ச்சி அடையலாம் என்று நான் கருதுகிறேன். இது தத்துவார்த்தப் பகுப்பாய்வால் அன்றி நடைமுறை அனுபவத்தால் நிரூபிக்கப்பட்டது. இது உலகிலுள்ள சகல தத்துவார்த்த விவாதங்களையும் விட அதிக முக்கியமானது என்று நான் கருதுகிறேன். அந்தத் துறையில் நாம் நிர்ணயமான பலன்களை அடைந்து விட்டோம் என்பதை நடைமுறை புலப்படுத்துகிறது. அதாவது, நாம் நமது பொருளாதாரத்தை ரூபிளை திடப்படுத்தும் திசையில் முன்தள்ளத் துவங்கியிருக்கிறேம். இது வாணிகத்துக்கும், பண்டங்களின் கட்டற்ற புழக்கத்துக்கும், விவசாயிகளுக்கும், பெரும் திரளான சிறு உற்பத்தியாளர்களுக்கும் உச்ச முக்கியத்துவம் உடையதாகும்.

இப்போது நான் நமது சமுதாயக் குறிக்கோள்களுக்கு வருகிறேன். இதில் மிகவும் முக்கியமான அம்சம் விவசாயிகள் என்பது திண்ணம். 1921ல் விவசாயிகளின் விரிவான பகுதிகளிடையே அதிருப்தி நிலவியது என்பதில் ஐயமில்லை. பிறகு பஞ்சம் ஏற்பட்டது. இது விவசாயிகளுக்கு ஆகக் கடுமையான சோதனையாக இருந்தது. ''அதோ பார்! அதுவே சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தின் விளைவு'' என்று இயல்

பாகவே வெளி நாடுகளில் இருந்த நமது எதிரிகள் அனைவரும் கூக்குரலிட்டனர். முற்றிலும் இயல்பாகவே, பஞ்சம் உள் நாட்டுப் போரின் பயங்கர விளைவாக உள்ளபடியே இருந்தது என்பதைப் பற்றி அவர்கள் எதுவும் கூறவில்லை என்பது நிச்சயம். 1918ல் நமக்கு எதிராகத் தாக்குதலைத் தொடங்கிய எல்லா நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் இந்தப் பஞ்சம் சோஷலிஸ்டுப் பொருளாதாரத்தின் விளைவு என்று நிரூபித்துக் காட்ட முயன்றார்கள். இந்தப் பஞ்சம் உண்மையிலேயே ஒரு மாபெரும் பேராபத்தான துன்ப நிகழ்ச்சியே. அது நமது நிறுவன ஒழுங்கமைப்பு மற்றும் புரட்சிகர முயற்சிகளின் பலன்களைப் பயனற்றதாக்குவதாக அச்சுறுத்தியது.

முன் என்றும் கண்டிராததும் எதிர்பாராததுமான இந்தத் துன்ப நிகழ்ச்சிக்குப் பிறகு, நாம் புதிய பொருளாதாரக் கொள்கையைப் புகுத்திய பின்னர், விவசாயிகளுக்கு வாணிகம் நடத்தச் சுதந்திரம் அளித்த பிற்பாடு இன்று நிலைமை என்ன என்று இப்போது நான் கேட்கிறேன். இதற்குரிய விடை எல்லோருக்கும் தெளிவானது கண்கூடானது. ஓராண்டு காலத்துக்குள் விவசாயிகள் பஞ்சத்தில் இருந்து மீட்சி பெற்று விட்டார்கள் என்பது மட்டும் அல்ல. அவர்கள் எவ்விதமான நிர்ப்பந்த முறைகளும் அநேகமாகக் கையாளப்படாமலே தானிய வடிவில் மிகப்பெரும் அளவில் வரி செலுத்தியுள்ளனர். இதன் மூலம் நாம் ஏற்கெனவே லட்சக் கணக்கான பூடுகள் தானியம் பெற்றுள்ளோம். 1921ஆம் ஆண்டுக்கு முன்னர் ருஷ்யாவில் சாதாரண நிகழ்ச்சி என்று சொல்லும்படி இருந்த விவசாயிகளின் புரட்சி எழுச்சிகள் இப்போது கிட்டத்தட்ட முழுதும் இல்லாததாகி விட்டன. விவசாயிகள் தமது இன்றைய நிலைமையில் திருப்தியுடன் இருக்கிறார்கள். இதை நாம் நம்பிக்கையுடன் அடித்துக் கூறலாம். இந்தச் சான்று எத்தனையோ அளவிலான புள்ளிவிவர நிரூபணத்தை விடவும் அதிக முக்கியமானது என்று நாம் கருதுகிறோம். விவசாயிகள் நமது நாட்டில் ஒரு நிர்ணயமான சக்தி என்ற உண்மையை மறுப்பவர் எவரும் இல்லை. இப்போது விவசாயிகள் இருக்கும் நிலையில் அவர்கள் பக்கத்தில் இருந்து நமக்கு எதிரான இயக்கம் எதுவும் எழுந்து விடும் என்று நாம் அஞ்சுவதற்கு ஏதுவில்லை. இதை நாம் முற்றிலும் உணர்வு பூர்வமாயும் எவ்வித மிகைப்படுத்தலும் இன்றிக்

கூறுகிறோம். இதை நாம் ஏற்கெனவே சாதித்து விட்டோம். நமது அதிகாரிகளின் வேலையில் ஏதேனும் ஒரு அம்சம் குறித்து விவசாயிகள் அதிருப்தி அடைந்திருக்கலாம். இதைப் பற்றி அவர்கள் புகார் செய்யலாம். அது சாத்தியம் மற்றும் தவிர்க்க முடியாதது என்பது திண்ணம். காரணம் நமது அரசுப் பொறியமைவும் அரசால் இயக்குவிக்கப்படும் பொருளாதாரமும் இதைத் தவிர்க்க இயலாத அளவுக்கு இன்னும் திறமையற்றனவாக உள்ளன. ஆனால் விவசாயிகள் முழுமையாக நம்முடன் கடுமையான அதிருப்தி கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இடமில்லை. இந்த நிலைமை இந்த ஓராண்டுக்கிடையே சாதிக்கப்பட்டதாகும். ஏற்கெனவே இது முற்றிலும் பெரியளவு சாதனை என்று நான் கருதுகிறேன்.

இப்போது நான் நமது மென்னியந்திரத் தொழிலுக்கு வருகிறேன். தொழில் துறையில் நாம் கன இயந்திர மற்றும் மென்னியந்திரத் தொழில்களிடையே வேறுபாட்டைக் காண வேண்டும். காரணம் அவற்றின் நிலைமைகள் வெவ்வேறானவை. மென்னியந்திரத் தொழிலைப் பொருத்த வரை ஒரு பொதுவான புத்தெழுச்சி ஏற்பட்டிருக்கிறது என்று நம்பகமாகச் சொல்வேன். நான் விவரங்களுக்குள் போகவில்லை. ஏராளமான புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்ட முனையவில்லை. ஆனால் இந்தப் பொதுவான கருத்து மெய்விவரங்களை அடிப்படையாக்கியது, பொய்யானதோ துல்லியமற்றதோவான எதையும் அடிப்படையாக்கியதல்ல என்று நான் உறுதி கூற முடியும். மென்னியந்திரத் தொழிலில் ஒரு பொதுவான புத்தெழுச்சி பற்றி நாம் கூற முடியும். இது பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோவில் இருக்கும் தொழிலாளர்களின் நிலைமைகள் திட்டவட்டமாக மேம்படுத்தப்பட்டதன் விளைவாகும். இதர வட்டாரங்களில் இது சற்றுக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. காரணம் அவற்றில் கன இயந்திரத் தொழில் பேராதிக்கம் வகிக்கிறது. எனவே இது பொதுவாகப் பொருந்தும் அம்சம் அல்ல. இருந்தபோதிலும் நான் திரும்பவும் சொல்கிறேன், மென்னியந்திரத் தொழில் ஐயத்திற்கிடமின்றி ஏறுமுகமாக இருக்கிறது, பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் இருக்கும் தொழிலாளர்களின் நிலைமைகள் கேள்விக்கு இடமற்ற வகையில் மேம்பாடுற்றுள்ளன. 1921 வசந்தத்தில் இந்த இரண்டு நகரங்களிலும் இருந்த தொழி

லாளர்கள் மத்தியில் அதிருப்தி நிலவியது. ஆனல் இப்போது அந்த நிலைமை திட்டவட்டமாயும் இல்லை. நாள்தோறும் தொழிலாளர்களின் நிலைமைகளையும் மனப்பாங்கையும் கவனித்து வரும் நாம் அந்த வகையில் தவறு எதுவும் செய்ய மாட்டோம்.

மூன்ருவது விஷயம் கன இயந்திரத் தொழில் பற்றியதாகும். இதில் நிலைமை இன்னும் மோசமானதாகவே இருக்கிறது என்று தான் சொல்ல வேண்டும். **1921-22**ல் நல்ல நிலைமைக்கான ஒரு திருப்பம் ஏற்பட்டது. எனவே அண்மை எதிர்காலத்தில் நிலைமை மேம்படும் என்று நம்பலாம். இதற்குத் தேவையான சில செல்வாதாரங்களை நாம் ஏற்கெனவே திரட்டியிருக்கிருேம். ஒரு முதலாளித்துவ நாட்டில் கன இயந்திரத் தொழிலின் நிலையை மேம்படுத்த கோடிக் கணக்கான பணம் கடனுகத் தேவைப்படும். இது இல்லாமல் எந்த ஒரு மேம்பாடும் சாத்தியமல்ல. பின்தங்கியுள்ள நாடுகளில் கன இயந்திரத் தொழிலை ஆயிரம்-லட்சக் கணக்கிலான டாலர்கள் அல்லது தங்க ரூபிள்கள் கொண்ட நீண்ட காலக் கடனுதவியுடன் மட்டுமே மேம்படுத்த முடியும் என்பதை முதலாளித்துவ நாடுகளின் பொருளாதார வரலாறு காட்டுகிறது. நாம் இத்தகைய கடனுதவிகளைப் பெறவில்லை; இது வரை நமக்கு எதுவும் கிட்டவில்லை. சலுகைகள் பற்றி இப்போது எழுதப்படுவது எல்லாம் அவை எழுதப்பட்ட காகிதத்தின் மதிப்புக்கூடப் பெற லாயக்கற்றவை. அண்மையில் இதைப் பற்றி நிறைய எழுதியுள்ளோம்; குறிப்பாயும் உர்ஹார்ட் சலுகை பற்றி எழுதியிருக்கிருேம். இருப்பினும் நமது சலுகை தரும் கொள்கை மிகவும் நல்ல ஒன்று என்று நான் கருதுகிறேன். இருப்பினும் இது வரை லாபகரமான சலுகை ஒன்றைக்கூட நாம் செய்து கொள்ளவில்லை. இதை மனதில் கொள்ளும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய நாடான நமது நாட்டுக்குக் கன இயந்திரத் தொழிலில் நிலவும் நிலைமை மிகவும் மோசமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது. காரணம் செல்வந்த நாடுகளில் இருந்து நாம் கடனுதவியை எதிர்பார்க்க முடியாது. இருந்தபோதிலும் நாம் உருப்படியான மேம்பாட்டைக் காண்கிருேம், நமது வாணிகம் நமக்கு ஓரளவு மூலதனத்தைக் கூடக் கொண்டுவந்திருப்பதைப் பார்க்கிருேம். இது மிகவும் அடக்கமான தொகை

மட்டுமே என்பது மெய், இருபது மில்லியன் தங்க ரூபிள் களுக்குச் சற்று அதிகம் ஆகும். எப்படியும் ஒரு துவக்கம் செயலாகி விட்டது. நமது வாணிகம் நமக்கு நிதி வழங்கு கிறது, இதை கன இயந்திரத் தொழிலில் இருக்கும் நிலைமையை மேம்படுத்த நாம் பயன்படுத்தலாம். இன்றைய தருணத்தில் நமது கன இயந்திரத் தொழில் இன்னும் மாபெரும் இடர்ப்பாட்டுக்குள்தான் இருந்து வருகிறது. ஆனால் நிர்ணயமான புறச் சூழல் விளைவாக நாம் ஏற்கெனவே ஓரள வுக்குச் சேமித்து வைக்கும் நிலையில் இருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். இதை முன்னே செய்வதாக இருந்தோம். நாம் இப்போது சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், ஆயினும் இது பெரும்பாலும் மக்களுக்குப் பிரதிகூலமாக இருக்கலாம். நாம் அரசின் செலவினங்களைக் குறைக்கவும் நமது அரசாங்க அலுவலகங்களில் இருக்கும் பணியாளர்களைக் குறைக்கவும் முயன்று வருகிறோம். பின்னால் நமது அரசு பொறியமைவு பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். எப்படியும் அதைக் குறைக்க வேண்டும். சாத்தியமான அளவுக்குச் சிக்கனம் செய்ய வேண்டும். நாம் எல்லாவற்றி லும், பள்ளிக்கூடங்களில் கூடச், சிக்கனம் செய்து வரு கிறோம். இதைக் கட்டாயம் செய்து தீர வேண்டும். ஏனெனில், நாம் கன இயந்திரத் தொழிலைப் பாதுகாக்காவிட்டால், அதை மீண்டும் இயங்கச் செய்யாவிட்டால் நாம் ஒரு தொழில் துறையையே கட்டிவளர்க்க முடியாது என்பதையும், தொழில்துறை இல்லாவிட்டால் ஒரு சுதந்திர நாடு என்ற முறையில் நாம் தாழ்வுறுவோம் என்பதையும் நாம் அறி வோம். இதை நாம் மிக நன்றாக உணர்ந்திருக்கிறோம்.

ருஷ்யாவின் விமோசனம் விவசாயிகளின் பண்ணைகளில் நல்ல அறுவடையை மட்டும் சார்ந்து கிடக்கவில்லை—அது போதாது; விவசாயிகளுக்கு வேண்டிய நுகர்வுப் பண்டங்களை வழங்கும் மென்னியந்திரத் தொழிலின் நல்ல நிலைமையை மட்டும் சார்ந்திருக்கவில்லை—இதுவும் போதாது; நமக்குக் கன இயந்திரத் தொழிலும் தேவை. அதை நல்ல நிலையில் வைப்பதற்குப் பல ஆண்டுக் காலப் பணி அவசியம்.

கன இயந்திரத் தொழிலுக்கு அரசு பண உதவி தேவை. அதை நாம் வழங்க முடியாவிட்டால், நாம் ஒரு சோஷலிஸ்டு அரசாக இருப்பது ஒருபுறம் இருக்க, ஒரு நாகரிகமுள்ள அர

சாக நிலவக்கூட நமக்கு கதிமோட்சம் இல்லை. இந்த விஷயத்தில் நாம் ஓர் உறுதியான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறோம். கன இயந்திரத் தொழிலை உறுதியாக நிலை பெறச் செய்வதற்கு நமக்குத் தேவைப்படும் நிதிகளை நாம் திரட்டத் தொடங்கி விட்டோம். இது வரை நாம் பெற்றுள்ள தொகை 20 மில்லியன் தங்க ரூபிள்களை விஞ்சவில்லை என்பது வாஸ்தவம். ஆனால் எப்படியும் இந்தத் தொகை இருக்கிறது, நமது கன இயந்திரத் தொழிலைப் புதுப்பிப்பதற்கு என்றே இத்தொகை முழுமையாக ஒதுக்கி வைக்கப்படும்.

ஒட்டு மொத்தத்தில் நான் வாக்களித்திருந்தபடியே நமது பொருளாதாரத்தில் இருக்கும் முக்கியமான அம்சங்களைப் பற்றிச் சுருக்கமாக உருவரைப்படுத்திக் காட்டியுள்ளேன் என்று நினைக்கிறேன். இவை எல்லாவற்றில் இருந்தும் புதிய பொருளாதாரக் கொள்கை ஏற்கெனவே பலன் தந்து விட்டது என்ற முடிவுக்கு வரலாம் என்றும் கருதுகிறேன். ஓர் அரசு என்ற முறையில் நாம் வாணிகம் நடத்த முடிந்திருக்கிறது, விவசாயத்திலும் தொழில்துறையிலும் நாம் வலுவான நிலைமைகளைக் கட்டிக்காத்து வந்திருக்கிறோம், முன்னேற்றத்தையும் அடைந்திருக்கிறோம் என்பதற்கு ஏற்கெனவே சான்று இருக்கிறது. நடைமுறைச் செயல்பாடு அதை நிரூபித்து விட்டது. இப்போதைக்கு இது நமக்குப் போதுமானது என்று நினைக்கிறேன். நாம் இன்னும் மிகப் பலவற்றைப் படித்தறிதல் வேண்டும், இன்னும் படித்தறிய ஏராளமானவை உள்ளன என்பதை நாம் உணர்ந்து விட்டோம். ஐந்தாண்டுகளாக நாம் ஆட்சி அதிகாரத்தில் இருக்கிறோம். இந்த ஐந்தாண்டுகளின் போது நாம் போர் நிலையில் இருந்து வந்தோம். எனவே, நாம் வெற்றியடைந்தோம்.

விவசாயிகள் நம் பக்கம் இருந்த காரணத்தால் இது புரிந்து கொள்ளக் கூடியதே. அவர்கள் தந்ததை விட ஆதரவை வேறு யாரும் தந்திருக்க முடியாது. வெண்காவலர்களுக்கு ஆதரவாக நிலப்பிரபுக்கள் இருந்தார்கள் என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் நிலப்பிரபுக்களை இந்த உலகில் இருக்கும் வேறு எதையும் விட அதிகமாகப் பகைத்தார்கள். இதனால்தான் விவசாயிகள் தமது பூரண உற்சாகத்தோடும் விசுவாசத்தோடும் நம்மை ஆதரித்தார்கள். வெண்காவலர்களுக்கு எதிராக நம்மைத் தாங்கி ஆதரிப்

பதற்கு விவசாயிகளை முன்வரச் செய்வது கடினமாக இருக்க வில்லை. போரை எப்போதுமே வெறுத்து வந்த விவசாயிகள் போரில் வெண்காவலர்களை எதிர்த்தும் உள்நாட்டுப் போரில் நிலப்பிரபுக்களை எதிர்த்தும் சாத்தியமான சகலத்தையும் செய்தார்கள். ஆனால் இதோடு எல்லாம் முடிந்து விடவில்லை. சாரத்தில் இது ஆட்சி அதிகாரம் நிலப்பிரபுக்கள் கைகளில் இருக்க வேண்டுமா அல்லது விவசாயிகள் கைகளில் இருக்க வேண்டுமா என்பதே இங்குள்ள கேள்வி. இது நமக்குப் போதுமானதல்ல. நாம் தொழிலாளர்களுக்காகவே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினோம் என்பதையும், ஒரு சோஷலிஸ்டு அமைப்பை நிறுவுவதற்கு இந்த ஆட்சி அதிகாரத்தைப் பயன்படுத்துவதே நமது நோக்கம் என்பதையும் விவசாயிகள் அறிவார்கள். எனவே சோஷலிஸ்டு பொருளாதாரத்திற்கான பொருளாதார அடித்தளத்தை நிறுவுவது என்பதே நமக்கு முக்கியமான காரியம். இதை நாம் நேரடியாகச் செய்ய முடியாது. நாம் சுற்றிவளைத்த வழியில் இதைச் செய்ய வேண்டியிருந்தது. நமது நாட்டில் நாம் புகுத்தியுள்ள தான அரசு முதலாளித்துவம் பிரத்தியேக வகைப்பட்டது. அது வழக்கமான அரசு முதலாளித்துவம் பற்றிய கருத்துருவுடன் ஒத்துப் போவதில்லை. கேந்திரமான எல்லா இடங்களையும் நாம் கையில் வைத்திருக்கிறோம். நிலத்தை நாம் வைத்திருக்கிறோம்; அது அரசுக்குச் சொந்தம். இது மிகவும் முக்கியமானது. ஆயினும், இதில் எவ்வித முக்கியத்துவமும் இல்லை என்று நமது எதிராளிகள் நிரூபிக்க முயல்வர். அது உண்மை அல்ல. நிலம் அரசுக்குச் சொந்தம் என்ற மெய்மை மிகவும் முக்கியமானது; பொருளாதார ரீதியாகவும் இதற்கு மாபெரும் நடைமுறை அர்த்தம் உண்டு. இதை நாம் சாதித்து விட்டோம். நமது எதிர்காலத்திய செயல்பாடுகள் யாவும் இந்தக் கட்டுக்கோப்புக்குள் மட்டுமே நடத்தப்பட வேண்டும். விவசாயிகளை ஏற்கெனவே திருப்தியுள்ளவர்களாக்குவதிலும் தொழில்துறையையும் வாணிகத்தையும் புதுப்பிப்பதிலும் வெற்றி பெற்று விட்டோம். நமது அரசு முதலாளித்துவம் அரசு முதலாளித்துவம் என்ற சொல்லின் நேரடி அர்த்தத்தில் இருந்து வேறுபடுகிறது என்பதை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். நமது அமைப்பில் நமது பாட்டாளி வர்க்க அரசு நிலத்துக்குச் சொந்தக்காரனாக மட்டும் இருப்பதில்லை;

தொழில்துறையின் ஜீவாதாரமான பிரிவுகள் அனைத்துக்கும் சொந்தக்காரனாக இருக்கிறது. துவக்கத்தில் நாம் ஒரு சில சிறிய மற்றும் நடுத்தர ஆலைகளையே குத்தகைக்கு விட்டிருக்கிறோம். மற்றவை எல்லாம் நமது கரங்களில் இருக்கின்றன. வாணிகத்தைப் பொருத்தவரை நாம் கலப்புக் கம்பெனிகளை நிறுவ முயல்கிறோம் என்பதையும் நாம் ஏற்கெனவே அவற்றை உருவாக்கி வருகிறோம் என்பதையும் நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அதாவது இந்தக் கம்பெனிகளின் மூலதனத்தில் ஒரு பாகம் தனியார் முதலாளிகளுக்கு—அதிலும் வெளிநாட்டு முதலாளிகளுக்குச் சொந்தமாக இருக்கும்—மறு பாகம் அரசுக்குச் சொந்தமாக இருக்கும். முதலாவதாயும் இந்த வழியில் நாம் எப்படி வாணிகம் செய்வது என்பதைப் படிந்தறிந்து கொள்கிறோம். இது நமக்குத் தேவை. இரண்டாவதாக நாம் அவசியம் என்று கருதும் பட்சத்தில் இந்தக் கம்பெனிகளைக் கலைத்துவிடும் நிலைமையில் எப்போதும் இருக்கிறோம், எனவே அபாயம் ஏதும் நேருவதற்கு இடமில்லை என்று சொல்லலாம். தனியார் முதலாளிகளிடமிருந்து நாம் படிப்பினை பெறுகிறோம். நாம் எவ்வாறு முன்னேறுவது என்பதையும் நாம் என்ன தவறுகள் செய்தோம் என்பதையும் கற்றுக்கொண்டோம். இதற்கு மேல் நான் எதுவும் கூறத் தேவையில்லை என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்னும் பல சிறிய அம்சங்களை எடுத்துக் கவனிக்க விரும்புகிறேன். நாம் பல முட்டாள்தனமான காரியங்களைச் செய்திருக்கிறோம், இனிமேலும் செய்வோம் என்பது சந்தேகமில்லை. இதை என்னை விட நன்றாக யாரும் நிர்ணயம் செய்து காண முடியாது. (சிரிப்பு.) இந்த முட்டாள்தனமான காரியங்களை நாம் ஏன் செய்கிறோம்? இதற்கான காரணம் தெட்டத்தெளிவு: முதல் காரணம் நாம் ஒரு பின்தங்கிய நாடு என்பது, இரண்டாவது காரணம் நமது நாட்டில் கல்வி மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருப்பது, மூன்றாவது காரணம் நமக்கு வெளியில் இருந்து உதவி ஏதும் கிடைப்பதில்லை என்பதாகும். நாகரிகமடைந்த எந்த ஒரு நாடும் நமக்கு உதவி செய்யவில்லை. இதற்கு நேர் மாறாக, அவை நமக்கு எதிராகச் செயல்படுகின்றன. நாலாவது காரணம் நமது அரசாங்கப் பொறியமைவின் குற்றம். நாம் பழைய அரசாங்கப் பொறியமைவை எடுத்துக் கொண்டோம். அதுவே நமக்கு இன்ன

லாகித் தீர்ந்தது. இந்தப் பொறியமைவு மிக அடிக்கடி நமக்கு எதிராகச் செயல்படுகிறது. 1917ல் நாம் ஆட்சி அதிகாரத் தைக் கைப்பற்றிய பிறகு அரசாங்க அதிகாரிகள் நாச வேலை செய்தனர். இது நமக்கு மிகவும் பீதியை ஏற்படுத்தியது, ''தயவு செய்து திரும்பி வாருங்கள்'' என்று நாம் கெஞ்சி ஞேம். அவர்கள் எல்லோரும் திரும்பி வந்தார்கள், அதுவே நமக்கு இன்னலாகித் தீர்ந்தது. இப்போது நம்மிடம் அர சாங்கப் பணியாளர்களின் பெரும் படையே இருக்கிறது. ஆனல் அதன் மீது மெய்யான கண்காணிப்பை அமுல் நடத்தப் போதியதான படித்த நபர்கள் இல்லே. நடைமுறை யில் அடிக்கடி நேருவது என்னவென்ருல், இங்கே உயர் மட்டத்தில் நாம் அரசியல் ஆட்சி அதிகாரம் அமுல் நடத்தும் இடங்களில் இந்தப் பொறியமைவு எப்படியோ பணிபுரிகிறது. ஆனல் கீழ் மட்டத்தில் அரசாங்கப் பணியாளர் தன்னிச்சை யான கண்காணிப்பு அதிகாரம் வைத்திருக்கின்றனர். அதை அவர்கள் அமுல் நடத்தும் விதம் நமது நடவடிக்கைகளே எதிர்த்துத் தடைசெய்வதாக இருக்கிறது. உயர் மட்டத்தில் நம்மிடம், எவ்வளவு பேர் என்று எனக்குத் தெரியாது. எப்படி யிருந்தாலும் ஒரு சில ஆயிரம் பேருக்கு மேல் இருக்க மாட் டார்கள் என்று நினைக்கிறேன், அதிக பட்சமாகப் பார்த்தால் சில பத்தாயிரம் பேர் நமது சொந்த ஆட்கள் இருப்பார்கள். கீழ் மட்டத்தில் ஜாரிடமிருந்தும் முதலாளித்துவ சமுதாய அமைப்பில் இருந்தும் நம்மால் பெறப்பட்ட பத்தாயிரக் கணக்கான பழைய அதிகாரிகள் இருக்கிருர்கள். அவர்கள் ஓரளவு வேண்டுமென்றே திட்டமிட்டும் ஓரளவு தன்னறிவின்றி யும் நமக்கு எதிராக வேலே செய்கிருர்கள். இந்த விஷயத் தில் ஒரே நொடியில் எதுவும் செய்ய முடியாது என்பது தெளிவு. இந்தப் பொறியமைவை மேம்படுத்தவும், இதற்குப் புத்துருக் கொடுக்கவும், புதிய நபர்களே ஈடுபடுத்தவும் பல ஆண்டுகள் கடுமையாகப் பாடுபட வேண்டும். இதை நாம் ஓரளவுக்கு விரைவாக—ஒருவேளை மிகவும் வேக மாகவே—செய்து வருகிருேம். சோவியத் பள்ளிகளும் தொழி லாளர் கல்விப் பிரிவுகளும் நிறுவப்பட்டுள்ளன. ஒரு சில நூரு யிரம் இளைஞர்கள் கல்வி பயில்கிருர்கள், ஒருவேளை மிகவும் துரிதமாகக் கல்வி பயில்கிருர்கள் போலும். எப்படியும் இது துவங்கப்பட்டு விட்டது, இந்த வேலே பலனளிக்கும் என்று

கருதுகிறேன். நாம் மிகவும் அவசரப்பட்டு விடாமல் இருந்தால் இன்னும் சில ஆண்டுகளில் நமது அரசாங்கப் பொறியமைவை முற்றமுழுமையாகச் செப்பனிடும் ஆற்றல் கொண்ட இளைஞர்கள் திரளை உருவாக்கலாம்.

நாம் பல முட்டாள்தனமான காரியங்களைச் செய்திருப்பதாக நான் கூறினேன். இந்த விஷயத்தில் நமது எதிரிகள் குறித்தும் ஒரு சில வார்த்தைகள் கூற வேண்டும். நமது எதிரிகள் நம் மீது குற்றம் சாட்டி, போல்ஷிவிக்குகள் பல முட்டாள்தனமான காரியங்களைச் செய்திருப்பதாக லெனினே ஒத்துக் கொள்கிறாரே என்று சொல்வார்களானால் நான் அதற்குப் பதில் கூறுவேன்: ஆம், முட்டாள்தனமான காரியங்கள் நாங்கள் செய்துள்ளோம், இருந்தபோதிலும் உங்கள் செயல்களில் இருந்து அவை மிகவும் வேறுபட்டவை. நாங்கள் இப்போது மட்டுமே பயிலத் தொடங்கியிருக்கிறோம், ஆனால் மிகவும் முறையான வழியில் பயின்று வருகிறோம். நாங்கள் நல்ல பலனை அடைவோம் என்பது திண்ணம். ஆனால், நமது எதிரிகள் அதாவது முதலாளிகளும் இரண்டாம் அகிலத்தின் வீரர்களும் நாம் செய்துள்ள முட்டாள்தனமான காரியங்களையே வலியுறுத்திக் காட்டுவதால், ஒப்பு நோக்குக்காக ஒரு புகழ் பெற்ற ருஷ்ய நூலாசிரியரின் சொற்களைச் சுட்டுகிறேன். அது பின்வரும் வழியில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது: போல்ஷிவிக்குகள் முட்டாள்தனமான காரியங்களைச் செய்யும் போது போல்ஷிவிக் ''இரண்டு தடவை இரண்டு ஐந்து'' என்கிறான்; ஆனால் அவனது எதிரிகள் அதாவது முதலாளிகளும் இரண்டாம் அகிலத்தின் வீரர்களும் முட்டாள்தனமான காரியங்களைச் செய்யும் போது அவர்கள் ''இரண்டு தடவை இரண்டைக் கொண்டு ஒரு மெழுகுதிரி''[36] பெற முடிகிறது. இதை எளிதில் நிரூபிக்கலாம். உதாரணமாக கல்ச்சாக்குடன் அமெரிக்கா, இங்கிலாந்து பிரான்ஸ் ஜப்பான் ஆகிய நாடுகள் செய்து கொண்ட உடன்பாட்டை எடுத்துக் கொள்வோம். உங்களை நான் கேட்கிறேன்: இவற்றை விடவும் அதிக அறிவொளி பெற்ற அதிக வலிமை வாய்ந்த நாடுகள் உலகில் ஏதேனும் இருக்கின்றனவா? ஆனால் என்ன நடந்தது? அவை சரியான கணிப்பின்றி, சிந்தனை இன்றி, கவனம் இன்றி கல்ச்சாக்குக்கு உதவி புரிவதாக வாக்களித்தன. இது ஒரு படு தோல்வியில் போய் முடிந்தது. இதைப் புரிந்து கொள்வது

மனித அறிவுக்குக் கடினம் என்று எனக்குத் தோன்றுகிறது.

இன்னொரு உதாரணத்தை, மேலும் நெருக்கமானதும் அதிக முக்கியத்துவமுடையதுமான வெர்சேய் உடன் படிக்கையை[33] எடுத்துக் கொள்வோம். ''வெற்றிப் புகழ் ஈட்டியதான'' ''மஹா'' வல்லரசுகள் என்ன செய்தன என்று நான் கேட்கிறேன். இந்தக் குழப்பத்தில் இருந்தும் அலங்கோலத்தில் இருந்தும் அவைகளால் எப்படிப் பரிகாரம் காண முடியும்? நாம் செய்துள்ள முட்டாள்தனமான காரியங்கள் முதலாளித்துவ நாடுகள், முதலாளித்துவ உலகம் மற்றும் இரண்டாம் அகிலம் ஆகியவை சேர்ந்து செய்துள்ள முட்டாள்தனமான காரியங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் அவை அறவே அற்பமானவை என்று திரும்பவும் கூறுவது மிகையாகாது என்று நினைக்கிறேன். இதனால்தான் உலகப் புரட்சிக்கான வருங்கால வாய்ப்பு—இந்த உரை பொருளை நான் சுருக்கமாகக் குறிப்பிட வேண்டும்—சாதகமானதாக இருக்கிறது என்று நான் கருதுகிறேன். திட்டவட்டமான நிலைமைகளில் இது இன்னும் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். இதைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

1921ல், மூன்றாவது காங்கிரசில், கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிறுவன ஒழுங்கமைப்புக் கட்டுமானம் பற்றியும், அவற்றின் வேலை முறைகள் மற்றும் உள்ளடக்கம் பற்றியும் ஒரு தீர்மானத்தை ஏற்றுக் கொண்டோம்.[37] அந்தத் தீர்மானம் அருமையானது. ஆனால் உள்ளும் புறமும் ருஷ்யத் தன்மையுடையது, அதாவது அதில் உள்ள யாவும் ருஷ்யாவின் நிலைமைகளை அடிப்படையாக்கியவை. இதுவே இதன் நல்ல அம்சமும் இதன் குறைபாடும் ஆகும். குறைபாடாக இது இருப்பதற்குக் காரணம் வெளிநாட்டவர் யாரும் இதைப் படிக்க முடியாது என்பது உறுதி. இதைக் கூறுவதற்கு முன்பு இதை நான் மீண்டும் படித்துப் பார்த்தேன். முதலாவதாக இது மிகவும் நீண்ட தீர்மானம். இதில் ஐம்பதுக்கும் அதிகமான பாராக்கள் உள்ளன. வெளிநாட்டவர் வழக்கமாக இத்தகைய விஷயங்களைப் படிக்க இயலாது. இரண்டாவதாக அவர்கள் இதைப் படித்தாலும் கூட இதைப் புரிந்து கொள்ள முடியாது. காரணம் இது மிகவும் ருஷ்யத் தன்மையுடையது. இது ருஷ்யன் மொழியில் எழுதப்பட்டிருக்கிறது என்பதால் அல்ல—இது எல்லா மொழிகளிலும் மிகவும் அருமையாக

மொழிபெயர்க்கப்பட்டுள்ளது—ஆனால் இது முற்றமுழுமையாயும் ருஷ்ய உணர்வில் ஊறிக்கிடக்கிறது என்பதால் ஆகும். மூன்றுவதாக, விதிவிலக்கான முறையில் வெளிநாட்டவர் எவரேனும் இதைப் புரிந்து கொண்டாலும் கூட அவரால் இதைச் செயல்படுத்த முடியாது. இதுவே இதன் மூன்றும் குறைபாடு. நான் இங்கு வந்திருந்த ஒரு சில வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடன் பேசினேன். காங்கிரசின் போது பல்வேறு நாடுகளில் இருந்தும் வந்துள்ள மிகப்பல பிரதிநிதிகளுடன் இந்த விஷயங்களை விவரமாக விவாதிக்க எண்ணியிருக்கிறேன். ஆனால் காங்கிரஸ் நடவடிக்கைகளில் நான் கலந்து கொள்ள மாட்டேன். துரதிருஷ்டவசமாக அவ்வாறு கலந்து கொள்வது எனக்கு சாத்தியமல்ல. இந்தத் தீர்மானம் சம்பந்தமாக நாம் ஒரு பெரிய தவறு செய்து விட்டோம் என்று எனக்குப் படுகிறது. அதாவது இனி மேற்பட்டதான வெற்றிக்குரிய பாதையை நாமே தடைப்படுத்திக் கொண்டோம். நான் ஏற்கெனவே சொன்னது போல் இந்தத் தீர்மானம் மிகவும் அருமையாக உருவரை செய்யப்பட்டுள்ளது. அதன் ஐம்பது அல்லது அதற்கு அதிகமானதுமான பாராக்களை நான் ஆதரிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நாம் நமது ருஷ்யன் அனுபவத்தை வெளிநாட்டவருக்கு எப்படி வடித்தளிப்பது என்பதைப் பயிலவில்லை. தீர்மானத்தில் கூறப்பட்ட சகலமும் நடைமுறைப்படுத்தப்படாது போயின. இதை நாம் உணரவில்லையானால் நாம் முன்செல்ல முடியாது. ஐந்தாண்டு கால ருஷ்யப் புரட்சிக்குப் பிறகு ருஷ்யன் மற்றும் வெளிநாட்டுத் தோழர்களுக்கும் நம் எல்லோருக்கும் மிக முக்கியமான காரியம் அமர்ந்து படிப்பது என்பதே என்று நான் கருதுகிறேன். அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பை நாம் இப்போது தான் பெற்றிருக்கிறோம். இந்த வாய்ப்பு எத்தனை காலம் நீடிக்கும் என்பதை நான் அறியேன். அமைதியாகப் படிப்பதற்கான வாய்ப்பை முதலாளித்துவ வல்லரசுகள் எத்தனை காலம் நமக்குத் தருமோ என்பதையும் நான் அறியேன். ஆனால் நாம் போர் நடவடிக்கை மற்றும் போர் இன்மையில் இருந்து கிடைக்கும் ஒவ்வொரு கண ஓய்வு நேரத்தையும் படிப்பதற்காக, ஆதிமுதலே படிப்பதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

கட்சி முழுதிலும் இருப்பவர்களும் ருஷ்யாவின் மக்கள்

தொகையின் எல்லா அடுக்குகளைச் சேர்ந்தவர்களும் தமது அறிவுத் தாகம் வாயிலாக இதை நிரூபித்திருக்கிறார்கள். பயில்வதற்கான இந்த முயற்சி, நமது இன்றைய மிக முக்கிய மான பணி படிப்பது, சிரமப்பட்டுப் படிப்பது என்பதைக் காட்டுகிறது. நமது வெளிநாட்டுத் தோழர்களும் படிக்க வேண்டும். அவர்கள் நாம் இன்னும் செய்ய வேண்டியிருப்பது போல படிக்கவும் எழுதவும் படித்ததைப் புரிந்து கொள்ளவு மான படிப்பில் இறங்க வேண்டுவதில்லை. இது பாட்டாளி வர்க்க கலாசாரமா, முதலாளித்துவக் கலாசாரமா எது சம் பந்தப்பட்டது என்ற ஒரு சர்ச்சை இருக்கிறது. அந்தப் பிரச் சினையை முடிவு கூறாமலே விட்டு வைக்கிறேன். ஆனால் ஒரு காரியம் நிச்சயம், நாம் வாசிக்கவும் எழுதவும் நாம் வாசித் ததைப் புரிந்து கொள்ளவும் பயிலத் தொடங்க வேண்டும். வெளிநாட்டவருக்கு அது தேவை இல்லை. அவர்களுக்கு இன் னும் சற்றே மேற்பட்ட பயிற்சி தேவை: முதலாவதாயும், மற்ற விஷயங்களின் மத்தியில் அவர்கள், கம்யூனிஸ்டுக் கட்சி களின் நிறுவன ஒழுங்கமைப்புக் கட்டுமானம் குறித்து நாம் என்ன எழுதியிருக்கிறோமோ, எதில் வெளிநாட்டுத் தோழர் கள் வாசிக்காமலும் புரிந்து கொள்ளாமலும் கையெழுத்துப் போட்டார்களோ அதைப் படித்துப் புரிந்து கொள்ள வேண் டும். இதுவே அவர்களது முதல் பணி. அந்தத் தீர்மானம் அமுல் செய்யப்பட வேண்டும். அதை இக்கணமே அமுல் செய்வது என்பது முடியாது, அது முற்றிலும் சாத்தியமல்ல. தீர்மானம் மிகவும் ருஷ்யத் தன்மையுடையதாக, ருஷ்யன் அனுபவத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கிறது. இதனால் தான் வெளிநாட்டவருக்கு முற்றும் புரியாத ஒன்றாக இருக் கிறது. அவர்கள் இதை ஒரு மூலையில் சாமிபடம் போன்று மாட்டிவைத்து பிரார்த்தனை செய்வதோடு திருப்தி அடைய முடியாது. இந்த வழியில் எதுவும் சாதனையாகாது. ருஷ்ய அனுபவத்தின் பகுதியை அவர்கள் தன்மயப்படுத்த வேண் டும். இதை எவ்வாறு செய்வது என்பது எனக்குத் தெரியாது. உதாரணமாக இத்தாலிய மக்கள் இன்னும் போதிய அள வுக்கு அறிவொளி பெறவில்லை என்றும் அவர்களது நாடு கருப்பு நூற்றுவர்களை[38] இன்னும் உறுதியாக எதிர்க்கும் நிலையில் இல்லை எனவும் இத்தாலியருக்குச் சுட்டிக் காட்டு வது மூலம் இத்தாலியில் இருக்கும் பாசிஸ்டுகள் நமக்கு ஒரு

மாபெரும் சேவை செய்யலாம். ஒருவேளை இது மிகவும் பய னுள்ளதாக இருக்கலாம். இந்தத் தீர்மானத்தின் கோட்பாடு களை வெளிநாட்டவர்களுக்கு விளக்கிக் கூறுவதற்கான வழி வகைகளை ருஷ்யர்களான நாம் காண வேண்டும். அதை நாம் செய்தாலன்றி அதை அமுல் செய்வது அவர்களுக்கு அறவே சாத்தியமல்ல. இதன் தொடர்பாக நாம், இப்போது பிர வேசித்துவரும் காலப்பகுதியில் ஆகமுக்கியமான விஷயம் படித்தல் என்பதை ருஷ்யர்களுக்கு மட்டுமன்றி வெளி நாட்டுத் தோழர்களுக்கும் நாம் சொல்ல வேண்டும் என்று உறுதியாகக் கருதுகிறேன். நாம் பொதுவான பொருளில் படித்து வருகிறோம். புரட்சிகர வேலையின் நிறுவன ஒழுங் கமைப்பு, கட்டுமானம், முறை மற்றும் உள்ளடக்கம் ஆகிய வற்றை மெய்யாகவே புரிந்துகொள்ளும் பொருட்டு அவர்கள் விசேஷமான பொருளில் படிக்க வேண்டும். அவர்கள் அதைச் செய்வார்களானால், அப்போது உலகப் புரட்சியின் வருங்கால வாய்ப்புகள் நல்லதாக மட்டுமல்ல அற்புதமாகவே இருக்கும் என்று நான் நம்புகிறேன். (ஆரவாரமான நீடித்த கரவொலி. ''தோழர் லெனின் நீடூழி வாழ்க!'' என்ற முழக்கம், மீண்டும் ஆரவாரமான கரவொலி.)

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 278-94

## மாஸ்கோ சோவியத்தின் பிளீனம் கூட்டத்தில் ஆற்றிய உரை நவம்பர் 20, 1922[39]

(பலத்த கரவொலி முழக்கம். ''சர்வ தேசியக் கீதம்'' பாடப்படுகிறது.) தோழர் களே! உங்களுடைய கூட்டத்துக்கு நான் முன்னரே வர முடி யாமற் போனதற்காகப் பெரிதும் வருந்துகிறேன், மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். நான் அறிந்த வரை சில வாரங் களுக்கு முன்பே, மாஸ்கோ சோவியத்துக்கு வந்து கலந்து கொள்ள நீங்கள் எனக்கு வாய்ப்பளிக்க நினைத்தீர்கள். எனது

உடல்நலக் குறைவுக்குப் பிற்பாடு, டிசம்பர் முதலாய் நீண்ட தொரு காலத்துக்கு—ஊழியத்துறைக்குரிய பதத்தை உப யோகிப்பதெனில்—நான் ஏலாத நிலையில் இருந்ததால், என் னால் வர முடியவில்லை. வேலை ஆற்றல் இவ்விதம் குறைந்து போய், நான் எனது தற்போதைய உரையினை ஒவ்வொரு வாரமாய் ஒத்திப் போட்டு வர நேர்ந்தது. உங்களுக்கு நினை விருக்கும், எனது வேலையில் மிகக் கணிச பகுதியை முதலில் தோழர் திசியுருப்பா மீதும், பிறகு தோழர் ரீக்கவ் மீதும் நான் குவியச் செய்து வந்தேன். தோழர் காமெனெவ் மீதும் கூடுதலாகக் குவியச் செய்ய வேண்டியிருந்தது. ஏற்கெனவே நான் உபயோகித்த உவமையிலேயே சொல்வதெனில், திடு மென இரு சுமைகளை இழுக்க வேண்டியிருந்ததைக் குறிப் பிட்டாக வேண்டும். ஆயினும்—தொடர்ந்து உவமையைக் கையாளுவதெனில்—குதிரை அளவுகடந்த ஆற்றல் வாய்ந் ததாகவும் ஆர்வமிக்கதாகவும் அமைந்து விட்டதை எடுத் துரைக்க வேண்டும். (கரவொலி.) இருப்பினும் எவரும் இரு சுமைகளை இழுக்கலாகாது. பொறுமையிழந்த வனாய் இப்போது நான், தோழர்கள் திசியுருப்பாவும் ரீக்க வும் திரும்பி வருவதற்காகக் காத்திருக்கிறேன். சிறிதளவே னும் நல்ல முறையில் வேலையினை நாங்கள் பகிர்ந்து கொண் டாக வேண்டும். என்னைப் பொறுத்த வரை எனது வேலை ஆற்றல் குறைந்திருப்பதால், விவகாரங்களைக் கவனிப்பதற்கு நான் விரும்புவதைக் காட்டிலும் எனக்கு மிக அதிக நேரமாகி விடுகிறது.

1921 டிசம்பரில், வேலை செய்வதை நான் அறவே நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. அப்போது ஆண்டின் இறுதி. புதிய பொருளாதாரக் கொள்கைக்கான மாற்றத்தை நாம் செயல்படுத்திக் கொண்டிருந்தோம். 1921ம் ஆண்டின் ஆரம்பத்திலேயே நாம் இந்த மாற்றத்தை மேற்கொண் டிருந்தும், இது மிகக் கடினமான—மிகமிகக் கடினமானதெனக் கூறுவேன்—மாற்றம் என்பது அப்போதே தெரிய வந்தது. இப்போது நாம் பதினெட்டு மாதங்களுக்கு அதிகமாய் இந்த மாற்றத்தைச் செயல்படுத்தி வந்துள்ளோம். புதிய நிலைமை களுக்கு ஏற்ப, குறிப்பாய்ப் புதிய பொருளாதாரக் கொள் கைக்குரிய நிலைமைகளுக்கு ஏற்ப, பெரும்பான்மையோர் புதிய பொறுப்புகளை ஏற்றுத் தம்மை ஒழுங்கு செய்து

கொள்ள இது போதுமான நேரம் என்பதாகவே எவரும் நினைப்பார்.

அயல் துறைக் கொள்கையைப் பொறுத்த வரை, இங்கே நாம் மிகச் சொற்ப மாற்றங்களையே செய்ய வேண்டியிருந்தது. முன்பே நாம் ஏற்றிருந்த கொள்கை வழியையே கடைப் பிடித்தோம். சிறிதும் முரணின்றியும் பெரிய அளவிலான வெற்றியோடும் நாம் இவ்வழியைக் கடைப் பிடித்தோம் என்று மனத்துள் மாசின்றிக் கூற முடியுமென நினைக்கிறேன். அதைப் பற்றி விவரமாய் விரித்துரைக்கத் தேவையில்லை என்பதே என் கருத்து. விளாதிவஸ்தோக் பிடிக்கப்பட்டிருப்பதும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டமும் கூட்டரசு பிரகடனம் செய்யப்பட்டதும்—சில தினங்களுக்கு முன்புதான் இது குறித்து நீங்கள் பத்திரிகைகளில் படித்தீர்கள்—இத்துறையில் மாறுதல்கள் தேவையில்லை என்பதை நிரூபித்துக் காட்டியும், தெட்டத்தெளிவாகப் புதப்படுத்தியும் உள்ளன.[40] நாம் செல்லும் பாதை முற்றும் வெளிவாகவும் திட்டவட்டமாகவும் வரையறை செய்யப்பட்டதாகும். உலகின் எல்லா நாடுகளுக்கும் எதிரே நமக்கு இந்தப் பாதை வெற்றி கிட்டும்படி உறுதி செய்துள்ளது. ஆயினும் இந்நாடுகளில் சில, நம்முடன் ஒரே மேசையின் முன் அமர மறுப்பதாகத் தயங்காமல் இன்னமும் அறிவிக்கின்றன. இருந்தபோதிலும் பொருளாதார உறவுகளும் அவற்றைத் தொடர்ந்து அரசுத் தூது உறவுகளும் மேம்பட்டு வருகின்றன, மேம்படத்தான் வேண்டும், நிச்சயம் மேம்படவும் செய்யும். இதனை எதிர்க்கும் ஒவ்வொரு நாடும் தாமதத்துக்கு உள்ளாகிவிடும் அபாயத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கும், குறிப்பிடத்தக்க முக்கிய விவகாரங்களில் பிரதிகூலமடையும்படி நேரலாம். இப்போது நாம் எல்லோருமே இதைக் காண முடிகிறது—சஞ்சிகைகளிலும் செய்தியேடுகளிலும் மட்டுமல்ல. ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் பெரியவை என்பதை வெளிநாடுகளுக்குச் சென்று வரும் தோழர்களும் காண்கிறார்கள் என்று நினைக்கிறேன். பழைய உவமை ஒன்றை எடுத்தாளலாமெனில், இங்கே நாம் பிற ரயில் வண்டிகளுக்கோ, பிற வாகனங்களுக்கோ மாறிச் சென்று விடவில்லை.

ஆனால் நமது உள்நாட்டுக் கொள்கையில், 1921 வசந்தத்தில் நாம் செய்த மாற்றம் தொடர்ந்து நமக்குச் சில இன்னல்

களை உண்டாக்கி வருகிறது. நம்மிடையே இது குறித்து சர்ச்சைகளோ, கருத்து வேறுபாடுகளோ எழ வழியில்லாதபடி அப்படி அளவுமீறி வலு வாய்ந்த, ஐயமற அறிவுறுத்தும்படியான சூழ்நிலைமைகளால் அவசியமாக்கப்பட்டுவிட்ட இந்த மாற்றம் தொடர்ந்து நமக்குச் சில இன்னல்களை—பெரிய இன்னல்களை என்றே சொல்வேன்—உண்டாக்கி வருகிறது. இந்த மாற்றம் அவசியமே என்பது குறித்து நமக்கு எந்தச் சந்தேகமும் இருப்பதல்ல இதற்குக் காரணம்—அது குறித்து எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. நமது புதிய பொருளாதாரக் கொள்கையின் சோதனை நாம் எதிர்பார்த்த வெற்றியை அளித்திருக்கிறது என்பது குறித்து நமக்கு எந்தச் சந்தேகமும் இருப்பதல்ல காரணம். அது சம்பந்தமாய் எந்தச் சந்தேகமும் இல்லை—இதை நான் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்—நமது கட்சி அணிகளிலும் சரி, கட்சி சார்பில்லாத தொழிலாளர்களும் விவசாயிகளுமான பெருந்திரள் மக்களது அணிகளிலும் சரி எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை.

இந்த அர்த்தத்தில் இப்பிரச்சினை எந்த இன்னலையும் உண்டாக்கிவிடவில்லை. நமக்குள்ள இன்னல்கள் நம்மை எதிர்நோக்கும் பணியிலிருந்து எழுகிறவை; அதன் நிறைவேற்றத்துக்குப் புதிய ஆட்களது சேவைகளும் அசாதாரண நடவடிக்கைகளும் அசாதாரண முறைகளும் அடிக்கடி தேவைப்படும் ஒரு பணியை நாம் எதிர்நோக்குவதிலிருந்து எழுகிறவை. இது சரியா, அல்லது அது சரியா என்பது பற்றி இன்னமும் நம்மிடையே சந்தேகங்கள் இருந்து வருகின்றன. ஒரு திசையிலோ, இன்னொன்றிலோ மாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஆனால் இவை இரண்டும் நீண்டதொரு காலத்துக்குத் தொடர்ந்து இருக்கவே செய்யும் என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். ''புதிய பொருளாதாரக் கொள்கை!'' விபரீதமான பெயர்தான். இக்கொள்கை நம்மைத் திரும்பிச் செல்ல வைப்பதால் இது புதிய பொருளாதாரக் கொள்கை என்று அழைக்கப்பட்டது. இப்போது நாம் ஒரு விதத்தில் பின்வாங்கிச் செல்கிறோம், திரும்பிச் செல்கிறோம். ஆனால் முதலில் பின்வாங்கிய பின் ஓடிவந்து தாவி முன்னிலும் பெரிய அளவில் முன்னால் பாயும் பொருட்டு நாம் இதைச் செய்கிறோம். இந்த நிபந்தனையின் பேரில்தான் நாம் பின்வாங்கிச் சென்று நமது புதிய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம்.

இப்படிப் பின்வாங்கிய பின், மிகவும் பிடிவாதமாகத் தாக்குதல் ஆரம்பிப்பதற்காக நாம் எவ்விடத்தில், எப்படித் திரும்பவும் சக்திகளை ஒன்றுதிரட்டித் தக்கபடி திருத்தி மாற்றமைவு செய்ய வேண்டும் என்பதைத் தற்போது நாம் அறியோம். இந்தச் செயல்கள் யாவற்றையும் செவ்வனே செய்யும் பொருட்டு—பழமொழி கூறுவது போல்—பத்து தரமல்ல, நூறு தரம் பார்த்து விட்டுப் பாய வேண்டும். நமது பணிகள், பிரச்சினைகள் யாவற்றையும் சமாளிக்கையில் எதிர்ப்பட வேண்டியிருக்கும் நம்புதற்கரிய இன்னல்களை வென்று முன்செல்லும் பொருட்டு நாம் இவ்வாறு செய்தாக வேண்டும். சாதிக்கப் பெற்றுள்ளவற்றைச் சாதிப்பதற்காக எப்படிப்பட்ட தியாகங்கள் புரிய வேண்டியிருந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். உள்நாட்டு போர் எப்படி நீடித்துச் சென்றது, எவ்வளவு முயற்சி அதற்காகச் செலவிட நேர்ந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரியும். சரி, இப்போது விளாதிவஸ்தோக் பிடிக்கப்பட்டு விட்டது (நெடுந்தொலைவுக்கு அப்பால் இருப்பினும் விளாதிவஸ்தோக் எப்படியும் நம்முடைய நகர்களில் ஒன்றாகும்). (நீடித்த கரவொலி முழக்கம்.) எல்லோரும் நம்முடன் சேர்ந்து கொள்ள, நம்முடைய சாதனைகளில் சேர்ந்து கொள்ள விரும்புவதை இது நமக்குத் தெரியப்படுத்துகிறது. ருஷ்யாவின் சோவியத் சோஷலிசக் கூட்டாட்சிக் குடியரசு இப்போது இங்கிருந்து அங்கு வரை விரிந்து பரந்து செல்கிறது. நம்முடன் சேர்ந்து கொள்ள வேண்டுமென்ற இந்த விருப்பமானது நமது உள்நாட்டுப் பகைவர்களிடமிருந்து மட்டுமல்லாமல், நம்மைத் தாக்கிய அன்னியப் பகைவர்களிடமிருந்தும் நம்மை விடுவித்திருக்கிறது. ஜப்பானை மனதிற் கொண்டு நான் இதைச் சொல்கிறேன்.

அரசுறவுத் துறையில் அனைத்து உலகும் அங்கீகரிக்கும் திட்டவட்டமான ஒரு நிலையை நாம் வென்று கொண்டு விட்டோம். நீங்கள் எல்லோருமே இதைக் காண்கிறீர்கள். இதன் விளைவுகளைக் காண்கிறீர்கள். ஆனால் இதைப் பெறுவதற்கு எவ்வளவு காலமாகியுள்ளது! பொருளாதாரக் கொள்கைத் துறையிலும் மற்றும் வாணிபக் கொள்கைத் துறையிலும் நமது உரிமைகளுக்கு நமது பகைவர்களிடமிருந்தும் அங்கீகாரம் இப்போது வென்று கொண்டு விட்டோம். வாணிப ஒப்பந்தங்கள் முடிவாகியுள்ளதானது இதை நிரூபிக்கிறது.

புதிய பொருளாதாரக் கொள்கை[30] எனப்படும் பாதையைப் பதினெட்டு மாதங்களுக்கு முன்பு மேற்கொண்ட நாம் அந்தப் பாதையிலே முன்னேறுவது நம்புதற்கு இயலாதபடி இவ்வளவு கடினமாயிருக்கக் காரணம் என்னவென்பது புரிகிறது. நாம் வாழும் இந்நாடு போரால் அப்படிக் கடுமையாகப் பாழ்படுத்தப்பட்டிருக்கிறது, முறையான வாழ்க்கைக்கு வழியில்லாதபடி அடித்துச் சாய்க்கப்பட்டிருக்கிறது; அந்த அளவுக்குத் துன்பப்பட்டு, அந்த அளவுக்குச் சகித்துக் கொள்ள வேண்டியிருந்ததால், வேறு வழியின்றி நாம் நமது கணக்கீடுகள் யாவற்றையும் மிக மிகச் சிறிய சதவிகிதத்திலிருந்து—போருக்கு முற்பட்ட சதவிகிதத்திலிருந்து—ஆரம்பிக்கிறோம். நமது வாழ்க்கை நிலைமைகளுக்கு இந்த அளவுகோலையே நாம் அனுசரிக்க வேண்டியிருக்கிறது. இதைச் செய்கையில் சில சமயம் நாம் பொறுமையிழந்து கொதிப்படைகிறோம், இன்னல்கள் பிரம்மாண்டமானவை என்ற முடிவுக்கே எப்போதும் வந்தடைகிறோம். இத்துறையில் நமக்கு நாம் வகுத்துக் கொண்டுள்ள பணியினை சாதாரணமான முதலாளித்துவ நாடு ஒன்றில் இருந்து வரும் நிலைமைகளுடன் நாம் ஒப்பிட்டுப் பார்ப்பதால், இது மேலும் பிரம்மாண்டமானதாகத் தெரிகிறது. நமக்கு நாம் இந்தப் பணியை வகுத்துக் கொண்டோம், ஏனெனில் வழக்கமாய் இம்மாதிரியான நிலைமைகளில் அளிக்கப்படக் கூடிய உதவியை செல்வம் படைத்த அரசுகள் நமக்கு அளிக்குமென எதிர்பார்க்க முடியாதென்பதைப் புரிந்து கொண்டோம். உள்நாட்டுப் போருக்குப் பிற்பாடு அனேகமாய் முழு அளவுக்கு நம்மை எதிர்த்து பகிஷ்காரம் நடத்தினர், அதாவது முதலாளித்துவ உலகில் வழக்கமாகவும் முறையாகவும் இருக்கும்படியான பொருளாதாரத் தொடர்புகளை நம் சம்பந்தமாய் நிறுவிக் கொள்ளப் போவதில்லையென்று கூறினார்கள்.

நாம் புதிய பொருளாதாரக் கொள்கையை மேற்கொண்டு பதினெட்டு மாதங்களுக்கு மேலாகின்றன, நமது முதலாவது சர்வதேச உடன்படிக்கையைச் செய்து கொண்டு அதற்கும் அதிகமான காலமாகிறது. அப்படியும் முதலாளித்துவ வர்க்கத்தார் எல்லோரும், அரசாங்கங்கள் யாவும், நம்மை எதிர்த்து நடத்தும் இந்த பகிஷ்காரம் ஓயவில்லை, தொடர்ந்து நம்மைப் பாதித்து வருகிறது. புதிய பொருளா

தார நிலைமைகளை நாம் கைக்கொண்ட போது, இதன்றி வேறு எதையும் நாம் எதிர்பார்க்கவில்லை. ஆயினும் நாம் மாற்றத்தைச் செய்தே ஆக வேண்டும், தன்னந்தனியே நின்று வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்பதில் நமக்கு எந்தச் சந்தேகமும் இருக்கவில்லை. நமக்கு அளிக்கப்படக் கூடிய எந்த உதவியும், முதலாளித்துவ அரசுகள் நமக்கு அளிக்கக் கூடிய எந்த உதவியும், இந்த நிலைமையை அகற்றுவதற்குப் பதில், மிகப் பெருவாரியான சந்தர்ப்பங்களில், இதைக் கடுமையாக்கும், உக்கிரமடையச் செய்யும் என்பதாகவே தெரிகிறது—நாம் தொடர்ந்து முன்செல்லச் செல்ல இது மேலும் மேலும் தெளிவாகி வருகிறது. ''தன்னந்தனியே'' என்று நாம் கூறிக் கொண்டோம். ''தன்னந்தனியேதான்'' என்றே கூறுகிறது அனேகமாய் ஒவ்வொரு முதலாளித்துவ நாடும்—நாம் எந்த உடன்பாடும் செய்து கொண்ட, எந்தக் காரியத்தையும் மேற்கொண்ட, எந்தப் பேச்சுவார்த்தைகளும் தொடங்கியுள்ள ஒவ்வொரு முதலாளித்துவ நாடும். விசேஷ இன்னல் இங்கேதான் காணக் கிடக்கிறது. இந்த இன்னலை நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். நமக்குரிய அரசியல் அமைப்பை நாம் மூன்று ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்து கட்டி எழுப்பியுள்ளோம். நம்புதற்கரிய வீரம் நிறைந்த, நம்புதற்கரிய கடுமை வாய்ந்த வேலை அது. இதுகாறும் நாம் இருந்து வந்த நிலையில், அநாவசியமாய் எதையும் உடைத்தெறிகிறோமா என்று பார்ப்பதற்கு நமக்கு அவகாசம் இருக்கவில்லை; தியாகங்கள் மிகுதியாகி விடுமோ என்று கவனிக்க அவகாசம் இருக்கவில்லை. ஏனெனில் தியாகங்கள் நிறையவே புரிய வேண்டியிருந்தது. ஏனெனில் அப்போது நாம் தொடங்கிய போராட்டம் பழைய சமுதாய அமைப்புக்கு எதிரான ஜீவ மரணப் போராட்டமாகும் (நீங்கள் இதை நன்கு அறிவீர்கள், இதை விவரிக்கத் தேவையில்லை). வாழ்வதற்கான, சமாதான வழியில் வளர்ச்சி காண்பதற்கான உரிமை நமக்கு வரப் பெறுவதற்காக அவ்வமைப்பை எதிர்த்து நாம் போராடினோம். இந்த உரிமையைப் பெறுவதில் நாம் வெற்றி பெற்றுள்ளோம். இதைச் சொல்வது நாமல்ல; நம் பால் பாரபட்சம் கொண்டவர்களாகக் குற்றம் சாட்டப்படக் கூடிய சாட்சிகள் அளித்திடும் சாட்சியமல்ல இது. நமது பகைவர்களது முகாமில் இருப்

போரும், ஆகவே இயல்பாகவே பாரபட்சம் கொண்டோரு மான—நமக்கு ஆதரவாக அல்ல, எதிராகப் பாரபட்சம் கொண்டோருமான—சாட்சிகள் அளித்திடும் சாட்சியம் இது. இந்த சாட்சிகள் தெனீக்கினது முகாமில் இருந்தவர் கள், கைப்பற்றப்பட்ட பிரதேசங்களிலான ஆட்சியை நெறி யாண்மை புரிந்தவர்கள். இவர்களது பாரபட்சம் நமக்குப் பெருத்த சேதம் விளைவித்ததை, பிரம்மாண்ட நாசத்தை உண்டாக்கியதை நாம் அறிவோம். இவர்களால் நாம் எல்லா வகையான நஷ்டங்களுக்கும் ஆட்பட்டோம்; எல்லா வித மான செல்வங்களையும், செல்வத்துக்கு எல்லாம் செல்வமான மனித உயிர்களும் உட்பட யாவற்றையும் நம்புதற்கரிய பெரிய அளவில் இழந்தோம். இப்போது நாம் நமது பணி களை மிகவும் கவனமாக அலசி ஆராய்ந்தாக வேண்டும்; நமது முந்திய ஆதாயங்களைக் கைவிடாதிருப்பதே பிரதான பணி யாய் இருக்குமென்பதைப் புரிந்து கொண்டாக வேண்டும். நமது பழைய ஆதாயங்களில் ஒன்றையேனும் நாம் கைவிட மாட்டோம். (கரவொலி.) ஆயினும் முற்றிலும் புதியதான பணி ஒன்று நம்மை எதிர்நோக்குகிறது; பழையது மிகத் தெளிவான முட்டுக்கட்டையாகி விடலாம். இந்தப் பணியைப் புரிந்து கொள்வது மிகவும் கடினமாகவே இருக் கும். எனினும் இது புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்று. அப்போதுதான், நம்மை வெகுவாக மாற்றிக் கொள்வது அவசியமாய் இருக்கும் ஒரு நேரத்தில், நாம் எப்படி வேலை செய்வதென்று கற்றுக் கொள்ள முடியும். தோழர்களே, இந்தச் சொற்களும் கோஷங்களும் புரியும்படியானவையே என்று நினைக்கிறேன், ஏனெனில், கட்டாயத்தின் காரணமாய் நான் ஏறத்தாழ ஓராண்டாய் இங்கில்லாமற் போக நேர்ந்த இக்காலத்தில், நடப்பு வேலைகளை நீங்கள் நடைமுறையில் நிறைவேற்றி வந்திருக்கிறீர்கள்; பல்வேறு வழிகளிலும் நூற்றுக் கணக்கான சந்தர்ப்பங்களிலும் இது பற்றிப் பேசி யும் ஆலோசித்தும் வந்திருக்கிறீர்கள்; இது சம்பந்தமான உங் களது சிந்தனைகள் ஒரேயொரு முடிவுக்கே—அதாவது இது காறும் உள்நாட்டு போரில் நாம் கையாண்ட நெகிழ்வினை மேலும் அதிக அளவுக்கு இப்போது வெளிப்படுத்தியாக வேண்டுமென்ற ஒரேயொரு முடிவுக்கே—இட்டுச் செல்ல முடியும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

பழையதை நாம் கைவிடலாகாது. முதலாளித்துவ அரசுகளுக்கு நம்மைத் தகவமைக்கும் வரிசையான பல சலுகைகள், அவற்றை நம்முடன் தொடர்பு கொள்ளச் செய்து அவற்றின் இலாபத்துக்கு உறுதியளிக்கும் சலுகைகளாகும். இந்த இலாபம் சில நேரங்களில் அதற்குரிய அளவை விட அதிகமானதாய் இருந்தாலும் இருக்கலாம். அதே போது உற்பத்திச் சாதனங்களில் ஒரு சொற்ப அளவையே நாம் விட்டுக் கொடுக்கிறோம், அனேகமாய் முழு அளவுக்கு உற்பத்திச் சாதனங்கள் அரசின் வசமே இருந்து வருகின்றன. ஆங்கிலேயர் உர்ஹார்ட் முன்மொழிந்த சலுகை குறித்து சில நாட்களுக்கு முன்பு பத்திரிகைகள் விவாதித்தன. இது காறும் இவர் அனேகமாய் உள்நாட்டுப் போர் காலம் முழுதும் நமக்கு எதிராய் இருந்துள்ளவர். ''உள்நாட்டு போரில் ருஷ்யாவுக்கு எதிராய், இப்படியும் அப்படியும் நமக்கு இழப்பு உண்டாக்கத் துணிந்த இந்த ருஷ்யாவுக்கு எதிராய், நமது குறிக்கோளை நாம் ஈடேற்றிக் கொள்வோம்'' என்று இவர் கூறுவது வழக்கம். அதற்கெல்லாம் பிற்பாடும் நாம் அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்த வேண்டியதாயிற்று. பேச்சுவார்த்தைகள் நடத்த முடியாதென நாங்கள் மறுக்கவில்லை, மிகுந்த மகிழ்ச்சியுடன் நாம் இவற்றை ஆரம்பித்தோம். ஆனால் நாங்கள் சொன்னோம்: ''மன்னிக்க வேண்டும், நாங்கள் வென்று பெற்றுக் கொண்டதை நாங்கள் கைவிடப் போவதில்லை. எங்கள் ருஷ்யா மிகப் பெரியது, எங்கள் பொருளாதார உள்ளாற்றல்கள் அளவுகடந்தவை. ஆகவே உங்களது அன்பான முன்மொழியை நிராகரிக்காதிருப்பதே நியாயமென எங்களுக்குப் படுகிறது. இந்த முன்மொழியை நிதானமாய், தொழில்-வாணிகத் துறையினருக்கு உரிய முறையில் விவாதிப்போம்.'' மெய்தான், எங்களிடையிலான முதலாவது பேச்சு பயன் தரவில்லை, ஏனெனில் அரசியல் காரணங்களை முன்னிட்டு நாம் அவருடைய முன்மொழியை ஒத்துக் கொள்ள முடியாமற் போயிற்று. நாம் அதை நிராகரிக்க வேண்டியிருந்தது. டார்டனல்ஸ் ஜலசந்தி பற்றிய பேச்சுவார்த்தைகளில் நாம் பங்கு கொள்ளும் சாத்தியப்பாட்டிற்கு ஆங்கிலேயர்கள் இடந் தராமல் இருந்த வரை, நாம் அதை நிராகரிக்க வேண்டியிருந்தது. ஆனால் இவ்வாறு நிராகரித்ததும் உடனே நாம் இந்த விவகாரத்தின் கருப்பொருள் குறித்து பரிசீலனை செய்ய

வேண்டியதாயிற்று. இதனால் நமக்கு அனுகூலம் உண்டா, இல்லையா என்றும் இந்தச் சலுகை உடன்பாட்டைச் செய்து கொள்வதால் நாம் இலாபமடைவோமா, எந்நிலைமைகளில் இலாபகரமாக இருக்கும் என்றும் நாங்கள் விவாதித்தோம். இதற்கான விலை குறித்து நாங்கள் பேச வேண்டியதாயிற்று. தோழர்களே, பிரச்சினைகளைத் தற்போது நாம் அணுகும் முறை முன்பு நாம் அணுகி வந்த முறையிலிருந்து எந்த அளவுக்கு மாறுபாடானது என்பதை இது உங்களுக்குத் தெரியப் படுத்துகிறது. முன்பெல்லாம், ''எனது உயிரைத் தருகிறேன்'' என்பதாகக் கம்யூனிஸ்ட் கூறினர். அது அவருக்கு மிக எளிய தாகத் தோன்றியது. ஆயினும் உண்மையில் எப்போதும் அது அவ்வளவு எளியதாக இருக்கவில்லை. ஆனால் கம்யூனிஸ்டுகளாகிய நாம் தற்போது அறவே வேறொரு விதமான பணியை எதிர்நோக்குகிறோம். தற்போது நாம் யாவற்றையும் கணக்கில் எடுத்துக் கொண்டாக வேண்டும். காரியக் கண்ணோட்டமுடையவராகச் செயல்பட நீங்கள் ஒவ்வொருவரும் கற்றுக் கொண்டாக வேண்டும். முதலாளித்துவச் சுற்றுச்சார்பில் நாம் அழிந்து விடாமல் நிலைத்திருக்க எப்படி உறுதி தேடிக் கொள்ள முடியும், நமது பகைவர்கள் மூலம் நாம் எப்படி இலாபமடைய முடியும் என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமது பகைவர்கள் பேரம் பண்ணும் பேர்வழிகளே. எப்படிப் பேரம் பண்ணுவது என்பதை அவர்கள் மறந்துவிடவில்லை. நம் செலவிலே பேரம் பண்ணப் பார்ப்பவர்கள் அவர்கள். அதையும் நாம் மறந்துவிடவில்லை. வாணிகப் பிரமுகர்கள் எங்கேனும் சாதுவான பிராணிகளாக மாறி வருவதாகவோ, அவர்கள் இப்படி மாற்றமடைந்து, பயன் கருதாமலே எல்லா வகையான பேறுகளையும் நமக்கு அளிக்க முன்வருவதாகவோ நாம் கற்பனை செய்து கொள்ளவில்லை, இல்லவே இல்லை. அப்படி ஒன்றும் நடைபெறாது, நாம் அப்படி ஒன்றும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் எதிர்த்து நின்று போராடப் பழகிக் கொண்டவர்களாகிய நாம் தீர்வுக்கான வழியைக் கண்டறிந்து கொள்வோம், வாணிகம் புரியவும் இலாபமடையவும் கடினமான பொருளாதார சூழ்நிலைமைகளிலிருந்து தீங்கின்றி வெளிப் படவும் வல்லவர்களாக இருப்போம் என்பதன் அடிப்படையிலே செயல்படுகிறோம். அது மிகவும் கடினமான பணி. தற்போது நாம் அந்தப் பணியில்தான் ஈடுபட்டுள்ளோம்.

பழைய பணிக்கும் புதிய பணிக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்குமுள்ள பெரிய வேறுபாட்டை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறேன். இந்த வேறுபாடு எவ்வளவுதான் பெரிதாய் இருப்பினும், போரின் போது நாம் போர்த்தந்திரத்தைக் கையாளக் கற்றுக் கொண்டோம், இப்போது நாம் செய்ய வேண்டியிருக்கும், செய்து கொண்டிருக்கும் போர்த்தந்திரம் மிகமிகக் கடினமானது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் இதுவே நமது கடைசிப் போர்த்தந்திரம் என்பதாகத் தெரிகிறது. இத்துறையிலே நமது வலிமையை நாம் சோதித்துப் பார்த்தாக வேண்டும்; நேற்றைய படிப்பினைகளை மட்டுமல்லாது அவற்றுக்கு மேலும் கற்றுக் கொண்டு விட்டோம், அடிப்படைகளைத் திருப்பிச் சொல்வதுடன் நின்றுவிடவில்லை என்பதை நிரூபித்தாக வேண்டும். நாம் ஒன்றும் அப்படி நின்றுவிடவில்லை. மேலும் மறுபடியும் கற்க ஆரம்பித்துள்ளோம். திட்டவட்டமாகவும் தெட்டத்தெளிவாகவும் வெற்றி பெறும் வண்ணம் மேலும் மறுபடியும் நாம் கற்றும் கொள்வோம். இப்படி மேலும் மறுபடியும் கற்கும் பொருட்டு, ஒருவருக்கொருவர் திரும்பவும் திடமான வாக்குறுதி அளித்துக் கொள்ள வேண்டுமென நினைக்கிறேன்: புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் நாம் திரும்பிச் செல்கிறோம் என்றாலும், புதியவற்றில் எதையும் சரணடைக்காமல், அதே போது எந்த அரசையும்—எவ்வளவுதான் அது நமக்குப் பகையாய் இருப்பினும்—நம்முடன் தொடர்புகள் நிறுவி நம்முடன் கொள்வினை கொடுப்பினை கொள்ளும்படிக் கட்டாயப் படுத்தக் கூடிய அனுகூலங்களை முதலாளிகளுக்கு அளித்திடும் படியான முறையில் திரும்பிச் செல்கிறோமென வாக்குறுதி அளித்துக் கொள்ள வேண்டும். தலையீடு அனைத்துக்கும் தலைமையானவரும் முதுகெலும்பாகவும் இருந்தவரான உர்ஹார்ட்டுடன் தோழர் கிராசின் பல தரம் பேசிவிட்டு வந்திருக்கிறார். இந்த உர்ஹார்ட் ருஷ்யா எங்கிலும் பழைய அமைப்பை எப்படியாவது நம் மீது திணித்திட எவ்வளவு தான் முயற்சி செய்தாலும், தம்முடன், அதாவது கிராசினுடன் அதே மேசையின் எதிரே அமர்ந்து கொண்டாரென்றும், ''விலை என்ன? எவ்வளவு? எத்தனை ஆண்டுகளுக்கு?'' என்று கேட்க முற்பட்டாரென்றும் தோழர் கிராசின் கூறு

கிறார். (கரவொலி.) சலுகை ஒப்பந்தங்கள் முடித்துக் கொண்டு, உடன்படிக்கை உறவுகள் கொள்வதிலிருந்து இன்னும் இது நெடுந்தொலைவிலே இருப்பதுதான்—இந்த உடன்படிக்கை உறவுகள் முதலாளித்துவச் சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் முற்றிலும் கறாராகவும் கட்டுப்படுத்துகின்றவையாகவும் இருப்பவை. ஆயினும் அந்த நிலையை நாம் வந்தடையப் போகிறோம், அனேகமாய் வந்தடைந்து விட்டோம் என்பதைக் காண முடிகிறது. ஆனால் முழு அளவுக்கு இன்னும் நாம் வந்தடைந்தாகவில்லை. தோழர்களே, அதை நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும், தலைக்கனம் கொண்டுவிடலாகாது. நம்மை வலிமையும் சொந்த காலில் நிற்கும்படியான உறுதியும் பெறச் செய்யக் கூடியவற்றை—எந்த முதலாளித்துவ ஒப்பந்தங்களும் நம்மை மிரள வைத்துவிட முடியாது, ஒப்பந்தம் எவ்வளவுதான கடினமானதாய் இருப்பினும் நாம் அதைச் செய்து முடிப்போமென்றும் முழு ஆழத்துக்கும் அதைப் பரிசீலித்துத் தீர்வு காண்போமென்றும் அசங்காத திட நம்பிக்கை அளிக்கக் கூடியவற்றை—முழு அளவுக்குச் சாதித்துக் கொள்ளும் நிலையிலிருந்து இன்னும் நாம் தொலைவிலேதான் இருக்கிறோம். எனவேதான், இத்துறையில் நாம் ஆரம்பித்திருக்கும் வேலை—அரசியல் வேலையும் கட்சி வேலையும்—தொடர்ந்து செய்யப்பட்டாக வேண்டும். எனவேதான் நாம் பழைய முறைகளிலிருந்து முற்றும் புதியனவற்றுக்கு மாறிச் சென்றாக வேண்டும்.

பழைய பொறியமைவுதான் இன்னமும் நம்மிடம் இருந்து வருகிறது. இதனைப் புதிய வழிகளுக்கு ஏற்றதாகத் திருத்தியமைப்பதே இப்போது நம் முன்னுள்ள பணி. உடனே நாம் இதைச் செய்துவிட முடியாது. ஆனால் கம்யூனிஸ்டுகள் தக்க இடங்களில் அமர்த்தப்படும்படி நாம் கவனித்தாக வேண்டும். நமக்கு வேண்டியது என்னவென்றால், அவர்கள்—கம்யூனிஸ்டுகள்—தமக்கு ஒதுக்கப்படும் பொறியமைவைக் கட்டுப்பாடு செய்தாக வேண்டும், நம்மிடையே அடிக்கடி நிகழ்வது போல் அந்தப் பொறியமைவு அவர்களைக் கட்டுப்பாடு செய்வதாகிவிடக் கூடாது. இதை நாம் மூடிமறைக்கலாகாது, ஒளிவு மறைவின்றி இதைப் பற்றிப் பேச வேண்டும். நம்மை எதிர்நோக்கும் பணிகளும் இன்னல்களும் இவையே. நாம் நமது நடைமுறைப் பாதையிலே முன்னேற ஆரம்பித்திருக்

கும் இத்தருணத்தில், சோஷலிசத்தை விழாக் கோலம் பூண்டு தகதகக்கும் உற்சவமூர்த்தியாகப் பாவித்து அதனை நாம் அணுகலாகாது என்னும்படியான இத்தருணத்தில் நம்மை எதிர்நோக்குகின்றவை இவை. நாம் சரியான திசையில் சென்ருக வேண்டும், யாவும் சரிபார்க்கப்படும்படிக் கவனித்துக் கொண்டாக வேண்டும்; பெருந்திரளினர், நாட்டு மக்கள் அனைவரும் நாம் பின்பற்றும் பாதையினைச் சரிபார்த்து ''ஆம், பழைய அமைப்பை விட இது சிறப்பானது'' என்று சொல்லும்படி நாம் செயல்பட்டாக வேண்டும். இதுதான் நாம் நமக்கு வகுத்து அமைத்துக் கொண்டுள்ள பணி. நாட்டின் மக்களது மொத்தத் தொகையுடன் ஒப்பிடுகையில் எண்ணிக்கையில் மிகச் சிறியதேயான நமது கட்சி இந்தப் பணியைச் சமாளித்து வந்திருக்கிறது. இந்தச் சின்னஞ்சிறிய உட்கருவானது யாவற்றையும் திருத்தியமைத்திடும் பணியினைத் தனக்கு வகுத்துக் கொண்டுள்ளது, இந்தப் பணியை அது செய்து முடிக்கவே போகிறது. மக்களது ஜீவிதத்துக்கான ஓர் இலட்சியமே அன்றி இது கற்பனுவாதப் படைப்பல்ல என்பதை நாம் நிரூபித்துக் காட்டியிருக்கிருேம். நாம் எல்லோரும் இதனைக் கண்ணுற்ருேம். ஏற்கெனவே இது செய்யப்பட்டிருக்கும் ஒன்று. யாவற்றையும் நாம் திருத்தியமைத்தாக வேண்டும்; மக்கள் திரளில் மிகப் பெருவாரியானேர், தொழிலாளர்களும் விவசாயிகளுமானேர் நம்மைப் பார்த்து ''உங்களைப் போற்றிப் புகழ்வது நாங்களே அன்றி நீங்களல்ல. பிரமாத பலன்கள் தந்திருக்கும் சாதனைகளை நீங்கள் சாதித்திருக்கிறீர்கள், அறிவுடையவர் எவரும் இனி எந்நாளும் பழைய நிலைமைகளுக்குத் திரும்பிச் செல்ல வேண்டுமெனக் கனவிலும் நினைக்க மாட்டார்'' என்று சொல்லும் விதத்தில் நாம் திருத்தியமைத்தாக வேண்டும். அப்படிப்பட்ட நிலையை இன்னும் நாம் வந்தடைந்தாகவில்லை. எனவேதான் புதிய பொருளாதாரக் கொள்கை நடப்புக் காலத்துக்குரிய பிரதான கோஷமாய், அனைத்தும் தழுவிய இன்றையக் கோஷமாய் இருந்து வருகிறது. நேற்று நாம் கற்றுக் கொண்ட கோஷங்களில் எந்த ஒன்றையும் நாம் மறந்துவிடப் போவதில்லை. மிகவும் அமைதியாக, கிஞ்சித்தும் தயக்கமின்றி நாம் இதைச் சொல்ல முடியும், எவரிடத்தும் சொல்ல முடியும். நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் இதைத்

தெளிவுபடுத்திக் காட்டுகிறது. ஆனால் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு இனிமேல்தான் நம்மை நாம் தகவமைத்துக் கொண்டாக வேண்டும். அதன் பாதகக் கூறுகளை எப்படி வென்று முன்செல்வதென, குறைந்தபட்சத் திட்டவட்ட அளவுக்கு எப்படி அவற்றைக் குறையச் செய்வதென நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். இந்தப் பாதகக் கூறுகளைப் பட்டியலிட்டுக் கூறத் தேவையில்லை, நீங்கள் நன்கு அறிந்தவையே இவை. யாவற்றுக்கும் சாமர்த்தியமாக எப்படி ஏற்பாடு செய்வதென்று நாம் தெரிந்து கொண்டாக வேண்டும். இதைச் செய்ய நமது சட்டங்கள் நமக்கு எல்லா வாய்ப்பும் அளிக்கின்றன. எல்லாவற்றையும் ஒழுங்காய் நம்மால் நடந்தேறச் செய்ய முடியுமா? இன்னமும் அது தீர்வுக்குரிய நிலையிலிருந்து தொலைவிலேதான் இருக்கிறது. விவகாரங்களை நாம் ஆய்ந்தறிந்து வருகிறோம். இன்னாரது உடைமையாக இருக்கும் இப்படிப்பட்ட ஆலையில் வாடகை நிபந்தனைகள் இப்படியிப்படி இருக்க, நமது கம்யூனிஸ்டுத் தோழர் நிர்வாகியாக இருக்கும் இன்னொரு ஆலையில் நிபந்தனைகள் இப்படியிப்படி இருப்பதாய் உங்களுக்குத் தெரியப்படுத்தும் பத்துப் பன்னிரண்டு கட்டுரைகளை நமது கட்சிச் செய்தியேட்டின் ஒவ்வோர் இதழும் உங்களுக்கு அளிக்கிறது. அது இலாபம் தருவதாய் இருக்கிறதா, இல்லையா? செலவுகளுக்கு ஈடு செய்யும் அளவில் அது வருமானம் பெறுகிறதா, இல்லையா? அன்றாடப் பிரச்சினைகளின் மையக் கூறினை நாம் அணுகிச் சென்றுள்ளோம். இது பிரம்மாண்டமான சாதனையாகும். சோஷலிசமானது இப்போது தொலை நெடுங் காலத்துக்குரிய விவகாரமாய் இருக்கவில்லை, அல்லது கருத்தியலான ஒரு சித்திரமாகவோ, புனிதத் தேவ உருவமாகவோ இருக்கவில்லை. தேவ உருவங்களைப் பற்றிய நமது கருத்து மாற்றமின்றி அப்படியேதான் — படு மோசமானதாகவே — இருக்கிறது. சோஷலிசத்தை நாம் அன்றாட வாழ்க்கையாகப் பரிமளிக்கச் செய்கிறோம், இங்கே விவகாரங்கள் எந்த நிலையில் இருக்கின்றன என்று நாம் கவனித்துக் கொண்டாக வேண்டும். இது தான் நமது இந்நாளையப் பணி, நமது சகாப்தத்துக்குரிய பணி. இந்தப் பணி கடினமானதுதான் என்றாலும், நமது முந்திய பணியுடன் ஒப்பிடுகையில் புதுமையானதே என்றாலும், இதை நிறைவேற்றுகையில் எதிர்ப்பட வேண்டியுள்ள

இடர்கள் எண்ணற்றவை எனினும், நாம் எல்லோருமாய் ஒன்றுசேர்ந்து, என்னதான் விலை கொடுக்க நேர்வதாயினும்— ஒரே நாளில் அல்ல, ஒருசில ஆண்டுகளில்—இப்பணியை நிறைவேற்றுவோம்; புதிய பொருளாதாரக் கொள்கைக்குரிய ருஷ்யா இவ்வழியில் சோஷலிச ருஷ்யாவாக மாற்றமடையும் என்ற திட நம்பிக்கையைத் தெரிவித்து எனது உரையை முடிப்பதற்கு அனுமதியுங்கள். (கரைபுரண்டோடும் ஆர்வமிக்க நீடித்த கரவொலி முழக்கம்.)

நூல் திரட்டு,
தொகுதி 45,
பக்கங்கள் 300-309

## பதிப்பாளர் குறிப்புகள்

1 தொழிலாளர்கள், விவசாயிகள், கசாக்குகள், செஞ்சேனைப் படையாளிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் ஆருவது அகில ருஷ்ய விசேஷக் காங்கிரஸ் *1918 நவம்பர் 6 முதல் 9ந் தேதி வரை மாஸ்கோவில் பல்ஷோய் தியேட்டரில் நடைபெற்றது. இதன் ஆரம்பமும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் முதலாவது ஆண்டுவிழாக் கொண்டாட்டமும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.*

*இந்தக் காங்கிரஸ், சோவியத் ஆட்சி அதிகாரம் நிலவிய முதல் ஆண்டில் அடையப் பெற்ற விளைவுகளைத் தொகுத்தளித்தது, அண்மை எதிர்காலத்திற்கான சோவியத் அரசாங்கத்தின் செயல்திட்டத்தையும் வகுத்தது.—11.*

2 *இங்கு குறிப்பிடப்படுவது நிலம் சம்பந்தமான* விவசாயிகளின் தீர்ப்புக் கட்டளையாகும் *இது 242 வட்டார விவசாயிகள் தீர்ப்புக் கட்டளைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)ந் தேதியன்று சோவியத்துக்களின் இரண்டாவது அகில ருஷ்யக் காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட* நிலம் பற்றிய அரசாணையில் *இணைத்துக் கொள்ளப்பட்டது.—18.*

3 ஏழை விவசாயிகள் கமிட்டிகள் *1918 ஜூன் மாதம், 11ந் தேதி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணைப்படி நிறுவப்பட்டன. விவசாயிக் குடும்பங்களின் உணவுத் தரவுகளைக் கணக்கெடுத்தல், குலாக்குகளின் உணவு ஆதாரங்கள் மற்றும் உபரிகளைக் கண்டறிதல், இந்த உபரிகளை கோரிப் பெறுவதற்கு சோவியத் வழங்கு துறை உறுப்புகளுக்கு உதவி செய்தல், குலாக்கு பண்ணைகளின் செலவில் ஏழைகளுக்கு உணவு வழங்குதல், பண்ணைக் கருவிகள் மற்றும் ஆலைத்தயாரிப்புப் பொருட்களை வினியோகித்தல் ஆகியவற்றுக்கான பணி இக்கமிட்டிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனுல் நாட்டுப்புறப் பகுதிகளிலான வேலைகளின் எல்லா அம்சங்களையும் தழுவியதாக ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் செயல்பாடுகள் இருந்தன. உண்மையில் அவை அங்கே பாட்டாளி வர்க்க சர்*

வாதிகாரத்தின் பலக் கோட்டையாகவும் உறுப்புகளாக வும் விளங்கின. 1918ஆம் ஆண்டு முடிவுக்குள் ஏழை விவ சாயிகள் கமிட்டிகள் தமது பணிகளைப் பூர்த்தி செய்து, வோலஸ்து மற்றும் கிராம சோவியத்துக்களுடன் இணைந்து விட்டன.—20, 41.

4 **வடபகுதி ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் பிராந்தியக் காங்கிரஸ்** 1918 நவம்பர் 3 முதல் 6ந் தேதி வரையில் பெத்ரோகிராதில் நடைபெற்றது. தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் விவசாயி மக்களுக்கு இடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துவதில் இந்தக் காங்கிரஸ் மாபெரும் அரசியல் முக்கியத்துவம் பெற்றிருந்தது.—20.

5 **பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை** இங்கு குறிப்பிடப்படு கிறது. இது சோவியத் ருஷ்யாவுக்கும் நால்வர் கூட்டணிக் கும் (ஜெர்மனி, ஆஸ்திரோ-ஹங்கேரி, பல்கேரியா, துருக்கி ஆகியவற்றாலானது) இடையே .பிரேஸ்த்-லித்தோவ்ஸ்கில் 1918 மார்ச் 3ல் கையெழுத்தாகி, மார்ச் 15ல் சோவியத் துக்களின் நான்காவது விசேஷ அகில ருஷ்ய காங்கிரசால் அங்கீகரிக்கப்பட்ட சமாதான உடன்படிக்கையாகும். இதன் ஷரத்துகள் சோவியத் ருஷ்யாவுக்கு மிகவும் பாத கமாயிருந்தன.

பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப் பட்டதானது ஒரு விவேகமான அரசியல் சமரசம் ஆகும். இது சோவியத் அரசுக்கு ஒரு தற்காலிக ஓய்வை அளித்தது. பழைய உளுத்துப் போன சேனையைக் கலைத்து விட்டு ஒரு புதிய செஞ்சேனையை அமைப்பதற்கும், சோஷ லிஸ்டு நிர்மாணப் பணிகளைத் தொடங்கவும், உள்நாட்டு எதிர்ப்புரட்சியையும் வெளிநாட்டுத் தலையீட்டையும் எதிர்த்துப் போராடுவதற்குத் தன் பலத்தைத் திரட்டிக் கொள்ளவும் வாய்ப்பினை அளித்தது. 1918 நவம்பரில் நடந்த ஜெர்மன் புரட்சிக்குப் பிறகு இந்த உடன்படிக்கை ரத்துச்செய்யப்பட்டது.—23, 127.

6 இங்கு குறிப்பிடப்படுவது செக்கோஸ்லவாக் படைப் பிரி வின் ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சிக் கலகம் ஆகும். இதை அன்டான்டு ஏகாதிபத்தியவாதிகள் மென்ஷிவிக்குகள் மற் றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தீவிரமான பங் கேற்புடன் ஏற்பாடு செய்தார்கள். இந்த செக்கோஸ்ல வாக் படைப் பிரிவு ருஷ்யாவில் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்கு முன்பே அமைக்கப்பட்டது. இதில் செக் மற்றும் ஸ்லோவக் போர்க் கைதிகள் இடம் பெற்றி ருந்தனர். 1918 கோடையில் இதில் 60 ஆயிரம் பேருக்கு மேல் இருந்தார்கள். 1918 மார்ச் 26ந் தேதி செய்து

முடித்த உடன்படிக்கையின்படி இந்தப் படைப் பிரிவு தனது ஆயுதங்களை ஒப்படைக்கும் நிபந்தனையின் கீழ் விளாதிவஸ்தோக் வழியே ருஷ்யாவில் இருந்து வெளியேறுவதாக இருந்தது. ஆனால் இந்தப் படைப் பிரிவின் எதிர்ப்புரட்சித் தலைமை இந்த உடன்படிக்கையை துரோகத்தனமாக உடைத்து அன்டான்டின் நெறிமுறைகளைப் பின்பற்றி மே இறுதியில் ஆயுதக் கலகத்தைத் தூண்டி விட்டது. வெண் காவலர் மற்றும் குலாக்குகளுடன் சேர்ந்து செக்கோஸ்லவாக்கியர்கள் உரால், வோல்கா பிரதேசம் மற்றும் சைபீரியாவின் பெரும் பகுதியைப் பற்றுடல் செய்தனர். இந்த மாவட்டங்களில் முதலாளித்துவ ஆட்சி மீண்டும் நிலை நாட்டப்பட்டது.

செக் மற்றும் ஸ்லோவக் கைதிகளில் முக்கிய பகுதியினர் சோவியத் ஆட்சியதிகாரத்திடம் அனுதாபம் கொண்டு பிற்போக்கு தளபதிகள் நடத்திய சோவியத் எதிர்ப்புப் பிரசாரத்தை எதிர்த்தனர். இந்த ஏமாற்றை அறிந்து சோவியத் ருஷ்யாவை எதிர்த்துப் போரிடாமல் இருக்க வேண்டிப் பல படையாளிகள் இந்தப் படைப் பிரிவில் இருந்து வெளியேறினர்.

வோல்கா பிரதேசம் 1918 முன்பனிக் காலத்தில் செஞ்சேனையால் விடுவிக்கப்பட்டது. கல்ச்சாக் நசுக்கப்பட்ட போது (1920) செக்கோஸ்லவாக்கியர்கள் முழுமையாக முறியடிக்கப்பட்டார்கள்.—24, 41, 74.

7 **அன்டான்டு**—ஏகாதிபத்திய வல்லரசுகளின் (இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா) கூட்டு. இது 1907ல் இறுதியாக நிறுவப்பட்டது. உலக ஏகாதிபத்தியப் போரின் (1914—1918) போது அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இதர நாடுகள் அன்டான்டில் சேர்ந்தன. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு இந்தக் கூட்டின் பிரதான பங்காளிகள் சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ஆயுதமேந்திய தலையீட்டின் ஒழுங்கமைப்பாளர்களாயும் பங்காளிகளாயும் ஆயினர்.—30, 90, 99, 136.

8 சோவியத் ருஷ்யாவுடன் ஜெர்மன் அரசாங்கம் அரசுறவுத் துறை உறவுகளை முறித்துக் கொண்டதன் தொடர்பாக லெனின், ஸ்வெர்த்லோவ், அயல்துறை விவகார மக்கள் கமிசார் சிச்சேரின் ஆகியோர் கையெழுத்திட்டு, **எல்லா இராணுவ கமிசார்களுக்கும், இராணுவப் பயிற்சியாளர்களுக்கும், சேனைத் தலைவர்களுக்கும், எல்லா பிரதிநிதிகளின் சோவியத்துக்களுக்கும்** 1918 நவம்பர் 5ந் தேதியன்று அனுப்பிவைத்த ரேடியோத் தந்திச் செய்தியை இங்கு லெனின் கருத்தில் கொண்டிருக்கிறார்.—30.

9 **இடதுசாரி சோஷலிஸ்டு - புரட்சியாளர்** — சோஷலிஸ்டு-புரட்சி

யாளர் கட்சியின் இடதுசாரிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். 1917 நவம்பரில் பிரிந்து சென்று தனிக் கட்சியை நிறுவினர். நீண்ட காலத் தயக்கத்துக்குப் பிறகு இந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் விவசாயிகள் மத்தியிலான தமது செல்வாக்கைப் பேணிவைத்துக் கொள்ளும் நோக்கமுடன் போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்கத் தொடங்கினர். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் பிரதானக் கொள்கைகளை நிறைவேற்றப் பிரதிக்ஞை செய்தனர். அவர்கள் மக்கள் கமிசார்களின் கவுன்சிலிலும், மக்கள் கமிசாரகங்களின் பல போர்டுகளிலும் பதவிப்பொறுப்பு அளிக்கப் பட்டனர்.

போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைத்து வந்த இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் சோஷலிஸ்டு நிர்மாணத்தின் பல அம்சங்களில் அவர்களிடம் இருந்து அடிப்படையாக வேறுபட்டனர். பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதை அவர்கள் எதிர்த்தார்கள். அது செய்து முடிந்து, 1918 மார்ச்சில், சோவியத்துக்களின் நான்காவது காங்கிரசால் உறுதி செய்யப்பட்ட பிறகு, இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் மக்கள் கமிசார்களின் கவுன்சிலில் இருந்து விலகினர். 1918 ஜூலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சி மத்தியக் கமிட்டி மாஸ்கோவில் ஜெர்மன் தூதர் மிர்பாஹை ஆத்திரமூட்டும் வகையில் கொலைப்படுத்த ஏற்பாடு செய்தது, சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து ஆயுதக் கலகத்தையும் ஏற்பாடு செய்தது. மக்கள் ஆதரவை முற்றாக இழந்த நிலையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.—39.

10 **மென்ஷிவிக்குகள்** — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதத்தில் நிலவிய குட்டிமுதலாளித்துவ சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்தவர்கள். 1903ல் ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் ஒரு பிளவு ஏற்பட்டது. இரு பிரிவுகள் உருவாயின: லெனினது ஆதரவாளர்களைக் கொண்ட ஒரு புரட்சிகரப் பிரிவு, மற்றும் மார்த்தவ் தலைமையிலான ஒரு சந்தர்ப்பவாதப் பிரிவு. கட்சியின் மத்திய உறுப்பமைப்புகளுக்கான தேர்தலில் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை பெற்றனர், சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையாக இருந்தனர். எனவே ''போல்ஷிவிக்குகள்'' (பெரும்பான்மையோர்) ''மென்ஷிவிக்குகள்'' (சிறுபான்மையோர்) என்ற பெயர்கள் ஏற்பட்டன.

*1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவி வகித்தார்கள். அவர்கள் அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்து வரவிருக்கும் சோஷலிஸ்டுப் புரட்சியை எதிர்த்துப் போராடினார்கள்.*

*அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போராடினார்கள்.*

**சோஷலிஸ்டு - புரட்சியாளர்கள்** — *ருஷ்யாவில் நிலவிய ஒரு குட்டிமுதலாளித்துவக் கட்சியைச் சேர்ந்தவர்கள். 1901ஆம் ஆண்டு இறுதியிலும் 1902ஆம் ஆண்டுத் துவக்கத்திலும் இக்கட்சி தோற்றுவிக்கப்பட்டது.*

*1917 பிப்ரவரியில் ஜாராட்சி வீழ்த்தப்பட்ட பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர் தலைவர்கள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவி ஏற்றார்கள். சோஷலிஸ்டுப் புரட்சிக்குத் தயார் செய்து வந்த தொழிலாளி வர்க்கத்தை எதிர்த்த போராட்டத்திலும் 1917 கோடையில் விவசாயிகள் இயக்கத்தை அடக்குவதிலும் பங்கேற்றார்கள். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராகத் தீவிரமாகப் போராடினார்கள்.—43, 82, 111, 124.*

11 **இரண்டாவது அகிலம்**—*சோஷலிஸ்டுக் கட்சிகளின் சர்வதேச நிறுவனம், 1889ல் நிறுவப்பட்டது. 1914ல் உலக ஏகாதிபத்தியப் போர் மூண்ட போது இரண்டாவது அகிலத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்கள் சோஷலிச லட்சியத்துக்குத் துரோகம் செய்து தத்தமது நாடுகளின் முதலாளித்துவ அரசாங்கங்களது ஏகாதிபத்தியக் கொள்கைக்குப் பகிரங்க ஆதரவு தெரிவித்தனர். அத்துடன் இரண்டாவது அகிலம் இறுதி எய்தியது. இரண்டாவது அகிலத்தின் உறுப்பினர்களாக இருந்த இடதுசாரிக் கட்சிகளும், பிரிவுகளும் கம்யூனிஸ்டு (மூன்றாவது) அகிலத்தில் சேர்ந்தன. இது 1919ல் மாஸ்கோவில் தோற்றுவிக்கப்பட்டது. இரண்டாவது அகிலம் 1919லேயே பெர்ன் (சுவிட்சர்லாந்து) மாநாட்டில் மீண்டும் நிறுவப்பட்டது. வலதுசாரி சந்தர்ப்பவாதக் கட்சிகள் மட்டுமே அதில் சேர்ந்தன.—52, 64, 117, 133.*

12 *அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு முன்னால் தொகுக்கப்பட்ட பட்டியல்களின்படி 1917 நவம்பரில் நடைபெற்றன. இதில் பெரும்பாலான இடங்களை வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளரும் மற்றும் இதர எதிர்ப்புரட்சியாளரும் பெற்றார்*

கள். புரட்சி வெற்றியடைந்ததன் விளைவாக நாட்டில் எழுந்த அரசியல் சக்திகளின் புதிய பரஸ்பர நிலையினை அரசியல் நிர்ணய சபை பிரதிபலிக்கவில்லை. இருந்தபோதி லும் சோவியத் அரசாங்கம் அதைக் கூட்டுவது அவசியம் என்று கருதியது. காரணம் உழைக்கும் மக்களின் பின்தங் கிய அடுக்குகள் இன்னும் முதலாளித்துவ நாடாளுமன்ற முறையில் நம்பிக்கை கொண்டிருந்தன. அரசியல் நிர்ணய சபை உழைக்கும் மக்களின் நலன்களை ஆதரிக்கவில்லை, அவர்களது கோரிக்கைகளை நிறைவு செய்யவில்லை என்று அவர்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டுவது முக்கியமான தாக இருந்தது. 1918 ஜனவரி 5 (18)ந் தேதி அரசியல் நிர்ணய சபை பெத்ரோகிராதில் கூடியது. அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் முன்வைக்கப்பட்ட **உழைக் கும், சுரண்டப்படும் மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்** அரசியல் நிர்ணய சபையில் இருந்த எதிர்ப்புரட்சி யாளர் பெரும்பான்மையினரால் நிராகரிக்கப்பட்டது. மற்றும் அவர்கள் சோவியத் ஆட்சி அதிகாரத்தை அங்கீ கரிக்க மறுத்தனர். இந்த முதலாளித்துவ அரசியல் நிர் ணய சபை ஜனவரி 6 (19)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணையின் மூலம் கலைக்கப்பட்டது.—69, 89, 111.

13 எங்கெல்சின் **டூரிங்குக்கு மறுப்பு** எனும் நூல் காண்க (பி. எங்கெல்ஸ், **டூரிங்குக்கு மறுப்பு**, மாஸ்கோ, 1979, பக்கம் 188).—66.

14 இந்தக் கட்டுரை பூர்த்தி செய்யப்படவில்லை.—66.

15 **பெத்நோத்தா** (''ஏழை மக்கள்'')—விவசாயி மக்களுக் கான ஒரு தினசரிப் பத்திரிகை. 1918 மார்ச் 27 முதல் 1931 ஜனவரி 31 வரை மாஸ்கோவில் வெளியிடப்பட் டது.—74, 77.

16 இங்கு லெனின், 1917ல் நிறுவப்பட்ட **ரயில்வேத் தொழி லாளர் தொழிற்சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியை** மனத்தில் கொண்டிருந்தார். இதில் மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் ஆதிக்கம் பெற்றிருந் தனர். பெத்ரோகிராதில் ஆயுதமேந்திய அக்டோபர் எழுச்சி வெற்றிவாகை சூடிய பிறகு இக்கமிட்டி எதிர்ப் புரட்சியின் கோட்டையாகி விட்டது. நடுநிலைமையாக இருப்பதாகவும் உள்நாட்டுப் போரை நிறுத்தும்படி அறை கூவுவதாயும் உரிமை கொண்டாடிய இக்கமிட்டி உண்மை யில், சோவியத் ஆட்சி அதிகாரத்தை நிறுவுவதற்காக ஆயுதமேந்திய போராட்டம் நடைபெற்ற மாஸ்கோவுக்கு பெத்ரோகிராதில் இருந்து புரட்சியாளர் படைப்பிரிவு

அனுப்பிவைக்கப்படுவதைத் தடை செய்தது; ரயில்வே போக்குவரத்துக்களை நிறுத்தி விடுவதாக அச்சுறுத்தியது. இக்கமிட்டியின் எதிர்ப்புரட்சி போர்த்தந்திரங்களும் செயல்பாடுகளும் ரயில்வேத் தொழிலாளர் மத்தியில் வன்மையான அதிருப்தியை விளைத்தன. 1918 ஜனவரியில் ரயில்வேத் தொழிலாளரின் விசேஷ அகில ருஷ்ய காங்கிரஸ் இக்கமிட்டியைக் கலைத்து விடுவதென்று முடிவு செய்தது.—83.

17 **சுபோத்னிக்குகள் (கம்யூனிஸ்டு சுபோத்னிக்குகள்)**—இவை ''இலவசமாயும், ஆட்சி அதிகாரம் அல்லது அரசினுல் ஏற்பாடு செய்யப்படாமலும், தனிப்பட்ட நபர்கள் சமுதாயப் பயன்பாட்டுக்கு வேண்டிப் பெருமளவில் புரியும் உழைப்பு ஆகும்'' (லெனின், **நூல் திரட்டு**, ஐந்தாம் பதிப்பு, தொகுதி 40, பக்கம் 36). சுபோத்னிக்குகள் சோவியத் ருஷ்யாவில் உள்நாட்டுப் போரின் போது நிறுவப்பட்டன. இளம் சோவியத் குடியரசை ஆதரிக்கும் ஆர்வத்தால் தொழிலாளர் சனிக்கிழமைகளில் இலவசமாக ஓவர்டைம் வேலை செய்தார்கள். (சனிக்கிழமை ருஷ்யனில் ''சுபோத்தா''. எனவே இந்த உழைப்பு ''சுபோத்னிக்'' எனப்படுகிறது.)—86.

18 **மூன்றுவது அகிலம், கம்யூனிஸ்டு அகிலம்**—சர்வதேசப் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர அமைப்பு, பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளின் ஒற்றுமை அமைப்பு; இது 1919 முதல் 1943 வரை நிலவியது.—93, 147.

19 **ஸ்மோல்னி மாளிகை**—பெத்ரோகிராதில் உள்ள முன்னுள் உயர்குடிப் பெண்களின் ஸ்மோல்னி கல்லூரியின் கட்டடம். 1918 மார்ச்சில் மாஸ்கோவுக்கு மாற்றப்படும் வரையில் சோவியத் அரசாங்கத்தின் உறைவிடம்.—97.

20 ஜாராட்சி ஜெனரல் விராங்கெலை எதிர்த்த செஞ்சேனையின் முன்னேற்றம் 1920 அக்டோபர் இறுதியில் துவங்கியது. விராங்கெலின் முழுமையான தோல்வியோடு உள்நாட்டுப் போரும் வெளிநாடுகளின் தலையீடும் பொதுவாக முடிவடைந்தன.—100.

21 கம்யூனிஸ்டு அகிலத்தின் வேலைத்திட்டம், போர்த்தந்திரம் மற்றும் நிறுவன ஒழுங்கமைப்புக் கோட்பாடுகளுக்கு அடித்தளம் நிறுவிய **கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ்** 1920 ஜூலை 19 முதல் ஆகஸ்டு 7 வரை நடைபெற்றது.

கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது காங்கிரஸ் சர்வதேசக் கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சிக்கு மிக

வும் முக்கியமானது. இந்தக் காங்கிரசுக்குப் பிறகு ''கம்யூனிசம் தொழிலாளி வர்க்க இயக்கம் முழுவதன் மையமான விஷயம் ஆகி விட்டது'' என்று லெனின் குறிப்பிட்டார் (லெனின், நூல் திரட்டு, ஐந்தாம் பதிப்பு, தொகுதி 43, பக்கங்கள் 18—19).—101.

22 ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சி—1917 ஏப்ரலில் கோத்தேயில் கூடிய துவக்கக் காங்கிரசில் அமைக்கப்பட்ட மையவாதக் கட்சி. ''சுயேச்சையாளர்கள்'' சமூக-தேசியவெறியர்களுடன் ஒன்றுபட வேண்டுமென வாதாடினர்; வர்க்கப் போராட்டத்தை மறுக்கும் அளவுக்குச் சென்றனர். 1920 அக்டோபரில் ஹால்லேயில் நடைபெற்ற காங்கிரசில் இக்கட்சியில் பிளவு ஏற்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் பிரதான விஷயம் கம்யூனிஸ்டு அகிலம் பற்றிய அறிக்கையும் அதில் சேருவதற்கான 21 நிபந்தனைகளும் ஆகும். 237 வாக்குகள் ஆதரவாயும் 156 வாக்குகள் எதிராயும் போடப்பட்டு, இக்கட்சி கம்யூனிஸ்டு அகிலத்தில் சேர வேண்டும் என்று காங்கிரஸ் முடிவு செய்தது. இதனால் வலதுசாரியினர் விலகி தனிக் கட்சி நிறுவினர். இது இதே பேரில் 1922 செப்டம்பர் வரை நிலவியது. பின்னர் சமூக-ஜனநாயகக் கட்சியுடன் இணைந்தது. ஜெர்மன் சுயேச்சை சமூக-ஜனநாயகக் கட்சியின் இடதுசாரிப் பிரிவு 1920 டிசம்பரில் ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியுடன் இணைந்தது.—101.

23 1918 ஜனவரி 27ல் துவங்கிய பின்னிஷ் புரட்சியின் விளைவாக முதலாளித்துவ அரசாங்கம் வீழ்த்தப்பட்டு, ஆட்சி அதிகாரம் தொழிலாளர் கரங்களுக்கு மாறியது.

ஆனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி பின்லாந்தின் தென் பகுதியில் மட்டுமே வெற்றியடைந்தது. வட பகுதியில் உறுதியான நிலையில் இருந்த எதிர்ப்புரட்சி சக்திகள் ஜெர்மன் அரசாங்கத்திடம் உதவி கேட்டன. ஜெர்மன் ஆயுதப் படைகளின் தலையீடு மற்றும் கடுமையான உள்நாட்டுப் போர் தொடர்பாக 1918 மே மாதத்தில் பின்லாந்தில் புரட்சி நசுக்கப்பட்டது.—101.

24 ஹங்கேரியில் சோவியத் குடியரசு 1919 மார்ச் 21 முதல் ஆகஸ்டு 1 வரை நிலவியது.

ஹங்கேரியில் நிறுவப்பட்ட பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அன்டான்டு ஏகாதிபத்தியவாதிகள் பகைமையுடன் எதிர்த்தனர். ஹங்கேரிய சோவியத் குடியரசுக்கு எதிராக பொருளாதார பகிஷ்காரம் மற்றும் ஆயுதமேந்திய தலையீடுகளை ஏற்பாடு செய்தனர். தலையீட்டுத் துருப்புக்களின் தாக்குதல் ஹங்கேரியன் எதிர்ப்புரட்சியைக்

கிளர்த்தி விட்டது. ஹங்கேரியில் சோவியத் ஆட்சி அதிகாரம் வீழ்த்தப்பட்டதற்கு சர்வதேச ஏகாதிபத்தியத்துடன் கூட்டுச் சேர்ந்த வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் துரோகமும் ஒரு காரணமாகும்.—101.

25 பிரெஞ்சு கப்பற்படையின் கருங் கடல் இரண்டாவது பிரிவைச் சேர்ந்த கடற்படைவீரர்கள் 1919 ஏப்ரல்—மேயில் நடத்திய வீரஞ்செறிந்த எழுச்சி பிரெஞ்சு அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்து நிகழ்ந்தது. இளம் சோவியத் குடியரசை ஒடுக்க பிரெஞ்சு அரசாங்கம் 3 லட்சம் படையாளிகள், கடற்படையாளிகளை அனுப்பியிருந்தது. எழுச்சி நசுக்கப்பட்டது. ஆனால் உலகின் முதல் உழைக்கும் மக்களின் அரசுடன் புரட்சிகர ஒருமைப்பாட்டைத் தோற்றுவித்த பிரெஞ்சு படையாளர், கடற்படையாளர் வீரம் பிரான்சில் புரட்சி இயக்கம் தீவிரமடைய உதவியது.—102.

26 **அவுகியஸ் குதிரை இலாயங்கள்**—கிரேக்க புராணத்தில் வரும் அவுகியஸ் எனும் மன்னரின் அழுக்கு மண்டிக் கிடந்த மிகப் பெரிய இலாயங்கள். இந்த இலாயங்களைத் துப்புரவு செய்தது ஹெராக்லசின் வீரச் செயல்களில் ஒன்ருகக் கருதப்படுகிறது. ''அவுகியஸ் குதிரை இலாயங்கள்' என்ற தொடர் கடுமையான அசட்டையையும் குழப்பத்தையும் சுட்டுகிறது.—111.

27 **காடேட்டுகள்** — கான்ஸ்டிட்யூஷனல்-டெமக்ராடிக் கட்சியின் உறுப்பினர்கள். இக்கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது. ருஷ்ய மிதவாத-முடியாட்சிவாத முதலாளி வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. முதலாளி வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள், முதலாளித்துவப் படிப்பாளர் பகுதியினர் அதில் சேர்ந்திருந்தனர். மாபெரும் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சியின் இணக்கப்பட முடியாத பகைவர்களாகச் செயல் புரிந்தார்கள். எல்லா ஆயுதந்தாங்கிய புரட்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் வெளிநாட்டுத் தலையீட்டாளர்களின் படையெடுப்புக்களிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள்.—111.

28 **இரண்டரையாவது அகிலம்** (அதிகார பூர்வமான பெயர்: ''சோஷலிஸ்டுக் கட்சிகளது சர்வதேசச் சங்கம்'')—புரட்சிகர மக்கள் திரளின் நிர்ப்பந்தத்தின் கீழ் இரண்டாம் அகிலத்தை விட்டு விலகிய மையவாத சோஷலிஸ்டுக் கட்சிகள், பிரிவுகளின் சர்வதேச நிறுவனம்; 1921 பிப்ரவரியில் வியென்னுவில் கூடிய மாநாட்டில் அமைக்கப்பட்டது. இதன் தலைவர்கள் சொல் அளவில் இரண்டாவது அகிலத்தைக்

கண்டித்து விமர்சனம் செய்தனர். ஆனால் உண்மை நடப்பில் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் எல்லாப் பிரதான பிரச்சினைகளிலும் சந்தர்ப்பவாத, பிளவுபடுத்தும் கொள்கையைப் பின்பற்றினர், தொழிலாளிப் பெருந் திரளினரிடம் கம்யூனிஸ்டுகளுக்கு வளர்ந்து பெருகிய செல்வாக்கை மட்டுப்படுத்துவதற்காகத் தமது நிறுவனத்தைப் பயன்படுத்த முயன்று வந்தனர்.

*1923* மே மாதத்தில் இரண்டாவது, இரண்டரையாவது அகிலங்கள் சோஷலிஸ்டுத் தொழிலாளர் அகிலம் என்பதான ஒரே நிறுவனமாக இணைந்தன.—*114, 117, 124, 133.*

29 பாஸெல் அறிக்கை—*1912* நவம்பர் *24—25* தேதிகளில் பாஸெல் நகரில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்டு விசேஷக் காங்கிரஸ் போர் குறித்து ஏற்றுக் கொண்ட அறிக்கையாகும். அது நெருங்கி வரும் உலக ஏகாதிபத்தியப் போர் அபாயம் குறித்து மக்களை எச்சரித்தது, அதன் கொள்ளைக்கார நோக்கங்களை அம்பலப்படுத்தியது, சமாதானத்திற்காக உறுதியான போராட்டம் நடத்துமாறு அனைத்து நாடுகளின் தொழிலாளர்களையும் கேட்டுக் கொண்டது. பாஸெல் அறிக்கையில் ஷ்டுட்கார்ட் காங்கிரஸ் (*1907*) தீர்மானத்தின் ஒரு ஷரத்து இடம் பெற்றிருந்தது. இதை லெனின் வகுத்து முன்வைத்திருந்தார். ஒரு ஏகாதிபத்தியப் போர் மூளுமானால், சோஷலிஸ்டுகள் போரினால் ஏற்படும் பொருளாதார அரசியல் நெருக்கடிகளைச் சாதகமாகக் கொண்டு சோஷலிஸ்டுப் புரட்சிக்காகப் பாடுபட வேண்டும் என்று இத்தீர்மானம் கூறியிருந்தது.—*119.*

30 புதிய பொருளாதாரக் கொள்கை — முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய கட்டத்தின் போது பாட்டாளி வர்க்க அரசு கடைப்பிடித்த பொருளாதாரக் கொள்கை. இந்தக் கொள்கை, சோவியத் ருஷ்யாவில் உள்நாட்டுப் போர் மற்றும் அன்னியத் தலையீடு காலத்தின் போது நிலவிய வரலாற்றில் ''போர்க் காலக் கம்யூனிசம்'' (*1918—1920*) என்று வருணிக்கப்படும் பொருளாதாரக் கொள்கையில் இருந்து மாறுபட்டதாக ''புதிய'' பொருளாதாரக் கொள்கை என்று அழைக்கப்பட்டது. போர்க் கால நிலைமைகளின் நிர்ப்பந்தம் காரணமாய் அவசியமாகியிருந்த ''போர்க் காலக் கம்யூனிசக்'' கொள்கையின் தனி இயல்புகள் என்னவெனில், உற்பத்தியையும் விநியோகத்தையும் அது வெகுவாய் மையப்படுத்தியிருந்தது, வாணிபச் சுதந்திரத்துக்குத் தடை விதித்

திருந்தது, விவசாயிகள் உபரியாகத் தம்மிடமிருந்த விளை பொருட்கள் யாவற்றையும் அரசிடம் தந்துவிட வேண்டுமென விதித்தது (கட்டாயத் தானியக் கொள்முதல்).

அன்னிய ஆயுதத்தலையீடு மற்றும் உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு கடந்து சென்ற போது சோஷலிஸ்டு தொழில்துறைக்கும் சிறுதர விவசாயி உற்பத்திக்கும் இடையிலான முக்கிய உறவு வாணிக-பண உறவுகளாகவே இருந்தது. கட்டாயத் தானியக் கொள்முதல் கைவிடப்பட்டு நிர்ணயமான உணவுப் பொருள் வரி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. விவசாயிகள் தம்மிடமிருந்த உபரி விளைபொருட்களைத் தடையின்றி பட்டுவாடா செய்வதற்கும் சந்தையில் விற்பதற்கும் அவசியமான செய்பொருட்களைச் சந்தையின் மூலம் பெறுவதற்கும் இவ்விதம் வகை செய்யப்பட்டது.

புதிய பொருளாதாரக் கொள்கை குறிப்பிட்ட சிறிது காலத்துக்கு, குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு முதலாளித்துவக் கூறுகள் இருப்பதற்கு அனுமதித்தது. ஆனால் அதே போது கேந்திரப் பொருளாதார நிலைகள் பாட்டாளி வர்க்க அரசின் கையிலேதான் இருந்தன. நாட்டின் உற்பத்தி சக்திகளை வளரச் செய்வதும், விவசாயத்தை ஓங்கச் செய்வதும், சோஷலிஸ்டுத் தொழிற்துறையை உருவாக்குவதற்கு அவசியமான திரட்டுதல்களைச் செய்வதும் புதிய பொருளாதாரக் கொள்கையின் நோக்கம்.—*120, 145, 171*.

31 *மார்ச் 18—28, 1875 மற்றும் 1884 டிசம்பர் 11ந் தேதிகளில் பெபெலுக்கு எங்கெல்ஸ் எழுதிய கடிதங்கள் பார்க்க.—124.*

32 *பி. எங்கெல்ஸ்,* நாடு கடந்து வாழ்பவரின் இலக்கியம்.—*127.*

33 வெர்சேய் சமாதான உடன்படிக்கை — *1914-18ஆம் ஆண்டுகளது ஏகாதிபத்திய உலகப் போரை முடிவுறச் செய்த இந்த ஒப்பந்தம் வெர்சேய் நகரில் 1919 ஜூன் 28ல் ஒரு புறம் அமெரிக்க ஐக்கிய நாடுகள், கிரேட் பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றுலும் இவற்றின் நேச நாடுகளாலும், மறுபுறத்தில் ஜெர்மனியாலும் கையெழுத்திடப்பட்டது.*

*போரில் வெற்றி பெற்றோருக்குச் சாதகமாய் முதலாளித்துவ உலக மறுபங்கீடு செய்யப்பட்டதை உறுதி செய்திடுவதும், சோவியத் ருஷ்யாவை மென்னியைப் பிடித்து நெரித்து ஒழித்திடுவதையும் உலகெங்கும் புரட்சி இயக்கத்தை நசுக்குவதையும் நோக்கியமைந்த உறவுகளது முறை ஒன்றை நாடுகளிடையிலே தோற்றுவிப்பதும்*

தான் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும்.—*130, 139, 153, 163.*

34 குறிப்பு *30*ஐக் காண்க.—*138.*

35 லெனின் " 'இடதுசாரிச்' சிறுபிள்ளைத்தனமும் குட்டிமுதலாளித்துவ மனோபாவமும்" எனும் தமது கட்டுரையைக் குறிப்பிடுகிறார்.—*145.*

36 **இரண்டு தடவை இரண்டைக் கொண்டு ஒரு மெழுகுதிரி** என்ற தொடர் துர்கேனெவின் ரூதின் எனும் நவீனத்தில் வரும் பிகாசவ் என்னும் பாத்திரத்துடன் தொடர்புடையது. அவரது தனி அம்சம் பெண்ணின வெறுப்பு. பெண்கள் தர்க்க ரீதியாகச் சிந்திக்க முடியாது என்று அடித்துரைக்கும் பிகாசவ் "ஆண்மகன் உதாரணமாக இரண்டு முறை இரண்டு நான்கு அல்ல, மாறாக ஐந்து அல்லது மூன்றரை என்று சொல்லக் கூடும். ஒரு பெண் இரண்டு தடவை இரண்டைக் கொண்டு ஒரு மெழுகுதிரி என்று சொல்லுவாள்" என்கிறார்.—*162.*

37 இங்கு லெனின் கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட "கம்யூனிஸ்டுக் கட்சிகளின் நிறுவன ஒழுங்கமைப்புக் கட்டுமானமும், அவற்றின் வேலை முறைகள் மற்றும் உள்ளடக்கமும்" எனும் ஆராய்ச்சி உரையினைக் குறிப்பிடுகிறார்.—*163.*

38 **கருப்பு நூற்றுவர்** — புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்காக ஜாரிஸ்டுப் போலீஸ் நிறுவிய முடியரசுவாதக் கும்பல்கள். இவர்கள் புரட்சியாளர்களைக் கொலை புரிந்தனர்; முற்போக்கான அறிவுத்துறையினரைத் தாக்கினர்; யூதர்களுக்கு எதிரான வன்முறைகளை நடத்தினர்.—*165.*

39 மாஸ்கோ மாவட்ட சோவியத்துக்கள் எல்லாவற்றின் பிளீனத்துடன் சேர்த்து நடத்தப்பட்ட மாஸ்கோ சோவியத்தின் பிளீனம் கூட்டத்தில் *1922* நவம்பர் *20*ந் தேதி லெனின் உரையாற்றினார். இதுவே லெனின் நிகழ்த்திய கடைசி பொதுக்கூட்ட உரையாகும்.—*166.*

40 *1922* நவம்பர் *14*ந் தேதி தொலை கிழக்கு குடியரசு மக்களின் கூட்டத்தில் தொலை கிழக்கு குடியரசையும் ரு.சோ.கூ.சோ. குடியரசையும் மீண்டும் இணைப்பது பற்றி ஏற்கப்பட்ட தீர்மானத்தை இங்கு லெனின் குறிப்பிடுகிறார். இதைப் பற்றிய குறிப்பு *1922* நவம்பர் *15*ந் தேதி வெளியிடப்பட்டது. இந்தத் தீர்மானத்தின் முழுவாசகம் *1922* நவம்பர் *21*ந் தேதி லெனினது உரைக்குப் பின்னால் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது.—*168.*

# பெயர்க் குறிப்பகராதி

**அவ்க்சேன்தியெவ், நிக்கலாய் திமீத்ரியெவிச்** *(1878—1943)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் தலைவருள் ஒருவர். 1917ல் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவி வகித்தார். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான எதிர்ப் புரட்சி போராட்டத்தில் பங்கேற்ருர்.—46.*

**ஆட்லெர் [Adler], பிரெடெரிக்** *(1879—1960) — ஆஸ்திரிய சமூக - ஜனநாயகவாதி. ஆஸ்திரியாவில் நடைபெற்ற 1918 புரட்சிக்குப் பிறகு சந்தர்ப்பவாதியாஞர். இரண்டரையாவது அகிலத்தின் (1921—1923) ஒழுங்கமைப்பாளர்; பின்ஞல் சர்வதேச சந்தர்ப்பவாத ஒற்றுமையின் சோஷலிஸ்டு தொழிலாளர் அகிலம் எனப்படுவதன் தலைவராஞர்.—14, 52.*

**இயோஃபெ, அடோல்ஃப் அப்ராமவிச்** *(1883—1927) — பிரபல சோவியத் அரசுறவுத்துறையாளர். பிரேஸ்தில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்ற போது சோவியத் சமாதானக் குழுவின் உறுப்பினராக இருந்தார். 1918 ஏப்ரல் முதல் நவம்பர் வரை பெர்லினில் அதிகார பூர்வமான ரு.சோ.கூ.சோ. குடியரசின் ஸ்தானிகராக இருந்தார்.—27.*

**உர்ஹார்ட் [Urhart], எல்.** *(1874—1933)—ஆங்கில நிதியதிபர், தொழிலதிபர்.—174, 176.*

**எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக்** *(1820—1895)—33, 34, 66, 124, 127.*

**கல்ச்சாக், அலெக்சாந்தர் வசீலியெவிச்** *(1873—1920) — ஜார் காலத்தியக் கடற்படைத் தலைவர், முடியரசுவாதி; 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு உரால், சைபீரியா, தொலைக் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் முதலாளித்துவ வர்க்கத்தினர், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் சர்வாதிகாரத்திற்குத் தலைமை தாங்கிஞர். 1920இல் கல்ச்சாக் சேனை தோற்கடிக்கப்பட்டது.—74, 79, 89, 90, 134, 136, 162, 163.*

**காமெனெவ் (ரோசன்ஃபெல்ட்), லேவ் பரீசவிச்** *(1883—1936) — ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிற்பாடு (1917) மாஸ்கோ சோவியத்தின் தலைவர், மக்கள் கமிசார்களின் கவுன்சி லின் துணைத் தலைவர், மத்தியக் கமிட்டியின் அரசியல் குழு உறுப்பினர். லெனினியக் கட்சிக் கொள்கையை மீண்டும் மீண்டும் எதிர்த்து வந்தார். திரோத்ஸ்கியின் எதிர்ப்புக் கோஷ்டியின் தீவிர உறுப்பினர் என்ற முறை யில் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். பின்னர் அவர் இரண்டு முறை மீண்டும் கட்சி உறுப்பினரானார். 1934ல் மறுபடியும் கட்சி விரோதச் செயல்களுக்காகக் கட்சியில் இருந்து விலக்கப்பட்டார்.—167.*

**காவுத்ஸ்கி [Kautsky], கார்ல்** *(1854—1938) — ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் அகியவற்றின் தலைவர்களில் ஒருவர். ஆரம்பத்தில் மார்க்சியவாதி, பின்னர் மார்க்சியத்தை விட்டுத் துறந்த ஓடுகாலி. சந்தர்ப்ப வாதத்தின் மிகவும் ஆபத்தான போக்குகளில் ஒன்றான மையவாதத்தின் (காவுத்ஸ்கிவாதத்தின்) சித்தாந்த வாதி.—52, 58, 60, 62, 114.*

**கிராசின், லியனீத் பரீசவிச்** *(1870—1926)—பிரபல சோவியத் அரசறிஞர். 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு அரசுறவுத் துறையில் பதவி வகித்தார். போக்கு வரத்துத் துறை மக்கள் கமிசார் மற்றும் வாணிகம், தொழிற்துறை விவகார மக்கள் கமிசாராகவும் இருந்தார்.—176.*

**கேரென்ஸ்கி, அலெக்சாந்தர் ஃபியோதரவிச்** *(1881—1970)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் தலை வர். அவர் பின்பற்றிய கொள்கையின் நோக்கம் ஏகாதி பத்தியப் போரைத் தொடர்ந்து நடத்துவதும் ஆட்சி அதிகாரத்தை முதலாளி வர்க்கத்தின் கரங்களிலேயே வைத்திருப்பதும் ஆகும். 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின் வெளிநாடு போய்விட்டார்.—14, 46, 89.*

**சிச்சேரின், கியோர்கி வசீலியெவிச்** *(1872—1936) — சோவியத் அரசறிஞர், அரசுறவுத் துறையாளர், கம்யூனிஸ்ட். 1918 முதல் 1930 வரை அயல்துறை விவ கார மக்கள் கமிசாராக இருந்தார்.—27.*

**செர்னேவ், வீக்தர் மிஹாய்லவிச்** *(1876—1952)—ருஷ்யா*

வில் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களி லும் தத்துவவாதிகளிலும் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நிலத்துறை அமைச்சராக இருந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத்து-எதிர்ப்புக் கலகங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர். *1920* ருஷ்யாவை விட்டு ஓடி வெளியிலிருந்தார்.—*60, 62, 114.*

**டுராட்டி [Turati], ஃபிலிப்போ** *(1857—1932)* — இத்தாலியத் தொழிலாளர் இயக்கத்தின் சீர்திருத்தவாதத் தலைவர். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் *(1892)* ஒருவர். அதன் வலதுசாரி சீர்திருத்தவாதப் பிரிவின் தலைவர்.—*114.*

**திசியுரூப்பா, அலெக்சாந்தர் திமீத்ரியெவிச்** *(1870—1928)*— கம்யூனிஸ்டுக் கட்சி மற்றும் சோவியத் அரசில் முக்கியமான பிரமுகர். *1921*ல் மக்கள் கமிசார்களின் கவுன்சில், உழைப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்சில் ஆகியவற்றின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.—*167.*

**திரோத்ஸ்கி (பிரான்ஷ்டைன்), லேவ் தவீதவிச்** *(1879—1940)*—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். ரு.ச.ஜ.தொ.(போ.)இன் கட்சியின் ஆறுவது காங்கிரசில் *(1917)* போல்ஷிவிக்குகளின் கட்சியில் உறுப்பினராக அனுமதிக்கப்பட்டார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பல பொறுப்புள்ள பதவிகளை வகித்தார். என்றபோதிலும் கட்சியின் கொள்கையை எதிர்த்து மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் போராடினார். *1918*ல் அவர் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிடுவதை எதிர்த்தார். *1920—1921*ல் தொழிற்சங்கங்கள் பற்றிய விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார். கம்யூனிஸ்டுக் கட்சி, கட்சியினுள் குட்டிமுதலாளித்துவச் சரிவு என்ற முறையில் திரோத்ஸ்கியத்தை அம்பலப்படுத்தி சித்தாந்த, அமைப்புத் துறைகளில் இதை முறியடித்தது. *1927*ல் திரோத்ஸ்கி கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டார், *1929*ல் சோவியத் யூனியனிலிருந்து நாடுகடத்தப்பட்டார்.—*22, 80.*

**தெனீக்கின், அந்தோன் இவானவிச்** *(1872—1947)* — ஜாரிஸ்டு ஜெனரல்; *1918*முதல் *1920* வரை தென் ருஷ்யாவின் வெண்படைகளது தலைமைத் தளபதியாக இருந்தார். *1920*ல் நாட்டை விட்டு ஓடினார்.—*79, 86, 92, 134, 136, 173.*

**நிக்கலாய் இரண்டாவது (ரமானவ்)** *(1868—1918)—ருஷ்யாவின் கடைசிப் பேரரசர் (1894—1917).—30, 32.*

**பில்சூட்ஸ்கி [Pilsudski], ஜோஸெப்** *(1867—1935)—முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவப் போலந்தின் அரசியல் பிரமுகர். 1918—1922ல் போலிஷ் அரசாங்கத்தின் தலைவராக இருந்தார். உழைக்கும் மக்களின் புரட்சிகர இயக்கத்தை மிருகத்தனமாக அடக்குமுறை செய்தவர்.—134.*

**பெபெல் [Bebel], ஔகுஸ்ட்** *(1840—1913)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் நிறுவகர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். ஜெர்மன் சமூக-ஜனநாயக இயக்கத்தின் புரட்சிகரப் பிரிவின் தலைவருள் ஒருவர். திருத்தல்வாதத்தையும் சீர்திருத்தவாதத்தையும் தீவிரமாக எதிர்த்தார்.—124.*

**மாக்டானல்ட் [MacDonald], ஜேம்ஸ் ராம்ஸே** *(1866—1937)—பிரிட்டிஷ் சுயேச்சைத் தொழிற் கட்சி, தொழிற் கட்சி ஆகியவற்றை நிறுவியவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். தீவிர சந்தர்ப்பவாதக் கொள்கையைக் கடைப்பிடித்தவர். 1924 மற்றும் 1929—1931 பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தலைவராக இருந்தார்.—52, 114.*

**மார்க்ஸ் [Marx], கார்ல்** *(1818—1883)—33, 34, 133.*

**மார்த்தவ் (ஸெதர்பாவும்), யூலி ஓசிப்பவிச்** *(1873—1923)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி; மென்ஷிவிசத்தின் தலைவர்களில் ஒருவர். 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு வெளிநாடு போய் விட்டார்.—60, 62, 114.*

**மிர்பாஹ் [Mirbach], வில்ஹெல்ம்** *(1871—1918)—ஜெர்மன் அரசுறவாளர். 1918 ஏப்ரல் முதல் மாஸ்கோவில் ஜெர்மன் தூதராக இருந்தார். 1918 ஜூலை 6ந் தேதி ஜெர்மனிக்கும் சோவியத் ருஷ்யாவுக்கும் இடையே ஒரு போரைத் தூண்டிவிடும் உத்தேசம் கொண்ட இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களால் கொலை செய்யப்பட்டார்.—29.*

**யுதேனிச், நிக்கலாய் நிக்கலாயெவிச்** *(1862—1933)—ஜாரிஸ்டு ஜெனரல். உள்நாட்டு போரின் போது (1918—1920) ருஷ்யாவின் வட-மேற்குப் பிரதேசத்தில் இயங்கிய வெண்படைகளுக்குத் தலைமை தாங்கினர்.—68, 74, 79, 134.*

**ரீக்கவ், அலெக்சேய் இவானவிச்** *(1881—1938) — ருஷ்ய*

சமூக-ஜனநாயகவாதி. 1918 முதல் 1921 வரை உயர் பொருளாதாரக் கவுன்சிலின் தலைவராகவும்,பிறகு மக்கள் கமிசார்களின் கவுன்சிலின், உழைப்பு மற்றும் பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவராகவும், சோவியத் யூனியன் மக்கள் கமிசார்களின் கவுன்சிலின், ரு.சோ.கூ.சோ. குடியரசு மக்கள் கமிசார்களின் கவுன்சிலின் தலைவராகவும் இருந்தார்.

கட்சி-விரோத செயற்பாடுகளுக்காக 1937ல் கட்சியிலிருந்து தள்ளப்பட்டார்.—167.

**லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல்** *(1871—1919)*—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர்.

ஜெர்மனியில் 1918 நவம்பரில் நடந்த புரட்சியின் போது ரோசா லுக்சம்பூர்க் உடன் ஜெர்மன் தொழிலாளர்களின் ஆகப்புரட்சிகரமான பகுதிக்குத் தலைவராக விளங்கினர். 1919 ஜனவரியில் பெர்லின் தொழிலாளரின் புரட்சிகர எழுச்சியின் தலைவருள் ஒருவர். இந்த எழுச்சி அடக்கப்பட்ட பிறகு எதிர்ப்புரட்சியாளரால் அவர் கொல்லப்பட்டார்.—14, 29, 31.

**லொங்கே [Longuet], ழான்** *(1876—1938)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சி மற்றும் இரண்டாம் அகிலத்தின் தலைவர்களில் ஒருவர். 1921 முதல் வியென்ன (இரண்டரையாவது) அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்.—52, 114.

**விராங்கெல், பியோத்தர் நிக்கலாயெவிச்** *(1878—1928)*—ஜாரிஸ்டு ஜெனரல், அதிதீவிர முடியரசுவாதி. 1920 ஏப்ரலில் இருந்து நவம்பர் வரை தென் ருஷ்யாவின் வெண்படைகளது தலைமைத் தளபதியாக இருந்தார். இந்தப் படைகள் செஞ்சேனையால் முறியடிக்கப்பட்டதும் நாட்டை விட்டு ஓடினர்.—100, 134, 136.

**வில்சன் [Wilson], உட்ரோ** *(1856—1924)*—1913—1920ல் அமெரிக்க ஜனதிபதி. சோவியத் ருஷ்யாவிற்கு எதிராக ஏகாதிபத்திய அரசுகள் நடத்திய இராணுவத் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தோரில் இவரும் ஒருவர்.—30.

**வில்ஹெல்ம் [Wilhelm] இரண்டாவது (ஹோஹன்ஸோலர்ன்)** *(1859—1941)* — ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் மன்னர் (1888—1918).—26.

**ஸினோவியெவ் (ரதமீஸ்லிஸ்கி), கிரிகோரி யெவ்சேயெவிச்** *(1883—1936)*—ருஷ்யன் சமூக-ஜனநாயகவாதி. 1917

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு, பெத்ரோகிராத் சோவியத்தின் தலைவர், மத்தியக் கமிட்டி அரசியல் குழு உறுப்பினர், கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டியின் தலைவர். லெனினது கட்சிக் கொள்கையைப் பல முறை எதிர்த்தார். 1927 நவம்பரில் உட்குழு விவகார நடவடிக்கைகளுக்காக கட்சியில் இருந்து விலக்கப் பட்டார். இதன் பின் இருமுறை அவர் மீண்டும் கட்சி உறுப்பினரானார். ஆனால் 1934ல் இறுதியாக வெளியேற்றப்பட்டார்.—20, 101.

**ஸ்வெர்த்லோவ், யாக்கவ் மிஹாய்லவிச்** *(1885—1919)*—போல்ஷிவிக், 1917—1919ல் மத்தியக் கமிட்டியின் செயற்குழுத் தலைவர். 1917 நவம்பர் முதல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைவர்.—13.

**ஹில்குவித்** [Hillquit], **மாரிஸ்** *(1869—1933)*—அமெரிக்க சோஷலிஸ்ட். முதலில் மார்க்சியத்தை ஏற்றுக்கொண்டார். பிறகு சந்தர்ப்பவாதத்திற்குத் திரும்பினார். சோஷலிசத்தின் வரலாறு குறித்துப் பல நூல்களை எழுதியுள்ளார்.—114.

**ஹில்ஃபர்டிங்** [Hilferding], **ருடோல்ஃப்** *(1877—1941)*—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் சந்தர்ப்பவாதத் தலைவர்களில் ஒருவர்.—114.

## வாசக நேயர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்துவரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் யோசனைகளை வரவேற்கவும் **முன்னேற்றப் பதிப்பகம்** மகிழ்வுடன் காத்திருக்கிறது.

கடிதங்களைத் தயை செய்து "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்
41.பி.சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்.சென்னை—600098.

ஷோ-ரூம்
136. மவுண்ட் ரோடு. சென்னை—600002.

கிளைகள்
80. மேலக் கோபுர வீதி. மதுரை—625001.
87/89. ஒப்பணக்கார தெரு. கோயம்பத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு. திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு. சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்
3—22—75—D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

В. И. Ленин

СТАТЬИ И РЕЧИ
К ГОДОВЩИНАМ ОКТЯБРЬСКОЙ РЕВОЛЮЦИИ

*на тамильском языке*

V. I. Lenin

ARTICLES AND SPEECHES ON ANNIVERSARIES
OF THE OCTOBER REVOLUTION

*in tamil*